அருந்தமிழில் அயற்சொற்கள்

டாக்டர் ந. அருள்

அருந்தமிழில் அயற்சொற்கள்

டாக்டர் ந. அருள்

ஔவை அறக்கட்டளை

'தாரகை' – ஜெ82,
அண்ணா நகர் (கிழக்கு),
சென்னை – 600 102.

அருந்தமிழில் அயற்சொற்கள்

டாக்டர் ந. அருள்

@ All rights reserved

First published in	:	October, 2001
Page	:	192
Copies	:	1200
Size	:	Demy

Publishers:
ஔவை அறக்கட்டளை
'தாரகை' – ஜெ82,
அண்ணா நகர் (கிழக்கு),
சென்னை – 600 102.

Price: Rs. 75/-

வடிவமைப்பு : வே. கருணாநிதி

அச்சிட்டோர்: *The PARKAR*
293, Ahamed Complex 2nd Floor
Royapettah High Road, Chennai - 600 014. Ph: 821 5684

படைப்பு

துணைவேந்தர் செந்தமிழ்ப்
பேராசிரியர் டாக்டர். சி.பா. அவர்களின்
பரிவார்ந்த நினைவில்

பொருளடக்கம்

	முதலுரை	15
1.	மொழி வழக்கு	19
2.	ஆங்கிலச் சொற்கள்	89
3.	வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருதுச் சொற்கள்	113
4.	முடிவுரை	159
5.	இணைப்பு	171
6.	துணை நூல்கள்	185

வாழ்க நலமாக! வழங்குக வளமாக!

டாக்டர் வ. ஜெயதேவன்

பேராசிரியர் - தலைவர்,

தமிழ் மொழித்துறை - சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழ் அறிஞர் உலகத்தால் 'உரைவேந்தர்' எனப் போற்றப் பெறுபவரும், தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களாக் கொண்டவருமான உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்களின் பெயரனும், நாடறிந்த நற்றமிழ்ப் பொழிவாளரும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான முனைவர் ஔவை நடராசனார் அவர்களின் திருமைந்தருமான திரு. ந. அருள், 'அன்றாட வழக்கில் அயன்மொழிச் சொற்கள்' என்னும் பொருளில் எனது மேற்பார்வையில் ஆய்வு நிகழ்த்திச் சென்னைப் பல்கலைக்கழகம் வழி ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்.) பட்டப்பேறு எய்திடக் காரணமாக அமைந்த ஆய்வேடு, இப்போது 'அருந்தமிழில் அயற்சொற்கள்' என்னும் மகுடந்தாங்கி நூல் வடிவம் பெற்றுள்ளமை கண்டு பெருமிதம் கொள்கின்றேன்; 'பெற்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாயி'னும் நனி மகிழ்கின்றேன்.

'கருத்துக்குத்தான் தலைமையான இடம் தரவேண்டும். மொழி என்பது கருத்தைச் சுமந்து வருகிற வாகனந்தானே. சொற்கள் எப்படி இருந்தால் என்ன?' என்னும் எண்ணம் தமிழ் மக்களிடம் பரவலாக உள்ளது. 'வாகனம் சரியாக இருந்தால்தானே குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் பயணம் செய்யமுடியும்? வாகனம் பழுதுடையதாயின், வழிப்பயணம் என்னவாகும்? மொழி என்னும் வாகனம் சரியாக இருந்தால் தானே அது சுமந்துவரும் கருத்தும் சரியாகச் சென்று சேரும்?' என்பதைப் பலரும் எண்ணிப் பார்ப்பது இல்லை. தமிழரிடையே மொழி உணர்வும் அக்கறையும் முயற்சியும் மங்கி அவர்கள் பயன்படுத்தும் மொழியில் தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் அளவிற்கு அவலநிலை உள்ளது. தமிழர் மொழி வேறு, தமிழ்மொழி வேறு எனக் கருதத்தக்க இழிநிலைக்கான வாய்ப்பே மிகுதியாகிவரும் சூழலில், தமிழ் நெல்லிடையே விரவியுள்ள அயல் கல்லை இனங்கண்டு காட்டும் அருளின் இம்முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கது.

மொழியும் வழக்கும், மொழிக் கலப்பு, வழக்குச் சொற்களின் வலிமை, மொழிக் கலப்பின் தொன்மை, மணிப்பிரவாளம், மொழிக் கலப்பு எதிர்ப்பு மறுப்பும் தூய்மை விருப்பும், மொழிக் கலப்பால் சொற்கள் வழக்கிழத்தல் போன்றவை குறித்து இந்நூலில் உள்ள 'மொழி வழக்கு' என்னும் இயல் விரிவாகப் பேசுகின்றது. அடுத்துவரும் இயல்கள் தமிழில் வழங்கும் ஆங்கிலச் சொற்கள், வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருதுச் சொற்கள் குறித்து விளக்குகின்றன. இந்த ஆய்வின் பயனாகப் பெறப்பட்ட உண்மைகளை 'முடிவுரை' தொகுத்துரைக்கின்றது. வகைப்படுத்தப்பட்ட அயல்மொழிச் சொற்களின் பட்டியல், பின்னிணைப்பாக அமைந்து, இந்த ஆய்வு நூலை அணிச் செய்கின்றது.

என் இனிய மாணவர் அருளின் மரபுவழிப் பெற்ற தமிழ்ப் புலமையையும் செழுமையையும், தம் முயற்சியால் பெற்ற ஆங்கிலப் பயிற்சியையும், மேடைத்தமிழின் நடையையும் இந்நூல் பறை சாற்றுவதோடு, அவரது ஆய்வுத் திறத்தையும் செவ்வனே புலப்படுத்துகின்றது. இது சிறு நூலெனினும், பெருநூலாக விரியத்தக்க கரு இதனுள் பொதிந்து கிடக்கின்றது. அன்றியும், விரிவுக்கான செல்நெறியைச் சுட்டும் திசைகாட்டியாகவும் திகழ்கின்றது. பயன்மிகு இப்பனுவலைப் படைத்த முனைவர் அருள் அவர்களுக்கு எனது வாழ்த்தும் பாராட்டும் உரியன. அவரது கன்னி முயற்சியாக மலர்ந்த இந்நூலைத் தொடர்ந்து, அச்சுவடிவம் பெறாமல் முடங்கிக்கிடக்கும் அவரது முனைவர் பட்ட ஆய்வேடும் வெளிச்சத்திற்கு வரவேண்டும் என விழைகின்றேன்.

எழுதுவதைக் காட்டிலும் பேசுவது அருளுக்கு எளிதாகி விட்டது. அவரது அருகிய எழுத்துக்கும் பெருகிய பேச்சுக்கும் இதுவே காரணம். பேச்சினும் எழுத்தே கூடுதலான நிலையான பயன்தரவல்லது. இதனை உணர்ந்து இந்நூலைத் தொடர்ந்து ஆய்வுப் பனுவல்கள் பலவற்றை அருள் தமிழுக்கு அருளவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். அதற்கான ஆற்றல் அவரிடம் உள்ளது. தமிழ் உலகம் உரிய ஊக்கமளிக்கும் என நம்புகின்றேன்.

வாழ்க அருள் மிக நலமாக!
வழங்குக நூல் பல வளமாக!

சென்னை 600 005,
25.09.2001.

அன்புடன்,
வ. ஜெயதேவன்

வளர்க வாழைக்கன்று !

கூ. வ. எழிலரசு, எம்.ஏ., எம்.பில்., பி.எட்.,
தெரிவு நிலை உதவி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சித் துறை,
குறளகம், சென்னை 600 108.

உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள், தமிழுக்குத் தொண்டு செய்து தம்புகழ் நிறுவித் தாம் மாய்ந்த பெருந்தகை ஆவார். தமிழரின் இனமான வரலாறு சிலரால் மறைக்கப்பட்ட போதும், திரித்துரைக்கப்பட்ட போதும் வீறு கொண்டெழுந்து, ஆழப்பதிந்து கிடந்த தமிழின் வேர்களையும், விழுதுகளையும் தமிழர்கள் உணரக்காட்டிய பெருமை உரைவேந்தருக்கு மட்டுமே உரியது. உரை வேந்தர் ஔவை வரைந்த உரைகளெல்லாம் தமிழின் மீது படிந்த கறைகளைக் களைந்தன என்பது பொருத்தமே! தமிழ் கூறு நல்லுலகில் உரை வேந்தரின் தமிழ்த் தொண்டு, காலத்தாற் பதிக்கப்பெற்ற வயிரமணியாய் ஒளிவீசுகிறது.

உரை வேந்தரின் திருமகனார் முனைவர் ஔவை நடராசனாரின் புகழோ அளப்பரிது. ஔவை நடராசன் உற்ற புகழும் பெற்ற புகழும் பெரியன. கல்லூரியில் தொடங்கித் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் என்று ஓங்கிய வகையில் தமிழால், தமிழ்த் திறத்தால் அரசறிய வீற்றிருக்கும் வாழ்வைப் பெற்றவர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் சொல் வலை வேட்டுவர்; சொல்லின் செல்வர்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இடைவிடாது வீசிவரும் மேடைத்தென்றல். இவர் தம் வார்த்தைகள் வயிரங்கள். இவருடைய பேச்சருவியில் கருத்து முத்துக் குளித்தவர் பலர். இவரைப் பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்கும் பெற்றியராய் நடமாடும் தமிழ்க் கருவூலம் எனில் மிகையன்று. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் முதலாக இன்றைய புதுக்கவிதைகள் வரையில் இவருடைய இதயத்தில் இருப்பிடம் தேடிக் கொண்டன. நயம்பட உரைப்பதில் நாவுக்கரசர். இயற்றிய கவிஞர்களே மறந்து போன மணிக்கவிதைகளை நொடிப்

பொழுதில் அவர்களிடமே நுவல்கின்ற மணிவாசகர். என்றென்றும் வாசிப்பை நேசிப்பவர்.

வாழையடி வாழையென வந்த தமிழ்க் குடும்பத்துத் தோன்றல், ஔவை நடராசனாரின் திருமகன் என் அன்பிற்குரிய இளவல் முனைவர் ந. அருள். அரிதின் முயன்று அழகுற அளித்த 'அருந்தமிழில் அயற்சொற்கள்' எனும் நூலைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்.

'மொழி வழக்கு', 'ஆங்கிலச் சொற்கள்', 'வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருதுச் சொற்கள்' - எனும் பகுப்பில் அமைந்த இந்நூலின் பக்கம்தோறும் ஆய்வின் பக்குவம் பளிச்சிடுகிறது.

சொல்லாய்வு, மொழிக் கலப்பாய்வு - என்பனவற்றின் நோக்கமே சொந்த மொழியின் சொற் செல்வத்தை ஆய்ந்து இழந்தவை போக - இருப்பதை மேலும் இழக்காமல் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்துவதுதான். 'ஒரு மொழியில் உள்ள சமுதாயத்தேவை கருதியும், சமுதாயத் தொடர்பை விரிவாக்கும் காரணங்களாலும் ஒரு மொழியில் வேறு சொற்கள் புகுந்து இடம் பெறுவதையே மொழிக்கலப்பு என்கிறோம். மொழி இழப்பு என்பது, மொழிக் கலப்பால் ஒரு மொழி தன்னிடமிருந்த சொற்களைப் பயன் குறைந்ததாக இழந்து நிற்கும் அவல நிலையாகும்' என்கிறார் முனைவர் ந. அருள். 'மொழியின் தொன்மையைப் போன்றே மொழிக் கலப்பும் தொன்மை வாய்ந்தது போலும்' என ஆய்ந்துரைப்பதும், 'சொல் வளமின்றி ஒரு மொழி வறுமையுற்றிருப்பதும், பேச்சு மொழிக்கு உந்தாற்றலான கலந்து பழகும் உணர்ச்சியும், எழுதுவோன் விருப்பமும், போலச் செய்தலும், கடன் வாங்கலும் ஆகிய காரணங்கள் மொழிக் கலப்பை விளைவிக்கின்றன' - என மொழிக் கலப்பிற்கான காரணங்களை நுண்ணிதின் விளக்கும் பாங்கும் பாராட்டத்தக்கது.

மொழிக்கலப்பு நிகழ்ந்த காலந்தொட்டே, அதை நீக்கவும் நம் முன்னோர்கள் முயன்றனர் என்பதை முனைவர் ந. அருள் விளக்கியுரைக்கும் பாங்கு மகிழ்ச்சியூட்டுகிறது. 'தண்டமிழாசானாகிய சாத்தனார்... பௌத்தர் கூறும் 'சத்தியத்தை' 'வாய்மை' எனவும், 'துவாச நிதானங்களை'ப் 'பன்னிரு சார்புகள்' எனவும், 'தருமத்தை' 'அருளறம்' எனவும் 'புத்த தன்ம சங்க'த்தை 'முத்திற மணி' எனவும், 'தரும சக்கர'த்தை 'அறக் கதிராழி' எனவும், 'சயித்தியத்தை'ப் 'புலவோன் பள்ளி' எனவும், 'ஏது பிரபவ தர்மம்' என்பதனை 'ஏதுநிகழ்ச்சி' என

வும், 'நிருவாணத்தை'ப் 'பெரும் பேறு' எனவும் தமிழாக்கியுள்ளார்' - எனும் பகுதி இதற்கு ஒரு சான்றாகிறது.

தமிழின் மீது ஆண்டவன் பெயரால் ஆளுமை நிகழ்த்தி ஒரு காலத்தில் 'மணிப் பிரவாளமே தமிழ்' என மயங்க வைத்த வட மொழி யின் வல்லாண்மை முதலாக, ஆதிக்க முறையில் அரியணை ஏறி அன்னைத் தமிழில் ஊடுருவி நிலைத்த ஆங்கிலம் வரையில் தமிழில் மொழிக்கலப்பு நிகழ்ந்த வரலாறுகளையும், சொல்லடைவுகளையும் ஆழமாகவும், அழகாகவும் இந்நூல் எடுத்தியம்புகிறது.

முனைவர் ந. அருள் தமிழ் மக்கள் வழங்குகின்ற வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது மொழிச் சொற்களை முயன் றாய்ந்து பட்டியல் அளித்து நம்மைச் சிந்திக்க வைக்கிறார். காலை யில் தொடங்கி, உறங்கப் போகும் நேரம் வரையில் நாம் எத்தனை பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என் பதையும், இவற்றை நீக்கிவிட முயற்சி செய்யாதிருக்கிறோம் என்பதை யும் எண்ணும் போது, 'தமிழன் திருந்தினால்தான் தமிழ் திருந்தும்' என்றே கூறத் தோன்றுகிறது. ஒவ்வொரு தமிழரும் இயன்றவரையில் பிறமொழிச் சொற்களை நீக்கிப்பேசவும், எழுதவும் முயலுதல் வேண் டும் என்ற உந்தாற்றலை உள்ளீடாகக் கொண்டு உலா வரும் இந் நூலை, இதை அளித்த இளவல் முனைவர். ந. அருளை உச்சி மேல் வைத்து மெச்சிப் புகழத் தோன்றுகிறது.

மொழிக்கலப்பு தவிர்க்க முடியாததுதான், எந்த மொழியும் கலப் பின்றி இயங்கவில்லை என்பதும் கண் கூடானதுதான். ஆனால், கற்ற வர்கள் அறிந்தே மொழிக்கலப்புக்கு வழி கோலுகின்றனர். கல்லாதவர் களோ தமக்கு வரும் பிறமொழிச் சொற்களையே தம்முடைய தாய் மொழிச் சொல்லென்று பிழையாக உணர்ந்து கொள்கின்றனர், இத்தகைய நிலை தமிழுக்கு மட்டுமன்றி, எந்த மொழியின் வளர்ச்சிக்கும் ஏற்றம் அளிக்காது என்பதை உலக மொழிகள் சிலவற்றிற்கு நேர்ந்த நிலை கள் மெய்ப்பிக்கின்றன. பிரான்சில் வாழ்ந்திருந்த 'கால்' இனத்தவர் தம்மொழியைத் துறந்து பிரெஞ்சு மொழியை ஏற்றுக் கொண்டதால், அந்த இனமே அழிந்ததையும், வட இந்தியா முழுவதும் பரவியிருந்த திராவிடர் தம்மொழியைத் துறந்து, வந்தேறிகளின் மொழியை ஏற்றுக் கொண்டதால், அவர்களின் பண்பாடே மாறிப் போனதையும் மொரீ சியசுத் தீவில் ஏழத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறிய தமிழர்

கள் தாய்மொழியை மறந்துவிட்டு, 'கிரியோல்' என்ற கலப்பு மொழியை ஏற்றுக் கொண்டதால் தங்கள் தமிழறிவையே இழந்ததையும், 'செக்' மொழிப்பற்றாளர்கள் உழைப்பால், செருமன் மொழி மேலாண்மை யிலிருந்து விடுபட்டுச் 'செக்' நாட்டினர் இன்று தனி இனமாக வாழ் வதையும் 'மொழிக்கலப்பு' நமக்களிக்கும் படிப்பினைகளாகவே இங்குக் கருதிப் பார்க்கலாம்.

இவ்வகையில் உலகளாவிய நிலையில் கருதப்பட்டும், ஆய்வு செய்யப்பட்டும் வருகின்ற 'மொழிக்கலப்பு' என்ற பொருண்மையைத் தமிழிடை வைத்து நுணுகி ஆய்ந்துள்ள முனைவர் ந. அருளின் ஆய்வுத்திறன் போற்றிப் பாராட்டுதற்குரியது. முனைவர் ந. அருள் இந்நூலின் வழி ஆற்றிய அருந்தொண்டால், மொழி ஆய்வு மேற் கொண்ட நம் தமிழறிஞர்கள் வரிசையில் தக்கதோர் இடம் பெற்றுள் ளார் எனில் அது மிகையன்று,

'வளர்ச்சிக்குரிய உயிருடையதாய் உலகத் தொடர்புப் பாலமாய் மொழியைக் கருதும் இந்நாளில், மாற்றங்களுக்கு உட்படுதலே உயி ருணர்ச்சிக்கு அடையாளமாகிறது என்ற நிலையைத் தவிர்க்க இயலாது. எனவே, மொழிக்கலப்பு, இனத்தின் வளர்ச்சி நோக்கி நிகழும்போது ஏற்புடையதாகவும், இனத்தின் குலைவுக்கும் தாழ்ச்சிக்கும், வழி வகுக்கும்போது நீக்கத் தக்கதாகவும் கருதலாம். இப்புதிய அணுகு முறை மொழிவளர்ச்சிக்கு உலக நாடுகள் மேற்கொண்டு காட்டிய நடைமுறையாகும்' - என மொழிக் கலப்பின் தாங்கு திறனையும் எல்லைக் கோடிட்டு எச்சரிக்கை செய்கிறார். இளவல் ந. அருள். தமிழ்கூறு நல்லுலகம் இந்நூலை இருகரம் நீட்டி ஏந்திப் போற்றும் என்பது உறுதி.

வாழ்வாங்கு வாழ்ந்து தமிழ் வளர்க்கும் குடும்பத்தின் வாழைக் கன்று இளவல் ந. அருளின் தொண்டு தொடர, 'வளர்க வாழைக்கன்று' என வாழ்த்துகிறேன்.

சென்னை 600 108, அன்புடன்,

28. 09. 2001 **எழிலரசு**

முதலுரை

நாளும் நாம் உரையாடும்போதும், பிறரிடம் பழகித் தத்தம் எண்ணங்களைப் பரிமாறும்போதும் எண்ணத் தொலையாப் பொருள் களையும் செயற்பாடுகளையும் சொற்களின் வழியாகப் புலப்படுத்து கின்றோம். சொற்களின் வாயிலாகவே வாழ்க்கையின் செவ்விய உணர் வுகள் உருவாகும். நிலத்தின் வளத்தினைத் தோன்றும் பயிர்களின் செழுமையைக் கண்டு அறிவது போலவே, மக்களின் வாழ்வறங் களை மொழி புலப்படுத்துவதால், இலக்கியங்களையும் புலவர்களை யும் நாடாள்வோர் பெரிதும் போற்றி வளர்த்தனர். எனவே, சொற்கள் திரிபடையாமலும், வேற்று மொழிச் சொற்களின் வரவால் பழக்கத்தி லிருந்த பழஞ்சொற்கள் வழக்கிழந்து தொலையாமலும் காப்பதும் இலக் கியங்களின் கடமை என்று வலியுறுத்தினர். சங்கம் கண்டு தமிழாராய்ந் தனர் என்ற கருத்தும் செய்தியும் இந்த நோக்கிலேயே அமைந்தன.

ஒரு குடைக்கீழ் உலகம் என்று கருதும் அளவுக்கு உலகளாவிய உறவும் நெருக்கமும் இன்றைய காட்சிகளாகியுள்ளன. விரிந்து பரந்து விளங்கும் அறிவியல் துறைகளை விளக்கி மொழியப் பலதுறைப் பனுவல்கள் தமிழில் நாளும் வெளியிடப் பெறுகின்றன. இந்நிலையில் இலக்கண அமைவுகள் நெகிழ்ச்சியடையும்; கடின உத்திகள் மறக்கப் படும். எளிமையையே வரவேற்பார்கள். சொல்லாக்க முறையில் பிற சொற்களை ஒலிப்படுத்தாமை, தமிழ் வயப்படுத்தாமை, புதிய மொழி முதல் இறுதி எழுத்துகள், மெய்ம் மயக்கங்கள், ஒட்டுகள், உருவாகும்; உலகளாவிய மொழிகள் கடைப்பிடிக்கும் பொதுமைப்பண்புகள் மேலோங்கும். பேச்சு, எழுத்து வழக்குகள் இடையே வேறுபாடு குறை யும்; மொழிகளுக்குள் உயர்வேற்றம் உரைப்பது பொருந்தாமல் அமை யும் என்றெல்லாம் கணிப்போரும் தலை உயர்த்தி வருகின்றனர். வாழ் வியலோடு, இன்றைய வளர்ச்சிப் போக்கைக் கண்டறிய உதவும் ஒரு கோட்பாட்டை முதுகலை முடித்த மாணவர்கள் அடுத்துத் தொடங்க முற்படும் ஆய்வியல் கலைக்கு எம்பில் படிப்புக்கு என்னைப் பத்தாண் டுகட்கு முன்னர் மாணவனாகச் சேர்த்துப் பேராசிரியர் முனைவர் சயதேவன் அவர்களிடம் என்னை ஆற்றுப்படுத்தி அமர வைத்தவர்

துணைவேந்தர் - செந்தமிழ்ப் பெரும்பேராசிரியர் முனைவர் சி.பா. அவர்களேயாவார். என்பால் கொண்ட பரிவால் முதுகலைக்கும் சேர்த்து, ஆய்வு இளங்கலைக்கும் பயிற்றுவித்த டாக்டர் சி.பா. அவர்களை நன்றியோடு நினைவுகூர்ந்து இந்நூலை அவர் நினைவிற்கே படைத்துள்ளேன். பலர் வேண்டாத நிலையில் நான் தமிழ் முதுகலையில் சேர்ந்து பயின்றேன். என் நினைவுகள் பொது நலப்பணியிலும், வாணிக நிறுவன ஆட்சியிலுமாக இளங்கலை வகுப்பிலேயே தொடங்கின. எனினும், மரபாக ஊறிய தமிழுணர்வை நாளும் வளர்த்து வரும் விருப்பத்தால், 'அன்றாடவழக்கில் அயன் மொழிச் சொற்கள்' என்ற பொருளில் கட்டுரைகளை எழுதினேன்.

பேராசிரியர், அறிஞர் பலர் வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் அயன்மொழிச் சொற்களைப் பற்றிப் பல கருத்துகளை எழுதியும் பேசியும் வந்துள்ளனர். அயற்சொற்கள் தமிழில் கலப்பதைக் கடன் கோடல் என்பதும், புதியன பெருகும் வழக்கத்தால் வந்து சேர்வனவற்றை வரவேற்பதையும் தமிழிலக்கணங்கள் தொல்பழங்காலந் தொட்டே கருதி வந்தன.

தொல்காப்பிய உரையில் சேனாவரையர், 'இந்நான்கு சொல்லும் செய்யுட்குரியன, பிற பாடைச்சொல் உரியவல்லவென்று வரையறுத்தவாறு' என்று எழுதினார். வந்து சேரும் சொற்களைத் தமிழ் வயப்படுத்தும் விதிகளும் இலக்கணங்களால் வரம்பிடப்பட்டன. கால வெள்ளத்தால் தலைசாய்ந்து புத்தொலிகளும் பிற வெழுத்துகளும் தலைகாட்டின. கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக வேற்றவர் ஆட்சி என்ற நிலையில் பதினைந்துக்கு மேலான ஆட்சி மொழிகளிலிருந்து ஆயிரக்கணக்கில் சொற்கள் வந்து பயிலப்பட்டுள்ளன. பேராசிரியர் தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாற்று நூலிலும், தாம் பணியிலிருந்த போதும் மாணவர் பலரை மொழிக்கு ஒருவராகப் பிறமொழிச் சொற்களின் பட்டியலைத் தொகுக்கச் செய்தார். கடன் கோடல் பற்றிப் பேராசிரியர் மு.வ., மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் விளக்கம் செய்தனர். பின்னாளில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்ச்சொற்களைப் பயன் கொள்ளும் பாங்கைச் சுட்டிக் காட்டி ஆயிரக்கணக்கில் அயற் சொற்களை விலக்கியும், அருந்தமிழில் சொற்களைப் புதுக்கியும் படைத்தும் வழிகாட்டினார். இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் செந்தமிழ் அகர முதலிப் பேராசிரியர் ப. அருளி, அயற் சொல் அகராதி வெளியிட்டுப் பெருந்தொண்டாற்றினார். பாவாணர்

அகர முதலித்துறைப் பேராசிரியர் முனைவர் இரா. மதிவாணன் இத்துறையில் அயற்சொற்கையேடு முதலாகப் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதினார்.

தனித்தமிழுணர்வு இயக்கம் மறைமலை அடிகளாரால் தொடங்கப்பட்ட நாள் தொடங்கி, மறைமலையின் தலை முறையினராக அறிஞர்கள் பலர் தொடர்ந்து நாளும் அரும் பணியாற்றுகின்றனர். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறைந்த எழுத்தொலிகள் சொற்களால் நிறைந்த பொருள்களை வழங்கும் எழுத்துச் செட்டில் தமிழின் சிறப்புக்கு இணையில்லை என்று அறிஞர் சுட்டிக் காட்டினர். வட சொற்களை விடத் தமிழ்ச் சொற்கள் அமைந்த திறத்தை விளக்கும் போது சதுரகராதிப்படி அழகு என்னும் பொருளைத் தரும் தமிழ்ச் சொற்கள், ஒரெழுத்தில் ஐ, பூ, பை என மூன்று; ஈரெழுத்தில் அணி, அம், ஏர், களை, சீர், சேடு, தகை, தென், தோல், பொன், மணி, மாழை, வாகு எனப் பதின்மூன்று; மூவெழுத்தில் அழகு, அம்மை, அலரி, எழில், ஒண்மை, ஒப்பு, கவின், காமர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், செல்வி, செழுமை, சொக்கு, தகைமை, தையல், தோட்டி, நலம், நவ்வி, நன்கு, நோக்கு, பதம், பாக்கு, பொற்பு, மாண்பு, முருகு, யாணர், வடிவு, வண்மை, வளம் என முப்பத்தொன்று; நான்கெழுத்தில் அணங்கு, நோக்கம், வகுப்பு, வனப்பு என நான்கு. ஆகமொத்தம் 51 சொற்களுக்கு எழுத்துகள் 138, அதாவது வீதப்படி சொல் ஒன்றுக்கு எழுத்து 2. 706 (இரண்டே முக்காலும் குறைந்தது), அழகு என்னும் பொருளைக் கொடுத்துத் தமிழில் வந்துள்ள வடசொற்கள் சதுரகராதிப்படி, ஒரெழுத்துச் சொற்களில் சுன்னம், இரண்டெழுத்தில் சவி, மாயை, என இரண்டு; மூவெழுத்தில் காந்தி, சாயல், சோபம், மஞ்சு, மதன், மயம், மாதர், வாமம் என எட்டு; நான்கெழுத்தில், அமலம், ஆரியம், இராமம், சந்தம், சௌமியம், தளிமம், தேசிகம், பந்தம், யௌவனம், அந்தம் எனப் பத்து; ஐந்தெழுத்தில் அபிராமம், இலலிதம், சித்திரம், சுந்தரம், பத்திரம், பந்துரம், மஞ்சுளம், மனோகரம், விடங்கம் என ஒன்பது; ஆறெழுத்தில், மனோக்கியம் என ஒன்று; ஏழெழுத்தில் இலாவண்ணியம் என ஒன்று ஆக மொத்தம் வட சொற்கள் 31க்கு எழுத்துகள் 126, அதாவது வீதப்படி சொல்லொன்றுக்கு எழுத்துகள் 4. 065 (நாலுக்கு மேல்) இருக்கின்றன.

படிப்பதற்குச் சலிப்பான சொற்றொகுதியைக் கொடுத்தது, அழகென்பதை யுணர்த்தத் தமிழில் உள்ள 51 சொற்கள் போதாதற்கு ‘ஏற்பதிகழ்ச்சி’ என்ற மூதுரையையும் கருதாது, வடமொழியினின்றும் 31

சொற்கள் இந்த பெருமையை எடுத்துக் காட்டும் பொருட்டே. இதில் தமிழ்ச் சொற்களிலுள்ள எழுத்துச்செட்டும் கருதற்பாலது. 51 தமிழ்ச் சொற்கள் 2¾க்கும் குறைந்தவீதம் எழுத்துகள் கொண்டிருப்பதற் கும் வட சொற்கள் 31ம் 4க்கு மேலாக எழுத்துகள் கொண்டிருப்பதற் கும் வேற்றுமை இவ்வாறு மிகுதியைக் கண்டவர்கள் இறும்பூது எய்தாதிரார். வடசொற்களைக் கலப்பதனால் பொருள் விளங்காமை யோடு, குறைந்த எழுத்துச் சொற்களையும் இழந்து வருந்தும் நிலை யைத் தமிழ்த்தாய்க்குக் கடமை பூண்ட தமிழ்மகன் என்ற பெயரில் அறிஞர் ஒருவர் செந்தமிழ்ச்செல்வி இதழில் முதற் சிலம்பு மடலத்தில் வான்மீகரும் கம்பரும் என்றெழுதிய கட்டுரையில் குறித்திருப்பது நயக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் பல்வேறு நூல்களின் துணை கொண்டு பேராசிரியர். முனைவர் வ. சயதேவன் ஆற்றுப்படுத்திய நெறியில் இச்சிற்றேடு வரை யப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத் தலைமைப் பேராசிரிய ராகிய அவருக்கு என் நன்றி பெரியது. பல்கலைக்கழகத்தாரிடமிருந்து என் எம்.பில். ஆய்வேட்டைச் சீரமைத்து வெளியிட வாய்ப்பு வழங் கியதை நன்றியோடு குறித்து மகிழ்கிறேன். எந்தையார் ஔவை நடராசன் அவர்களும், தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் கூவ. எழிலரசு அவர்களும் அவ்வப்போது கட்டுரைகளைத் திருத்தி முடிந்த அளவு செம்மையாக்கினர். மேலும் இந்நூல் படைப்புக்குப் பெருமை யும் பெருமிதமும் சேர்க்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறைப் பேராசிரியர் முனைவர் வ. சயதேவன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர், கூ.வ. எழிலரசு அவர்களுக் கும் என் பணிவார்ந்த கடப்பாட்டை என்றும் உடையேன்.

நூற்றுக்கணக்கான அழகு மலர்கள் செழித்துக் குலுங்கும் தமிழ்ச் சோலையில், மாணவ நிலையில் நான் வரைந்த இச்சிறு மலரும் மணம் பரப்பும் என்று கருதி, இதனை வெளியிடுகிறேன். அயற்சொற்கள் ஆய்வு ஒரு வகைத் தொடக்கமேயாகும். தொடர்ந்து பலர் முயன்றால், அயற்சொற் களஞ்சியங்கள் பல தொகுதிகளாக அமையும்; இந்நூலை வனப்புறப் பதிப்பித்த நண்பர் திரு. கருணாநிதிக்கு என் நன்றி!

தமிழுண்டு தமிழ் மக்கள் உண்டு !
நாளும் செய்வோம் தமிழுக்கு நல்ல தொண்டு !

சென்னை 600 102,
15.10.2001.

அன்புடன்,
ந. அருள்

மொழி வழக்கு

மொழியும் வழக்கும்

மக்கள் தமக்குத் தாமே ஆர்வத்தோடு படைத்து வளர்த்துப் பல்லாண்டுகளாகக் காத்து வரும் அரிய திறமே மொழியாகும். மாந் தர்க்கு அமைந்த தனிச்சிறப்புகளில் தலையாயது மொழியாற்றல் உணர்வே அறிவை மாந்தரிடத்தே வளர்த்து உயர்த்தும் திறனும் ஒரு மொழிக்கே வாய்ப்பதாகும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரிய ராகவும் மாணவராகவும் ஒருசேர அமைகின்றனர். மொழியை வளர்ப் பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே. இவ்வாறு மக் களின் மனவுணர்வும் வாழ்வுநலங்களும் மொழியின் துணையோடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மேம்பட்டு வருகின்றன. கருத்தைப் புலப்படுத்தும் கருவியே மொழியென்பது தொடக்கக் கருத்து. உலகத் தில் எப்பொருளும் கருவிகளே. உடம்பும் ஐம்பொறிகளும் ஊர்தி களும், தகவலியங்களும் கருவிகள்தாம். இவற்றின் தூய்மைக்கும் செம்மைக்கும் முழுமைக்கும் எவ்வளவு ஆய்வு நடத்துகின்றோம். உடல் நலத்துக்கென உலகம் எவ்வளவு கோடிகள் செலவழிக்கின்றது. உடல் ஒரு கருவிதானே என்று பேசுவது அறியாமையாகாதா. மொழி என்பது மனிதவுடைமை, பண்டு, இன்று, நாளை என எக்காலத்துக்கும் இயங்குடைமை. ‘நிலை பெறுமாறு எண்ணுதியேல்’ என்று திருநாவுக் கரசர் கேட்டபடி நல்ல தமிழ்க் கிளவிகள் வாழ வளர வாய்ப்பு வழங்கு வது நமது கடமையாகும் என்று மூதறிஞர் வ. சுப. மாணிக்கம் மொழிந் தது நினைவு கூரத்தக்கது. தூய மொழியறிவு வீடு பேற்றை நல்கும். ‘மொழித் திறத்தின் முட்டறுத்த நல்லோன் கட்டறுத்து வீடும் பெறும்’ என்று தமிழ் மக்கள் மொழிநலத்தைப் போற்றினர். தமிழ்மொழியை வகையறுத்து வளர்த்த இலக்கியங்களும் இலக்கணங்களும், தொல் பழங்காலத்தேயே தோன்றின. இவ்விலக்கியங்களின் மிகுதியாலும், வாழ்வியற் பொருண்மைகளாலும் தமிழர்களிடையே மொழிவளர்ச்சி நீண்ட காலமாக நிலைத்துள்ளது.

ஒரு மொழியின் தனித்தன்மையோடு அம்மொழியில் இடம் பெறும் பிறமொழிச் சொற்கள், அமைப்பு முறைகள், வழங்கலாகும் பொருட் பெயர்கள், செயன்மைகள் ஆகியவை பற்றிய சிந்தனையும், மொழியை மேம்படுத்தி வளர்க்கும் கடப்பாடும் நாகரிகம் பரவப் பரவ மொழிசார்ந்த மக்களிடம் காலந்தோறும் தோன்றலாயின.

இலக்கியத்தில் வளம் பெற்ற மொழியே புலவர்களால் என்றும் பாராட்டப் பெற்றது. காலம் செல்லச் செல்ல அரசியல் தலைமை பூண்ட ஒரு மொழியே சிறப்பான உயர்வுபெறும் வாய்ப்பும் உருவாயிற்று. வாணிக ஊடாட்டம் வலுப்பெறும் நிலையிலும் மொழிகள் முதன்மை பெறும்; இவ்வாறு மக்கள் மனப்போக்குக்கும், பெருகி வரும் வாழ்க்கைத் தேவைகளுக்கும் ஏற்ப, அந்தந்தக் கால நிகழ்வின் பயனைக் கருதியே ஒரு மொழி உயர்வையோ தாழ்வையோ எய்துவது இயல்பாகும். இதனை உலக நாடுகளின் வரலாறும் எடுத்துக் காட்டுகிறது. மொழியின் சிறப்பு வேறு என்றும், அதில் அமைந்த இலக்கியத்தின் சிறப்பு வேறு என்றும் இரண்டையும் தனித்தனியாகக் கருதுவோரும் உண்டு. ஒரு மொழியில் உயர்ந்த இலக்கியங்கள் அமைவது எதிர்பாராத நிகழ்ச்சியென்றும் உயர்ந்த இலக்கியங்கள் இருப்பதால், அந்த மொழி சிறந்த மொழி எனக் கருதலாகாது என்பது எஸ்பர்ஸன் முடிவு.

இடைக்காலத்திலே அரசியல், வாணிகத்தின் மூலம் சிறந்த மொழியே உயர்ந்தமொழியாக மதிக்கப் பெற்றது. இந்த நூற்றாண்டில் அறிவியல், தொழிலியல் துறைகளில் முன்னேறிய மொழியே செல்வாக்குப் பெற்றுள்ளது. மொழியைப் பற்றிய சிந்தனை மலர மலர, ஒரு மொழியில் இடம் பெற்ற பிறசொற்களின் வரவுகளும், இழப்புகளும் அறிஞர்களால் நினைக்கப்பட்டன. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்ததையும், மொழிக்கலப்புக் காரணமாகக் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றால் விளைந்த மாற்றங்களையும் அறிஞர் ஆராயலாயினர். ஒரு மொழியில், பிறமொழிக் கலப்பைத் தடுப்பதும், மொழியின் தூய்மையைக் காப்பதும் தனி ஒருவரால் இயல்வதில்லை. மொழி வயப்பட்ட மக்களின் அறிவாற்றலாலும், முயற்சியாலுமே முடியலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

தாய்மொழிப் பெருமித வெளிப்பாடாகவே தமிழகத்தில் மொழியுணர்வு ஓங்கிய நிலையில் தனித்தமிழ் இயக்கம் தோன்றியது. தனித்

தமிழ் இயக்கம் தோன்றிய வரலாற்றை, மறைமலையடிகளாரின் மகளார் நீலாம்பிகை அம்மையார் குறித்தபோது, 'ஒரு நாள் மாலையில் தந்தையும் நானும் மாளிகைத் தோட்டத்தில் உலாவும்போது, தந்தையார் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாத் திருமுறையில்,

பெற்றதாய்தனை மகமறந் தாலும் பிள்ளையைப்பெறும்
தாய்மறந் தாலும்
உற்றதேகத்தை உயிர்மறந் தாலும் உயிரைமேவிய
உடல்மறந் தாலும்
கற்றநெஞ்சகம் கலைமறந் தாலும் கண்கள்நின்றிமைப்
பதுமறந் தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும் நமச்சிவாயத்தை
நான்மற வேனே.

என்ற பாடலைப் பாடினார். அந்நாளில் அடிகளார், 'நீலா! இப்பாட்டில் 'தேகம்' என்ற வடசொல்லை நீக்கி, அவ்விடத்தில் அதற்கு ஈடாக 'யாக்கை' என்ற தமிழ்ச்சொல்லிருக்குமானால், அவ்விடத்தில் செய்யுள் ஓசையின்பம் பின்னும் அழகாக அமையும். பிறமொழிச் சொற்கள் கலப்பதால், தமிழின் இனிமை குன்றுகிறது. அத்துடன் நாளடைவில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலைபெற்று, அப்பிறமொழிச் சொற்களுக்கு நேரே தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து மறைந்து விடுகின்றன. இவ்வாறே அயல்மொழிச் சொற்களை ஏராளமாக நம் மொழியில் பெய்து எழுதியதாலும் பேசியதாலும் நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் மறைந்தே போயின' என்று கூறினார். அது கேட்ட நான், தந்தையாரைப் பார்த்து, 'அப்படியானால் இனிமேல் நாம் அயல் மொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும். அதற்கான முயற்சியைக் கைவிடாது செய்தல் வேண்டும்' என்று ஆர்வத்துடன் கூறினேன். எனது அன்பார்ந்த வேண்டுகோளை ஏற்றுத் தந்தையார், சுவாமி வேதாசலம் என்னும் தம் வடமொழிப் பெயரைத் தனித்தமிழில் மறைமலையடிகள் எனவும், தாம் நடத்திய 'ஞானசாகரம்' என்னும் வெளியீட்டிற்கு 'அறிவுக்கடல்' என்றும், 'சமரச சன்மார்க்க நிலையம்' என்ற தம் மாளிகைப் பெயரைப் 'பொது நிலைக் கழகம்' எனவும் மாற்றினார், என்று குறித்துள்ளார். தமிழ்மொழி வளம் மிகுந்தது; நிறைந்த சொற்செல்வமுடையது. இந்நிலையில் பிறமொழிகளினின்றும் சொற்களைக் கடன் வாங்கினால், அதன் வளர்ச்சி குன்றும் என்ற கருத்தை நீலாம்பிகை அம்மையாரும் இறுதி வரையில் தம் தந்தையாரைப் போலவே வலியுறுத்தி வந்தார். சிலர் வினாக்கள்

தொடுத்தபோது, அம்மையார் விளக்கிக் கூறிய மறு மொழி இதை மேலும் தெளிவாக்குகிறது.

‘ஒரு செல்வவான் பெரிதும் முயன்று தன் பொருளையே தான் பெருக்குவானாயின், மேன்மேலும் செல்வவானாதல் கூடும். அவன் பிறரிடத்துக் கடன் வாங்கித் தன் பொருளைப் பெருக்க நினைப்பா னாயின், அவன் செல்வம் எங்ஙனம் பெருகும்? கடன் தந்தோர் பொருளை இவன் பொருளெனக் கூறல் பொருந்துமோ? அது போல நிறைந்த சொற்செல்வமுடைய தமிழ்தான் பிறமொழியினின்றும் சொற் களைக் கடன் வாங்கிக் கொள்வதால், தான் எவ்வாறு வளர்ச்சியடை யும்? இன்னும் அளவிற்கு மிஞ்சிய செல்வமுடையான் ஒருவன் தன் பொருளைச் செலவழியாது பிறனொருவனிடம் சென்று கடன் கேட் பானாயின், அப்பெருஞ்செல்வனை நோக்கி அறிவுடையார் எள்ளி நகையாடிப் பேசுவர். அதுபோலத் தமிழர்கள் தம் மொழியின்கண் அளவற்ற சொற்கள் அமைந்திருத்தலைக் கண்டும், அவற்றைப் பயன் படுத்தாது, பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கித் தம் தமிழைப் பெருக்குகின்றோமென்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும் கூறுமின்கள்’.

எனினும், அந்நாளிலேயே பிறசொற்கள் கலப்பதைக் ‘கடன் கோடல்’ என்று கூறுதலாகாது. ‘மொழிக்கு வளஞ்சேர்த்தல், சொற் செல்வத்தைப் பெருக்குதல்’ என்று கருதுவோரும் இருந்தனர்.

அறிவாலும், நாகரிகத்தாலும் சிறந்து விளங்கும் ஒரு கூட்டத் தார் ஒரு நாட்டிலிருப்பின், மற்ற நாட்டிலுள்ளார் தாம் தொகுத்த பண்டங்களையும் பொருள்களையும் விலைப்படுத்தும் பொருட்டு அந்நாகரிக மக்களிடம் கொணர்ந்து வைப்பர். இன்னும் பல்வகை இடையீடுகளாலும், தம் நாடு துறந்து பிற நாடு வதிவோர் எனப்புலம் பெயர்வோரும் உண்டு. இங்ஙனம் வாணிகப் போக்கினரும், வாழ்வு தேடிக் குடிபெயர்வோருமென்னும் இரு கூட்டத்தாரும் நாகரிக வாழ்க் கையுடைய கூட்டத்தாருடன் வந்து கலப்பது இயற்கை. இங்ஙனம் நேரும் மக்களின் கலப்பால் அவர் பேசும் ஒருமொழிச் சொற்கள் பிறமொழியிற் கலவா நிற்கும். இவ்வாறு நேரும் கலப்பு இயற்கை ஏது வாகும். இனிச் செயற்கையாகப் பண்டங்கள் விற்றற்கும், குடிபெயர் தற்கும், ஒரு நாட்டார் தம் நாடு நீங்கிப் பிறிதொரு நாட்டிற் புகுந்து அந்நாட்டினரோடு ஒன்றி வாழுங்காலத்து அவர்தம் மொழிச் சொற்

கள் மற்றவர்பாற் கலக்கும். இவ்வியற்கையைத் தடுத்தல் அரிதாம் என்ற கருத்தும் பரவியது. எனினும், தனித்தமிழ் இயக்கத்தின் பெருந்தொண்டால், பிறமொழிக் கலப்பு மிகுதியாதலைக் கடந்த நாற்பதாண்டுகளாகத் தடுக்க முடிந்தது. எனினும், கலப்பு நிகழாமல் எந்த ஒரு மொழியுமே நிலவ முடியாது என்பதை உலகின் பல மொழிகளைப் போலத் தமிழும் மெய்ப்பித்து வருகிறது. பொதுவாக நோக்கினால் ஒரு மொழி கருத்தைப் புலப்படுத்தவும், சிந்தனையை வளர்க்கவும் பலவற்றை நினைவிற் கொள்ளவும், வேண்டியவற்றைக் காலத்தோடு விளைந்தவற்றை அறியவும் துணையாகிறது.

தமிழகம் பல மொழிகளின் கொள்கலமாக மாறியிருந்த காலங்கள் உண்டு. முகலாய மன்னர், மராத்திய அரசர், தெலுங்கு மன்னர், வெள்ளையர் இவரைத் தவிர ஆதிக்கம் எனப் பல்வேறு இனத்தாரின் ஆட்சிக் காலங்களில் தமிழகம் மொழி, கலை, பண்பாட்டு, நாகரிக நிலைகளில் பல மாற்றங்களைப் பெற்றது. புதியவர் தொடர்பால், புதிய பொருள்களின் வரவால், பல்கிப் பெருகிய வாணிகத்தால், பார் முழுவதும் பரவிய அறிவியல் வளர்ச்சியால், அயன்மொழிச் சொற்கள் காலந்தோறும் அன்றாட வழக்கில் பெருகலாயின. ஆர்மீனியன் தெரு, போர்த்துகீசியத் தெரு, டச்சுத் தெரு, சுல்தான் தெரு, தானீசுத் தெரு, சௌகார் பேட்டை, நாயக்கர் தெரு, சௌராஷ்டிரத் தெரு எனத் தமிழகத்தில் இன்றும் தெருக்களின் பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

தமிழில் கலந்த பிறமொழிச் சொற்களை அச்சொற்கள் பல்லாண்டுகள் நம்மிடையே விரவியமையால், தமிழாகவே கருதிப் பயன்படுத்தி வருகிறோம். 'ஜன்னல்' 'மேஜை' என்ற சொற்களில் வட எழுத்துகளை நீக்கிச் சன்னல், மேசை என எழுதியும், அன்னாசி, கொய்யா, தோசை முதலிய சொற்களைத் தமிழ்ச் சொற்கள் என்றும் நாம் கருதி வழங்குகிறோம். ஆனால் சன்னலும், மேசையும் தமிழுக் குரியவை அல்ல. போர்த்துகீசியச் சொற்களான அவை நம்மிடையே வழங்கியமையால், அச்சொற்களுக்குப் பொருந்திய தமிழ்ச் சொற்களை நாம் இழந்தோம் என்றே கூறலாம். சன்னல் என்னும் சொல்லால், காலதர், வளியதர், பலகணி, மான்கண், மீன்கண் முதலிய அருந்தமிழ்ச் சொற்கள் மறைந்தன. மேசை என்னுஞ் சொல்லால் படிமணை, பலகை, மேற்பலகை முதலியன வழக்கிழந்தன.

அகராதியியலாளர்களின் கருத்துப்படி அயல்மொழிச் சொற்கள் அருந்தமிழில் பேச்சு வழக்கில் முதலில் கலந்து பிறகு எழுத்து வழக்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எழுத்து வழக்கில் அயன் மொழிச் சொற்கள் ஏற்கப்படுவதும், அவை பிறகு முறையே பேச்சு வழக்கிலும் இடம்பெற நேர்வது உண்டெனினும், அவற்றின் தொகை குறைவே.

பிறமொழிச் செல்வாக்கால் ஆசாமி, இலாக்கா, கஜானா, முனிசீப் போன்ற சொற்கள் பேச்சு வழக்கில் நுழைந்தன. எழுத்து வழக்கில் மேற்கூறிய பொருள்களைக் குறித்து முன்னரே சொற்கள் உள்ளன. இருப்பினும் பேச்சு வழக்கு, பிறமொழிச் சொற்களை மட்டுமே கொண்டது. கால வளர்ச்சியில் எழுத்து வழக்கும் அச்சொற்களைப் பேச்சு வழக்கின் விளைவால் ஏற்றது. பேச்சு வழக்கின்மீது எழுத்து வழக்கின் அமைவு குறித்து எழுதுகையில், 'எழுத்து வழக்கும் பேச்சு வழக்கின்மீது எல்லா நிலைகளிலும் விளைவை ஏற்படுத்துகிறது. இருப்பினும், பேச்சு வழக்கு எழுத்து வழக்கின்மீது ஏற்படுத்தும் விளைவைவிட அளவில் குறைந்ததே. அதற்குக் காரணம் புதிய மாற்றங்கள், பேச்சு வழக்கில் அதன் ஏற்புத் தன்மையால் விரைந்து நடைபெறுகிறது என்பதே. எழுத்து வழக்கு தன் இறுக்கத்தன்மையால் மெல்லவே மாற்றங்களை ஏற்றுக் கொள்கிறது. இங்கு எழுத்து வழக்கு, பேச்சு வழக்குமீது சொற்களஞ்சிய நிலையில் (Lexicon level) விளைந்ததை மட்டும் குறிக்கிறோம்.

நாம் அருந்தும் சிற்றுண்டிகளின் பெயர்கள், அணியும் உடைகளின் பெயர்கள், அலுவலக நடைமுறைகள் என்ற நிலைகளில் தமிழ்ச் சொற்கள் பிறசொற்களால் வழக்கிழந்தன. எனினும், காலப் போக்கில் மொழி உணர்வுக்கு முதன்மை தரவேண்டுமெனத் தமிழாக்கங்களும் உருவாயின. இக்கலப்பின் அளவுபற்றிப் பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகையில், 'கண்ணுக்கு மையிடுவது போலப் பிற மொழிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மையிடுவது அதிகமானால் எப்படிக் கண்கள் கலங்குகின்றனவோ, அழகைக் கெடுத்து விடுகிறதோ, அதுபோலப் பிறமொழிகளை அதிகமாகக் கலப்பதில் நம் மொழிக்கு ஆபத்தான நிலைமையையே அக்கலப்பு உண்டாக்கும்' எனக் கருத்துரைத்தார். மேலும், தமிழில் பிறமொழிச் சொற்கள் இடம் பெற்றிருந்த அவல நிலை மாறி, நல்ல தமிழ்ச் சொற்கள் கையாளப்படுவதையும்

கண்டு தமக்கே உரிய நகைச்சுவைப் பாங்கில், இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், "மகாஜனங்களைத்தான் கண்டேனே ஒழிய, மக்களைக் காணவில்லை; அக்கிராசனர் தலைமையில்தான் பேசி யிருக்கின்றேனே தவிரத் தலைவர் தலைமையில் நான் பேசியதில்லை. பிரசங்கம் கேட்டிருக்கிறேனே தவிரச் சொற் பொழிவைக் கேட்ட தில்லை. தவமாய்த் தவம் கிடந்து இப்பொழுது அவற்றைச் சந்திக் கிறேன்" என்றார் அண்ணா.

தமிழ்ச் சொல்லாக்கங்கள் உருவாவதற்கு முன்னர்ச் சட்டப் பேரவையைச் 'சட்ட நிருபண சபை' என்றும், உயிரியல் வனத்தை 'மிருகக் காட்சி சாலை' - 'உயிர்க் காலேஜ்' என்றும், அருங் காட் சியகத்தைச் 'செத்த காலேஜ்' என்றும் அழைத்து வந்ததை நாம் மறப் பதற்கில்லை. தலைமைச் செயலகம், மேலவை, பேரவை, தேர்தல், வேட்பாளர், வேட்பு மனு, வாக்கு - என்றெல்லாம் இன்று வழங்கப் படும் சொற்கள் புதிய சொல்லாக்கங்களே, உறுப்பினர் என்று எளிதாக இன்று அனைவரும் எழுதும் சொல்லை உருவாக்க மாகவி பாரதி யார் தாம் பட்ட முயற்சியை வருந்திக் கூறியது நோக்கத்தக்கது.

"நடுவிலே இரசமான வார்த்தை 'மெம்பர்' என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். 'அவயவி' சரியான வார்த்தையில்லை. 'அங்கத்தான்' கட்டிவராது. 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால், பொது ஜனங்களுக்குத் தெரி யாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணிநேரம் யோசித்துப் பார்த் தேன். 'உறுப்பாள்' என எவற்றையெல்லமோ நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக மெம்பர் என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆற அமர யோசித்துச் சரி யான பதங்கள் கண்டுபிடித்து, மற்றொரு முறை சொல்கிறேன்" என்று பாரதியாரே பல்வேறு சொற்களைப் படைத்துத் தமிழ் மொழிக்கு உரம் ஊட்ட முயன்றதும் அந்நாளைய மொழியுணர்வைக் காட்டுகிறது.

இவ்வாறு புதிய சொல்லாக்கங்களால் தமிழ்ச் சொற்கூட்டம் பெருகிய போதிலும், தமிழில் கலந்த பிறமொழிச் சொற்களை அறவே நீக்குதல் இயலாததாயிற்று. பிறமொழிச் சொற்களிலும் தமிழ் ஒலிப் பில் ஒரசை, ஈரசையில் அமையும் சொற்கள் தமிழிலேயே நிலைத்து விடுமோ என்று ஆராய வேண்டும். சான்றாக, கார், ஸ்டவ், ஸ்விட்ச்,

ஸ்டேண்ட், பல்பு, ஏலம், கொய்யா, அன்னாசி, ஆரஞ்ச், பஸ், லாரி, ஆட்டோ, டைம் போன்ற சொற்கள் பிறமொழிச் சொற்கள் என்ற எண்ணத்தையே உருவாக்காமல் தமிழில் எளியோர் நிலையிலும் இயல்பாகக் கலந்து வழக்கில் நிலைக்கின்றன. தமிழ்ச் சொற்களுக் குரிய வேற்றுமை உருபுகளையும் அயன்மொழிச் சொற்களோடு இணைத்து, டயரில் காற்றில்லை, சைக்கிளுக்கு பிரேக் இல்லை, பிராப்ளத்துக்கு ஒரு வழியில்லை, டைமுக்கு வரவில்லை என்றெல் லாம் பேசுவது அச்சொற்களை அயன்மையாகக் கருதாமையால், தமிழ் உருபுகளோடு இணைபவையாகக் கொண்டனர் என்று மொழி யறிஞர் கூறுவர். "தம்பி! பலவற்றை நான் எழுதியபிறகு அவற்றில் பிறமொழிச் சொற்களின் கலப்பையெண்ணி வருந்தியுள்ளேன். என் னால் இயன்றது அவ்வளவுதான். நீயாவது பிறமொழிக் கலப்பை நீக் கிப் பேசவும் எழுதவும் பழகு!" என்றார் அண்ணா.

இவ்வாறு தமிழில் இடம்பெற்ற அயன்மொழிச் சொற்களைத் தொகுப்பது, தொகுத்ததைத் தொடர்ந்து ஆராய்வதாகிய பணியை மொழியறிஞர் தெ.பொ.மீ, மறைமலையடிகளாருக்கு மாற்றாக மொழி யியல் நிலையில் நடத்தினார். தெ.பொ.மீ. இதுபற்றிக் குறிப்பிடும் போது, 'பன்னெடுங் காலமாகப் பிறமொழி பேசும் மக்களோடு நேர்ந்த தொடர்பால் பல சொற்கள் தமிழிலே புகுந்து இன்றைய வழக்கிலும் நிலைபெற்றன என்று முன்னரே குறித்தோம். இது போலவே தமிழ்ச் சொற்களும் பிறமொழிகளில் புகுந்தன. இவ் வகையான ஊடாட்டத் தைப் பற்றித் தமிழ்மொழி வரலாறு என்னும் நூலில், "தமிழ்மொழி யின் புறநிலை வரலாறு" என்ற தலைப்பில் ஓரளவு விளக்கியுள்ளேன். தற்போது உசுமானியப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் என்னு டைய மாணவர்களுள் ஒருவரான டி.எஸ். மாணிக்கம், தமிழில் காணப் பெறும் பிறமொழிச் சொற்கள் பற்றி ஆராய்ந்து, எவ்வாறு கிரேக்கர், உரோமானியர், பாரசீகத்தார், அரபியர், யூதர், போர்த்துகீசியர், டச்சுக் காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், சிங்களவர், மலேயர், சீனர் ஆகிய பிற நாட்டினரின் தொடர்பினை இச்சொற்கள் புலப்படுத்தி நிற்கின்றன என்பதைக் கண்டு விளக்கியுள்ளார்.

பிறநாட்டினர் தொடர்பினைப் பற்றிக் கூறும்போது, தமிழகத் தில் நம்மோடு வாழும் மலையாளத்தார், கன்னடர், தெலுங்கர், மராத் தியர், உருது பேசுவோர் மற்றும் வட இந்தியாவிலேயே வாழ்வோர்

ஆகியோர் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. ஆந்திரப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்பராவ் ஆங்கிலத்தில் காணப்பெறும் இந்தியமொழிச் சொற்கள் பற்றி ஆராய்ந்திருக்கிறார். இவ்வொன்றி னைத் தவிரப் பிற மொழிகளில் காணப்பெறும் தமிழ்ச்சொற்கள் பற் றிய விரிவான ஆராய்ச்சியை இனிமேல் நாம் மேற்கொள்ள வேண் டும். ஏனெனில், இவ்வகை ஆராய்ச்சிக்குப் பிறமொழியாளரிடையே தமிழ்ப்பயிற்சியும், தமிழரிடையே பிறமொழி அறிவும் பெருக வேண் டும்' எனத் 'தமிழும் பிற பண்பாடும்' என்ற நூலில் தெ. பொ.மீ. எழுதியுள்ளார்.

பிறமொழிகளில் தமிழ்ச் சொல்லாட்சி பற்றிப் பேராசிரியர் இராமச்சந்திரன் ஆராயும்போது இக்கருத்தையே, 'அறிவியல் வளத் தாலும் வாணிக வளத்தாலும் தொழில்துறை வளத்தாலும் விரைவாக வளர்ச்சியும், முன்னேற்றமுமடையும் நாடுகளே இன்று உலக அரங் கில் சிறப்புடைய நாடுகளெனப் பாராட்டப்படுகின்றன. தமிழ்நாட் டோடு வாணிகத்தொடர்பு கொண்ட மேலை நாட்டு வாணிகர்கள், தங்கள் மொழிகளில் தமிழ்நாட்டுப் பொருள்களைக் குறிப்பதற்குரிய பெயர்கள் தம் மொழிகளில் இல்லாத காரணத்தால், தமிழ்ச் சொற் களையே ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களானார்கள். பல சொற்கள் தமிழ்மொழியினின்று நேராகவும், சில சொற்கள் மலையாளம், தெலுங்கு, ஈபுரு மொழிகள் மூலமாகவும் இரவல் சொற்களாக ஆங்கி லத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதனால் ஆங்கிலம் வளமுடைய - செழிப்பிற்குரிய மொழியாக மாறி விட்டது' என்று கூறும் கருத்து நாம் நினைக்கத்தக்கது.

ஆங்கிலமொழி அறிஞர்கள் தங்கள் மொழியில் அயற்சொற் கள் விரவுவதைக் குறையாகக் கருதாமல் மொழிக்கு ஊட்டமாகவே கருதினர். அயற்சொற்களின் பொருள், மூலம், வரலாறு, சிறப்பு ஆகிய வற்றை விளக்கித் தனித்தனியான அகரமுதலிகளையும் பதிப்பித்துள் ளனர். சென்னையில் ஆட்சித்துறையில் பணிசெய்து ஓய்வு பெற்ற ஆங்கிலேயே அறிஞர் பர்னலும், அவருடைய நண்பர் யூல் என்பா ரும் தொகுத்த 'ஆப்சன் ஜாப்சன்' என்னும் அகராதி இங்குக் குறிப் பிடத்தக்கதாகும். Glossary of Colloquial Anglo-Indian Words and phrases of General terms, Etymological and Discussive என்ற துணைத்தலைப்புப் பெற்ற அந்த நூலில், மொழிக்கலப்புப் பற்றிய

ஆய்வுரையில் ஆங்கிலத்தில் இந்திய மொழிகளிலிருந்து (தமிழ் உட் படப் புகுந்துள்ள அயன்மொழிச் சொற்கள் யாவும் முதலில் ஐரோப் பிய மத்திய ஆசிய மொழிகளிலிருந்து, வாணிகம், அரசியல் மேலாண் மைத் தொடர்பால் இந்திய மொழிகளில் முதலில் இடம் பெற்றுப் பிறகு இந்திய மொழிகளின் செல்வாக்கால் ஆங்கிலத்தில் கலந்தன என்று விளக்கப்படுகிறது. இவற்றில் சிறப்பாகப் போர்த்துகீசியச் சொற் கள் நேரடியாக ஆங்கிலத்தில் கலக்காமல், இந்திய மொழிகளின் வழி யாகவே ஆங்கிலத்தில் புகுந்தன என்பர்.

The words with which we have to do, taking the most extensive view of the field, are in fact organic remains deposited under the various currents of external influence that have washed the shores of India during twenty centuries or more...

The trade and conquests of the Arabs both brought foreign words to India and picked up and carried westward, inform more or less corrupted, words of Indian Origin, some of which have in one way or other become part of the heritage of all succeeding foreigners in the East...

The conquests and long occupation of the Portuguese, who by the year 1540 had established themselves in all the chief ports of India and the East, have as might have been expected, bequeathe a large number of expressions to the European nations who have followed and in great part superceded them எனக் கூறுவது நாம் சிந்திக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் 'ஒரு மொழியோ, ஒரு வடிவமோ எவ்வளவு பழை யது, தெய்விகத் தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்கி றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த மொழியைச் சீர்திருத்த வேண் டிய அவசியம் இருக்கிறது என்பது அதன் உண்மைத்தத்துவமாகும்.' என்று பகுத்தறிவுத் தந்தை பெரியார் கூறியதையும் நினைக்க வேண்டும்.

இவ்வாறு அறிஞர்கள் ஆங்காங்கே கூறிய விளக்கங்களால் இன்றைய நிலையில் மொழிக்கலப்பு - அன்றாட வழக்கில் ஆங்கிலச் சொற்கள் - வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது மொழிச் சொற்கள் பயின்ற நிலையை ஓரளவு தொகுத்துக் காணலாம்.

மொழிக்கலப்பு

மொழித்திறன் என்பது நாட்டு மக்கள் வளர்த்துக் காக்கும் திற னுடைமையின் பயனாகும். ஒருவருக்கொருவர் உரையாடி மகிழும் மொழியே மக்களின் அறிவுப் பெருக்கத்தால் செழுமையான மொழி யாக மாறும். பல இன, மொழி மக்களின் இயக்கமாக உலகம் உள்ளது. மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முதலில் உணர் வைச் சிறுசிறு சொற்கள் கொண்ட மொழியாகத் தன்னைப் போல் அவற்றை அறிந்தவரிடம் உரையாடுகிறான். தனி ஒரு மனிதனின் தேவை என்ற நிலையிலிருந்து அவன் சார்ந்த சமுதாயத்தின் விருப் பம், நோக்கம், தேவை எனும் நிலைக்கு வளர்ச்சி உருவாகின்றது. இக்கட்டத்தில் மொழியின் பயன்பாடு செறிவடைகின்றது. தன்னைச் சார்ந்தும், தன்னைச் சுற்றியும் குறுகிய எல்லையில் நிகழ்ந்த மொழிப் பயன், வேறு ஒரு குடும்பத்தில் ஊடாட்டம் நிகழ்த்தும் அளவிற்கு விரிவடைகிறது. இந்நிலையில், உலகின் பல்வேறு மொழிக் குடும் பங்கள் ஒன்றையொன்று நெருங்கியும் நேயங்கொண்டும் கருத்து களையும், பொருள்களையும் கொண்டும் கொடுத்தும் தம்மை வளப் படுத்திக் கொள்கின்றன.

இவ்வாறு சமுதாய வாழ்வுக்கு மொழியே இணைப்புப் பாலமாக அமைகிறது. இத்தகைய சமுதாயச் சந்திப்புகளால் நாகரிகம், பண்பாடு, கலை, பழக்க வழக்கங்கள் ஆகியவை நாளும் புதிய மாற்றங்களைப் பெறுகின்றன. நிகழ்ந்த மாற்றங்களால், மொழி இழப்பு, மொழிக் கலப்பு என இரண்டும் விளைகின்றன. இவற்றுள் மொழிக் கலப்பு என்பதே வன்மை மிக்கது. மொழிக்கலப்பு நிகழத் தொடங்கிய நிலை யில் மொழிக்குப் பழஞ்சொற்களை மறப்பது, உரிய சொற்களை விலக்கு வது என்ற அளவில் இழப்புகள் நேரும். இழப்பும் கலப்பும் இரு வேறு சொற்களாக அமைந்தாலும், இழப்பின்றிக் கலப்பில்லை; கலப் பின்றி இழப்பில்லை என்றே கருதலாம்.

ஒரு மொழியில் உள்ள சமுதாயத் தேவை கருதியும், சமுதாயத் தொடர்பை விரிவாக்கும் காரணங்களாலும் ஒரு மொழியில் வேறு சொற்கள் புகுந்து இடம் பெறுவதையே மொழிக்கலப்பு என்கிறோம். மொழி இழப்பு என்பது, மொழிக் கலப்பால் ஒரு மொழி தன்னிட மிருந்த சொற்களைப் பயன் குறைந்ததாக இழந்துநிற்கும் அவல நிலையாகும்.

மொழிக் கலப்பு நிகழ்வதற்குப் பல்வேறு காரணங்கள் கூறுவர். இயல்பான சந்திப்புகள், பொருள்களைக் கொடுத்தலும், வாங்குதலும், இனங்களுக்குள் நிகழும் போரினால் ஓரினம் தன் மொழி, கலை, பண் பாட்டுக் கூறுகளை அறவே கை நெகிழ விடுதல் என்பன சில. இருப் பினும் மொழிக்கலப்பு என்பது எளிதில் நிகழக் கூடியது என்னும் கருத்து, ஒவ்வொரு மொழியிலும் வேறு மொழிச் சொற்கள் கலந்து கிடப்பதைக் காணும்போது புலப்படும்.

ஒருவர் பேசும் மொழியில் இன்னொரு மொழியின் சொற்கள் கலந்திருக்கும் காரணத்தாலேயே அவ்வினத்தார் அம்மொழிகளை அறிந்தவர் என்று கருதுவதற்கில்லை. இன்னொரு மொழியைப் பற்றி ஒன்றும் அறியாமலே அந்த மொழியின் சொற்கள் சிலவற்றைக் கேட் டுத் தம் மொழியில் கலந்து பேசுவது எளிது. ஆகவே, சொற்களின் கலப்புக்குப் பெரியதொரு தனிக்காரணம் அமைய வேண்டியதில்லை. இரு வேறு மொழி பேசும் மக்கள் நாட்டின் ஒரு மூலையில் ஏதேனும் ஒரு காரணம் பற்றிச் சிறிது கலந்து பழகினால் போதும்; சொற்கலப்புக்கு அஃது இடம் தந்து விடும். நாளும் ‘புதுவோர் மேவலின்’ என்றும், ‘புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்’ எனவும் வரும் பொருண்மொழிகள் மக்கள் இயல்பை நன்குணர்த்தும்.

பொதுவாக எந்தச் சொல்லையும் பொருள் தெரிந்து கூறுவது நல்லது. சொல்லின் பயனும் அதுவேயாகும். இதனாலேயே எந்தச் சொல்லுக்கும் பொருள் தெரிந்து கொள்ள முயல வேண்டும். எல்லாச் சொற்களுக்கும் பொருள் உண்டு. அப்படியே பொருள் தெரியவில் லையென்றால், ‘மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா’ என்ற வாறு முயன்று காண முற்பட்டால் பொருளை அறியலாம் என்பது தொல்காப்பியர் கருத்து. பிறமொழிச் சொற்களின் கலப்புத் தொடங் கவே பொருளறியாத தன்மையால் இடுகுறிப் பெயருக்கு நன்னூலார் இடம் தந்தார். “ஆசிரியர் தொல்காப்பியர் யாதானுமோர் காரணம் பற்றியே குறியிட்டு ஆளுதலல்லது, வடநூலார் போலக் காரணம் பற்றாதும் குறியிட்டு ஆளுதல் யாண்டும் இல்லை’ என்று தொல் காப்பியச் சூத்திர விருத்தியில் சிவஞான முனிவர் குறிப்பிட்டதைப் பலரும் எடுத்துக் காட்டுவர்.

பன்னெடுங்காலமாகப் பிறமொழி பேசும் மக்களோடு ஏற்பட்ட தொடர்பினால், பல சொற்கள் தமிழிலே புகுந்து இன்றைய வழக்

கிலும் நிலைபெற்றன. இம்மொழிக் கலப்பு ஒரு குறிப்பிட்ட மொழியால் மட்டுமே நிகழ்வதன்று. ஒரு மொழியினர், பல மொழியினரோடும் பழக நேர்வதால், பல மொழிகளும் ஆங்காங்கே கலப்பதும் இதற்குக் காரணமாகும். தமிழ்மக்கள் வடநாட்டாரோடு மட்டுந்தான் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று கூற முடியாது. பிற நாட்டாரோடும் உறவு கொண்டிருந்தார்கள். இவ்வகைத் தொடர்பின் அறிகுறியாகப் பிற நாட்டுச் சொற்களும் தமிழில் புகுந்துதான் இருக்க வேண்டும். எனவே, உலகின் மொழிகளனைத்தும் ஏதேனும் ஒரு காரணத்தால், ஓரினத்தோடு இணைந்த மொழிக்கலப்புடையனவாகவே இருக்கும்.

வழக்குச் சொற்களின் வலிமை

ஒரு மொழியின் எழுத்து வழக்கினைக் காட்டிலும் பேச்சு வழக்கே பரந்தும் விரிந்தும் செயற்படுவது. இப்பேச்சு வழக்கில் மொழிக்குரிய சொற்களும், பிறமொழிகளிலிருந்து வந்திணைந்த சொற்களும், மக்களுக்குப் பயன்படும் சூழலுக்கேற்ப இடம் பெறுகின்றன. இப்பேச்சு வழக்குப் பலகாலம் நீடிக்கும் நிலை உண்டு. இவ்வாறு நிலைத்திருந்த பேச்சு வழக்கில், கலந்த பிறமொழிச் சொற்கள் சில அம்மொழியில் பின்னாளில் நிலைத்து விடும் வல்லமை பெற்று விடுகின்றன. இவ்வாறு வல்லமை பெற்று நின்ற பிறமொழிச் சொற்கள், காலத்திற்கேற்ப இலக்கியங்களில் இயற்கையாக இடம்பெறக் கூடியனவாகும். எனவே, ஒரு மொழியின் பேச்சு வழக்கும், அதனால் வழங்கும் சொற்களும் வலிமை கொண்டவை என்பதை அறிய முடிகின்றன. இவ்வாறு வழங்கப்பெற்ற சொற்களே பல்வேறு உரையாசிரியர்களால் சமுதாய நிகழ்வுச் சான்றுகளாகக் காட்டப்பட்டன. தொல்காப்பியத்தை இயல்பாகவும் எளிமையாகவும் மாணவர்கள் புரிந்து கொள்வதற்கு எழுதிய உரைநெறிகளுள் சமுதாய வழக்கோடுபட்ட எடுத்துக்காட்டுகளும் ஒரு வகைப்பாடாகும்.

இயற்கை, காதல், வீரம், கலைகள், அறங்கள், உழவு, வாணிகம், பழக்க வழக்கங்கள் முதலான பிரிவுகளிலிருந்து தத்தம் காலத்தில் பயின்ற சொற்களையும் தொடர்களையும் மேற்கோள்களாகக் காட்டிய விளக்கங்கள் பல. எடுத்துக்காட்டாக 'இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவொழிந்தன', 'ஆன்கன்றுக்கு நீரூட்டுக', 'இலைநட்டு

வாரும்', 'பூநட்டு வாரும்', 'நம் எருது ஐந்தனுள் யாது கெட்டது', 'எருது வந்தது அதற்குப் புல்கொடுக்க', 'எவருங்குழி' என்னும் உழவுத்துறை வழக்குகளும், 'கால்மேல் நீர்பெய்து வருதும்', 'வாய் பூசி வருதும்', 'இன்று இவ்வூரெல்லாம் தைந்நீராடுப', 'நாயாற் கோட்பட்டான், பேய்கோட்பட்டான்', 'நாகர்பலி', 'இல்லம் மெழு கிற்று', 'சோறு அட்டது' எனப் பழக்கவழக்கச் சொற்களும், 'மலை நிற்கும்', 'ஞாயிறு இயங்கும்', 'பண்டு இப்பொழிலகத்து விளையா டும்', 'வேங்கைப்பூ', 'கருப்புவேலி', 'வரை வீழருவி', 'குன்றக்கூகை' என இயற்கைத் தொடர்பான வழக்குகளும், 'மனைவியைக்காதலிக் கும்', 'உற்றார்க்குரியர்', 'நங்கை வந்தாள்' 'அவட்குப் பூக்கொடுக்க', 'ஒக்குமோ இவள்கண்', 'இந்நங்கைகண் நல்லவோ' 'இக்கயல் நல் லவோ' என வரும் காதல் வழக்குகளும், 'இன்று இவ்வூர் மக்கள் தாவடிபோயினார்', 'வடுகரசர் ஆயிரவர் மக்களை உடையர்' என வரும் வீரங்காட்டும் வழக்குகளும், 'யாழ்கேட்டான்' 'குழல் கேட் டான்', 'வழக்கத்தாற் பாட்டாராய்ந்தான்', 'ஆடரங்கு', 'செய்குன்று', 'கபிலரது பாட்டு', 'பண்ணுக்குத்தக்கது பாடல்' என்ற கலைத்துறை வழக்குகளும், 'ஆசையைக் குறைக்கும்', 'அறத்தைக் காதலிக்கும்', 'சூதிரைக் கன்றும்', 'மனை வாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்', 'பழி யஞ்சும்' என்று அறம் குறித்த வழக்குகளும், இவ்வாறே அரசியல், சமயம், ஊர், நாடு முதலான வழக்குச் சொற்களும் இவ்வுரைகளில் பல்கிக் கிடக்கின்றன.

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் என்று பாயிரம் கூறிய தற்கேற்பச் செய்யுட் காட்டுகள் உரைகளில் இடம் பெற்ற வழக்குக் காட்டுகளாகும். இவ்வழக்குச் சொற்கள், தொல்காப்பிய உரையாசி ரியர்கள் காலத்தில் வழக்கில் இருந்தனவாதலால், இவை சான்று களாகக் காட்டப்பெற்றன என்பதை நாம் அறிய முடிகிறது. இவற்றில் பலவற்றை இன்றைய தமிழ் வழக்கில் காண இயலாது. ஆயினும் வழக் குச் சொற்கள் வலிமை மிக்கனவாகவும், அப்போதைக்குப் பெருகிப் பின்னர் இலக்கியத்தில் இடம்பெறத் தக்கனவாகவும் அமைந்தன. எனவே, வழக்குச் சொற்களில் பிறமொழிச் சொற்கள் மெல்லப் பெரு கவே, அம்மொழியில் தோன்றிய இலக்கியங்களிலும் பிறமொழிக் கலப்பு இடம்பெறுவது இயல்பாயிற்று.

மொழிக்கலப்பின் தொன்மை

ஒரு மொழியின் கூறுகளான பேச்சுமொழி, எழுத்துமொழி ஆகிய இரண்டிலும் மொழிக்கலப்பு நேர்கின்றது. ‘மனிதன் தன் சிந்தனைத் திறத்தால் புதியன கண்டு, கேட்டு, அமைத்துப் போற்றிடும் சிறந்த நாகரிகக் கூறாக மொழி உருவெடுக்கின்றது. எத்தனையோ தடைகளையும், சில காலங்களில் நேரும் காலத்தாழ்வு, பிற்போக்கு ஆகிய எல்லாவற்றையும் கடந்து மொழியை மாந்தன் தன் சிந்தனையால், உறவுத்தொடர்பால் எப்படியோ வளர்த்துக் காத்து வந்திருக்கிறான் என்பது வியப்பைத் தருவதாகும். இவ்வாறு காக்கப்படும் மொழியின் கண்ணும் மொழிக்கலப்பு நேர்வது இயல்பாகிறது. மனித வாழ்வின் வளர்ச்சியோடு இணைவதாகவே இதனை எண்ண வேண்டும். மக்களின் அறிவையும், ஆற்றலையும், வளத்தையும், வறுமையையும், பழக்கத்தையும், அடிப்படைகளாகக் கொண்டு, மொழிக்கு மொழி குறைந்தும் நிறைந்தும் புதிய சொற்கள் கலக்கின்றன.

அறிவு வளமிக்க மக்கள் புதியனவாகத் தாம் காணும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு உழைத்ததால், தம்முடைய மொழியில் அதிக எண்ணிக்கையில் சொற்களைப் பெருக்கியிருப்பர். தாமே அனைத்தையும் கண்டறிந்து நேர்ப்பழக்கம் கொண்ட நிலையினரானால் அம்மொழியாளரிடையே மொழிக்கலப்புக் குறைந்த அளவிலேயே அமைந்திருக்கலாம். வளங்குறைந்த நிலையில் தனித்து ஒதுங்கிய மக்களின் மொழியோ பிறமொழிச் சொற்களை அதிக அளவில் ஏற்கும் நிலை நேர்கிறது. பேச்சு மொழியிலும், எழுத்து மொழியிலும் இந்நிலை பொருந்துவதாக உள்ளது. அறிவு வளர்ச்சி, உழைப்பு, தலைமைத் திறம் மிக்க மக்கள் பேசும் மொழி பல்வகைச் சொல் வளம், பொருள் வளம் பெற்று விளங்குவதையும், அத்தகைய வளர்ச்சி இல்லா மக்கள் பேசும் மொழி சொல்வளம், பொருள் வளம் குறைந்து சொற்களின் எண்ணிக்கையில் வறிய மொழியாக உள்ளது. ஆகவே, ஒரு மொழியின் சொற்பொருள் ஈட்டமும், அந்நாட்டார் வாழ்நிலையை, வாணிக நிலையைச் சுட்டிக் காட்டுகின்றன என்று கூறலாம். எவ்வாறேனும் மேம்பட்டு வாழும் ஒரு நாட்டினரின் நிலை தக்கதோ, தாழ்ந்ததோ அதுவே மொழிக் கலப்பிற்குரிய முதன்மைக்காரணமாகிறது.

பேச்சுமொழி இயற்கையாக அமைவது; எழுத்துமொழி அறிவார்வத்தால் அமைவது. இவ்விரு நிலைகளும் மொழியை உருவாக்கு

கின்றன. மொழியை வளமாக்கும் இவ்விரு திறனும் மொழிக் கலப்பிற்குக் காரணங்களாக அமைந்து விடுகின்றன. பேச்சுமொழியில் பிறமொழி கலப்பது என்பது இருவர் தொடர்பாக - இயல்பாகத் தடையின்றி அமைகிறது.

ஒரு மொழியில் எழுதுவோன் தன் விருப்பதிற்கேற்பவே - காரணம் பற்றியே பிறமொழிக் கலப்புக்கு இசைகிறான். நடப்பைக் காட்டுவதே எழுத்து என்பாரும், நடப்பைக் காட்டி நல்லதை நிலை நாட்டுவதே எழுத்து என்பாரும் உண்டு. ஒருவர் எழுத்தைப் பயில்வோன் புத்துணர்வு பெறுவது போலவே, செழுமையான மொழியின் வனப்பைச் சிறப்புற அறியவைப்பதும் எழுது குலத்தாரின் கடமையாகும்.

அயன் மொழிச் சொற்கள் அனைத்துமே தொடக்கத்தில் பேச்சு வழக்கில் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பட்டுப் பிறகே எழுத்து வழக்கில் ஏற்றுக் கொள்ளப்படுவனவாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எழுத்து வழக்கில் அயன்மொழிச் சொற்கள் முதலில் ஏற்கப்படுவதும், பிறகு பேச்சு வழக்கிலும் அவை இடம்பெற நேர்வதும் உண்டெனினும், அவற்றின் தொகை குறைவே.

பிற மொழிகளிலிருந்து கலைச் சொற்களை எழுத்து வழக்குதான் முதலில் கடன் வாங்குகிறது. ஆக்ஸிஜன், சைக்கிள், கார், ராக்கெட், சூப்பர்சானிக், ரேடியோ, டெலிவிஷன் போன்ற சொற்கள் முதலில் எழுத்து வழக்கில் இடம்பெற்றுப் பின்னரே பேச்சு வழக்கில் இடம் பெற்றன என்று பேச்சுவழக்கில் அயன்மொழிச் சொற்கள் கலத்தலைப் பற்றிப் பேராசிரியர் தெய்வசுந்தரம் ஒருமுறை குறிப்பிட்டார். மக்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகித் தம் உணர்வுகளைப் பரிமாறி மகிழ்வதற்காகவே மொழியைப் பயன்படுத்துகின்றனர். பேசும் மக்களை விட்டுத் தனியே பிரித்துப் பார்த்தால், மொழி என்பது இல்லை என்பார். மக்களின் அறிவில் அவ்வப்போது தோன்றும் புதுமைகள் அனைத்தும், மொழியில் படிந்துவிடுகின்றன. மொழிக்கலப்பின் தன்மையை மொழியறிஞர் ஆராயும்போது, மொழியின் தொன்மையை ஆராய்வதும் இணைந்த பணியாகிறது.

ஒரு நாட்டு மக்களின் முன் விரிந்து பரந்த உலகப் பொருண்மைகள் பலவாக நிற்கின்றன. உலகத்தில் பலவகைப் பொருள்கள்,

அவற்றின் இயல்புகள், தன்மைகள், செயல்கள் உள்ளன. பேசும் மக்களோ தம் அறிவு ஆற்றல்களில் தனித்தனி வேறுபாடு உடையவர்கள். அந்தந்தக் கூட்டத்தார் - நாட்டார் - அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் ஏற்ற அளவில் உலகத்துப் பொருள்களைத் தத்தம் மொழியால் உணர்த்த முற்பட்டார்கள். நுண்ணிய கருத்துகளை உணர்ந்து, சொற்களால் உணர்த்துவதற்குச் சில கூட்டத்தார்க்கு நெடுங்காலம் ஆகியிருக்கும். வேறு சிலர் குறுகிய காலத்திலேயே நுண்கருத்துகளையும் உணர்த்தத் தொடங்கியிருப்பர். அவரவர்களின் வாழ்வில் எவ்வெப்போது எந்தெந்தப் பொருள்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அந்தந்தப் பொருள்களுக்குரிய சொற்கள் அவ்வப்போது விரைவில் ஏற்பட்டிருக்கும். பிரெஞ்சு மொழியில் உள்ள பாராளுமன்றம் தொடர்பான பல சொற்கள் ஆங்கிலத்திலிருந்து பெறப்பட்டவை. ஏனெனில், பாராளுமன்றத்தை முதன்முதலில் உருவாக்கியவர் ஆங்கிலேயர். பிறகு பிறமொழியாளர் வந்து கலந்தபோது, புதிய அல்லது நெருங்கிய தொடர்பில்லாத பொருள்களுக்கும் கருத்துகளுக்கும் உரிய சொற்கள் வந்து புகுந்திருக்கும். பிறர் கலப்பின் காரணமாக அல்லாமல், இயல்பாகவே தோன்றிய புதிய கருத்துகளுக்குத் தாமே அவ்வப்போது சொற்களைப் படைத்துக் கொண்டனர். இந்த நிலையில் மொழிக் கலப்பு இயல்பாகவும், தவிர்க்க இயலாத சூழல்களிலும் நிகழும் முறையை அறிஞர் மு.வ. சுட்டிக் காட்டியுள்ளார்.

மொழிக்கலப்பு நிகழ்வதற்குப் போலச் செய்தல் என்பதும் ஒரு காரணமாக விளங்குகிறது. பிறமொழியினர் பயன்படுத்தும் சொற்களையும், பொருட்பெயர்களையும் தன்மொழியில் எடுத்துரைக்க முயல்வதும் மனித மனத்தின் விழைவாகும். இம்முயற்சியில் தாய்மொழி கைவரப் பெறாதபோது, பிறமொழியை ஏற்கும் முறையில் மொழிக்கலப்பு நடைபெறும். மக்கள் எந்த எந்தத் துறையில் வளர்ச்சி எய்துகிறார்களோ அந்தந்தத் துறையில் பெற்ற வளர்ச்சிக்கெல்லாம் "போலச் செய்தல்" என்னும் இந்தத் தனிப்பண்பே காரணமாகும். இப்பண்பே மொழிக் கலப்பிற்கும் வழி வகுக்கிறது. எவ்வகையிலும் பிற மொழிகளிலிருந்து வந்து கலவாமல் எந்த மொழியிலும் சில சொற்கள் உருவாக முடியாது. கலைச் சொற்களாக உள்ள பிறமொழிச் சொற்களை எந்த மொழியும் கடன் பெறவே வேண்டியுள்ளது. எனவே,

மொழிக் கலப்பிற்குக் கடன் பெறுதல் முதன்மைக் காரணமாக அமைகிறது. இவ்வாறு சொற்களைக் கடன் பெறுவதற்கான காரணங்களை மொழியறிஞர் எஸ்பர்ஸன் மூன்று வகைப்படுத்துவர். அஃதாவது தம்மிடம் இல்லாத புதிய பொருள்களைப் பயன்படுத்தும்போது, அவற்றின் பிறமொழிப் பெயர்களைக் கடன் வாங்குதல், ஒரு மொழியாளரிடமிருந்து செல்வாக்கோ உயர்வோ பெற்றுள்ள ஒரு துறையைக் கற்கும்போது, அதற்குரிய அம்மொழிச் சொற்களையும் ஏற்றுக் கோடல். சோம்பலின் காரணமாகத் தம்மொழிச் சொற்களைத் தேடிக் காணாமல், பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டுவந்து கலந்து சேர்த்தல் என்று சுட்டியுள்ளார்.

சொல்வளமின்றி ஒரு மொழி வறுமையுற்றிருப்பதும், பேச்சு மொழிக்கு உந்தாற்றலான கலந்து பழகு உணர்ச்சியும், எழுதுவோன் விருப்பமும், போலச் செய்தலும், கடன் வாங்கலும் ஆகிய காரணங்கள் மொழிக் கலப்பை விளைவிக்கின்றன. இவையனைத்தும் மொழி முழு வடிவம் பெறப்பெறப் பேசப் பட்டதும், மொழியுடன் பிறந்து விடும் காரணங்களாகும். எனவே, மொழியின் தொன்மையைப் போன்றே மொழிக் கலப்பும் தொன்மை வாய்ந்ததாகும் போலும்.

அனைத்து மொழிகளுக்கும் பொதுவாகக் காட்டப்பட்ட காரணங்களே தமிழில் ஏற்பட்ட பிறமொழிக் கலப்புக்கும் பொருந்துகின்றன. இக்கலப்பும் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவதாகும். ‘வேத காலத்திலேயே திராவிட மொழிக் குடும்பத்திற்கும், வட மொழிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்ததைத் தமது ஆராய்ச்சியில் தெ.பொ.மீ. குறிப்பிட்டுள்ளார். ‘மயில், களம், பழம்’ என்னும் வடிவங்கள் இன்றுகூடத் தமிழில் உள்ளன. Bala (பலம்) என்பது வல் என்னும் திராவிட வேரிலிருந்து வந்ததெனப் பேராசிரியர் ‘எமனோ’ சுட்டிக் காட்டுகிறார். மூலத் திராவிட மொழியின் காலத்திலேயே வகர மெய் ஒலிப்புடைப் பகர மெய்யாக (b) மாறிவிட்ட திராவிடக் கிளை மொழியிலிருந்து இச்சொல் கடன் வாங்கப்பட் டிருத்தல் வேண்டும். இந்தோ ஐரோப்பிய மொழியில் ஒலிப்புடைப் பகர மெய்யொலி அரிதாகவே வருகிறது. இதை இந்தோ ஐரோப்பிய மொழி ஒலியனாக ஒப்புக் கொள்ளாதவர்கள், திராவிடத்திலிருந்து இது வந்தது என்ற கொள்கையை ஒப்புக் கொள்வர்.

‘இந்தோ-ஐரோப்பிய’ இனச் சொற்களின் (Cognates) பொருள்கள் ஒத்தவையாக இல்லையெனின், இங்ஙனம் ஒப்புக் கொள்வதில் தடையேதும் இல்லை. இதிலிருந்து ரிக் வேத காலத்தவரோடு சேர்ந்து திராவிட மொழி பேசுவோர் வாழ்ந்திருந்தனர் என்பது புலனாகிறது’ எனக் குறிப்பிடும் தெ.பொ.மீ., ‘தமிழில் உள்ள ‘கைதை’ என்பது வட மொழியில் ‘கைதகா’ Kaitaka என வருகிறது. அவ்வாறே தமிழில் உள்ள ‘ஏலம்’ வடமொழியில் ‘ஏலா’ (Ela) எனவும், தமிழில் உள்ள ‘பல்லி’ வடமொழியில் ‘பல்லி’ எனவும் வழங்குகிறது. தமிழ் ‘மயில்’ வடமொழியில் ‘மயூர’ எனவும், தமிழில் உள்ள ‘(எறும்புப்) புற்று’ வடமொழியில் ‘பத்திக’ (Puttika) எனவும் உள்ளது. வேதகாலத்தும், அதற்குப் பிற்பட்ட காலத்தும் வடமொழியில் திராவிடச் சொற்கள் கலந்துள்ள வாய்ப்பைத் தள்ளிவிட முடியாது என்பது தெளிவாகிறது’ என்று மொழிக் கலப்பின் தொன்மையை விளக்குகின்றனர். தமிழில் உள்ள நீர், மீன் முதலிய சொற்கள் முறையே வட மொழியில் நீர, மீன என வழங்கப்படுகின்றன. இச்சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்கள் திராவிட மொழிகளில் இல்லை. இவற்றிற்கு இணையாக வேறு சொற்களைப் பயன்படுத்த முடியாது. ஆனால், இச்சொற்களின்றி வேறு சொற்களை வடமொழி பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே, அவை திராவிடச் சொற்களே என்று கூறும் திராவிட மொழியறிஞர் கால்டுவெலின் கருத்தும் மொழிக் கலப்பின் தொன்மையை உணர்த்துகிறது. பேராசிரியர் பிளிக் என்பவர், “பால் வேறுபாடு உணர்த்தும் பிற மொழிகளிலிருந்து, ஆரிய மொழிகள், பால் உணர்த்தா அஃறிணைச் சொற்களைப் பெற்றிருப்பதால், அவை வேறுபிரித்து அறியப்படும். ஆரிய மொழித் தோற்றத்தின்போது, திராவிடச் செல்வாக்கும் ஓரளவு ஆட்சி புரிந்தது என்பதும் ஒருவகையில் ஏற்புடையதாம். வேறு சில இயல்புகளைப் போலவே, இவ்வஃறிணை ஒருமைப் பாடும் அவ்வாட்சியின் விளைவுகளில் ஒன்றாகும்” என்று கூறினார். அதனை எடுத்துக்காட்டி டாக்டர் கால்டுவெல், “பால் திராவிட மொழிகளிலேயே முறையாகவும் முழு அளவிலும் மேற்கொள்ளப்படுகிறது. இது சமஸ்கிருத ஆட்சியின் விளைவாக இருத்தல் இயலாது. மாறாகத் திராவிட ஆட்சியின் பயனாகவே சமஸ்கிருதத்திலும் அஃது இடம் பெற்றிருக்கும்” என்றார்.

ஒரே நாட்டில் திராவிட இனமும், ஆரிய இனமும் பல நூற்றாண்டுகளாக, அடுத்தடுத்து வாழ்ந்திருந்தமையால், திராவிட மொழி

கள் (தமிழல்லாத பிற மொழிகள்) ஆரியச் சொற்களைப் பேரளவு கடன் வாங்கியுள்ளன. அதே நிலையில் திராவிடத்திலிருந்து கடன் வாங்க ஆரியமும் தயங்கவில்லை என்பதும் உணரற்பாலதாம் என்று முடிவு செய்தார்.

வடமொழியோடு மட்டுமன்றிச் சிங்களம், பாபிலோனியா, கிரேக்கம் ஆகியவற்றின் மொழிகளோடும் தமிழ்மொழிக் கலப்பு நேர்ந்ததாக மொழி நூலறிஞர்கள் குறித்தனர். சிங்கள மொழியில் வழங்கப்படும் Dramila எனும் சொல், தமிழில் வழங்கும் 'தமிழன்' என்பதன் வடிவமாற்றாக உள்ளது. இலங்கைக் கல்வெட்டுகளில் 'பெருமகன்' முதலான தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. சுமேரியத் தலைநகரான 'ஊர்' என்பதை 'ஊர்' என்னும் தமிழ்ச் சொல்லோடு இணைத்துப் பேசுவர் மொழி நூலறிஞர். மயிலுக்கு ஈப்ரு மொழியில் வழங்கும் 'துகி' என்பது 'தோகை' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பெயர்ந்ததாகக் கால்டுவெலும் பிறரும் கட்டுரைத்தனர். கிரேக்கச் சொல்லான Oruza என்பது தமிழ்ச் சொல்லான 'அரிசி' என்பதி லிருந்து வந்ததாகவும் கூறுவதை நாமறிவோம். கிரேக்கப் பயணியர் தமிழ்ச் சொல்லான 'தமிழகம்' என்பதை Damarica எனத் தம் மொழியில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தமிழில் தொன்மைக் காலத் திலேயே தொடங்கிய மொழிக்கலப்பு, இலக்கிய, இலக்கணப் படைப் புகளிலும் இடம் பெறலாயிற்று.

தொல்காப்பியம்

தொல்காப்பியம் கிறித்து பிறப்புக்கு முற்பட்ட பழந்தமிழ் நூலாகக் கருதப்படுகிறது. இன்றுள்ள தமிழ்நூல்களுள் தொன்மை யானதும் தொல்காப்பியமே. இந்நூலில் உயிரியல், இடையியல், மரபியல் முதலிய பகுதிகளில் அருஞ்சொற்களுக்குத் தொல்காப்பியர் பொருள் விளக்கியுள்ளார். இவருக்கு முற்பட்ட இலக்கியப் பரப்பில் தாம் கண்ட சொல்லாட்சிகளுக்கும் இவர் காலத்துச் சொல்லாட்சி களுக்கும் வேறுபாடு அமைந்துள்ளது. முந்தைய இலக்கியத்தின் அருஞ்சொற்களைத் தம்காலத்தவருக்கு உணர்த்தக் கருதியே தம் நூலுள் தொல்காப்பியர் ஆங்காங்கே பொருள்விளக்கம் செய்தார். தொல்காப்பியத்தில் காணப்படும் அந்தம், மாத்திரை, காயம், கருமம், ஏது, அம்போதரங்கம், குஞ்சரம், வைசியன், வாணிகம் என்பவற்றைச்

சான்றுகளாகக் கொண்டு நோக்குகையில், தொல்காப்பியர் காலத் திலேயே பிறமொழிச் சொற்கலப்பு நிகழ்ந்ததை அறியலாம்.

காலம், உலகம், பூதம் (சொல். 58) மண்டிலம் (பொருள் 421) சூத்திரம் (640) படலம் (474) பிண்டம் முதலிய சொற்களையும் பிற மொழிக்கலப்பிற்குச் சான்றுகளாகக் காட்டலாம். இவை மட்டுமின்றி சுண்ணம், வண்ணம், பழைமை, பண்ணத்தி முதலிய பிராகிருதச் சொற் களும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தில் காணப்படும் வடமொழிச் சொற்கள் என அறிஞர் அநவரத நாயகம், நாற்பத்தொரு சொற்களைப் பட்டியலிட்டார். இச்சொற்களில் காலம், நாடகம், பிண்டம், பலி, பக்கம், பேய், உரு முதலிய சொற்கள் திராவிட மொழிகளில் இருந்து வடமொழி கடன் வாங்கி யவை என்று டாக்டர் கிட்டல் தமது 1894ஆம் ஆண்டு தமது கன்னட அகராதியில் குறிப் பிட்டுள்ளார். மீன் என்னும் தமிழ்ச் சொல்லை மீனம் என வடமொழி கொண்டதாகத் தொல்காப்பியச் சொல்லதிகாரம் குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியம்

பாட்டும் தொகையுமான சங்க நூல்களில் பிறமொழிச் சொற்கள் பயின்று வந்துள்ளன. அறுபதுக்கும் மேற்பட்ட பிறமொழிச் சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன என்பது அறிஞர் வையா புரியாரின் கருத்தாகும். திருக்குறளில் 221 வடமொழிச் சொற்கள் உள்ளன. என்று கணக்கிட்டு அவர் மயங்கியது புலவர் உலகத்தால் பழிக்கப்பட்டது. இலக்கியங்களிலும் திருக்குறளிலும் பிறமொழிச் சொற்கள் அருகியே கலந்துள்ளன என்பதை மறுக்க இயலாது. திருக் குறளில் ஆதி, பகவன், பாக்கியம் என்ற வடமொழிச் சொற்கள் கலந் துள்ளன என்று தெ.பொ.மீயும் குறிப்பிட்டுள்ளார். திருக்குறளில் எடுத்தாளப் பெற்றவை பன்னீராயிரம் சொற்கள் என்றும், அவற்றுள் ஐம்பது கூட வட சொற்கள் இல்லையென்றும் டாக்டர் லாசரஸ் கணக் கிட்டார். இச்சொற்கள் அணி, அந்தம், அமரர், அமிழ்தம், அங்கணம், சாதி, ஆதி, ஆகுலம், ஆசாரம், ஆயம், இந்திரன், இலக்கம், கருமம், கணம், காமம், காரணம், குணம், குலம், கோடி, சலம், ஞாலம், தண் டம், தவம், தானம், துலை, தெய்வம், தேயம், தேவர், நரகம், நாகரிகம், பருவம், பாக்கியம், பாகம், பாவம், புருவம், பூதம், மங்கலம், மந்திரி, மதி, மணி, மாத்திரை, மாயம், மானம், முகம், முத்தம், யாமம், வித்தகர். இவற்றுள் முகம், காமம், மணி, மாலை என்பன இருமொழிகளிலும்

உள்ள சொற்கள் என மகாவித்துவான். ச. தண்டபாணி தேசிகர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிலப்பதிகாரம்

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலான சமயங்கள், சிலப்பதிகாரக் காப்பிய மாந்தரோடு தொடர்பு கொண்டன. சமுதாயச் செய்திகளும், சமயச் செய்திகளும், பாத்திரங்கள் வாயிலாகப் பலபடக் கலக்கும்போது, எவ்வளவுதான் அயன்மையை ஒதுக்கிப் பாட நினைத் திருந்தாலும், "நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்" என்பதற்கு இணங்கக் காப்பியத்திடத்துப் புகுந்து மொழிக்கலப்புக் கால்கொண்டது. எனக் காப்பியங்களில் பிறமொழிச் சொற்கள் கலந்த நிலையைப் பற்றி அறிஞர் வ.சுப. மாணிக்கம் கூறு வது நினைக்கத்தக்கது.

'ச' கரம் மொழிக்கு முதலாக வரும் என்று தொல்காப்பியம் உரைக்கவில்லை. சிலப்பதிகாரத்திலோ சகரத்தை மொழி முதலாகக் கொண்ட சடை, சகடு, சண்பகம், சமன், சந்தனம், சந்து, சங்கம், சங்கு சதுக்கம், சதங்கை, சங்கில, சந்திரபாணி, சலம், சலதி, சந்தி, சரவணம், சக்கரம், சகடம், சந்திர குரு, சமைப்பேன், சரிதை, சமரம், சகோடம், சயந்தன், சங்கரன், சயம்பு, சதுமுகன், சங்கரி, சஞ்சயன், சங்கன் எனப் பல சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு மொழிக்குரிய இலக்கண விதிகளையும் கடந்து, சொற்கள் இடம் பெற்றமைக்குப் பிறமொழி யின் கலப்புந்துதல் பெருங் காரணமாயிற்று எனலாம். இனி மொழிக் கலப்பிலிருந்து செந்தமிழின் செழுமையைப் பெருக்கப் புதிய சொல் லாக்கங்களை இளங்கோவடிகள் படைத்ததும் கருதத்தக்கது. மாதவத் தாட்டி, குலப்பிறப்பாட்டி, வாய்ச்சி, நகைச்சி, மூதறிவாட்டி, வானநாடி, இயக்கி, தொழிலாட்டி, முதுக்குறைவி, முகத்தி, வாய்த்தி, நகைத்தி போன்ற சொல்லாக்கங்கள் இளங்கோவடிகள் பிறமொழிக் கலப்பைத் தடுக்க முனைந்த முயற்சியின் வெளிப்பாடாகவே உள்ளது.

மணிமேகலை

மணிமேகலைக் காப்பியத்தைத் தொடக்கமுதல் படிக்கும் போது, வடசொற் கலப்பும், புத்தமதக் குறியீடுகளும் பல்கியிருத் தலைக் காணலாம். சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை, பவத்திறம் அறு

கெனப் பாவை நோற்ற காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை என்ற மூன்றும் பிறமொழிச் சொற்களே பெருகிய சமயப் பாடல்களாக உள்ளன.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தோடு புணர்ந்த சொல்லா கும்மே

என்ற தொல்காப்பிய விதிப்படித் தமிழ்மொழிக்குகந்த நெறியில் சொற்களைச் சாத்தனார் அமைத்திருப்பது கருதத்தக்கது. தேசநாம சாதி, சாமானியம், திட்டாந்தம், அநன்னுவயம், கௌடிலச் சாமம், விசேடியம், பித்தியக்கம், விசேடனம், உபயதன்மனிகலம், தன் மாத்தி காயம், பிக்குணி, சேரியம் போன்ற சொற்களை இதற்குச் சான்று களாகக் கொள்ளலாம்.

தண்டமிழாசானாகிய சாத்தனார் பெருமளவில் அயன்மொழிக் குறியீடுகளைத் தழுவினாரே என்று குறை காண்பதற்குத் தீர்வு போல 'மொழி பெயர்த்து, அதர்ப்பட யாத்தல்' என்ற தொல்காப்பியத்துக் கிணங்கத் தமிழாக்கம் செய்த சொற்களும் தொடர்களும் பல இடம் பெற்றுள்ளன. பௌத்தர் கூறும் 'சத்தியத்தை' 'வாய்மை' எனவும், 'துவாதச நிதானங்களை'ப் 'பன்னிரு சார்புகள்' எனவும், 'தருமத்தை' 'அருளறம்' எனவும், 'புத்ததன்மசங்க'த்தை 'முத்திரமணி' எனவும், 'தருமசக்கர'த்தை 'அறக்கதிராழி' எனவும், 'சயித்தியத்தை'ப் 'புல வோன் பள்ளி' எனவும், 'ஏது பிரபவ தர்மம்' என்பதனை 'ஏது நிகழ்ச்சி' எனவும், 'நிருவாணத்தை'ப் 'பெரும்பேறு' எனவும் தமிழாக்கியுள்ளார்.

துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்
ஒன்றிய உரையே வாய்மை நான்காவது
பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பு ஈராறும்

என நால்வகை வாய்மைகளையும், பன்னிரு சார்புகளையும் தமி ழாக்கிக் காட்டினார். இவ்வாறே 'பிரமாணத்தை' 'அளவை', 'பாரி சேடத்தை' 'மீட்சி', 'சம்பவத்தை' 'உண்டாநெறி', 'விபரீதத்தை'த் 'திரிதல்', 'சந்தேகத்தை'க் 'கவர்கோடல்', 'பிரத்தியக்கப் பிரமா ணத்தை'க், 'கண்கூடு' அல்லது 'காட்சி', 'அனுமானப் பிரமாணத்

தை'க் 'கருத்தளவு', 'ஆபாசத்தை'ப் 'போலி' என்றெல்லாம் தமிழ்ச் சொற்கள் ஆளப்பட்டிருப்பதையும் குறிப்பிடலாம். அயன்மொழியை ஆளும் அதே நேரத்தில் இயன்றளவு தமிழாக்கம் செய்யும் எண்ண மும் அந்நாளைய நூலாசிரியர்க்கு இருந்தது எனலாம். சாத்தனார் ஒலி வரம்புக்கும் வழிகாட்டினார். பாலி, வடமொழி கற்ற பன் மொழித் தமிழர். எனவே, மணிமேகலைக் காப்பியத்துள் வரும் சாதுவனை, 'மற்றவர் பாடை மயக்கறு மரபிற் கற்றனன்' ஆதலின் என்றபடிப் பிறமொழி வல்லாளனாகப் படைத்துக் காட்டினார். பாலி, பிராகிருதம் என்னும் இருமொழிகள் வடமொழித் தொடர்புடையன வாகவிருந் தும் வடமொழிக்குரிய முக்கூட்டு உருபுகளை நீக்கித் திராவிட மொழி கள் பயன்படுத்தும் உருபுகளைக் கையாள்கின்றன என்ற கருத்தும் நோக்கத்தக்கது.

பக்தி இலக்கியங்கள்

பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை யில் சைவ சித்தாந்தம், வைணவம், அத்வைதம் ஆகிய மூன்று சமயத் துறையினரும் தம் கொள்கைகளைப் பரப்பியபோது, தமிழில் பிற சொற்களைக் கலந்தனர். இந்த அயற்சொற்கள் பெரும்பாலும் திரியா மலே தமிழில் புகுந்தன. சில சொற்களே தமிழொலிக்கு ஏற்பத் திரிந் தன. வட மொழிக் கலப்புத் தமிழில் மிகுந்த காலமாகப் பக்தி இலக் கியக் காலத்தைக் கருதலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தோ, அதற்குச் சிறிது முன்னரோ வடமொழியின் கலப்பும் முதன்மையும் தொடங்கின. தென்னகம் வடமொழிக் கல்வியின் மையமாயிற்று. இரண்டாம் இராசசிம்மனின் அவைக்களத்தில் தண்டி முனிவர் இடம் பெற்றிருந்தார். பின் சங்கரரும், இராமானுசரும் அக்காலத் தமிழ் நாட்டிலிருந்து தமது சமயநுணுக்கக் கோட்பாட்டினைப் பரப்ப இந் திய நாட்டின் பிற மாநிலங்களுக்குச் சென்றனர். சங்கரரும் பிறரும் 'திராமிட சாரியர்' (Dramidacarya) என்பவரைக் குறிப்பிட்டுள்ளனர். இக்காலத் தொடக்கத்தில் செப்புப் பட்டயங்கள் வட மொழியில் வரை யப்பட்டன. வடமொழியில் காணப்படும் சைவ வைணவ நூல்களில் சில தென்னகத்திலிருந்தே தோன்றியிருக்கலாம். வடமொழியின் செல்வாக்கால் சபை, கணம், சதுர்வேதி, மங்கலம், அர்ச்சன், ஈச்சுரன், விட்டுணு போன்ற வட சொற்கள் தமிழ் வடிவம் பெற்றன. இக்காலத்து மன்னர்கள் தம் பெயர்களில் வட மொழியைப் புனைந்தனர். நிருப

துங்கன் இராசராசன், இராசேந் திரன், குலோத்துங்கன் என்ற பெயர் கள் தமிழகத்தில் நிலவலாயின. வடமொழி பிராகிருத மொழி வல் லாண்மையைக் கொள்கை நிலை யில் எதிர்த்தாலும், சொற்கலப்பை, சிலகோட்பாடுகளை மறுக்க முடி யாமல் இருந்தனர். சான்றாக

வடமொழியும் தென்மொழியும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் – அப்பர் தேவாரம்.

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் – அப்பர்.

செந்தமிழோடு ஆரியனைச் சீரியனை – அப்பர்.

தமிழ்ச் சொல்லும் வடசொல்லும்
தாள்நிழல் சேர – சம்பந்தர் தேவாரம்.

மன்னு மறைநான்கும் ஆனானைப் புல்லாணித்
தென்னர் தமிழை வடமொழியை – நாலாயிரம்.

என்னும் வரிகளைக் காணும்போது, வடமொழிப் பரிவும், கொள்கைக் கலப்பும் அந்நாளில் இருந்தன என உணரலாம். சங்க நூல்களை நான் ஆராய்ந்தாலும், என் தமிழுணர்வைச் சமயநூல்களில் கலந்திட முடியாமல் இருந்தேன் என்று என் பாட்டனார் உரைவேந்தர் ஒளவை துரைசாமி கூறியதோடு, ‘அறைகடல் வரைப்பில் பாடை அனைத்தும் வென்று ஆரியத்தோடு உறழ்தரு தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல் செய்வாம்’ என்று சீகாளத்திப் புராணமுடையாரும், மறைக் கத வினைத் திறந்தது கன்னித் தண்டமிழ்ச் சொற்களோ மறுபுலச் சொற் களோ எனப் பாடி மகிழ்வதையும் கருத வேண்டும்’ என்றார்.

பிற்காலத்தில் வடமொழியின் செல்வாக்கு வேரூன்றவும், வட மொழிச் சொற்கள் இன்றும் நீங்காமல் உள்ளமைக்கும் இக்காலத்தில் எழுந்த சமயப் பூசல்களும் காரணமாயின. இச்சூழலில் சைவர்கள் சமணத்தை எதிர்த்த வேகத்தில், சைவ இலக்கியங்களைத் தவிர, வேறு எவற்றையும் பயிலக்கூடாது என்னும் அளவிற்குப் பிற இலக்கியங்கள் எல்லாவற்றையும் எதிர்த்தனர். ‘ஐந்தெழுத்தால் ஒரு பாடையுளதென அறையவும் நாணுவர் அறிவுடையோரே’ என்று எழுதிய சாமிநாத தேசிகர் வடமொழி வாணராகவும் வாழ்ந்ததோடு தமிழ் மொழியின் மாண்பினை பழிக்கத் தொடங்கி, அடிமைச் சேற்றில் சிக்கி அழிந் ததையும் காணலாம்.

மேலும், 'மாணிக்கவாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம்' என்று சொல்லி 'இப்படிப்பட்ட நூல்களைப் படிப்பதை விட்டுச் சங்க இலக்கியங்களையும் சிந்தாமணி, பத்துப்பாட்டு, மணிமேகலை போன்ற நூல்களையும் படித்து வாழ்நாளை வீணாளாக ஆக்காதீர்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமயப்பூசல் மொழியின்மீது தாக்குதலை நிகழ்த்தி, வடமொழிக்கு ஏற்றமளித்த நிலைமை இக்காலத்தின் கோல மாகும்.

பிற்கால இலக்கியங்கள்

கம்பரின் காலத்திற்குப் பின்னர்த் தமிழ்ப் பேராறு பல ஓடைகளா கப் பிரிந்துவிட்டது. சிற்றரசர்களைப் பற்றிய புகழ்ச்சிப் பாடல்களும், காதற் பிரபந்தங்களும், புராணங்களும், பலவகைச் சிற்றிலக்கியங் களும் தமிழில் நிரம்பலாயின. இவற்றால் தமிழின் வளமையும் வன்மை யும் சிறிது சிறிதாகக் குறைவுபடலாயின. இவ்வகை இலக்கியங்களும் நாளடைவில் நலிந்தன. அந்நாளில் தமிழ்மக்களது அறிவுவளர்ச்சியும், புதியன காணும் நுண்ணுணர்ச்சியும் தடையுற்றன.

பேராறாகவும், சிற்றாறுகளாகவும், கால்வாய்களாகவும் நாடு செழிக்கப் பரந்தோடி வந்த நீரோட்டம் முடிவில் சேற்றுப் பள்ளத்தில் ஆழ்ந்து தேங்கித் தமிழகம் கட்டுக் கிடையாய் நின்றுவிட்டது எனப் பிற்காலத் தமிழின் நிலையை அறிஞர் வையாபுரியார் எடுத்துக் காட்டு வதால், தமிழின் நிலையையும் பிறமொழிக் கலப்பால் தமிழுக்கு நேர்ந்த நலிவையும் நாம் உய்த்துணர முடிகிறது. இராசமாபுரத்தில் தெருக்களில் பதினெட்டு மொழி பேசுவோர் தங்களுக்குள் கூடிப் பேசும் பேச்சின் ஒலியை ஆலமரத்தில் பறவைகள் ஒலியெழுப்பு வது போல இருந்தன என்று வரும் சீவகசிந்தாமணிப் பாடல் இந் நிலைக்குச் சான்றாகும்.

கலம்பகம், தூது, உலா, பிள்ளைத்தமிழ், பள்ளு, பரணி எனச் சிற்றிலக்கியங்கள் பலவாகப் பெருகிய போதிலும், பிறமொழிக் கலப் பிற்கு இடம் தந்தே இவை அமைந்தன. பிரபந்தங்கள் எனப்படும் இக்கட்டமைவுக் கவிதைகளில் வடமொழிக் கலப்பு மிக்கிருந்தது. புராணங்கள் அனைத்தும் வடமொழிக் கலப்புடையனவே.

இதன் விளைவாக எழுத்துமொழியில் மட்டுமன்றிப் பேச்சு மொழியிலும் வடமொழியின் செல்வாக்கு வளர்ந்தது. வடசொற்கள் தொடக்கத்தில் மெலிந்த நிலையில் தமிழில் புகுந்து காலஞ் செல்லச் செல்ல மிகுந்து கொண்டே வந்தன. வடசொற்கள் அயலாரிடமும் கற்றவர்களிடையிலும் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் நிரம்பத் தொடங்கின. அதிகாரம், அதிட்டம், இந்திரன், ஈனசாதி, உத்தரவு, எசமான், எந்திரம், ஏலம், ஒட்டகம், கலியாணம், காரியம், சந்திரன், சனி, சாதி, சூரியன், தண்டம், தந்திரம், நகம், நாயன், பாவம், புதன், மந்திரம், மாசம், முகம், முக்கியம், முழுத்தம், யமன், ரத்தம், ராசா, லச்சை, லாபம், வசியம், வஞ்சனை போன்ற வடசொற்கள் கல்லாதவரிடத்தும் பயிலப்படலாயின.

சமயம், தத்துவம், சாஸ்திரம் போன்ற துறைச் சொற்களும் தமிழில் புகுந்தன.

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்கள வசங்கசஞ் சகரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்த முக்த
தற்பர விச்வாதீத வ்யோம பரி பூரண
சதானந்த ஞான பகவ
சம்புசிவ சங்கர சர்வேச னென்றுநான்
சர்வ காலமும் நினைவேனோ
அற்புத வகோசர நிவிர்த்த பெறுமன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொருபசாஷாத்கார
அனுபூதியனு சூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணாடிருந்த குருவே
கருதரிய சிற்சபையிலானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே

என்னும் தாயுமானார் பாடலில் இடம்பெறும் வட சொற்களின் எண்ணிக்கை, பிற்கால இலக்கியங்களில் வடமொழியின் செல்வாக்கை விளக்கி நிற்கிறது.

பிற்கால இலக்கியமான 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி'யில் மலைவளங்கூறிக் குறி சொல்லும் குறத்தி, ஆங்கில மாதொருத்தியின்

கை பார்த்துக் குறிசொல்லி மேகலை பெற்றதனை, ஒண்ணுதல் உறு இங்கிலீஷ் மாதொருத்தி,

> **லுக்மை ஹேண்டென்றாள்**
> **ஓதினேன் அவள் பாணிரேகை**
> **கண்டுதவினாள் இந்த மேகலை.**

எனக் குறத்தியே கூறுவதாகக் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் பாடியுள்ளார். இங்கிலீஷ், லுக், மை, ஹேண்டு எனும் ஆங்கிலச் சொற்களை இவ்வரிகளில் காணலாம். சூர்க்கொன்ற ராவுத்தனே எனக் கந்தரலங்காரத்தில் வருகின்ற பாடல் வரியில், ‘ராவுத்தன்’ என்ற அயன்மொழிச் சொல்லைக் காணலாம்.

> **குறவர் மகட்குச் சலாமிடற்கு ஏக்கறும்**
> **குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்**

என்னும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடலில் ‘சலாம்’ என்ற சொல் கலந்துள்ளதை அறியலாம். சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகிய கலிங்கத்துப் பரணியில்,

> **மழலைத் திருமொழியில் சில வடுகும் சில தமிழும்**
> **குழறித்தரு கருநாடகர் ! குறுகிக் கடைத்திறமின் !**

என வரும் பாடல், பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்து கொண்டிருந்த நிலையைத் தெளிவாக விளக்குகிறது. பல்வேறு சமயங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தமிழ்க் காப்பியங்களில், அவ்வச் சமயங்களின் மொழிகளிலிருந்து பெறப்பட்ட கலைச் சொற்கள் இடம் பெற்றிருந்தன. பௌத்த மத அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில், அச்சமய மொழியான பாலிமொழிச் சொற்கள் இடம் பெற்றிருந்தன. சமண சமய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களில் பாகதச் சொற்களும், வைணவ நெறியினைப் போதிக்கும் இலக்கிய நூல்களில் வடமொழிச் சொற்களும் பெருவழக்கைப் பெற்றன. பிற்காலத்தில் இசுலாமிய வழியை எடுத்துக் கூறும் நூல்களில் பெரும்பான்மையான அரபுச் சொற்களையும் ஓரளவு பாரசீகச் சொற்களையும் காணலாம்.

அரபு, பாரசீகச் சொற்களின் ஆட்சியே இசுலாமிய நூல்களின் கடமையாகவும் இன்றியமையாதனவாகவும் உள்ளன. எனவே, அரபு,

பாரசீகச் சொற்களை இலக்கியங்களிலிருந்து பிரிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

இசுலாமியக் கருத்துகளைத் தமிழில் விளக்குவதற்கு அச்சொற்களே தேவைப்பட்டன. எனவே, பிற்காலத்தில் இசுலாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களிலே அரபுச் சொற்களும், குறிப்பிடத்தக்க அளவு பாரசீகச் சொற்களும் ஆளப்பட்டன.

... மனத்தில்வேறு
எண்ணமின்றிப் பிசுமில்லா உரைத்தெடுத்து
உண்ண நல்லுரு வெய்தின என் உண்மையோன்.

என்னும் சீறாப்புராணப்பாடல் ஒரு சான்றாகும். இவ்வாறு பிற்கால இலக்கியங்களின் காலமும் பிறமொழிக் கலப்பிற்கு இடம் தந்த காலமே எனத் தெளியலாம்.

மொழிக்கலப்பு – தொல்காப்பிய நெறி

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்னும் நூற்பாவில், பொருள் குறிப்பவையே சொற்கள் எனக் கண்டுரைத்தார் தொல்காப்பியர், செய்யுளில் வழங்கப்படும் சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைச் சொற்களைக் குறிப்பிடுகின்றார்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. – தொல். சொல். 397

இயல்பாகத் தமிழில் அமைந்த சொற்கள், தமிழ் திரிந்த சொற்கள் செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த உள்நாடுகளில் வழங்கப்பட்ட திசைச் சொற்கள், இவற்றோடு இணைந்து வடசொல்லும் புனையும் தமிழ்ச் செய்யுளில் இடம்பெறும் என்பது இதன் பொருளாகும்.

இந்நூற்பாவை விளக்கிய இலக்கண விளக்கம், விரிவாகப் பல செய்திகளைத் தருகிறது.

செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்திலும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழ் ஒழி நிலத்திலும்
தம் குறிப்பினவே திசைச்சொல் என்ப. – நூற்பா. 174

செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டன் கண்ணும், பதினெண் நிலத்துள் தமிழாகிய ஒரு மொழி நிலத்தை

ஒழிந்த மற்றைப் பதினேழ் நிலத்தின் கண்ணும் குறிப்பினான் வழங்கு வனவற்றைத் திசைச்சொல் என்று சொல்லுவர் ஆசிரியர். செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனையும்,

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு – நன்றாய
சீத மலாடு புகால்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்றும், தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழி நாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும், அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், அருவாவட தலை நாட்டார் புளியை எகினம் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும் பன்னிரு நாட்டவர் வழக்குகளையும் சுட்டிக்காட் டியுள்ளார். மேலும் தமிழ் இல்லாத பதினேழ் நிலத்தினையும் 'சிங்க ளம், சோனகம், சாவகம், சீனம், துளுகுடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கவுடம், கடாரம், கடுங்குசலம், தங்கும் புகழ்த் தமிழ் சூழ் பதினேழ் புவி தாம் இவையே எனப்பகுத்துரைத்து, அருணம், காம்போசம், ஈழம், கூவி ளம், பல்லவம், அங்கம் என்ற தொடக்கத்தனவும், இவற்றின் பரியாய மும் இவற்றின் பகுதியுமாய் இவற்றுள்ளே அடங்கும் என்றும் குறிப் பிட்டார்.

அந்தோ என்பது சிங்களச்சொல்; கரைய, சிக்க, குளிர என்பன கருநடச்சொல்; எருத்தைப் பாண்டில் என்பது தெலுங்குச் சொல்; மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச்சொல் எனக் காணலாம். ஒழிந்த சொற்களும் வந்து கலக்கும் என மொழிக்கலப்புத் தமிழில் நிகழும் முறையை அறியலாம். தொல்காப்பியம் சுட்டிக்காட்டும். இருவகைத்தமிழ் - செந்தமிழ் கொடுந்தமிழ் எனவும், தென்பாண்டி நாடு முதல் புனல் நாடு ஈறாகிய பன்னிரண்டும் கொடுந்தமிழ் நாடு என்றும், மயிலை நாதர் முதலிய நன்னூல் உரையாசிரியர்கள் கொண் டனர். தொல்காப்பிய உரையாசிரியர்கள் வேணாட்டையும் புனல் நாட்டையும் நீக்கிப் பொங்கர் நாடு ஒளிநாடு என்பவற்றைக் கொண் டனர். உரையாசிரியர் பொதுங்கர் நாடு என்று பொங்கர் நாட்டைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாசிரியர், தமிழ்ஒழி பதினேழ் நிலங்கள் பற்றி மயிலை நாதர் உரைத்தவற்றையே தாமும் உரைத்தார். மேலும்,

கன்னித் தென்கரைக் கடற்பழந் தீவம்
சிங்கம் கொல்லம் கூவிளம் என்னும்
எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கம் தெலுங்கம்
கொங்கணம் துளுவம் குடகம் குன்றம்
என்பன குடபால் இருபுறச் சையத்து
உடனுறைபு பழகும் தமிழ்திரி நிலங்களும்
முடியுடை மூவரும் இருநில ஆட்சி
அரசு மேம்பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரும் உடனிருப்பு இருவரும் படைத்த
பன்னிரு திசையின் சொல்நயம் உடையவும்

என்றார் அகத்தியனார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இனி நச்சினார்க்கினியர் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நிலத்தையும், புறம் சூழ்ந்த பன்னிரு நிலமாவன சிங்களமும், பழந்தீவும், கொல்லமும், கூபமும், கொங்கணமும், துளுவும், குடகமும், கருநடமும், கூடமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமும் ஆம் என்று கூறுவார். தெய்வச் சிலையாரும் இக்கருத்தினரே.

இவ்வாசிரியர் கொடுந்தமிழ் நாட்டுச் சொற்களுக்குக் காட்டிய எடுத்துக்காட்டுகள் பலவும் மயிலைநாதர் உரையை ஒட்டியனவே. அவற்றுள் அருவாநாட்டார் செறுவைச்செய் எனக்கூறுவர் என்பதும், நச்சினார்க்கினியர் பன்றி நாட்டார் செறுவைச் செய் என்பர் என்பதும் மயிலைநாதர் கருத்து.

நாடுகளின் பெயர்	இயற்பெயர்	திசைச்சொல்
தென்பாண்டிநாடு	எருமை, ஆ	பெற்றம்
	சோறு	சொன்றி
குட்டநாடு	தாய், ஞாய்	தள்ளை, ஞெள்ளை
குடநாடு	தந்தை	அச்சன்
கற்காநாடு	வஞ்சர்	கையர்
வேணாடு	கோட்டம்	கிழார்
பூழிநாடு	நாய், சிறுகுளம்	ஞமலி, பாழி
பன்றிநாடு	செறு	செய்

4

அருவாநாடு	செறு, சிறுகுளம்	செய், கேணி
அருவாவட தலைநாடு	குறுணி, புளி	குட்டை, எகினம்
சீதநாடு	ஏடா, தோழன்	எலுவன், இகுளை
	தோழி, தம்மாமி	தந்துவை
மலைநாடு	தோழி	இகுளை
புனல்நாடு	தாய்	ஆய்
குடகம்	பிள்ளை	குடா
சிங்களம்	ஐயோ	அந்தோ
கருநடம்	கைப்பற்ற	சிக்க
	விளித்தல்	கரைதல்
	பனிக்க	குளிர
வடுகநாடு	சொல்	செப்பு
தெலுங்கநாடு	பசு, எருது	பாண்டில்
துளு	மாமரம்	கொக்கு

இவை தமிழ் நீங்கிய பதினேழ் நிலச் சொற்களுள், பண்டை உரையாசிரியரால் அறிவிக்கப்பட்டவை. இவற்றைப் பண்டை உரையாசிரியர்கள் கூறியவாறே இவரும் கொண்டார் என இலக்கண விளக்கமும் நீண்ட விளக்கமளிக்கிறது. திசைச்சொற்கள் என்பவை தமிழ் நாட்டிலுள்ள பகுதிகளில் மட்டும் வழங்கிவரும் சொற்கள் என்றும் பிற மொழிச் சொற்கள் என்பவை வடமொழி என்றும் தெ.பொ.மீ. விளக்க முரைக்கிறார். எனவே, இயற்சொல், திரிசொல், திசைச்சொல் ஆகிய மூன்றுமே தமிழின் வடிவமைப்புகள் என்பதும், வடமொழி என்பது பிறநாட்டிலிருந்து வந்து கலக்கும் நிலையிலிருந்த அயன் மொழி என்பதும் புலனாகின்றன. வடமொழிக் கலப்பைத் தடுக்க வியலாத நிலையில், அம்மொழிச் சொற்களைத் தமிழாக்கி எழுத வேண்டும் என்றும் தொல்காப்பியர்,

> வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

எனக் கூறி வடவெழுத்துகளுக்கு இணையாகத் தமிழ் எழுத்துகளை எழுத வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மொழிக்கலப்பு காலந்தோறும் நிகழ்ந்ததையும், கலப்பினைத் தடுக்க வடமொழி எழுத்துகளை நீக்கித் தமிழ் வயப்படுத்த வேண்டும் என்ற நோக்கும் இதனால் நிலவிற்று. காலமாற்றத்தின் கடுஞ்சுழற்சியில் இக்காற்றைத் தடுக்கக்

கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை ஒரு புறம் வலியுறுத் தினாலும், மறுபுறம் குலைவு நேர்ந்த படியே இருந்தது. புது வெள்ளம் தடுக்கக் கரையிட்டாலும், ஆறாக எல்லையில்லாமல் நீர் பெருக் கெடுத் தோடியது. ஆத்திசூடி முதலான நீதிநூல்களில் வருகின்ற ஈராயிரத்து இருபது சொற்களுள் வடசொல்லாவன நூற்றைம்பத்தாறு. இது நூற் றுக்கு எட்டு வீதமும் ஆகவில்லை. நறுந்தொகையில் (வெற்றி வேற்கை) அறுநூறு சொற்களுள் இருபானான்கு வடசொற்கள் அமைந்துள்ளன. இது நூற்றுக்கு நான்கே ஆகிறது. நைடதம் வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப்பட்ட நூலாயினும், அதனுள் சராசரியில் மூன்று பாட்டில் இரண்டு வடசொல்லின் மிகுவது அருமை. திரிகடுகத்தில் இருபத்தைந்து வடசொற்கள் உள்ளன. இது நான்கு வெண்பாவிற்கு ஒரு வடசொல் ஆகின்றது. நான்மணிக்கடிகை முற்றும் தடவிப் பார்த் ததில் இருபது வடசொல் கண்டோம். திருக்குறளில் ஒரோவோரதி காரத்து இரண்டும் ஒவ்வொன்றில் ஒன்றுதானும் காண்பதரிதாய் இரா நின்றது. நாலடியில் ஐந்து வெண்பாவில் ஒரு வடசொல் காண்பது கடினமாக இருந்தது. கலித்தொகையில் கலிப்பாட்டு ஒவ்வொன்றி லும் வடசொல் ஒன்றின் மிக்கிலது. கல்லாடத்தில் அகவல் ஒன்றில் ஐந் தின் மிக்க வடசொல் இல்லை. பத்துப்பாட்டைப் பதமுறச் சுவைத்த விடத்துப் பற்பானூறும் சிற்சினூறுமாய வரிகள் கொண்ட பாட்டு ஒவ்வொன்றிலும் வடசொற்கள் நான்கைந்தின் மிகவில்லை. அவை தாமும் வடசொல்லோ தமிழ்ச் சொல்லேயோ என ஐயம் கொள்ளுதற்கு ஏதுவாக நின்றன. சைவ வைணவ சமய நூல்களாகும் திருவாசகம், தேவாரம், நாலாயிரப்பிரபந்தம் முதலியவற்றில் மேலே காட்டின அளவிலும் வடசொற்கள் மிக்குள்ளன. இன்னும் சோதிடம் முதலிய வற்றை நோக்குமிடத்து வடசொற்கள் பின்னும் பலவாம். இவ்வாறு கணக்கிட்டுக் காணுமிடத்துக் காலத்தால் பின்னே போகப் போகத் தொன்மையான இலக்கியங்களில் அம் மொழிக்கலப்புக் குறைந்து கொண்டே போகின்றது என்பதும், அதனால் தன்னால் இயன்ற தனித் தமிழ் ஒரு காலத்து உளதாயிருந்தது என்பதும் பட்டம் பகலாகத் தெளிவுபடுகின்றது என்பது அவர் தந்த அறிவுரை.

"இன்றளவும் வழங்கும் தமிழை மேனோக்காகக் காண்பவரும் அதன் சொற்களின் தனித்தன்மையைக் காணலாம்" என்பார் எடுத் துக்காட்டி விளக்குவது இது:

உழவும் கலப்பையும், காரும் கயிறும், குண்டையும் நுகமும், சாலும் வயலும், வாய்க்காலும் ஏரியும், மடுவும் ஏற்றமும் பிறவும், பயிர்களையும், நட்டலும் கட்டலும், முதலாய ஏரெழுபதும் தமிழ் மொழிகளான் இயன்றனவே. தமிழர்கள் வதியும் வீடுகளின் கூறுக ளாகிய தலைக்கிடையும், புழைக்கடையும், கூரையும் வாரையும், கூடமும் மாடமும், தூக்கும் தூணும், கல்லும் கதவும், திண்ணையும் குறடும், தரையும் சுவரும், மண்ணும் மானும், மற்றவுந் தமிழே. தலை யும் காலும், கண்ணும் காதும், மூக்கும் மூஞ்சியும், வயிறும் மார்பும், நகமும் தசையும், நாவும் வாயும், பல்லும் மயிரும் மற்றவும் ஆகிய உடற்கூற்று மொழிகள் தனித் தமிழன்றோ! தமிழ்நாட்டி லுள்ள சிற்றூர், சீரூர், ஆரூர், பேரூர், புத்தூர், புற்றூர், சேய்ஞ்ஞலூர், மணலி, நெல்லூர், நெல்லை, கொன்னூர், குறட்டூர் என்னும் இடப் பெயர்களும், செவ்வாய், வியாழம், வெள்ளியும் ஆகிய கிழமை பெயர்கள் தமிழ்ப் பெயர்களே. தொண்ணூற்றொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களில் ஒன்றே னும் வடமொழியால் எண்ணப்படுவதில்லை. ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலன் என்னும் முகத்தலளவையும், இன்னும் கீழ்வாயிலக்கமும் அவற்றின் குறியீடுகளும் எல்லாம் தமிழே. தமிழர் கள் உண்ணும் சோறும் சாறும், காயும் கறியும், பாலும் பழமும், நெய் யும் தயிரும், உப்பு முதல் ஒன்பதும், பருப்பு முதல் பத்தும், தமிழ்ச் சுவையே. எழுத்தும் சொல்லும், பொருளும், யாப்பும், அணியும் ஆகிய ஏடுஞ் சுவடியும், எடுத்துப் பார்க்குமிடமெல்லாம் தமிழே. துணியும் அணியுந் தமிழே. தொழும் கடவுளும் தமிழ் மயமே. வீடும் நாடும், காடும் மேடும் ஆகிய எங்கும் தமிழ் மயமாகவே இருக்கின் றது. தமிழின் தனிச்சிறப்பை ஏற்க மறுப்பாரும் இருந்தமையன்றோ வியப்பு.

இது தொடர்பாகச் 'செந்தமிழ் வழக்கு' என்னும் நூலில் புலவர் இளமுருகனார், உலக வழக்கும் செய்யுள் வழக்கும் ஆகிய இருவகை வழக்கிலும் பயின்றுவருஞ் சொற்களைப் பற்றிச் சிறிது ஆராயலாம் என்று தொடங்கி விரிந்த கருத்துகளை வழங்கியுள்ளார். சொல்லாவது, பொருளை அறிவிக்கும் ஆற்றலுடைய எழுத்தொலியாகும். அஃது, இருதிணைப் பொருள் தன்மையையும், ஒருவர் உணர்ந்து கொள்வ தற்குக் கருவியாகும். பொருள்களைப் புலப்பட விளக்கும் தன்மையை

நோக்கி வடநூற் புலவர் சொல்லை விளக்கு என்பர். அது குறித்துச் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் "சொல்லெனப்படுஞ் சோதி தோன்றாதாயின், எல்லை நீர் ஞாலத்தில் எப்பொருள்தான் புலப்படும்? ஆதிபகவனை அறிவதும் இல்லை! ஆகமங்களை அறிவதும் இல்லை! அறம், பொருள் முதலியவற்றை அறிவதும் இல்லை! அவற்றை வலியுறுத்தும் பழஞ்சரிதங்களை அறிவதும் இல்லை! தங்கருத்தைப் பிறர் அறிவதும் இல்லை! பிறர் கருத்தைத் தாம் அறிவதும் இல்லை! அறியாமை யாண்டும் தலைப்படும். உலகம் தலைதடுமாறும். ஆதலால் உலகை வழங்கிவரச் செய்வது சொல்லெனப்படுஞ் சோதியென்றே சொல்லுக என்றார்.

சொற்கள் நான்கு வகைப்படும். அவை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என்பனவாம். இவற்றைப் பெயர், வினை, இடை, உரிச்சொற்களுடன் சேர்த்தவழிப் பத்தாகும்.

இவற்றுள் இயற்சொல்லாவது, உலக வழக்குக்குரிய செஞ்சொல்லாகும். இயற்சொல் - இயல்பாய்ப் பொருள் உணருஞ்சொல். அச்சொல் செந்தமிழ் நிலத்துக்குரியதாய்க் கற்றார்க்குங் கல்லாதார்க்கும் ஒப்பத் தன் பொருளை விளக்குந் தன்மையுடையது. தமிழ்மக்கள் பேசுதற்கும் உரைநடையில் எழுதுதற்கும் இயல்பாய் அமைந்த சொல்லென்பது கருத்து.

அடுப்பு, நெருப்பு, நிலம், நீர், காற்று, பகல், இரா, மலை, ஆறு, கடல், குளம், விளக்கு, உப்பு, புளி, வீடு, கோயில் மக்கள், காடு, மேடு, பள்ளம், யானை, குதிரை, நடந்தான், இருந்தான், பார்த்தான், கற்றான், கொன்றான், தின்றான் என்பனவும் பிறவும் இயற்சொற்களாம். மக்கள், நாளிலும் பொழுதிலும் தம் கருத்தைப் பிறர்க்கு உணர்த்தவும், பிறர் கருத்தைத் தாம் உணரவும் அச்சொற்கள் பெரிதும் துணை புரிவன.

புதுப்பொருள்களும், புதுக்கருத்துகளும், புது நிகழ்ச்சிகளும், புது நுகர்ச்சிகளும், பிறக்குந்தோறும் உலகவழக்குச் சொற்களை மக்கள் பெருக்கிக் கொள்வர். இவ்வாறு உலக வழக்குச் சொற்களை நாளடைவிலே பெருகி மொழியை வளப்படுத்தும். இனி, இவ்வுலக வழக்குச் சொற்களேக் கல்லாதாருங் கற்றாரும் வழங்குவாராதலின், ஒருசேர அவருள் கற்றார் அவற்றை இலக்கண நெறிக்கு ஏற்ப வழங்குவரென்றும், கல்லாதார் அந்நெறியிகந்து வழங்குவரென்றும் அறிய

லாம். கற்றார் வழக்கே உயர்வழக்கென்றும் கூறுவர். உலகவழக்குச் சொற்கள் இழிவழக்காக மாறுவதைச் சிறிது விளக்குவோம். பார்த்தான், கொன்றான், தின்றான், கோபம், நுங்கு, பனாட்டு, ஆற்றங்கரை, அகப்பை, ஒன்று, ஆண்பிள்ளை, இளநீர், கடற்கரை, கைம்மாற்று, சிவப்பு, சுவர், சுருட்டு, கிரகணம், புடைவை, பிட்டு, திறப்பு, பன்றி, பாகற்காய், நாற்றம் என்பனவற்றை இக்கால எழுத்தாளர், பாத்தான், கொண்டான், தின்னான், கோபம், நொங்கு, பினாட்டு, ஆத்தங்கரை, ஆப்பை, ஒண்டு, ஆம்பிளை, இளனி, கடக்கரை, கைமாத்து, சிகப்பு, சிவர், கிராணம், பிடவை, புட்டு, துறப்பு, பண்டி, பாவக்காய், நாத்தம் என்று தாம் எழுதும் நூல்களில் வழங்கிவரக் காண்கின்றோம்.

இச்சொற்களுக்கு இலக்கண அமைதியில்லை. பார்த்தான் என் பதற்குப் பார் என்பது பகுதி. பார், நோக்கு, பார்த்தல், பார்த்தான், பார்த் தாள் என்று எழுதியவழியே நோக்குதல், நோக்கினான், என்ற பொருள் படும். பார்த்தான் என்பதற்குப் பகுத்தான் என்பதும் பொருள். பாத்தல் - பகுத்தல், ஆகவே, இரண்டுக்கும் பொருள் வேறுபாடு மிகுதியு முண்டு. பார்த்தலும் பாத்தலும் ஒன்றெனக் கருதிக்கொள்ளும் வழக் குமிகுமாயின். பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந் தீப்பிணி தீண்டல் அரிது என்னும் திருக்குறளைப் படிப்போர், தான் உண் பதைப் பலரும் பார்த்துக் கொண்டிருக்க உண்ணும் இயல்புடைய வனைப் பசி என்னும் தீய நோய் தீண்டாது, என்று பிழையாகப் பொருள் கொண்டு திருவள்ளுவர் கருத்தை மாறாக விளங்கிப் பெரி தும் மயங்குவரன்றோ! இவ்வாறே ஏனைய சொற்களையும் பொருத் திக் காண்க. ஆகவே, இழிவழக்குச் சொற்கள் எழுத்திற் புகுந்து ஆட்சி செய்யுமாயின், செந்தமிழ் வழக்குச் சொற்களெல்லாம், பொருளில் மாறுபட்டுத் தமிழ் மொழி முழுவதுஞ்சிதையும், ஆதலினாலன்றோ செந்தமிழ்ச் சான்றோர் இழிவழக்கை வழக்கென்று கொள்ளாது, உயர் வழக்கையே உலக வழக்கென்றும், சான்றோர் வழக்கென்றும், அவ்வழக் கின் நிலைப்பாட்டை மரபென்றும், வரையறுத்துக் கொள்வாராயினர் ஆசிரியர் தொல்காப்பியனாரும், இக்கருத்தை உணர்த்தவே, "மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும்" என்று இலக்கணஞ் செய்தார். இவ் வழக்கை மீறிக் கல்லாதார் பேசுவது போலவே எழுதிச் சிறுகதை இலக்கியஞ் செய்தல் வேண்டும் என்பார் கொள்கை, செந்தமிழ் வழக்கை அழித்துக் கொடுந்தமிழ் வழக்கை நிலைநாட்டும் கொடுமையாகும்.

செய்யுள் வழக்குச் சொற்கள்

உரைநடை இலக்கியங்கட்கு இயற்சொற்களே பெரிதும் உரிமையுடையன என முன்னர்க் காட்டினோம். செய்யுள் வழக்குக்கு அவ்வியற்சொல்லும், திரிசொல்லும், வடசொல்லும், திசைச்சொல்லும் ஆகிய நால்வகைச் சொற்களும் உரிமையுடையன. அவற்றுள்ளே திரிசொற்கள் செய்யுட்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாம். அவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுள்மொழி என்பர். திரிசொல் இயற்சொல்லின் வேறாயது. திரிதல் வேறுபடுதல், வேறுபடுதலாவது, இயற்சொற்போல வெளிப்படையாகப் பொருள் விளங்காது. கல்வியறிவால் உணர்வதாய் அமைவது. ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அமையும். திரிசொல் இயற்சொல்லின் வேறாய் நின்று அரிதிற் பொருள் விளக்குஞ் சொல். இயற்சொல்லினுந் திரிசொல்லே இலக்கியத்துக்கு இன்றியமையாதது. திரிசொல் இல்லையாயின், சுருங்கச் சொல்லுதல் கூடாது. சுவைபெறப் பெய்தலும் கூடாது. மோனை, எதுகை முதலியன அமைதலுங் கூடாது. கவிநடையும் வேறுபட்டு இழியும், என்று கூறிப் போந்தார்.

வடசொல்

ஆரிய சொல் தமிழ்நடை பெற்று வழங்குதல் வடசொல்லெனப்படும். தமிழ்நடை பெறுதலாவது, தமிழோசைக்கு இணங்கி அதற்கு நிகரான தமிழெழுத்தால் அமைவது. வடமொழியோசையும், அதற்குரிய எழுத்தும் அமைய நிற்பன ஆரியச் சொல்லென்றும், தமிழ் நடைபெற்றுத் தமிழே போல விரவி நிற்பன வடசொல்லென்றும் பகுத்துணர்ந்து கொள்ளலாம். தமிழ் இயற்கை ஒலியுடையதாகலின், உரப்பியும், எடுத்துங்கனைத்தும் கூறும் வட வெழுத்துகளை நீக்கி, அவற்றுக்கு நிகரான தமிழ் எழுத்துகளை இட்டு வழங்குதலைத் தொல்காப்பியனாரும் நன்னூல் பவணந்தியாரும் அவரையுள்ளிட்ட ஆசிரியர் எல்லாரும் வேண்டினர். செந்தமிழ் வழக்கை மதித்து நூல் செய்த சங்ககாலச் சான்றோரும், இடைக்காலச் சான்றோரும், பிற்காலச் சான்றோரும், இக்காலச் சான்றோரும், அம்மரபினை வழுவவிடாது பெரிதும் பேணி வருவாராயினர்.

செயற்கை ஒலிகளையுடையது ஆரியம். அவ்வாரியமொழிச் சொற்களைத் தமிழ்நடைப் படுத்தாது கிடந்தாங்கு வழங்குதலினால்,

இனிய செந்தமிழ்க்கு அமைந்த இனிய நல்லோசை வளங்குன்றி விடும். எழுத்துகளின் இன்னோசை அமைப்புத் திரியும். நாளடைவில் அவ் வழக்குத் தமிழின் மொழி நடையை மாற்றி அது பிறிதொரு மொழி யாகத் திரிதற்குத் துணை செய்யுமென்க. அவ்வாறே அருந்தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடமாகத் திரிந்ததை மொழி வரலாற் றால் அறிகின்றோம். அத்துணை சிறந்த பாதுகாப்பினை ஆசிரியர் தொல்காப்பியனார் ஐயாயிரவாண்டுகளுக்கு முன்னரே தமது இலக் கண நூலிற் செய்தமை பாராட்டற்பாலதாம்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே,

என்றும்,

சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.

என்றும் பொதுவகையில் இலக்கணவரம்பு செய்தார். அச்சூத்திரங் களை விளக்கிய சேனாவரையர், "வடசொற்கிளவியாவது, வடசொற்கே உரிய வெனப்படுஞ் சிறப்பெழுத்தின் நீங்கி, இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தால் இயன்ற சொல்லாம். எனவே, பொது வெழுத்தால் இயன்ற வடசொல்லும் செய்யுள் செய்தற்குச் சொல்லாம் என்றவாறாயிற்று. அவை வாரி, மேரு, குங்குமம், மணி என்னுந் தொடக்கத்தன. பொதுவெழுத்தால் இயன்றனவே யன்றி வடவெழுத் தால் இயன்ற வடசொல் சிதைந்துவரினும் பொருத்தமுடையன செய் யுளிடத்து வரையார். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட்குரிய வாய் வாரா. இவ்வாறாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க என்று கூறியதும் நோக்கியறிக.

இனி உரப்பியும், எடுத்துங் கனைத்தும் வருகின்ற செயற்கை யொலிகள் ஆரியத்தில் உண்டென்பர் நச்சினார்க்கினியர். உரப்போடு கூடிய எழுத்துகள், கவ்வருக்கம் முதற் பவ்வருக்கம் முடிய ஐந்து வருக்கங்களிலுமுள்ள இரண்டாம் எழுத்துகளாம். எடுப்போடு கூடிய வெழுத்துகள், ஐந்து வருக்கங்களில் மூன்றாம் எழுத்துகளாம். கனைப் போடு கூடிய வெழுத்துகள், அவற்றில் நான்காம் எழுத்துகளாம். ஏனைய வெழுத்தொலிகளிற் சொற் பயிலாமை நோக்கி அவற்றை விட்டனரென்க.

இனி, இற்றைக்கு ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் னிருந்த பவணந்தி முனிவர், தொல்காப்பியனார் பொதுவகையில் வகுத்த வடமொழியாக்க விதியைச் சிறப்பு முறையிலே விளக்கி விதிசெய்வாராயினார். பவணந்தி முனிவர் காலத்திலே வடமொழி இலக்கியப் பயிற்சி தமிழ் நாட்டிலே மிகுவதாயிற்று. ஆரியச் சொற் கள் வரம்பின்றி இலக்கியங்களிற் கலக்கத் தொடங்கின. அக்கலப்புத் தமிழ்மொழியின் ஒலித் தூய்மையை அழித்துவிடும் என்றஞ்சிய பவணந்தி முனிவர் ஆரியச் சொற்களைக் கிடந்தாங்கு வழங்காது, தமிழ் நடைபெற்ற வடசொல்லாய் வழங்குமாறு விளக்கமாய் விதி செய்தனர். நன்னூலிற் பதவியலின் ஈற்றிலே வடமொழியாக்கம் என் னும் பகுதியிலும், (146 - ஆம் சூத்) பெயரியலில் 274 ஆம் நூற் பாவிலும் கண்டு கொள்க. ஆகவே, வடசொற்கள், ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவான எழுத்துகளாலும், ஆரியத்திற்கேயுரிய சிறப் பெழுத்துத் திரிந்த எழுத்துகளாலும், இயன்று செந்தமிழ்ச் சொல்லை ஒப்பனவாகிச் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவனவாம் என்றுணர்க.

இனி பவணந்திமுனிவர் விளக்கமாய்ச் செய்த வடமொழியாக் கத்தை அவர்க்குப் பின்னிருந்த இலக்கண நூலாசிரியர் களெல்லாரும் வழி மொழிந்து பேணி வந்தனர். யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமார சுவாமிப்புலவர், அவ்வடமொழியாக்க மரபினைத் திட்பநுட்பமாய் ஆராய்ந்து பவணந்தி முனிவரைக் காட்டிலும் பெரிதும் வற்புறுத்து வாராயினர். அதனை அவர் செய்த இலக்கணச் சந்திரிகை, இலக் கியச் சொல்லகராதி என்னும் நூல்களிற் கண்டு தெளிக.

ஆரியச் சொற்களை வழங்கும்பொழுது, அவற்றிலுள்ள வட வெழுத்துகளை நீக்கியெழுதும் மரபு, தமிழகப் புலவராற் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை போல, ஈழத்துப் பூதன் றேவனார் முதல் இன்றுகாறும் உள்ள யாழ்ப்பாணப் புலவராலும் தமிழ்மொழி நலம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இலங்கையரசின் கல்விக்குழுவின் அறிக்கை நாம் காணத்தக்கதாகும்.

"The problem of teaching Tamil also is primarily a problem of providing books. Those at present used in the schools are obtained from South India. Written to suit Indian students, they are not altogether Suitable for ceylon Students. Though

the literary language is the same in India and in ceylon, the Colloquial languages. Of the two countries differ widely. Owing to the insularity of the country, the Tamil language of ceylon has remained comparatively free from the influences of other languages, and struck out on a line different from the Tamil language of India. Through the influence of Indo-Aryan language and of Arabic and persion. The spoken Tamil of India contains many non-Tamil words and phraser which are unintelligible in ceylon. There is too a tendency in India to borrow Sanskrit words and phraser without changing them into the Tamil phonetic system. In ceylon, the change in made. Moreover, the Indian text books use Sanskrit Characters for reproducing foreign words with non-Tamil sounds, a practice which has never obtained in ceylon. It ceylon Tamil in to be maintained in its purity, therefore, the selection of Indian books to be used in our schools must be carefully made. The considerable differences between written and spoken Tamil require that considereble attention be paid to grammer." (Report of the special Committee on Education 1943)

வடமொழியாக்க மரபின் நோக்கம் தமிழ்மொழிக்கு இயல்பாய் அமைந்த இயற்கை ஒலியுடைமையைப் பாதுகாப்பதேயாம். செயற்கை ஒலிக்கூட்டங்கள், ஆரியம் ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்கள் வழியாகத் தமிழிலே புகுந்து ஆட்சி செய்யுமாயின், தமிழ்மொழி தனக்கியல்பாய் அமைந்த இனிய மெல்லோசையில் திரிந்து போகும். ஆயிரக்கணக்கான சொற்கள் அங்ஙனம் புகநேரின், தமிழ் பிறிதொரு மொழியாகச் சில்லாண்டிலோ பல்லாண்டிலோ மாற்றமடையும். இவ்வகைச் செயற்கையொலிக் கூட்டச் சொற்கள் வரம்பின்றிக் கலந்த பெருங் கலப்பாலே தமிழ், பல்லாண்டுகளுக்கு முன்பே மலையாளம், கன்னடம்,தெலுங்கு, துளு முதலியனவாக மாற்றமடைந்த வரலாற்றுக்கு மொழி நூல்கள் உறுதி கூறுகின்றன. அம்மொழிகளின் இக்கால வடிவத்தை நுணுக்கமாக ஆராய்வமெனில், கல்லாதார் வழக்காகிய கொடுந்தமிழும், ஆரியச் சொற்கோவையும் பிறவும் ஒன்றும் சேர்ந்த பிழம்பே அவை என்பதைக் காண்போம்.

ஆகவே, இக்காலக் கொடுந்தமிழ் வழக்கு ஒரு நூற்றாண்டுக்கு ஆட்சி செய்து நிலைக்குமாயின், செந்தமிழ்மொழி வேறு வடிவ மெய்தும் என்பது மறுக்கமுடியாத பேருண்மையாகும். யாமுரைத்த உண்மையை உணர்தற்குப் பின்வருஞ் சொற்கோவை மிகப் பயன் படும். அஃது இக்கால எழுத்தாளர் செய்த சிறுகதை இலக்கியங்களிலே கண்டு கோவைப்படுத்தப்பட்டது. ஆரியச் சொற்களைத் தமிழ் நடைப் படுத்தி வட சொல்லாக்காது, வழங்கிய கொடுந்தமிழ் வழக்கே இஃது என்று கொள்க. அச்சிறுகதை நூல்களிற் காணப்படும் பிறமொழிச் சொற்கோவையும் பிறவகை வழுக்களும் காணலாம்.

ஜலம் - ஜனம் - ஜகம் - ஜடம் - ஜங்கமம் - ஜனகன் - ஜனனம் - ஜயம் - அம்புஜம் - ராஜ்யம் - சமாஜம் - விஜயன் - துவஜம் - ஜாதி - ஜாலம் - ஜாக்கிரதை - ஜீவன் - ஜீரணம் - ஜீவாலை - இரா ஜன் - புஜம் - போஜனம் - ஜெந்து - பிரஜை - பூஜை - ஜோதி - அஷ்டம் - அதிர்ஷ்டம் - திருஷ்டிவிஷம் - கிருஷ்ணன் - சிருஷ்டி - துஷ்டன் - நஷ்டம் - பாஷை - ஔஷதம் - குஷ்டம் - சீஷன் - நிமிஷம் - வருஷம் - வேஷம் - அபிஷேகம் - ஷண்முகம் - ரிஷி - அஸ்திரம் - அஸ்தமனம் - அவஸ்தை - உத்ஸவம் - கஸ்தூரி - சரஸ்வதி - சாஸ்திரம் - புஸ்தகம் - மஸ்தகம் - வாஸம் - விஸ்தாரம் - ஸபா -ஸ்வாமி - ஸக்தி - ஸ்ப்தம் - ஹரி - ஹனுமன் - ஹிமிம் - ஹிதம் - ஹீனம் - ஹேது - ஸ்நேஹம் - க்ஷணம் - பக்ஷி - அக்ஷரம் - க்ஷேமம் - லக்ஷ்மி - பரீக்ஷை - ராமன் - ரகசியம் - ரசாயனம் - ரஞ் சிதம் - ரசம் - ராணி - ராணுவம் - ராத்திரி - ராமாயணம் - ராவணன் - ருக்மணி - ருசி - ருத்திரன் - ருது - ரோகிணி - ரதம் - ரதி - ரவி - ராகம் - ராசன் - ரோமம் - லகு - லஞ்சம் லாபம் - லிங்கம் - லோகம் - லோபம். இவை ஒரு சிலவாம். இவற்றின் வடசொல்லாக்கம் காண முற்பட்டால் சலம் - சனம் - சகம் - சடம் - சங்கமம் - சனகன் - சன னம் - சயம் - அம்புசம் - இராச்சியம் - சமாசம் - விசயன் - துவசம் - சாதி - சாலம் - சாக்கிரதை - சீவன் - சீரணம் - சுவாலை - இராசன் - புயம் - புசம் - போசனம் - செந்து - பிரசை - சோதி - அட்டம் - அதிட்டம் - திட்டிவிடம் - கிருட்டிணன் - (கண்ணன் -) சிருட்டி - துட்டன் - நட்டம் - பாடை - ஔடதம் - குட்டம் - சீடன் - நிமிடம் - வருடம் - வேடம் - அபிடேகம் - சண்முகம் - இருடி - அத்திரம் -

அத்தமனம் - அவத்தை - உற்சவம் - கத்தூரி - சரசுவதி - சாத்திரம் - புத்தகம் - மத்தகம் - வாசம் - வித்தாரம் - சபை - சாமி - சுவாமி - சக்தி - சத்தம் - அரி - அநுமன் - இமம் - இதம் - ஈனம் - ஏது - சிநேகம் - கணம் - பட்சி - அட்சரம் - அக்கரம் - சேமம் - இலக்குமி - பரீட்சை - இராமன் - இரகசியம் - இரசாயனம் - இரஞ்சிதம் - இரத்தம் - இரசம் - இராணி - இராணுவம் - இராத்திரி - இராமாயணம் - இராவணன் - உருக்குமணி - உருசி - உருத்திரன் - இருது - உரோகிணி - இரதம் - இரதி - இரவி - இராகம் - இராசன் - உரோமம் - இலகு - இலஞ்சம் - இலாபம் - இலிங்கம் - உலோகம் - உலோபம் என்பனவாம்.

இவற்றுக்கு நேரான செந்தமிழ்ச் சொற்கள் பற்பல கிடப்பவும், அவற்றை வழக்கழிந்து ஒழியவிட்டு, வடமொழிச் சொற்களை வாங்குதல் உய்தியில் குற்றமாம். அவ்வடசொற்களுக்கு நேரான சொற்கள் தமிழில் இல்லாதவழி அவற்றைத் தமிழ்நடைப்படுத்தி வழங்குதல் குற்றமாகாது.

திசைச்சொற்கள்

ஆரியச்சொல் வடதிசையினின்றும் வந்து தமிழிற் புகுந்ததைப் போலவே, ஏனைய திசைகளினின்றுஞ் சிற்சில சொற்கள் வந்து புகுந்துகொண்டன. அவற்றைத் திசைச்சொல்லென்பர். நட்புறவு வாணிகம் முதலிய தொடர்புகளினாலும், வேற்றுத் தேயத்தார் ஆட்சியினாலும், திசைமொழிகள் நாகரிகம் படைத்த மக்கள் பேசும் மொழிகளிற் கலப்பது இயற்கையாம். அச்சொற்களை வரம்புகடந்து செல்லவிடாது மட்டுப்படுத்துவதும், அவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்களை ஆக்கி வழங்குவதும், தமிழ்ச் சான்றோர்க்கு மரபாயிற்று

ஆரியச் சொற்களை எங்ஙனம் தமிழ்நடைப்படுத்தி வடசொல்லாக்கி வழங்கியதோ, அங்ஙனமே திசைச்சொற்களையும் தமிழோசைக்கேற்பத் தமிழ் எழுத்துகளால் தமிழ் நடைப்படுத்தி வழங்குதல் வேண்டும். அங்ஙனம் தமிழ்நடைப்படுத்தி வழங்கிய வழியே அவை திசைச்சொற்கள் எனப்படும். ஆரிய மொழிக்குரிய எழுத்துகளைக் கிடந்தாங்கு வழங்குதலை விரும்புவோமாயின், ஏனைய திசைச்சொற்களையும் அவ்வத் திசைமொழிக்குரிய எழுத்துகளால் வழங்குதல் வேண்டும். அங்ஙனம் வழங்குதல் தமிழ்மொழியின் ஒலியமைப்பையும் தூய்மையையும், இலக்கணவரம்பையும் அழித்து விடு

மென்க. ஆதலினாலன்றோ மதி நுட்பமும், மொழிப்பற்றும் மிகுந்த பழந்தமிழ்ச் சான்றோர் ஆரியம் முதலாய எல்லாத் திசைமொழிச் சொற்களையும் தமிழ் நடைப்படுத்தி வழங்குமாறு ஆணைதருவாரா யினர் என்க.

நன்னூற்கு உரைகண்ட சங்கர நமச்சிவாயப்புலவர், ‘வடக்கும் ஒரு திசையன்றோ’ திசைச்சொல்லன்றி வடசொல்லென வேறு கூறுவதென்னையெனின், தமிழ் நாட்டிற்கு வடதிசைக்கட் பதினெண் மொழிகளுள் ஆரிய முதலிய பல மொழியுளவேனும் தென் தமிழ்க்கு எதிரியது கடவுட் சொல்லாகிய ஆரிய மொன்றுமே யென்பது தோன்ற, அவற்றுள் தமிழ் நடைபெற்றதை வடசொல்லென்றும், ஏனைவற்றுள் தமிழ் நடைபெற்றதைத் திசைச்சொல்லென்றும் சான்றோரால் நிய மிக்கப்பட்டன வென்று, விளக்கியதூஉங் கண்டு தெளிக. இனி அக் காலத்திலே தமிழ்நிலத்தைச் சூழ்ந்து பதினேழ் நிலத்தையும், ‘சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுகுடகங் கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங் கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந் தங்கும் புகழ்த் தமிழ்சூழ் பதினேழ்புவி தாமிவையே’ என்னுஞ் செய்யுளாலறிக’ என்றார். இக்காலத்திற் போர்த்துக்கேய நாடு, ஒல்லாந்த் நாடு, ஆங்கிலேய நாடு, பிரெஞ்சு நாடு முதலிய நாடுகளுந் தமிழ் நாட்டுடனும் இலங்கையுடனுந் தொடர்பு கொண்டமை அறியப் படும். அந்நாடுகளுக்குள்ளே ஆங்கில நாட்டுக்குரிய ஆங்கிலம், இந்நாளில் உலகப் பொதுமொழியாக மதிக்கப்படுவதாலும், தமிழ் மொழியை வளப்படுத்தும் புத்தம்புதிய கலைகள் அம்மொழியினின் றும் பெயர்த்துக்கொணர வேண்டியிருத்தலினாலும், அம்மொழிச் சொற் கள் பலவாய்த் தமிழிலே புகுதற்கு வாய்ப்பு உண்டாகும். அதனை ஒரு காரணமாகக்கொண்டு புதிய கலைக்குரிய, சொற்களைத் தமிழிலே ஆக்கிக் கொள்ளாது விடுவதும், அக்கலைச் சொற்களைக் கிடந்தாங்கு வழங்குவதும், தமிழ்மொழிக்குச் செய்யும் கொடுஞ் செயலாகும். ஆகவே, இன்றியமையாது வேண்டப்படும் சிற்சில இடங்களிலே மட்டும் ஆங்கிலம் முதலாம் வேறு மொழிச் சொற்களை ஓசையாலும் எழுத்தாலும் தமிழ்நடைப்படுத்தி வழங்கிவரு தல் வேண்டும்.

வரம்பிட்டும் தடுக்க முயன்ற நிலையிலும் வடமொழிக் கொள் கைக்கு இலக்கணம் வரைவதற்காகவே கி.பி. 11ஆம் நூற்றாண்டில்

புத்தமத்திரர் வீரசோழியம் எழுதினார். கி.பி 17ஆம் நூற்றாண்டில் சாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து எழுதியதோடு, உரையும் வரைந்தார். வடமொழி தமிழ்மொழி என்னும் இருமொழிகளுக்கும் இலக்கணம் ஒன்றே என இவர் கூறினார். இதே நூற்றாண்டில் பிரயோக விவேகம் என்னும் நூலைச் சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றி வடமொழிக்கு வாழ்வளித்தார். சோழர் காலத்தில் கல்வியென்றால் வடமொழிக் கல்லூரிகளில் வேதாந்தம் வியாகரணம், மீமாம்சம் போன்றவற்றை கற்பதுதான். தமிழ்க்கல்விக்கென மானியம் தரப் பட்டதாக ஒரு கல்வெட்டும் இல்லை. கி.பி. 1640இல் நாயக்க மன்ன ராட்சியில் மதுரையில் மட்டும் பதினாயிரம் பிராமண மாணவர் வட மொழிக் கல்வியைக் கற்றனர் என்பர்.

வடமொழியிலும், தமிழ்மொழியிலும் ஒரே வடிவமுடையன வாக வழங்கப்படும் சொற்கள், ஒலிவடிவில் ஒற்றுமைப்பட்டிருப்பி னும், வெவ்வேறு பொருள்களைக் குறிக்கின்றன. இந்த அறியாமை யைப் பலர் அறிவதில்லை நிகர்வடிவமுடைய வடமொழி தென் மொழிச் சொற்கள், முரணான பொருளில் வழங்குதலையும் பின்வரும் பட்டியலில் காணலாம்.

சமஸ்கிருதம் – தமிழ்

1. உத்தியோக - முயற்சி	உத்தியோகம் - வேலை
2. உபந்யாச - நாவல், புதினம்	உபந்நியாஸம் - அருள்நெறிச் சொற்பொழிவு
3. கல்யாண் - நல்ல, மங்கள	கலியாணம் - திருமணம்
4. சரித்ர - ஒழுக்கம்	சரித்திரம் - வரலாறு
5. சேஷ்ட்டா - முயற்சி, குறும்பு	சேஷ்டை - கெட்ட நடவடிக்கை,
6. பிரசங்கம் - முன்பின் சந்தர்ப்பம்	பிரசங்கம் - சமயச் சொற்பொழிவு
7. பத்ர - மென்மையான	பத்திரம் - சாக்கிரதை
8. ம்ருக - மான்	மிருகம் - விலங்கு
9. விலாஸ் - சுகபோகமான	விலாசம் - முகவரி
10. சங்கதி - தொடர்பு	சங்கதி - செய்தி
11. சம்சார் - உலகம்	சம்சாரம் - மனைவி

12. சமாதான் - ஐயங்களை விளக்குதல்	சமாதானம் - ஒத்துப்போதல்
13. சாது - சந்நியாசி	சாது - எளியவன், சரளமானவன்
14. அபராத் - குற்றம்	அபராதம் - தண்டனை
15. ஆதர - மரியாதை	ஆதரவு - துணை
16. பாச - பயிறு	பாசம் - பற்று
17. பிரச்ன - கேள்வி	பிரச்சினை - சிக்கலான செய்தி
18. ஆலய - இடம்	ஆலயம் - கோயில்
19. காய - சரீரம்	காயம் - புண்
20. நீர - தண்ணீர்	நீர் - நீங்கள்
21. பத்ர - இலை, கடிதம்	பத்திரம் - விலைச்சீட்டு
22. பிரமாத் - சோம்பேறித்தனம்	பிரமாதம் - நன்றாக
23. யோஜனா - திட்டம்	யோசனை - சிந்தனை
24. ரண - போர்	ரணம் - காயம்
25. துவார் - வாயில்	துவாரம் - சந்து
26. அன்னம் - சமைத்த சாதம்	அன்னம் - அன்னப்பறவை
27. வயிராகி - பற்றற்றவன்	வைராக்கியம் - மனஉறுதி
28. வைபவ - செழிப்பு	வைபவம் - குடும்ப அலுவல்
29. சர - அம்பு	சரம் - மாலை தொடுக்கும் நூல்
30. சாலா - கூடம்	சாலை - பாதை
31. ஸ்ருங்கார் - இன்பச்சுவையுள்ள	சிங்காரம் - அழகுபடுத்துதல்
32. சமய் - காலம்	சமயம் - மதம்
33. சகாய - உதவி	சகாயம் - மலிவான
34. சித்தி - ஆன்மிக வெற்றி	சித்தி - தாயின் தங்கை
35. காதக் - கொல்பவன்	காதகன் - பொறாமைக்காரன்
36. பசு - பிராணி	பசு - பசுமாடு
37. மணி - இரத்தினம்	மணி - காலம்
38. சமாச்சார் -உயர்ந்த ஒழுக்கம்	சமாச்சாரம் - செய்தி
39. அகம் - ஆணவம்	அகம் - உள்ளே (வீடு)
40. கேவல் - தனியே	கேவலம் - இழிந்த
41. புருஷ் - ஆண்மகன்	புருஷன் - கணவன்
42. விகட் - மிகக் கடுமையான	விகடம் - நகைச்சுவை
43. அவதி - எல்லை	அவதி - துன்பம்

44. விஜய் - வெற்றி விஜயம் - வருகை
45. விஷய - ஐம்பொறிகளால் நுகரும் பொருள்கள்
விஷயம் - செய்தி
46. ஆலோசனா - திறனாய்வு ஆலோசனை - யோசனைகேட்பது
47. ஆஸா - நம்பிக்கை ஆசை - விருப்பம்
48. நிர்வாணம் - முத்தி, வீடுபேறு நிர்வாணம் - ஆடையற்ற நிலை
49. நாம் - பெயர் நாமம் - திரிபுண்டரம் அணிதல்
50. காலக்ஷேப - காலத்தைக் கழிப்பது
காலட்சேபம் - சமயச்சொற்பொழிவு
51. கரி - யானை கரி - அடுப்புக்கரி
52. முத்ரா - நாணயம் முத்திரை - சின்னம்
53. மாத்ரா - அளவு மாத்திரை - மருந்து, மாத்திரை

தமிழ்	வடமொழி
1. அப்பம்	அபூப
2. அரவம்	ரவ (ஒலி)
3. ஆயிரம்	சஹஸ்ரம்
4. உரு, உருவம்	ரூப
5. கலுழன்	கருடன்
6. காலம்	கால
7. சாமை	ச்யாமா
8. சொல்வம்	ஸ்லோகம்
9. திடம்	த்ருட
10. தீவு	த்லீப
11. பக்கம்	பக்ஷ
12. படிமை	ப்ரதிமா
13. பரம்	பர
14. பாகம்	பாக
15. மண்டலம்	மண்டல
16. மந்திரம்	மந்த்ர
17. மயில்	மயூர
18. முகம்	முகம்
19. மாயை	மாயா
20. முத்து, முத்தம்	முக்தா

21. அம்பு	அம்பு
22. ஆணி	ஆணி
23. இலக்கு	லக்ஷ்ய
24. உலகம்	லோக
25. கலை	கலா
26. கோட்டம்	கோஷ்ட
27. சாலை	சாலா
28. தயிர்	ததி
29. திறம்	ஸ்திர
30. தூண், தூணம்	ஸ்தாணு
31. படி	பரதி
32. பதம்	பத
33. பலம்	பல
34. பாதை	பாதா
35. மது, மட்டு	மது
36. மயிர்	ஸ்மஸ்ரு
37. மாகம்	நாகம்
38. மாதம்	மாஸம்
39. மீன்	மீந
40. வட்டம்	விருத்த
41. விதை	பீஜ
42. விந்து	பிந்து
43. குட்டம்	குஷ்ட
44. மடி	மிரு
45. சடலம்	சரீரம்
46. தாமரை	தாமரஸ
47. மானம்	அனுமானம், உபமானம், சமானம், பிரமாணம்
48. கமுகு	கரமுக
49. விதை	வருஷ
50. வித்து	விந்து
51. வேட்டி	வேஷ்டி
52. சலம்	ஜலம்
53. நாழி	நாடி

5

54. காயம்	ஆகாசம்
55. பூதி, பூழ்தி	விபூதி
56. புடவி	ப்ருத்வீ
57. மதங்கம்	மிருதங்
58. பவளம்	பிரவாளம்
59. மெது	ம்ருது
60. செவியுறு	ஸ்ரு

மொழிக்கலப்பும் – நன்னூல் காட்டும் நெறிப்பாடும்

நன்னூல் பதவியலில், வடமொழியாக்கம் பற்றிய வழக்குகள் குறிக்கப்பட்டுள்ளன.

இடையில் நான்கும், ஈற்றில் இரண்டும்,
அல்லா அச்; ஐ வருக்கம் முதல், ஈறு;
யவ் ஆதி நான்மை, ளவ், ஆகும் ஐ–ஐம்
பொது எழுத்து; ஒழிந்த நால்–ஏழும் திரியும். (19)

அவற்றுள்,
ஏழாம் உயிர் இய்யும் இருவும்; ஐ வருக்கத்து
இடையில் மூன்றும், அவ்அம் முதலும்;
எட்டே யவ்வும்; முப்பது ச, யவும்;
மேல் ஒன்று ச, டவும்; இரண்டு ச, தவும்;
மூன்றே அ, கவும்; ஐந்து இரு கவ்வும்;
ஆ, ஈறு ஐயும்; ஈ, ஈறு இகரமும். (20)
ரவ்விற்கு அம் முதல் ஆம் முக் குறிலும்,
லவ்விற்கு இம் முதல் இரண்டும், யவ்விற்கு
இய்யும், மொழி முதல் ஆகி முன் வருமே. (21)
இணைந்து இயல்காலை ய, ர, லக்கு, இகரமும்,
மவ், வக்கு, உகரமும், நகரக்கு அகரமும்,
மிசை வரும்; ரவ் வழி உவ்வும் ஆம் பிற. (22)
ற, ன, ழ, எ, ஒவ்வும், உயிர்மெய்யும், உயிரளபு,
அல்லாச் சார்பும், தமிழ்; பிற பொதுவே. (23)

நன்னூலார் இந் நூற்பாக்களில், ‘வடமொழியாக்கம்’ நிகழும் நெறி முறைகளைச் சுட்டினார். தமிழுக்கு இலக்கணம் வகுத்த நன்னூலார், வடமொழியாக்கத்திற்குத் தனித் தலைப்பு வகுத்துக் கொண்டு இலக்கணம் வரைவது சிந்திப்பதற்குரியது. தமிழ்க் கலைகளோடன்றி வடவர் வடமொழிக் கலப்பு மிக்கோங்கி வடவர் கலைகளை அறிந்து

கொள்வதற்குத் துணையாகத் தவிர்க்க வியலாத நிலையில், தமிழ் வழக்கில் வடசொற்களை இடம்பெறச் செய்யும் முறைகளை நன்னூலார் காட்டியுள்ளார். நன்னூல் கூறும் விதிகளின்படி, வடமொழிச் சொற்கள் தமிழில் கலக்கும்போது, தமிழில் மொழிக்கு முதலில் வாராத 'ர'கரம் வடசொல்லில் வந்திருந்தால், அதன் முன் அ இ உ என்பன வற்றுள் ஏதேனும் ஓர் ஒலியினைச் சேர்க்க வேண்டும்.

சான்று ரங்கம் - அரங்கம் ; ராமன் - இராமன்
ரோமம் - உரோமம்

மொழி முதலில் வாராத லகரம் வட சொல்லில் இருந்தால், அதன்முன் இ, உ என்பனவற்றுள் ஏதேனும் ஓர் ஒலியினைச் சேர்க்க வேண்டும்.

சான்று லேசு - இலேசு ; லோகம் - உலோகம்

வடசொல்லின் ஈகார இறுதி தமிழில் இகரமாக வேண்டும். ஆகார இறுதி ஐகாரமாக வேண்டும்.

சான்று கௌரீ - கௌரி ; சீதா - சீதை

வடசொல்லின் மொழி இடைச் சிறப்பு மெய், தமிழில் அவ்வவ் வினத்து முதல் மெய்யாக வேண்டும். ஜ என்பது ச ஆக வேண்டும் அல்லது யகரமாக வேண்டும்.

சான்று நிஜம் - நிசம் ; பங்கஜம் - பங்கயம்

வடசொல்லின் ஸ என்பது தமிழில் தகரமாக வேண்டும்.

சான்று மாஸம் - மாதம்

வடசொல்லின் ஷ என்பது தமிழில் டகரமாக வேண்டும்.

சான்று நஷ்டம் - நட்டம் ; வேஷம் - வேடம்

வடசொல்லின் முதலிலோ இடையிலோ வருகிற 'ஹ' என்பது தமிழில் மறைந்து விட வேண்டும்.

சான்று ஹரி - அரி ; பிராஹ்மணர் - பிராமணர்

வடசொல்லின் க்ஷ என்பது தமிழில் க்க அல்லது ட்ச ஆக வேண்டும்.

சான்று   பக்ஷம் - பக்கம் ; பக்ஷி - பட்சி

தமிழில் மயங்கக்கூடாத இரண்டு மெய்கள் வடசொல்லில் மயங்கி வந்தால், அது தமிழாகும்போது ஓர் ஒற்றுடன் உகரம் அல்லது இகரம் சேர்க்க வேண்டும்.

சான்று   பக்வம் - பக்குவம் ; பத்மம் - பதுமம்
ரத்னம் - இரத்தினம் ; சுக்லம் - சுக்கிலம்

அல்லது மயங்கக் கூடாத இரண்டு மெய்களும் ஓரினமாக்கப் படவேண்டும்.

சான்று   சிம்ஹம் - சிம்மம் ; கன்யா - கன்னி

வடசொல் யகரத்துடன் தொடங்கினால், தமிழில் யகரத்தின் முன் இகரம் அல்லது உகரம் சேர்க்க வேண்டும்.

சான்று   யமன் - இயமன் ; யுத்தம் - உயுத்தம்

அல்லது யகரம் எகரமாக வேண்டும். அல்லது யகரம் உகர மாக வேண்டும்.

சான்று   யமன் - எமன் ; யுத்தம் - உத்தம்
யுக்தி - உத்தி

மேலே வடசொல்லுக்குக் கூறப்பட்ட விதிமுறைகள் பிறமொழிச் சொற்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும்.

சான்று   ரயில் - இரயில் ; வில் - உயில்
பெஞ்ச் - பெஞ்சு ; ஜேசு - இயேசு
பஃராங் - பரங்கி ; லண்டன் - இலண்டன்
ஜனவரி - சனவரி

பிறமொழிக் கலப்பைப் பற்றிச் சிந்தித்து, நன்னூலார் அளித்த கருத்துகளை இலக்கண முறையாக ஏற்றுக் கொள்ளலாம்.

இன்றைய நிலையில் தமிழ்ப்புலவர் சிலர் யாப்பியலும் புத்தி லக்கண வரைவியலும் செய்துள்ளனர் அவ்வகையில் தமிழ் என்ற இலக்கண நூல் யாத்த திருவாரூர்ப் புலவர் சரவணத் தமிழன், அயன் மொழிப் பெயர்ச்சொற்களைத் தமிழில் எழுதுவதற்கான விதிகளை வரையறுத்துள்ளார்.

'எழுத்தைக் குறிப்பினும் அயன்மொழிப் பெயர்ச்சொல் வழுத் தும் பொழுதில் வாய்ப்பு நோக்கியும் கூறிய மூவகை மாறியும் வருமே.' என்னும் நூற்பாவின் வழிப் பிறமொழிப் பெயர்களை எடுத்துக் கூறும் போதில், மூவிட விதி சற்றே மாறுபட வரலாம் என்பது கருத்து. சான்று - கால்டுவெல், கேப்டன், பெர்னாட்சா, அலெக்சாண்டர், குப்தர், அப்துல், அப்துல் வகாப்(பு), இட்லர், போப்(பு).

தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பதைத் தற்சமம், தற்பவம், திரிபு என்று குறிப்பதுண்டு. யாதொரு மாறுபாடும் இன்றித் தமிழில் வ்ழங்குவது தற்சமமாகும். நதி, ஜலம், பருவதம், தேசம் முத லியன சான்றுகளாகும். வடமொழிச் சொற்கள் நேர்வடிவில் அமை யாமல், பிராகிருதச் சொற்களாயிருந்து தமிழில் இடம் பெறுவதைத் தற்பவம் என்பர். தற்பவம் என்பது பின்வருமாறு அமையும்:

வடமொழி	பிராகிருதம்	தமிழ்
ஸ்திரி	இத்தி	-த்தி (புலைத்தி)
காஷ்ட	கட்ட	கட்டை
ராகு	ராணி	ராணி
ஆகு	ஆணா	ஆணை
முக்தா	முத்தா	முத்து
ஆர்ய	அஜ்ஜ	அய்யன்
ப்ரவாலி	பவாள	பவளம்
வணிஜ	வாணிய	வாணியன்
கிருஷ்ண	கண்ண	கண்ணன்
சிரேஷ்டி	செய்டி, சேட	செட்டி

திரிபு இரு வகைப்படும்

1. திரிவு விதிகளின்படி மாறுபட்டுத் தமிழில் வழங்கும் வட மொழிச் சொற்களாக உலகம், அரசன், அட்டமி, முத்தி, பக்கம், புரிதல், இராமன், அரங்கம், இலக்கணம், இலக்கியம், பகுதி முத லியவற்றைக் குறிக்கலாம்.

2. எவ்விதிக்கும் இசையாது உருக்குலைந்தவை என்ற நிலையில் அவிட்டம், திருவோணம், கேட்டை, ஆயில்யம், வைகாசி, மார்கழி, பங்குனி முதலியன என்பர்.

தமிழுள் வழங்கும் வடசொற்களுள் பல உபசருக்கங்கள் ஒட்டி வருவனவாகக் காணப்படுகின்றன. மதிநுட்பம் என்னும் குற ளுரையில், 'அதி' என்பது ஓர் இடைச்சொல் என்று பரிமேலழகர் குறிப்பிட்டார். இவ்வாறு இடைச்சொற்கள் இருப்பதாகக் கொள் வாருளர். சான்றாகச் சிலவற்றைக் காணலாம்.

பிர – பிரதானம், மிகுதி, எதிர்
பரா – பின், எதிர், அதிகம், முரிதல்
அப – எதிர், அப்பால், பிரிவு, தள்ளல்
சம் – சுகம், நன்மை, அழகு
அநு – பின், கூட, வரிசை, ஒப்பு
நிர் – நிச்சயம், விலக்கு, வெளியாதல்
துர் – நிந்தை, துக்கம், விலக்கு
வி – விலக்கு, பிரிவு, விசேட நிச்சயம், அற்பம்
ஆ – அற்பம், எதிர், எல்லை, நிறைவு
நி – அதிகம், சமீபம், நிச்சயம், எதிர்
அபி – ஐயம், நிந்தை, பின்
அதி – அதிகம், கடத்தல், அதிசயம்
சு – மேன்மை, அதிகம், அதிசயம்
உத் – மேல், அதிகம், விகற்பம்
பிரதி – எதிர், விலக்கு, அளவு

இவ்வாறு நன்னூல், மொழிக்கலப்பில் கடைப்பிடிக்க வேண்டிய முறை களை வரையறுத்துக் கூறுகிறது. இவ்வரையறை இருந்தும் வடமொழிச் சொற்களின் பொருள் முழுமையும் அறியாது தமிழில் அச்சொற் களே திரிபடைந்த பொருண்மையோடு வழங்குவதும் நேர்ந்தது.

மணிப்பிரவாளம்

பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மணிப்பிரவாள நடை என வழங்கப்பட்ட புதிய நடைப்போக்குத் தமிழகத்தில் தோன்றியது. மாலையில் மணியையும் பவளத்தையும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தொடுக்கப்பட்டதைப் போன்று, தமிழ்த் தொடர் களையும் வடமொழித் தொடர்களையும் மாற்றி மாற்றிக் கட்டிய நடைப்போக்கே மணிப்பிரவாள நடையாகும்.

மணிமிடை பவளம் என்ற அகநானூற்றுத் தொடரைப் பின் னாளில் காப்பு வடிவுக்கும் பெயராகக் காட்டினர் போலும்!

உரையாசிரியர் வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், மணிப்பிரவாளம் என்பதற்கு மூவகை விளக்கங்களைத் தெரிவிக்கிறார்.

1. மாணிக்கமும் பவளமும் ஒரு கோவையாகக் கோக்கப்பட்ட மாலையில் அவ்விரண்டும் செந்நிறமுடையவாதலின், சேய்மை நோக்கில் ஒன்றுபட்டிருந்தும் நெருங்கி நோக்குமிடத்து வேறுபாடு காட்டுதற் போலத் தென்மொழியும், வடமொழியும் விரவி மேற்போக்கில் பார்க்குமிடத்து அவை ஒன்றுபட்டன போலத் தோன்றினும், ஊன்றிப் பார்க்குமிடத்து வேறுபட்டுத் தோன்றுவதால், இந்நடை மணிப்பிரவாளம் என்று வழங்கப்பெற்றது.

2. முத்தும் பவளமும் விரவிக் கோத்த மாலை, வண்ண வேறுபாட்டால் காட்சிக்கின்பம் பயத்தல் போல, வடமொழியும் தென்மொழியும் கலந்த இந்நடை செவிக்கின்பம் பயத்தலால், இப்பெயர் பெற்றது.

3. நவமணியும் பவளமும் கலந்து சேர்க்கப்பட்ட மாலைபோலச் செந்தமிழும் வடமொழியும் கலந்து இயன்றதால், இப்பெயர் வந்தது.

வடமொழியும் தமிழும் கலந்து மணிப்பிரவாளம் என்னும் இந்நடைப்போக்கை நடை என்பர் வீரசோழியமுடையார். இந்நடை சமய சாத்திரங்களிலும், விளக்க உரைகளிலும் மிகுதியாகப் பயின்று வந்தது. வடசொற்கள் எல்லை கடந்து இவற்றில் வழங்கப்பட்டன. வடமொழியிலக்கணமும், தமிழிலக்கணமும் ஒன்றே என்னும் கொள்கை உருவாகும் அளவிற்கு இந்நடை தமிழ்மொழியில் பெருவரவாயிற்று. வடமொழிக் கலப்பைத் தடுக்க வடமொழி கற்ற தமிழர் தாய்மொழியில் மேற்கொண்ட முயற்சியின் விளைவே மணிப்பிரவாள நடை என்றும், கிரந்த எழுத்துகளும் இம்முயற்சியின் விளைவாகத் தோன்றியவை என்றும், ஸ்ரீபுராணம் முதலிய நூல்களின் அளவிலும், விருத்தாசலம், மாயூரம், வேதாரணியம் முதலிய சில ஊர்ப் பெயர்களை மாற்றும் அளவிலுமே அந்த முயற்சிகள் நின்று தோற்றன என்றும் அறிஞர் மு.வ. கருதினார்.

சமண சமய நூலான ஸ்ரீ புராணத்தில் பயின்று வரும் நடை: ஒருநாள் மஹா மேருபர்வத நந்தன வனத்துப் பூர்வதிக்ஜின பவ

னத்தை அடைந்து, ப்ரதக்ஷிணீகரண ப்ரணாமஸ்தவநாப்யர்ச்சனம் பண்ணியபின், அங்கே, ஸ்ந்நிஹிதராகிய விபுலமதிசாரண தபோத னரை நமஸ்கதிர்த்துத் தர்மஸ்ரவணா நந்தரம் ஏன் ஸ்வாமி, புத்திரி யாகிய கந்தர்வ தத்தை, யாவர்க்கு யோக்யை, என்று யான் வினவ, அவரும் அவதி ஞனத்தாற் பார்த்து அருளிச் செய்வார்; 'ஜம்பூத்விப பரத க்ஷத்ர ஹேமாங்கத விஷய ராஜ மஹாராஜபுத்ரனுக்கு வீணாஸ் வயம்வத்தால் தேவியாகும்' என்று அருளிச் செய்தனர்.

'ராஜ மஹா புரத்து வருஷபதத்த ஸ்ரேஷ்டிக்கும் பத்மாவதிக் கும் புத்திரன், ஜினதத்தனென்பான். அவனால் நமது அபிப்பிரேத கார்யம் ஸித்திக்கும். அஃது எவ்வண்ணமென்னின், ராஜ மஹாபு ஸமீபமாகிய ப்ரீதவர்த்தநமென்னும் உத்யானத்து ஸாகசேன கேவலி களுக்குக் கேவல பூஜார்த்தமாக நின் பிதாவினோடுங் கூடச் சென்று கேவல பூஜை பண்ணியபின், தர்ம வாத்ஸல்யத்தால் வருஷபதத்த ஜினதத்தர்களோடு பாந்தவமுண்டாயிற்று. அதன்பின் வ்ருஷபதத்தன் புத்ரனுக்கு ஸ்ரேஷ்டிப் பதங்கொடுத்து குணபால முனி சமீபத்தே தீக்ஷித்தனள். ஸ்ரேஷ்டிபத ப்ராப்தனாகிய ஜினதத்தனும் வாணிஜ் யார்த்தமாக ஜலயாத்திரையால் இங்கே வருவன்.' 'இது தமிழா?' என்று அனைவரும் வினவத் தோன்றும்! ஆம்; 'இதுதான் தமிழ்' என்று எழுத முயன்றனர் அந்நாளைய ஸ்ரீபுராணச் சமணர்கள்.

பெரிய வாச்சான் பிள்ளை என்ற வைணவப் பெரியார், நாலா யிரப்பிரபந்தப் பாடல்களனைத்திற்கும் பேருரை எழுதினார். அதற்கு 'ஈடு' எனப் பெயர் தரப்பட்டுள்ளது. அந்த ஈடு மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்டதாகும். 'சார்வ பௌமராய்ப் போந்த இராஜாக்கள் அந்த ராஜ்யஸ்ரீயை இழந்து இரந்து உயிர் வாழ வேண்டும்படி வறியர் ஆனார்கள். ஆன பின்பு, ஸ்ரீவத்ய யஷ நித்யஸ்ரீ ஸ்ரீவத்சத்தை மார் பிலேயுடையவன் நித்யமான ஸ்ரீயையுடையவன். இப்பாசுரத்திற்கு ஏகமூர்த்தி என்பது பரத்துவத்தைச் சொல்லுகிறதென்றும், இருமூர்த்தி என்பது வியூகத்தைச் சொல்லுகிறது என்றும் அதாவது வாசுதேவ ஸங்கர்ஷணரைச் சொல்லுகிறது என்றும், மூன்று மூர்த்தி என்பது யூகத்தில் மூன்றாம் மூர்த்தியான பிரத்யும்நரைச் சொல்லுகிறதென்றும், பல மூர்த்தி என்பது, அவதாரத்தைச் சொல்லுகிறதென்றும், ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அறிவாகி நாகம் ஏறி, நடுக்கடலுள் துயின்ற

நாராயணனே என்பது இன்னார் சிருஷ்டிக்கக் கடவர்; இன்னார் பாது காத்தலுக்குக் கடவர் என்கிறபடியாலே, சொல்லுகிறதென்று நிர்வகிப் பாரும் உளர். இவை, திருவாய்மொழி ஈட்டின் பகுதிகளாகும்.

'தமிழ்மொழிக்கே உரிய சமயமெனப்படும் சைவத்திலும், காமிகம் முதலிய சைவ ஆகமங்களுள் ஞான பாதத்தினுளதாகிய ஆசங்கை நீக்கி, அவற்றில் பொருளுண்மை, பொதுவியல்பு, சிறப் பியல்பு என்று இருவேறு வகைப்படுத்திக் காட்டிப் போதித்ததற்கு, இரௌர ஆகமத்தின் எழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகம் உய்தற் பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து, பொழிப்புரைப்பான் எடுத்துக் கொண்ட ஆசிரியர் சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிது மணுகாமை புரிந்தாராயினும், ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும், முதற்கண் இடையூறு சிறிது மணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குவதற்குரிய விநாயகக் கடவுளை வாழ்த்து வதாகிய மங்கல வாழ்த்துக் கூறுகின்றார்.'

இது, சிவஞானபோதம் என்னும் சைவ சாத்திர நூலுக்கு எழுதப் பட்டுள்ள சிற்றுரையில், மங்கல வாழ்த்துப் பாடலுக்குரியதாகும். சிவ ஞான போதமே வடமொழியிலிருந்து வந்த மொழிபெயர்ப்பு என்று குறித்த இக்கொள்கையைச் சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர் கள் நூற்று இருபது காரணங்களைக் காட்டிச் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பன்று; தமிழ்நூலே என நிறுவியதைத் தமிழுலகம் நன்கறியும்.

தமிழகத்துக்கேயன்றி, பாரதப் பெருநிலத்திற்கும் புறச்சமயங் களாகிவிட்ட கிறித்தவ, இசுலாமிய சமயங்களின் வரவாலும் தமிழில் பிறமொழிச் சொற்கள் புகலாயின. கிறித்தவ வேத நூலாகிய விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

அதிலிருந்து நரஜீவன்களையெல்லாம் பட்டக் கருக்கினால்
வெட்டிச் சங்காரம் பண்ணினார்கள். சுவாசமுள்ளது ஒன்றும்
மீதியானதில்லை. ஆதி ஆதீ சோரையோ அக்கினியால்
சுட்டெரித்தான்.

> யுத்தம் பண்ண இஸ்ரேலுக்கு எதிராக வரும்படிக்கு, அவ ருக்கு ஹிருதயம் கடினமானதும், இப்படியே அவர்களின் பேரில், இரக்கம் உண்டாகாமல் கர்த்தர் மொஸேக்குக் கட்டளையிட்டபடி அவர்களை அழித்து ஸங்காரம் பண்ணி னதும் கர்த்தரால் வந்த காரியமாயிருந்தது. - யோசுவா: 1.1

இவ்வாறு பிறமொழிச் சொற்கள் கலந்திருக்கக் காணலாம்.

ஆட்சித்துறையில் சேர, சோழ, பாண்டிய மரபுகள் செழிப்பாக விளங்கித் தமிழை ஆட்சிமொழியாகப் போற்றி வந்ததாலும், நாயன் மார்கள், ஆழ்வார்கள், பத்திமைப் பாடல்களைத் தமிழில் வெள்ள மெனப் பாடி உணர்வூட்டியதாலும், சமய ஆர்வம் மிகுந்த நிலை யிலும் முழுவதும் வட சொற்களையே நாடாவண்ணம் தமிழிலேயே வேண்டுவனவற்றை வழங்கியதாலும் மணிப்பிரவாள முயற்சி பின் னர்த் தோற்றுத் தொலைந்தது.

மொழிக்கலப்பு எதிர்ப்பு மறுப்பும் தூய்மை விருப்பும்

பிறமொழிச் சொற்கள் தம் மொழியில் புகுவதை ஒவ்வொரு மொழியின் அறிஞர்களும் ஒவ்வொரு காலத்திலும் தமது எதிர்க் கருத்தைக் கூறி வந்திருக்கின்றனர். தமிழில் வடசொற்கலப்பும் இவ் வாறே தொடர்ந்து எதிர்க்கப்பட்டது. தேவையும் பயனும் கருதிச் சில சொற்களைக் கடன் பெறும்போது எதிர்ப்புணர்ச்சி எழுவதில்லை. அழகுக்காகவும் தாம் ஒன்றை அறிந்தவர் என்று தம்மைத்தனிக் குழுவினராக வேறுபடுத்திக் காட்டும் அகந்தைக்காகவும் பிறமொழிச் சொற்களை இணைக்கும்போது எதிர்ப்பு எழுகிறது. ஒரு மொழியை நன்கு கற்றுப் புலமை பெற்றவர்களும், இன்றியமையாமை உணரா மல், தாம் அறிந்த பிறமொழிச் சொற்களைக் கண்டவிட மெல்லாம் புகுத்த முயல்வாராயின், அம்முயற்சியும் விரும்பத்தக்கதில்லை.

பிறமொழி கற்றவர்கள், தாம் கற்ற மொழி உயர்ந்தது என்ற மனப்பான்மை கொண்டு, இல்லை என்று இரப்பவனுக்குப் பெருமிதத் துடன் ஈபவன் கொடை வழங்குதல் போலச் சொற்கள் பலவற்றை ஒரு மொழியில் புகுத்தத் தொடங்கினும், அம்முயற்சி எதிர்க்கப்படும் புதிய அறிவுத் துறைகளைப் பயிலும்போது, தாமே புதுவதாக அறி யத் தொடங்குவதால், தமக்கே முழுமையாக விளங்காத நிலையில் தாம் கேட்டறிந்த சொற்களை மொழிபெயர்க்க முடியாமல் கணக்குக்

குறியீடுகளைப்போல அவ்வச் சொற்களை எழுதுவதுமுண்டு. மொழி பெயர்க்கத் தெரியாமையோடு, தவறாக மொழிபெயர்த்ததால் நேரும் சிக்கலைத் தவிர்க்கவும், ஒருகால் மொழிபெயர்த்தாலும் அத்தமிழ்ச் சொற்கள் வேறு பொருளைக் குறிப்பதாலும் என்றெல்லாம் பல சூழல்கள் நிலவின; சிலநிலைகளில் இன்று நிலவுகின்றன. இதுவும் எதிர்கொள்ள வேண்டியதாகும். இத்தனை எதிர்ப்பும் இன்றிச் சில சொற்கள் ஒரு மொழியில் புகுந்தபின், அந்த மொழிக்கே உரிமை யான செஞ்சொற்களும் கடன் வாங்கப்பட்டவையே என்று யாரேனும் எடுத்தியம்பி, வருமொழியைப் பல காட்டி நிலைமொழியான தமிழைத் தாழ்வு படுத்த முனையினும் எதிர்க்கப்படும்.

தொன்றுதொட்டே வடமொழிச் சொற்களைத் தங்குதடையின்றி ஏற்றுக் கொள்ளாமல் தமிழ் மரபு மறுதலித்து வந்துள்ளது. வட மொழியிலிருந்தே தமிழ் கடன் வாங்கியது என்றும், தமிழிடமிருந்து வடமொழி எதையும் பெற்றதில்லை என்றும், அதனால் தமிழைவிட வடமொழி உயர்வுடையது என்றும் உண்மைக்குப் புறம்பாகக் கூறி வந்ததால், வடசொற்கள் தமிழர் நெஞ்சில் ஒரு முள்ளாகவே இருந் தது. நடுவு நிலைமையின்றி, 'வடமொழியை உயர்ந்தது' எனப் பரப் பிய கருத்துகள் தமிழ் வடமொழிப் பகைமைக்கு வித்தூன்றின. இதன் விளைவாக எழுந்த மொழிக்கிளர்ச்சி மொழியைக் காக்கும் எல்லை யோடு நிற்காமல் தனித்தமிழ் இயக்கத் தோற்றத்திற்கும் வழி அமைத்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்மொழித் தூய்மை இயக்கம் தோன்றியது. அவ்வியக்கம் மனோன்மணீயம், சீவகன், புருடோத்தமன், குடிலன், சகடன் என்ற பெயர்கள் வடமொழிப் பெயரின என்றாலும் வடமொழியினும் தமிழே உயர்ந்தது, சதுர்மறை ஆரியம் வருமுன் சகம் முழுவதும் நினதே என்றும், கனம் கடை என்று உருவேற்றிக் கதறுவரோ என்றும் வடமொழி எதிர்ப்பு வளர்ச் சியை வேரூன்றச் செய்த முதன்மைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை யைச் சாரும். பரிதிமாற்கலைஞர் மறைமலையடிகள் முதலியோரு டைய ஊக்கமும் இவ்வெதிர்ப்புணர்வுக்கு ஆக்கம் தந்தன.

பிறமொழிச் சொற்களுக்கு அதிலும் குறிப்பாக வடமொழிச் சொற்களுக்கு எதிரான இயக்கமாகும். பரவலாக ஆட்சியிலுள்ள, தேவையான பிறமொழிச் சொற்களைக்கூட விலக்க வேண்டுமென

அவ்வியக்கத்தினர் கூறுவதைப் பலர் ஒப்புக் கொள்ளத் தயங்கலாம். ஆனால், பெரும்பாலான மக்களுக்குத் தெரியாத, தேவையற்ற பிற மொழிச் சொற்களைத் தவிர்க்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர் என வகுத்தார் தெ.பொ.மீ. இந்த இயக்கம் பெரும் பாலும் தமிழில் மலிந்த வடசொற்களைக் களையும் நோக்கத்தில் தான் தோன்றியது.

புலவர்கள், கற்றறிந்தோர், அரசு, கல்வி நிலையங்கள் ஆகிய நிலைகளில் தனித்தமிழ் உணர்வு பரவுதற்கு இவ்வியக்கம் வழி வகுத் தாலும், அன்றாட வாழ்வில் வளர்ந்த நாகரிகக் கூறுகளால், புதிய துறைகளால், வாணிகம், அறிவியல் வளர்ச்சியால், கல்விப் புதுமை களால், வடமொழியையும் விஞ்சி ஆங்கிலச் சொற்கள் பரவ லாக நுழையத் தொடங்கியதால், இவ்வியக்கம் வடமொழியைப் போல ஆங்கிலச் சொற்களையும் களையும் பெருஞ்சுமையை ஏற்க வேண்டி யுள்ளது.

தனித்தமிழியக்கம் தோன்றிய வரலாறு சுவையுடையது. பரிதி மாற் கலைஞரே தனித்தமிழியக்கத்தின் வழிகாட்டி என்றுரைப்பின் பொருந்தும். தம் இயற்பெயராகிய சூரிய நாராயண சாஸ்திரியார் எனும் பெயரை மாற்றியமைத்துக் கொண்டார். தனிப்பாசுரத்தொகை எனும் நூலின் உண்மைப் பதிப்பு எத்தகையது என்பதை உணர விரும்பித்தான் பரிதிமாற் கலைஞர் எனும் புனைபெயரை அமைத் துக் கொண்டார். அவர் அவ்வாறு பெயர் மாற்றம் தொடங்கியதாகப் பின்னர்ப் பலர் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வதற்கும் வழிகாட்டி யாக அமைந்தது.

அளவிறந்த வடமொழிக் கலப்பினை அவர் வெறுத்து ஒதுக் கினார் என்பது உண்மை. அதே நிலையில் அவரது நூலின் தலைப்பு கள், நூலில் அவர் கையாண்ட பெயர்கள் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களாகவே அமைந்திருந்தன.

மனோன்மணீயம் பற்றியும் முன்னர் இக்கருத்தைக் காட்டியுள் ளோம். தனித்தமிழ் உணர்ச்சி அவரிடம் அமைத்திருந்தது என்றாலும், நெடுங்காலமாக நிலைத்த வடமொழியின் பிடிப்பிலிருந்து அவரா லும் விடுபட முடியவில்லை என்றே யுரைக்கலாம். மறைமலையடி களார் மட்டுமே பின்னர்த் தனித்தமிழியக்கத்தைத் தோற்றுவித்து,

அதனை ஒரு பேரியக்கமாகத் தாமே தலைமையேற்று நடத்தினார். அவர் அவ்வாறு செயற்படத் தூண்டுகோலாயமைந்தது பரிதிமாற் கலைஞரின் தனித்தமிழ் ஆர்வம் என்பதும் நினைக்கத்தக்கது.

> 'இந்தச் சூரிய நாராயணருக்கு மட்டும் ஏன் இவ்வளவு தமிழ்ப் பற்று. அதிலும் தனித்தமிழ்ப் பற்று. நான் தனித்தமிழ் இயக்கம் காண்பதற்கு முன்பே அவர் தனித்தமிழ் உணர்ச்சி கொண்டு, தம் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டாரே'

என்று பரிதிமாற் கலைஞரைப் பற்றித் தம் வாழ்நாள் முழுவதும் மறைமலை அடிகள் பாராட்டிக் கொண்டிருந்தார் என்னும் கருத்து இதனை உறுதி செய்கிறது.

தனித்தமிழ் காக்கவும், வடமொழி நீக்கவும் தமிழகத்தில் தோன்றிய மூன்று வெவ்வேறு அமைவுகள் காரணங்களாயின.

1. சமயஞ்சார்ந்த தமிழுணர்ச்சி; இதற்குத் தலைமையேற்றவர் மறைமலை அடிகள்.

2. சமுதாய அடிப்படையில் உருவான மொழியுணர்ச்சி; தந்தை பெரியார் தலைமையேற்கத் தமிழர் திரண்டெழுந்த காலம்.

3. தேசிய எழுச்சி அடிப்படையில் பிறந்த மொழியுணர்ச்சி; இதில் பாரதியார், வ.உ. சிதம்பரனார், திரு.வி. கலியாணசுந்தரனார் போன்றோர் ஈடுபட்டனர். இம்மூன்று உணர்ச்சிகளும் ஒன்றுபட்டு நிகழ்த்திய பெரும்போரில், தமிழ் வடமொழிக் கலப்பிலிருந்து காக்கப்பட்டது எனில், மிகையன்று. தமிழ் மொழியை இழந்தால் தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றையும் இழந்து, வடமொழியினர்க்குத் தமிழர் அடிமையாவர் என்னும் கருத்து இம்மூவகை உணர்ச்சிகளுக்கும் மையமாய் அமைந்திருந்தது. இது பற்றி மறைமலைஅடிகளார் வரலாற்று நோக்கில் கண்டு,

ஆனால் ஒன்றை மட்டும் உங்களுக்கு நிச்சயமாக எடுத்துச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆரியர்கள் இந்நாட்டில் என்று காலடி எடுத்து வைத்தார்களோ, அன்று முதல் தமிழையும், தமிழரின் கலைகளையும் கலாச்சாரத்தையும் ஒழிப்பதிலேயே அவர்கள் கண்

ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். இந்த ஆரிய சூழ்ச்சி சென்ற 500 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று மக்களை எழுச்சி கொள்ளச் செய்தார், தமிழ்த் தென்றல் திரு.வி.கவும்,

> நம் மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ், உற்றது தமிழ்; அத்தமிழ் அமிழ்தங் கொண்ட நாடு இந்நாடு...
>
> இதுபோது தமிழின்பம் நுகர்கிறோமா? இல்லையே! காரணமென்ன? உரிமையிழந்தோம்; தமிழை மறந்தோம்; மீண்டும் உரிமையுணர்வு பெற யாண்டுப் போதல் வேண்டும். தமிழ்த்தாயிடம் செல்வோமாக! அவள்சேவையால் உரிமையுணர்வு பெறலாம்.
>
> தமிழ் மக்களே! சேவைக்கு எழுங்கள்! எழுங்கள்! என எழுச்சி உரையாற்றி, மொழித்தூய்மை காக்க முற்பட்டார்.

இத்தகு எழுச்சியால் தமிழ் வடமொழியின் நுழைவுப் பிடியிலிருந்து பெருமளவு நிலைபெற்றது. தந்தை பெரியார் இப்போக்கினை அரசியல் இயக்கமாக்கியதால், தமிழ் மக்கள் அனைவர் நெஞ்சங்களிலும் தமிழ் எழுச்சி பேரெழுச்சியாய் மலர்ந்தது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய தமிழியக்கத்தின் வரிகள் ஒவ்வொன்றும் வைர வரிகளாயின். தமிழ்த்தென்றல், நவசக்தி, தேசபக்தன் என்று வெளியிட்டபோது, குடியரசு, விடுதலை. என்ற சொற்களை அறிமுகப் படுத்திய தன்மான இயக்க ஏடுகள், பெரியார் பாசறையிலிருந்து வெளிவந்த படைக்கலன்களாகும்.

எனினும், பம்பாயில் 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற பன்மொழிக் கவியரங்கில், புரட்சிக் கவிஞர் வழங்கிய ஒரு கவிதை யில் இந்தியப் பெருநாட்டை - ஒருமைப்பாட்டைக் கருதினாலும், ஓரினத்து மொழியைப் பல இனத்தும் பரப்பும் முயற்சியைக் கடிந்து கூறினார். ஓரினத்துக்குள்ள மொழியைப் பலவினத்துள்ளும் பரப்ப முயல்வதால், நாட்டில் ஒற்றுமை நண்ணும் என்ற கோட்பாடு சரியென்று கொள்வதற்கில்லை. அவ்வவ்வினத்தின் அவ்வம் மொழிகளைச் செம்மை செய்து, செழுமையாக்கி இனத்து மக்கள் எவர்க்கும் பரப்பும் ஒன்றினால் மட்டுமே ஒற்றுமை ஏற்படும் என்பதன் எண்ணம். இப்படி இருவேறு கருத்துகள் இருந்தே வந்தன.

மொழிக்கலப்பால் சொற்கள் வழக்கிழத்தல்

பிறமொழிக்கலப்பு நேர்ந்ததாலும், கலந்த சொற்கள் நிலைத்த வழக்கிலிருப்பதாலும் தொன் மொழியின் சொற்கள் காலப்போக்கில் வழக்கிலிலிருந்தே மறைந்துவிடும். தூய தமிழைக் குழந்தைகளுக்கும் வலியுறுத்தும் நிலையைப் பாவேந்தர் பாடலில் காணலாம்.

காட்சி என்றெழுது தம்பி – சிலர்
காக்ஷி என்பார் அது தப்பாம் !
காட்சி எனும் பெயர்தம்பி – கேள்
காணும் எனும் சொல்லின் விளைவாம்

அடிக்கடி உத்யோகம் என்பர் அதை
அலுவல் என்றுரைத்திடு தம்பி
படிப்பது வாசித்தல் இரண்டனில் – உன்
பழந்தமிழ் முன்னது தம்பி !

கலப்பினால் தமிழில் வழக்கிழந்த சொற்களில் சிலவற்றைப் பட்டியலிட்டுள்ளோம். சான்றாக, அகநாழிகை அல்லது உண்ணாழிகை (கர்ப்பக்கிருகம்) நாளங்காடி (பகற்கடை) அல்லங்காடி (மாலைக்கடை) அடுத்தூண் (தீவனத்திற்கு விட்ட நிலம்) அடையவளைந்தான் (கோயிலின் புறச்சுற்று மதில்) அணல் (தாடி) அணிகம் (வாகனம்) அணியம் (ஆயத்தம்) அணுக்கன் திருவாயில் (கர்ப்பக்கிருகவாயில்) இட்டேற்றம் (பொய்யாகக் குற்றஞ்சாட்டுகை) இதழ்குவி பா (ஒட்டியம்) இதழகல் பா (நிரோட்டகம்) இரப்போன் (பிச்சைக்காரன்) இருமையால் நேர்ந்து (உபயானு சம்மதமாய்) இயம் (வாத்தியம்) இயவன் (வாத்தியகாரன்) இளிந்த நாக்கடித்தல் (ஆராயாது வாக்களித்தல்) உகப்பு உறாவரை அல்லது முற்றூட்டு (சர்வமானியம்) அறம் (தருமம்) ஆடிடம் (விளையாடுமிடம்) ஆரோசை (ஆரோகணம்) அமரோசை (அவ ரோகணம்) ஆளுங்கணம் ஆளொட்டி அல்லது ஆளொதுங்கி (காவற்கூடு) ஆளோடி (குளத்தின் மதிலுள் புறமாக மக்கள் நடப் பதற்குக் காட்டிய வழி ஓம்படுத்தல் அல்லது ஓம்படை (மக்களைக் காத்தல்) ஊட்டகர், ஊட்டுநர் (போஷகர்) ஊட்டுப்புரை (அன்னசத் திரம்) ஊமையாமொழி (அஜபா மந்திரம்) ஐயம் அல்லது இரப்பு (பிச்சை) ஐயம் அல்லது அயிர்ப்பு (சந்தேகம்) ஒப்புரவு (உபகாரம்) தெரிப்பு (தெரிந்தெடுக்கை) வலிவு மெலிவு ஒகநன் (கடலாளி) ஓமாலிகை (வாசனைச் சரக்கு) ஓலக்கம் (அரசு வீற்றிருக்கை) கண்ணெச்சில் (கண் திருஷ்டி) கரிசு (பாவம்) குட

வோலை (குடும்பு) கூலம் (தானியம்) கூற்றம் (தாலுகா) கூற்றுவன் (எமன்) கையடை (பாது காக்கும்படி ஒப்புவித்த பொருள்) நீர்ச்சீலை (பீனம், கோவணம்) கதியெழுகை (தேசாந்திரம்) பண்டுவம், பரிகாரம் (சிகிச்சை) பலகணி (சன்னல்) பாடுகிடத்தல் (வரங்கிடத்தல்) பிறங்கடை (வாரிசு) புரவுவரி (வருவாய்) புலம்பன் (ஆன்மா) பொதுநாயகம் பொருநன் (போர்வீரன்) மதங்கம் (மிருதங்கம்) மதவலி (பயில்வான்) கையறம் (சரமகவி) கலக்கரணை (சௌகரியம்) சார்ச்சி வழக்கு (உபசார வழக்கு) சால்வு (திருப்தி) தக்கை முறுக்கி (ஸ்குரூ) தவப்பழி (உண்ணாவிரதம்) தார்ச்சீலை (இலங்கோடு) திணைக்களம் (துறை) மெய்ப்பாடு (பாவம்) வலவன் (சாரதி) வழக்காரம் (பிராது) வழுவாய் (பாவம்) மருப்பு (தந்தம்) மறம் (வீரம்) மழவன் அல்லது மறவன் (வீரன்) மன்பதை (சமுதாயம்) மீகாமன், மீகான் (மாலுமி) வாய் வாளாமை (மௌனம்) விறல் (சத்துவம்) விசி (பலகை)

மேற்காட்டிய பொதுச்சொற்கள் போன்றே, சாத்தன், கொற்றன், ஆதன், பூதன், கீரன், பேகன், பாரி, காரி, நள்ளி, குமணன், வெளியன், தித்தன், நம்பி, கம்பன், கூத்தன், கண்ணன், முருகன், புகழேந்தி, அடியார்க்கு நல்லான், நச்சினார்க்கினியன், பரிமேலழகன், தோலாவழக்கன் முதலிய எண்ணிறந்த மக்கட் பெயர்களும், கயற்கண்ணி (மீனாட்சி), கலை மகள் (சரஸ்வதி), மலைமகள் (பார்வதி), திருமகள் (இலட்சுமி) முதலிய தெய்வப் பெயர்களும் பொருநை (தாம்பிர பரணி), தில்லை (சிதம்பரம்), மறைக்காடு (வேதாரணியம்), பழமலை அல்லது முதுகுன்றம் (விருத்தாசலம்) மயிலாடுதுறை (மாயவரம்) குரங்காடுதுறை (கவித்தலம்) முதலிய பல இடப்பெயர்களும் வழக்கற்றன. விடாப்பிடி (வைராக்கியம்) தடுமம் அல்லது நீர்க்கோவை (ஜலதோஷம்), ஊக்கம் (உற்சாகம்), திருவிழா (உற்சவம்) விழிப்பு (ஜாக்கிரதை) முதலிய பல சொற்கள் வழக்கு வீழும் நிலையில் உள்ளன.

கனவு, தூக்கம், பயிற்சி, வெள்ளி முதலிய தென்சொற்களிருப்பவும், சொப்பனம், நித்திரை, அப்பியாசம், நட்சத்திரம் முதலிய வடசொற்கள் வீணே உலவி வருகின்றன. எழுநாட்பெயர்களுள், அறிவன் (புதன்), காரி (சனி) என்னும் இருநாட் பெயர்கள் வழக்கு வீழ்ந்து போயின. இரங்கும் நிலையில், 'அளியன்' 'அளியள்' 'அளிது' 'அளிய' என்றும் சொல் வழக்கு வீழ்ந்து, பாவம் என்னும் சொல்லோ வேரூன்றிக் கொடிவீசலாயிற்று.

இந்த நிலையிலும் தமிழிற்போதிய சொற்களில்லை என்று கூறுதலும் வழக்கற்ற சொற்களைப் புகுத்தக்கூடாதென்று தடை செய்தலும் சிலர்பால் உண்டு. ஆட்சியும் மாட்சியும் நீங்கி நெடுங்காலம் கழிந்த பின்னும், இக்காலக் கருத்துக்கேற்ற சொற்களும் சொற்கருவி களும் தமிழில் எஞ்சியுள்ளன. பல தமிழ்ச் சொற்கள் வழக்கிழந் தமைக்குக் காரணம், அயலாரால் புகுத்தப்பெற்ற சொற்களின் விளை வாகும். எனினும், அவற்றுக்கு மாறாகப் பழஞ் சொற்களைப் பெய்தல் தமிழர் கடனாகும்.

புதிய அணுகுமுறை

இன வளர்ச்சி, மொழி வளர்ச்சியின் அடிப்படை, இன வளர்ச்சிக்கு எதிரான மொழிக் கொள்கையை நாம் உருவாக்கிக் கொள்ளக் கூடாது. அதனால் இன வளர்ச்சியும் கெடும்; மொழி வளர்ச்சியும் தடைப்படும். நமது சமுதாயத்தின் தனி வளர்ச்சிக்கோ, நாம் தலைமை பெறுவதற்கோ, மாறான நம்பிக்கைக்கோ நமது நோக்கம் ஆட்பட்டுவிடலாகாது.

பழைமை, பழம் பெருமை, பழைய பண்பாடு, மொழியின் தனித்தன்மை, தூய்மை போன்றன நாம் தலை நிமிரப் பயன்படலாம். அவை நாம் தடம் புரளவும் காரணமாகாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஒரு கொள்கையோ, ஒரு தத்துவமோ, மரபோ மக்கள் வாழ்வியற் கலைகளின் வளர்ச்சிக்குத் துணை நிற்கிறதா என்ற வினாவை ஒவ்வொரு நிலையிலும் நாம் எழுப்ப வேண்டும். 'துணை' என்ற நிலை மாறிச் 'சுமை' என்ற நிலைமைக்கு ஒரு மரபோ அணுகுமுறையோ வந்து சேர்ந்தால், எவ்விலை கொடுத்தும் அதைத் 'தாங்கும்' மனநிலை நமக்கு அமையக் கூடாது.

தமிழ் விண்ணிலிருந்து வந்தது அன்று; விண்ணவர் தந்தது மன்று. மனித சமுதாயம் தமக்குத்தாமே பெருகப் பெருக தட்டுத்தடுமாறி, அரிய முயற்சியின் பெரியதாக மொழியை உருவாக்கிக் கொண்டது. மனிதன் படைத்த எதுவும் குறையுடையது; வளர்ச்சிக்கு வழிகோலுவது; வளர வேண்டிய தேவையுடையது. எல்லாக் காலத்திற்கும் எல்லாச் சூழ்நிலைக்கும் தேவையான எல்லாவற்றையும், மொழியைப் பொறுத்தவரை முன்னரே அமைந்ததாக - முடிந்த தாக எண்ணவோ நம்பவோ இடமில்லை.

6

தமிழும் உலகிலுள்ள மற்ற மொழிகளைப் போன்றதே. ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்புகள் இருக்கலாம். தமிழுக்குச் சில சிறப்புகள் கூடுதலாகவே இருக்கலாம். இருப்பினும், வளர்ந்த நாட்டினரின், மொழி வளர்ச்சியும், அவர்கள் தம் மொழியில் கடைப் பிடித்த முறை, அவர்கள் கண்ட அனுபவம் ஆகியன சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ நமக்கும் பயன்படும். பயன் தரும் நமது மொழி மற்ற மொழிகள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட இயல்பும், சிறப்பும் உடையது என்ற நோக்கோடும் மற்ற மொழியினர் பெற்ற அழுத்தங்கள் நமக்குத் தேவையில்லை, அல்லது பயன்படா என்னும் மனநிலையோடும்; காதும், கருத்தும் கண்ணும் மூடிய நிலையில் நடக்க முடியாது. முன்னேறியுள்ள நாடுகளின் கடந்த கால அனுபவங்களை ஆராய்ந்து இயன்ற வழியில் தேவையான மாற்றங்களோடு அவற்றைப் பயன்கொண்டு அதன்வழி நாம் நலம் பெறவேண்டும் என்ற பணிவுடைமை நமக்கு எந்நாளும் வேண்டும்.

ஆங்கில மொழி 50 சதம் இலத்தீனிலிருந்தும் 25 சதம் கிரேக்கத்திடமிருந்தும் கடன் பெற்று வளர்ந்தது என்பர். சீன மொழியோ பிறசொற்களை ஏற்பதில்லை. பிறநாட்டு இடப் பெயர்கள் இயற்பெயர்களாகக் கூடத் தம்மொழிக் கேற்பவோ மொழி பெயர்த்தோ சொல்கின்றனர். வடமொழியாரோடும் ஊர்ப் பெயர்கள் இயற் பெயர்களை மொழி பெயர்த்து மாற்றுவதை நாம் அறிவோம். தமிழரிடத்திருந்த அரிய நூல்களை மொழிபெயர்த்துத் தமிழர் அறிந்த முன்னமே தாம் அறிந்தன போலவும், வட மொழியிலிருந்தே அவற்றைத் தாம் அறிந்தனர் போலவும், வட மொழியிலிருந்தே தமிழிற்கு அவை வந்தன போலவும் ஆரியர் காட்டினர் என்று வீ.கோ. சூரிய நாராயண சாத்திரியார் தமிழ்மொழி வரலாற்றில் எழுதினார்.

அறிஞர் வ.சுப. மாணிக்கம் இது தொடர்பாகத் ‘தமிழ் ஒரு முது மொழி. அதனை அது வளர்ந்து வந்த இயற்கைப்படி வளர்க்க வேண்டும். தமிழ் ஞாலத்தொன் மொழியாதலானும், பல மொழிகள் ஞாலத்திடை தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றி வளர்ந்து இலக்கண இலக்கியங்கண்ட செம்மொழியாதலானும், ஒரு குடும்பத்துக்கு ஒரு மகவு போல் உடன் பயில்மொழி யாது

மின்றித் தனித்து ஓடியாடி உரம்பட்ட செல்வ மொழியாதலானும் அதனைத் தன்னிச்சைப்படி வளர்ப்பதுவே நெறி.

ஆங்கிலம் இந்தி முதலான பன்மொழிகள் ஏராளமான மொழிகள் வழங்கிய உலகக் காலத்துப் பிறந்தன; கலப்பிற் பிறந்தன; கலப்பிலே வளர்ந்தன. கலப்பிலே வளரும் பெற்றியன. ஆதலின் அன்ன மொழிகளை அசை பிறந்த சூழற்படி வளர்ப்பதுவே நெறி. இவை மொழியியற்கையாதலின், பெருமை சிறுமை என்ற ஏத்துக்கும் ஏச்சுக்கும் இடம் யாண்டுண்டு?' என வினவுவது குறிக்கத் தக்கது.

மொழிக் கொள்கை பற்றிய பூசல்கள் நமது மண்ணில் பட்டி மண்டபங்களாகவே ஒருவர் எடுத்து மொழியவும், மற்றவர் மறுத்துக் கூறவுமாக நடுவர் இல்லாமலேயே நடந்து கொண்டிருக்கின்றன. தமிழில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது பற்றிய வாதத்தில் மற்ற மொழிகளிலிருந்து ஆங்கிலமொழிச் சொற்களைக் கடன் வாங்கி வளர்ந்த அனுபவத்தை ஒருவர் சுட்டிக் காட்டினால், அதை அறிவு நோக்கில் ஆய்ந்து, அந்த அனுபவம் தமிழுக்குப் பொருந்துமா, பொருந்தாதா என முடிவு செய்வதுதான். முறை. முடிவு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அதைவிடுத்து 'ஏழை கடன் வாங்குவான்; இரவலன் இரக்கிறான்; அதற்காகச் செல்வனும் கையேந்த வேண்டுமா?' என்று வினவுவது மொழியியலுக்கு முறையாகாது. மொழியியல் வேறு; வாழ்வியல் நடப்பு வேறு. உள்ளத்தில் உண்மையும், கடமையில் தெளிவும், நமது மொழி எல்லா நிலைகளிலும் எல்லோர்க்குமாக ஓங்கி வளர வேண்டும் என்ற உணர்வும் நடைமுறையில் வளர்ச்சியை நாம் அனைவரிடமும் காணவேண்டும் என்ற துடிப்பும் மேம்பட்டு வருகின்றன.

தூய்மை, தனித்தன்மை என்பன உயர்ந்த கூறுபாடுகளைக் குறிப்பிடும் சொற்கள். ஆனால், மொழித்துறையில் எது தூய்மை, எது தனித்தன்மை என்பதில் தெளிவு கண்டாக வேண்டும். கன்னித் தன்மைதான் தூய்மையுடையது என்பதில்லை. தாய்மையும் தூய்மையானதே. தனிமை வேறு; தனித்தன்மை வேறு. பலருடன் சேர்ந்து செயல்படும் பொழுதுதான் ஒருவரது தனித்தன்மை புலனாகிறது. அறிவு ஓரிடத்தில் தேங்காமல் நாளடைவில் மற்றைய கருத்துகளாகி,

'எண்ணுதற்கு எட்டாத எழிலார்ந்த நிலையில் இன்று உலகு முழுவதும் தழுவி நடைபெறுகின்றது. சமயம், தத்துவம், மொழியியல், கலை பொருளாதாரம், வாணிகம், போக்குவரவு அறிவியல், தொழில் நுட்பம் அணுவியல், மரபணுவியல் மின்னியல், கணினியியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் உலகின் எந்த மூலையில் வளர்ச்சிப் பொறி தட்டுப்பட்டாலும், அது மானிடத்தின் பொதுச் சொத்தாகி மலர்ந்த காலம் இன்றைய காலமாகும்.

வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து நாகரிக வளர்ச்சியுடன் எல்லாக் காலத்திலும் எல்லா நாட்டினராலும் எல்லா இனத்தாராலும் உருவாக்கப்பட்ட அறிவு முழுமைக்கும் நாமும் உரிமை கொண்டாடும் வாய்ப்பு அமைந்துள்ளது. ஊர்கூடித் தேரிழுக்கும் மக்கள் வெள்ளத்தில் நாமும் பங்கு கொள்ளும் மனப்பான்மையும் விளை நலங்களைப் பயன்படுத்தும் திறனும் நமக்கு வேண்டும். அறிவு வளர்ச்சியில் அயன்மை என்று ஒன்றும் இல்லை. நமக்கு ஏற்றது, ஏலாதது, தேவையானது, தேவையில்லாதது என்ற பாகுபாடு வேண்டுமானால் நாம் வகுத்துக் கொள்ளலாம். ஓர் இனத்தின் வாழ்வோடு, உணர்வோடு நெருங்கிய கலை, பண்பாடு, செயற்பாடு போன்றவை கூட மற்ற இனங்களின் தொடர்பால் மாற்றங்களைப் பெறுகின்றன.

'உயிரோட்டமுள்ள நாகரிகம், வளரும் நாகரிகமாக நாற்புறமும் வீசும் அலைகளை வயமாக அவற்றின் மூலம் மேம்பட்டு முன்னேறிச் செல்லும் தகுதியுடையதாகத் திகழ வேண்டும். தாக்குதல் தொடாத இடத்தில் தாழிட்டுக் கொண்டு வாழக்கூடாது. தனது பின்னணியைத் தனக்கே வாய்த்த தனித்தன்மையைத் தமிழ் நிகழ்த்தி வந்த தரத்தை உரிய அளவில் நிலைநிறுத்திக் கொண்டு புதியவற்றுள், தக்கவற்றைத் தன்மயமாக்கிக் கொள்ளும் திறன், வளரும் இனத்திற்குத் தேவையான ஒன்றாகும்' என்று அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி, மொழித்தூய்மை, மொழிக்கலப்புப் பற்றிக் குறித்த கருத்துரைகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாகும். மொழி என்பது வழிபடுபொருளாய் எல்லையறு பரம்பொருளாய் உணர்ச்சிக் குவியலாய் எண்ணும் நிலையில், அதன் தூய்மை மட்டுமே மேலோங்கி நிற்கிறது.

வளர்ச்சிக்குரிய உயிருடையதாய் உலகத் தொடர்புப் பாலமாய் மொழியைக் கருதும் இந்நாளில் மாற்றங்களுக்கு உட்படுதலே உயி

ருணர்ச்சிக்கு அடையாளமாகிறது. என்ற நிலையைத் தவிர்க்க இயலாது. எனவே, மொழிக்கலப்பு இனத்தின் வளர்ச்சி நோக்கி நிகழும்போது, ஏற்புடையதாகவும், இனத்தின் குலைவுக்கும் தாழ்ச்சிக்கும் வழிவகுக்கும்போது நீக்கத்தக்கதாகவும் கருதலாம். இப்புதிய அணுகுமுறை மொழி வளர்ச்சிக்கு உலக நாடுகள் மேற்கொண்டு காட்டிய நடைமுறையாகும்.

குறிப்புகள்

1. மு.வ. மொழி வரலாறு - பக். 1
2. மு. வ. மொழி வரலாறு - பக். 99, 100
3. தெ. பொ. மீ. தமிழும் பிற பண்பாடும் பக். 21
4. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 5

4அ. வ.சுப. மாணிக்கம், தொல்காப்பியத்திறன், பக். 32 - 34

5. மு.வ. மொழிவரலாறு பக். 4
6. மு.வ. மொழி வரலாறு பக். 14
7. மு.வ. மொழி வரலாறு பக். 12, இதழ் பக். 10
8. த. தெய்வசுந்தரம் மொழியியல் இதழ் பக். 10
9. மு.வ. மொழி வரலாறு - பக். 25
10. மு.வ. மொழி வரலாறு - பக். 26, 27
11. மு.வ. மொழி வரலாறு - பக். 33
12. மு.வ மொழி வரலாறு - பக். 118
13. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு - பக். 224, 225
14. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு - பக். 225
15. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு - பக். 226
16. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு - பக். 226 - 229
17. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு - பக். 3
18. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி - பக். 62, 64

பட்டியல்.

நற்றிணை

தெய்வம் (9), வெதிரம் (62), வஞ்சம் (150)

குறுந்தொகை

காமம் (2), திலகம் (48), மணி (239), யாமம் (302)

ஐங்குறுநூறு

இந்திரன் (62), முண்டகம் (108), நகர் (247), குரவர் (357)

பதிற்றுப்பத்து

ஆணியம் (69), உவமம் (73), பருகி (74), சந்தம் (87)

பரிபாடல்

புங்கவம், ஆதிரை, நாதர்

கலித்தொகை

கடிகை, வல்லிகை, சாமரை, மத்திகை, உத்தரியம், கண்டிகை, தமணியமேகலை, நூபுரம், சுதை, கிண்கினி, வயமம், வாதம்

அகநானூறு

நிதி (66), அரணம் (158), அமர் (214), பலி (282), மதி (400), நேமி (400), கோவலர் (299), சாத்து (167), முரசம் (251), தூது (251), அரவம் (188), மதம் (295), அரமியம் (124),

புறநானூறு

யூபம் (15), வேதம் (2), கண்டம் (10), நாகம் (367)

முருகாற்றுப்படை

வாரணம் (219)

பொருநராற்றுப்படை

தாயம் (132)

சிறுபாணாற்றுப்படை

கோவம் (71)

பெரும்பாணாற்றுப்படை

சாபம் (12)

முல்லைப்பாட்டு

மிலேச்சர் (66)

மதுரைக்காஞ்சி

பதாகை (373)

நெடுநல்வாடை

உரோகிணி (115, 163)

குறிஞ்சிப்பாட்டு

குடகம், வகுளம், மாயம், தரகம் (67, 70, 108, 246)

பட்டினப்பாலை

அமரர், ஆவுதி (200)

மலைபடுகடாம்

அபயம் (375)

திருக்குறள்

அகரம் (1), அங்கணம் (720), அச்சு (475), அதி (636), அந்தம் (562), அமர் (814), அமரர் (121), அமிழ்தம் (11), அமைச்சு (381), அரங்கு (401), அரசர் (381), அரண் (331), அவர் (266), அவலம் (1072), அவி (259), அவை (332), ஆகுலம் (34), ஆசாரம் (1075), ஆசை

(266), ஆணி (667), ஆதி (1), ஆயிரம் (259), இசை (231), இந்திரன் (25), இமை (775), இரா (1168), இலக்கம் (627), உரு (756), உருவு (667), உலகம் (11), உலகு (1), உலகு (756), உவமை (7), உறு (498), ஏமம் (306), ஏர் (14), கஃசு (1037), கணம் (29), கணிச்சி (1251), கதம் (130), கந்து (507), கலுழும் (1173), கவரி (968), கடவுள் (678), கழகம் (935), களம் (1224), களன் (730), கணம் (1081), காமம் (360), காமன் (1197), காரணம் (270), காரிகை (571), காலம் (102), கானம் (772), குடங்கர் (890), குடி (171), குடும்பம் (1029), குணம் (29), குலம் (956), குவளை (114), கூர் (599), கொக்கு (490), கோடி (337), கோட்டம் (119), கோட்டி (401), சமன் (118), சலம் (660), சிவிகை (37), சுதை (714), சூதர் (932), சூது (931), தகர் (486), தவம் (16), தாமரை (1103), திண்மை (54), திரு (168), துகில் (1087), துலை (986), தூது (911), தோட்டி (24), தோணி (1068), தோள் (149), நத்தம் (235), நயம் (860), நாகம் (763), நாகரிகம் (580), நாமம் (360), நாவாய் (496), நிச்சம் (532), நீர் (3), நுதுப்பேம் (1148), படாம் (1087), படிவத்தர் (586), பண்டம் (475), பதம் (548), பயன் (2), பரத்தன் (1311), பளிங்கு (706), பள்ளி (840), பாகம் (1092), பாக்கியம் (1148), பாவம் (146), பீழிக்கும் (843), பீழை (658), புருவம் (1086), பூசனை (18), பூதங்கள் (211), பேடி (614), பேய் (565), மங்கலம் (60), மடமை (89), மதலை (449), மனம் (7), மணி (1273), மா (68), மாடு (400), மானம் (384), மீன் (931), முகம் (90), யாமம் (1136), வஞ்சம் (2712), வண்ணம் (561), வளை (1157), வள்ளி (1304), வித்தகர் (235), வேலை (1221).

19. தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாறு. பக். 243
20. வ.சுப. மாணிக்கம், சிந்தனைக்களங்கள் பக். 223
21. வ.சுப. மாணிக்கம், சிந்தனைக்களங்கள் பக். 239
22. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்பா எண், 401.
23. வ.சுப. மாணிக்கம், காப்பியப்பார்வை, பக். 200, 201.
24. மு.வ. மொழிவரலாறு - பக். 121.
25. தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாறு. பக். 243
26. பொற்கோ, தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி பக். 9, 10.
27. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 32
28. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 273
29. மேற்கோள், எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 38

30. முருகன் புகழ்நூற்கோவை (கழக வெளியீடு, சென்னை - 1) பக். 18
31. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (மடம் பதிப்பு) பக். 27
32. கலிங்கத்துப்பரணி, (எஸ். ராஜம் வெளியீடு, 1960) பக். 8
33. தொல்காப்பியம் சொல்லதிகாரம், நூற்பா எண். 155.
34. தொல்காப்பியம் சொல்லதிகாரம், நூற்பா எண். 397.
35. இலக்கண விளக்கம், பக். 56 - 59
36. தெ. பொ. மீ. திசைச்சொல்லும் வடசொல்லும். நுண்பொருள் மலர்., பக். 16
37. தொல்காப்பியம் சொல்லதிகாரம், நூற்பா எண். 401.
38. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 62
39. நன்னூல், பதவியல், நூற்பா எண். 146
40. நன்னூல், பதவியல், நூற்பா எண். 147, 148
41. நன்னூல், பதவியல், நூற்பா எண். 149
42. நன்னூல், பதவியல், நூற்பா எண். 149
43. நன்னூல், பதவியல், நூற்பா எண். 150
44. செந்தமிழ், தொகுப்பு பக். 230, 231.
45. சரவணத் தமிழன், தமிழ்நூல், நூற்பா எண். 36.
46. தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாறு பக். 244 - 245.
47. செந்தமிழ் - தொகுதி - 12. பக். 484 - 486
48. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி - பக். 64
49. மு.வ. மொழி வரலாறு, பக். 389.
50. ம.பொ. சிவஞானம் தமிழும் கலப்படமும் பக். 42 - 45.
51. மு.வ. மொழி வரலாறு, பக். 389
52. தெ.பொ.மீ. தமிழ்மொழி வரலாறு, பக். 245
53. மறை திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, பக். 23.
54. பொற்கோ, தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி பக். 19, 20.
55. இந்திப்போர் முரசு, பக். 23 (விடுதலை வெளியீடு) சென்னை - 7, (1978)
56. திரு.வி. கலியாணசுந்தரனார், தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப் பொழிவு, பக். 43 - 44 (புனித நிலையம், சென்னை - 6, 1971)
57. ஞா. தேவநேயன் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் பக். 83 - 88.
58. வா.செ. குழந்தைசாமி, அறிவியல் தமிழ், பக். 45 - 50.

ஆங்கிலச் சொற்கள்

1. உலக அரங்கில் ஆங்கிலம்
2. எழுத்து வழக்கு
3. பேச்சு வழக்கு
   - அ. கல்விக் கூடங்களில்
   - ஆ. அலுவலகங்களில்
   - இ. பொழுது போக்கிடங்களில்
   - ஈ. வீதிகளில், பேருந்துகளில்
   - உ. இல்லங்களில்
4. பொதுப்பட்டியல்
5. கலப்பும் - முடிவுகளும்

1 உலக அரங்கில் ஆங்கிலம்

இன்று உலகின் அஞ்சல் போக்குவரவில் 75 விழுக்காடு எண்ணிக்கையுள்ள கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன. உலகச் செய்தித்தாள்களில் 50 விழுக்காடு செய்தித்தாள்கள் ஆங்கிலத்தில் அச்சிடப் படுகின்றன. 75 விழுக்காட்டு வானொலி நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் அமைகின்றன. ஏறத்தாழ 350 கோடி மக்கள் வாழும் உலகினில் 35 கோடிக்கும் மேலான மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். இது உலகின் மொத்த மக்கள் தொகையில் 10இல் ஒரு பங்காகும். அதாவது உலகில் பத்துப் பேர்களில் ஒருவர் ஆங்கிலம் பேசுபவராக இருக்கிறார். கடந்த நான்கு நூற்றாண்டுகளில் மட்டும் ஆங்கிலம் பேசுவோர் எண்ணிக்கை 5,000 விழுக்காடு அதிகரித்துள்ளது.

அமெரிக்கத் தூதரகம் உலகம் முழுவதும் பணிபுரிகின்ற தன்னுடைய 400 செயலகங்கள் வாயிலாகவும், நூலகங்கள் வாயிலாகவும் ஆங்கிலத்தைப் பரப்புகிறது. அவ்வாறே பிரிட்டனும் தன்னுடைய

மொழிக் கழகங்கள் வாயிலாக ஆங்கிலத்தைப் பரப்புகிறது. ஆங்கிலத்தின் செல்வாக்கையும், இன்று உலக அரங்கில் அது முதல் முக்கிய மொழியாகத் திகழ்வதையும் காணும்போது, அத்தகைய உயர்நிலையை ஆங்கிலம் எவ்வாறு அடைந்தது என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் அனைவர்க்கும் தோன்றுதல் இயல்பு.

இன்று உலகின் எந்த நாட்டிலும் வாழும் ஒரு விஞ்ஞானியோ, தொழில் வல்லுநரோ, பிற துறை அறிஞரோ ஆங்கிலத்தில் ஓரளவு அறிவேனும் பெற்றவராகவே உள்ளார். உலகில் கல்வி கற்றவர் அனைவரும் ஒரு சிறிதேனும் ஆங்கிலச் சொற்கள் தெரிந்தவராகவே உள்ளனர். வளத்திலும் பொருளிலும் செறிவிலும், வாழும் வேறு எந்த மொழியையும் ஆங்கிலத்துடன் ஒத்துப் பார்க்க முடியாது என்பார் ஜேகப்க்ரிம் என்னும் அறிஞர்.

ஆங்கில மொழி தன்னுடைய தொடக்கக் காலத்தில் மிகப் பெரும் பாதிப்புகளுக்கு ஆளான மொழி. ஆங்கிலம் தனி ஓர் இனத்தவரால், அமைதியான சூழ்நிலையில், பிறமொழிக் கலப்பில் லாமல் வளர்ந்த மொழியன்று. பிறமொழிக் கலப்புகளையும், பிற இனக் கலப்புகளையும் வேறு வழியின்றித் தாங்கித் தன் வாழ்வை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய நெருக்கடியில் வளர்ந்த மொழி. இதை எண்ணுந்தோறும், போராட்டங்களையெல்லாம் தாண்டி வெற்றி பெற்றுத் தலைநிமிர்ந்து வாழும் மொழி என்ற தகுதியுண்டு. ஒரே உலக மொழி என்ற பேச்சு எழுந்தால், அந்த இடத்திற்குப் போட்டி யிடக்கூடிய தகுதி ஆங்கிலத்திற்கே உண்டு என்பதை இன்று வேறு எந்த மொழியினரும் மறுக்க முடியாது.

அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, 16ஆம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரையில், ஆங்கிலேயர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தம் ஆட்சியை ஏற்படுத்தியதும், ஆதிக்கம் செலுத்தியதும் முதன்மைக் காரணமாகத் தெரிகிறது. ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஆங்கில மொழிக்குச் செல்வாக்கை ஏற்படுத்தியது. ஆட்சி மொழி அடிமை நாட்டார் மேல் திணிக்கப்பட்டது. இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா, ஆங்காங், இசுரேல் போன்ற நாடுகள் இதற்கு எடுத்துக் காட்டுகளாய் உள்ளன.

சமுதாயவியல் அடிப்படையில் ஆராயும்போது, தங்கள் அரசியல் செல்வாக்கினால் உலகில் மிகப்பெரும் ஆளும் வர்க்கமாக மாறிய ஆங்கிலேயர், தொழில், விஞ்ஞானம் ஆகிய புதிய துறைகளில் பெரும் வளர்ச்சி பெற்று முன்னோடியாகத் திகழ்ந்ததைக் காண்கிறோம். தொழிற்புரட்சி முதன் முதலில் தோன்றியது இங்கிலாந்தில்தான். இவர்களுக்குப் பின்னரே உருசியரும், அமெரிக்கரும் செருமானியரும், சப்பானியரும் முன்னேற்றமடைந்தனர். ஓர் இனம் பல துறைகளில் சிறப்பையும் முதன்மையையும் அடையும்போது, அந்த மக்களிடம் மொழி இயல்பாகவே மேன்மையுறுகிறது; விரிவடைகிறது; வளர்ச்சியை எய்துகிறது. அவ்வகையில் ஆங்கிலம் கல்வி மொழியாகவும், அறிவியல் மொழியாகவும், தொழில்துறை மொழியாகவும் ஓங்கியதில் வியப்பில்லை. வளர்ச்சியின் பின்தங்கிய நாடுகளும் தங்கள் முன்னேற்றப் பாதையின் வழிகாட்டியாக ஆங்கிலத்தைப் பின்பற்றத் தொடங்கின.

ஆங்கிலத்தைவிட அதிகமாகப் பேசப்படுகின்ற மொழி சீனமாகும். (70 கோடி) உருசியமொழி 20 கோடி மக்களால் பேசப்படுகின்றது. ஆனால் உருசிய மொழியும் சீன மொழியும் பெரிதும் தம் நாட்டுக்குள்ளேயே பேசப்படுகின்ற மொழிகளாகும்.

நாடுவாரியாக ஆங்கிலம் பேசுவோர் தொகையினைக் காண்கின்,

அமெரிக்க ஐக்கிய நாடுகள்	200	மிலியன்
பிரிட்டன், அயர்லாந்து	58	மிலியன்
கனடா	17	மிலியன்
ஆசுதிரேலியா	11	மிலியன்
நியூசிலாந்து	5	மிலியன்
தென்னாப்பிரிக்கா	2	மிலியன்

இவை தவிர உலகின் பல நாடுகளில் ஆங்கிலம் பரவலாகப் பேசப்படுகின்றது.

இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 20 மிலியன் மக்கள் அதாவது 21/2 கோடி மக்கள் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களாக உள்ளனர். இக் கணக்கெல்லாம் குறிப்பாக, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுபவர் எண்ணிக்கை அடிப்படையில் கூறப்படவில்லை. யுகோசுலாவிய வார இதழான ‘ரிபப்ளிகா’, சில ஆண்டு

களுக்கு முன் உலகில் அறுபது கோடிக்கும் அதிகமானவர்களால் ஆங்கிலத்தைப் பேசவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது என்ற செய்தியை வெளியிட்டது.

அயர்லாந்து விடுதலை பெற்றதாக அறிவித்தபோது, இங்கிலாந்திலிருந்து தனது தொடர்புகளை அறுத்துக்கொள்ள முயன்றது. இங்கிலாந்திற்கும் தமக்கும் இடையேயான இறுதி உறவான ஆங்கில மொழியையும் துண்டித்து விடுங்கள் ஐரிசு மொழியையே பேசுங்கள் என்று கூறும் பலகைகள் ஆங்காங்கே ஐரிசு நாட்டு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. ஆனால் அந்தப் பலகைகளும் வழியின்றி ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருந்தன. நீக்கமற நிறைந்துவிடும் ஆங்கிலத்தின் நிலையை, வளர்ச்சியை இதன்வழி அறியலாம். எத்தியோப்பியாவில் ஆங்கிலமும் பிரெஞ்சும் ஆட்சிமொழிகளாக உள்ளன. எதிர்காலத்தில் ஆங்கிலத்திலேயே முழுவதும் நடத்தும் திட்டங்கள் உள்ளன.[1]

இவ்வாறு உலக அரங்கில் ஆங்கிலம் தனிச் செல்வாக்கும், பிற மொழிகளில் ஊடாட்டம் நிகழ்த்தும் வல்லமையும் பெற்ற மொழியாக விளங்குகிறது. நம் இந்தியப் பெருநாட்டின் பதினெட்டு மொழிகளையும் 350 வட்டார மொழி வழக்குளையும் மக்கள் பேசுகின்றனர். ஆனால், ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவு கொண்டு எந்த ஒரு மொழியிலும் பேசிப் பழக முடியவில்லை. நமது மக்கள் தொகையில் 2 கோடி மக்கள் மட்டுமே பேசக்கூடிய ஆங்கிலம் தான் நமது ஒரே தொடர்பு வாயிலாக நிலவுகின்றது. இந்நிலை ஆங்கிலத்தின் இன்றியமையாத பெரும் பங்கினை எந்த நிலையிலும் செலுத்துகிறது. மனித குலம் மொழியைக் கருவியாகக் கொண்டே தனது சமுதாயக் கடமைகளை நிறைவேற்றி வருகிறது. இனங்கள் பலவாய், மொழிகள் பலவாய் இயங்குகின்ற நிலைகளில் மொழிக் கலப்புத் தவிர்க்க இயலாததாகின்றது. உயிருள்ள மொழிகள் ஒன்றை ஒன்று சந்திக்கும்போது, அவற்றுக்குள் கொடுக்கல் வாங்கல் நிகழ்கின்றன.[2] தமிழ்மொழியோடு பல மொழிகள் இவ்வுறவைக் கொண்டிருந்தாலும், ஆங்கிலமே இன்று வரையில் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தமிழில் ஊடாட்டம் நிகழ்த்தும் மொழியாக இருந்து வருகிறது. இவ்வாறு கலந்த ஆங்கிலம், நம் அன்றாட வழக்குகளில் வல்லாண்மை செலுத்தி வருதலை வகை பிரித்தறிதலே இவ்வியலின் நோக்கமாகும். எழுத்து வழக்கு, மக்கள்

வழக்கு எனும் இரு பகுப்புகளில் ஆங்கிலச்சொற்களின் கலப்பு நிலைகள் இவ்வியலில் தொகுக்கப்பட்டுள்ளன.

2. எழுத்து வழக்கு

தொன்று தொட்டுத் தமிழ் இலக்கியம் பல இலக்கண நெறிகளுக் குட்பட்டு வளர்ந்து வந்தது. பிற்கால இலக்கியங்களிலும் அவற்றுக்கு முன்னர்த் தோன்றிய இலக்கியங்களிலும் பிறமொழிக் கலப்பு மிகுதியாகத் தொடங்கிற்று. இந்நிலைக்குப் பிறகு, இருபதாம் நூற்றாண்டில் தனித்தமிழ் இயக்கம், வடமொழிக் கலப்பை ஓரளவிற்குத் தடுத்தது எனினும், ஆங்கிலத்தின் நுழைவை முற்றிலுமாகத் தடுக்க இயலவில்லை. ஆங்கிலேயர் 300 ஆண்டுக்காலம் நம் நாட்டை ஆண்டனர். அவர்கள் நம் நாட்டிற்குக் கொண்டு வந்த புதிய துறைகள் வழியாக அத்துறைகளுக்குரிய சொற்கள் என்னும் முத்திரையோடு, ஆங்கிலச் சொற்கள் தமிழிற் கலந்தன. எடுத்துக்காட்டாக மிதி வண்டியை நம்மவர்க்கு அறிமுகப்படுத்தியபோது, அது Bycycle எனும் பெயரில் வந்தது. அதன் தொழில் நுட்பப் பொறிகள் அனைத்தும் ஆங்கிலச் சொற்களாலேயே சுட்டப்பட்டதை எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

சீட்	வால்டியூப்	பெல்	மட்கார்டு
பிரேக்	சீட்கவர்	வீல்	கோன்
ரிம்	செயின்	போக்ஸ்	செயின்கார்டு
பெடல்	டைனமோ	டயர்	லைட்
டியூப்	டேஞ்சர்லைட்	ஹாண்டில்ஸ்	ஸ்டேண்டு
கேரியர்	பிரேக் ஒயர்		

என்ற ஆங்கிலச் சொற்கள் பேச்சு வழக்கில் இன்றும் நீங்காமல் நிலைத்துள்ளன. இவ்வாறு பல பொருள்கள் வந்தன போன்று தமிழிலக்கியத்திற்கும் சில இலக்கிய வடிவங்கள் ஆங்கிலத்திலிருந்து வந்து கலந்தன. இவ்வாறு வந்தவற்றில் முதன்மையானது நெடுங்கதையாகிய நாவல் என்னும் உரைநடை வடிவம் ஆகும். செய்யுளே தமிழ் என்ற நிலை மாறி, உரைநடை வடிவத்தில் தமிழ் வளரத் தொடங்கியபோது, பிறமொழிச் சொற்கள் கலக்க நேர்ந்தன. இக் கலப்பை நிகழ்த்துவதில் வடமொழியே முதலிடம் பெற்றிருந்தாலும், அடுத்த நிலையில் அண்மைக்காலம் வரையில் இவ்வுரைநடையில் ஆங்கிலச் சொற்கள் அதிகமாக இடம் பெற்று வருகின்றன எனக் கருதலாம். வடமொழி எதிர்ப்பினால், தனித்தமிழ் இயக்க எழுச்சியால் தமிழில் கலந்திருந்த வடமொழிச் சொற்கள் மறையத் தொடங்கின என மகிழ்ச்சியுறும்

அதே நேரத்தில், ஆங்கிலச் சொற்கள் அந்த இடங்களில் அமர்ந்து கொள்வதை மறுக்க இயலாது. சான்றாக,

அவர் பிரபலமானவர் (வடமொழி)
அவர் புகழ்பெற்றவர் (தாய்மொழி)
அவர் பேமசானவர் (ஆங்கிலம்)

'பிரபலமானவர்' என்ற வடசொல், 'பேமசானவர்' என்ற ஆங்கிலச் சொல்லால் இடம் பெயர்கின்றது.

'ஆசீர்வாதம்' என்ற வடசொல் 'வாழ்த்தாக' மாறி, இப்பொழுது 'Greetings' 'க்ரீட்டிங்ஸ்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இடம் அளித்துள்ளது.

இத்தகைய ஆங்கிலக் கலப்பு இன்றைய புதினங்களிலும் கட்டுரைகளிலும் இடம் பெறுகிறது. பெரிதாகத் தமிழில் பரபரப்பாக விற்பனையாகும் புதினங்களில் இந்நிலையே உள்ளது. தமிழ்நாட்டில் தமிழர்கள் நடத்தும் இதழ்களுக்கு ஆங்கிலத்திலே பெயரிட்டு, அதைத் தமிழ் எழுத்துகளிலேயே எழுதுவதும் உண்டு.

'பாக்கெட் நாவல்' 'எ நாவல் டைம்' 'க்ரைம் நாவல்' 'சஸ்பென்ஸ்', 'ஜாப் கைடு லைன்ஸ்', 'இந்தியா டுடே' இவையனைத்தும் தமிழ் எழுத்துகளால் வழங்கப்பட்டு வரும் ஆங்கிலப் பெயர்கள். இவை மட்டுமன்றி இதழ்களில் வரும் தமிழ்க் கதைகளில் ஆங்கிலச் சொற்களை மிகுதியாகக் கலந்து எழுதும் நிலை உள்ளது.

'ஆண்டிக்கு ஃபேமிலி ஃப்ரெண்டு' - 'கோத்ரேஜ்லே இன்ஜினீயரா இருக்கேன் என்றான்[3]

தமிழ் இதழ் ஒன்றில் வெளிவந்த சிறுகதை ஒன்றில் வரும் உரையாடலில் ஒரு பகுதி. இதில் இருக்கேன், என்றான் என்ற இரு சொற்களைத் தவிர மற்றவை அனைத்தும் ஆங்கிலமே.

'நோ... நோ... நாளைக்கு நான் கோயமுத்தூரில் இருந்தேயாகணும்... ப்ளீஸ் ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மை வேர்ட்ஸ்... டுமாரோ ஈஸ் மை பர்த்டே[4]

ஒரு புதினத்தில் இடம் பெற்றுள்ள உரையாடல் பகுதி. இதிலுள்ள ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்துகளால் எழுதப்பட்டுப் படிக்கப் படுவதும், பிறகு பேசுவதற்குமான நிலையை அடைகின்றன.

இத்தகு ஆங்கிலக் கலப்பு நிலை தமிழ் இதழ்கள் அனைத்திலும் உள்ளதாகக் கருத இயலாது. நாற்பது விழுக்காட்டிற்கு இந்நிலை உள்ளதெனலாம்.

3. பேச்சு வழக்கு

ஆங்கிலேய ஆட்சியில் நம் நாடு 300 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது. தமிழ் வழங்கிய பல நிலைகளில் ஆங்கிலம் தன் ஆளுமையைச் செலுத்தியது. கல்விக்கூடங்கள், கலை மன்றங்கள், மக்கள் குடியிருக்கும் பகுதிகள், போக்குவரவுகள், இல்லங்கள் எனப்பல நிலைகளிலும் மக்களின் அன்றாட வழக்கில் ஆங்கிலச் சொற்கள் அலையாய்ப் புகத்தொடங்கின. தமிழ் மக்களின் மனநிலையும் இதற்குக் காரணமாக அமைந்தது. தமிழ் மக்களுக்குத் தாய்மொழியைப் பற்றி அக்காலத்தில் அவ்வளவாகக் கவலை இருந்ததில்லை. பொது வாழ்க்கைக்கு வேண்டிய அரசியல் மொழியைப் பற்றியே அவர்கள் எப்போதும் கவலை கொள்வார்கள். தாய்மொழி வளமானதாக இருந்தாலும் தொன்றுதொட்டு வந்த பெருமையுடையதாக இருந்தாலும், வேறு என்ன சிறப்புப் பெற்றிருந்தாலும் தமிழ்மக்களுக்குக் கவலை இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பொதுவாழ்க்கைக்கு, அரசியல் வாழ்க்கைக்கு உரிய ஒரு மொழியே ஆகும். தமிழ்நாட்டில் ஒரு தலைமுறைக்குமுன் தமிழைக் கற்காமல், தமிழ் எழுதத் தெரியாமல், தமிழ் பேசத் தெரியாமல் உயர்நிலையில் புகழோடிருந்த தமிழர் எத்தனை பேர்? அவர்கள் ஏன் தமிழ் கற்கவில்லை? ஏன் தமிழ்த் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கும் செல்லாமல் ஆங்கிலப் பள்ளிகளுக்குச் சென்று வந்தார்கள்? பலர் இரண்டாம் மொழியாகிய தமிழ் வேண்டா என விதிவிலக்குப் பெற்று ஆங்கிலம் மட்டுமே கற்று முன்னேறியது ஏன்? பழைய விடைதான். தமிழ் இந்த நாட்டின் அரசியல் மொழி அன்று; ஆங்கிலமே அரசியல் மொழி; ஆங்கிலம் கற்றால் போதும் என்பதுதான் அவர்களின் போக்கிற்குக் காரணம். ஆங்கில மொழியே உலக அரசியல் மொழியாகவும் வளர்ந்தது. தமிழ் பலவளங்கள் படைத்துப் பல மொழிகளுக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடையதாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனாலேயே அது வாழ முடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை; பொதுமக்களின் செய்கையில் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால், எந்தமொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழி

தான் மக்கள் மொழியாக விளங்கும்; நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும், அரசியல் மொழியானால் அது ஓங்கி வாழ முடியும்.[5] இவ்வடிப்படையில்தான் தமிழின் பேச்சுவழக்கில் ஆங்கிலம் செல்வாக்குப் பெற்றது எனலாம்.

அ. கல்விக் கூடங்களில்

கல்விக்கூடங்கள் ஆங்கிலேயர் காலத்தில் வரையறுக்கப்பட்ட கல்வி முறைகளையே இன்னமும் பின்பற்றி வருகின்றன. ஆங்கிலம் பயிற்று மொழியாகவே (**Medium Language**) எங்கும் எளிதில் உள்ள தென்றால் மிகையாகாது. ஏறத்தாழ இந்திய மாநிலங்கள் அனைத்திலும் இந்த நிலைதான். ஆங்கில ஆட்சிக்கு அகப்பட்ட நாடுகள் அனைத் திலும் இந்த அவலம் உண்டு.

தமிழ்நாட்டில் ஆங்கிலத்தின் வாயிலாகப் பாடங்களைக் கற்பிக் கும் வகுப்புக்குச் செல்வாக்கு மிகுதியாக உள்ளது. ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ள வகுப்பிலே பிள்ளைகளைச் சேர்க்கப் பெற்றோர் கள் இந்நாட்டில் முனைந்து பாடுபடுகிறார்கள்.

ஆங்கிலம் அறிவு மொழியாக இருக்க வேண்டும் என்று கூறு தல் பொருந்தும்; அது அந்த நிலையில் இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடு விளங்க வேண்டும் என்று கூறும்போதுதான் ஆங்கிலத்தின் மீது உள்ள மோகம், தேம்சு நதிக்கரையில் உள்ளவர்களின் பற்றைவிடப் பெரிது என்று தெரிகிறது. இதன் பயனாக நாட்டில் இளைஞர்களின் வாழ்வில் விளையும் தீமை எத்தகையது என்பதை அவர்கள் பார்ப் பதே இல்லை.[6]

தமிழகத்தில் மழலையர் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரையில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருந்து வருவது கண்கூடு. இதன் விளைவாக மாணவப் பருவத்திலிருந்தே தாய்மொழியில் சிந்திக்கும் வழக்கம் குறைந்து விடுகிறது. எப்பொருளையும் மாணவர் களுக்கு ஆங்கிலத்திலேயே அறிமுகப்படுத்தும் இக்கல்வி முறை, ஆங்கிலச் சொற்களைத் தாய்மொழியில் கலக்கவும் வழி வகுக்கிறது.

யூனிபார்ம்	சிலேட்டு	டிபன் பாக்ஸ்
டை	ஷூ	பென்லேஸ்

சாக்ஸ்	வாட்டர்பேக்	பேக்
புக்	பென்சில்	ரப்பர்

எனப் பல ஆங்கிலச்சொற்களை இளஞ்சிறார்களும் பெற்றோர்களும் தமிழாகவே எண்ணித் தமிழைப் போல் பயன்படுத்துகின்றனர்.

பள்ளிகளில் கல்விமுறையில் மட்டுமின்றிப் பேச்சுமொழியில் ஆங்கிலம் பெருமளவில் கலந்து உள்ளது.

சாக்பீஸ்	லெட்ரின்	மிஸ்
போர்டு	பிரேயர்	பிரண்ட்
டேபிள்	டெஸ்ட்	டெஸ்க்
ரிவிஷன்	சீட்	போர்ஷன்
டீச்சர்	ட்யூஷன்	டஸ்ட்டர்
டாய்லட்	இன்டர்வெல்	எக்சாம்

எனப்பல சொற்களை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

இவ்வாறு ஆங்கிலப் பயிற்று முறை, ஆங்கிலச் சொற்களின் கலப்பைப் பெருக்குவதோடு மட்டுமின்றித் தாய்மொழிப் பயிற்சியையும், தாய்மொழிச் சொற்களை அறிந்துகொள்ளும் வாயில்களையும் அடைத்துவிடுகின்றது.

கல்லூரிகளில் பள்ளிகளைக்காட்டிலும், ஆங்கிலச் சொற்புழக்கம் அதிகம் எனலாம். பாடத் திட்டங்கள், ஆங்கில மொழியில் அதிகமாக இடம் பெற்றிருப்பது இதற்குரிய முதன்மையான காரணம். பாடத் திட்டத்தில் ஆங்கிலத்தில் படித்தும், எழுதியும் பழகிவிடும் மாணவர்களும், ஆசிரியர்களும் பழகும் இடங்களிலும் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்தும் போக்கினைக் காணலாம்.

பிரின்சிபால்	புரொபசர்
லெச்சரர்	லேப்
லேபரட்டரி	பீஸ்
கட் (கட் அடித்தல்)	பிட் (பிட் அடித்தல்)
பெயில்	பாஸ்
அரியர்ஸ்	டி.சி.
டிகிரி	லைப்ரரி
அட்டெண்டர்	சிலபஸ்

7

என்பவை கல்லூரிகளில் அன்றாட வழக்கில் கலந்துவிட்ட ஆங்கிலச் சொற்களுக்குச் சில சான்றுகள். பள்ளிச் சிறார்களுக்குப் பழகிய சொற்களை விலக்கித் தாய்மொழியில் புரியவைக்கும் கடமை பெற்றோர் முதல் ஆசிரியர் வரையில் அனைவருக்கும் உண்டு. இருப்பினும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தாய்மொழிச் சிந்தனை குறைந்தவர்களாக இருப்பதாலும், சிறார்களுக்குப் புரியும்மொழியில் பேசுவதே போதுமென்ற எண்ணத்தினாலும் இத்தகைய மொழிக் கலப்புத் தடுக்க இயலாததாகிறது.

இக்காரணங்களைவிடவும் தன் குழந்தை ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்டு மகிழும் ஆங்கில மதிப்புயர்வு, பெற்றோர்களிடத்தில் மிகுந்துள்ளதே மொழிக்கலப்பு நிகழ்வதற்குப் பெருங்காரணமாகக் கொள்ளலாம். ஆங்கிலம் வாழ்நிலைக்கு மதிப்பூட்டும் அடையாள மாகிவிட்டது.

மாணவர்கள் ஆங்கிலத்தைப் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் முறை இங்குச் சிந்திக்க வேண்டிய ஒன்று. தமிழின் ஒலிக்குறிப்புகளை ஆங்கிலத்தோடு இணைத்துப் பேசும் புதியமுறை வேகமாக வளர்ந்து வருகிறது.

‘கம்’ டா (come ‘டா’)
‘வாட்’ பா (What பா’)
‘எஸ்’யா (Yes யா’)

என டா, பா, யா, தமிழ் ஒலிகளை ஆங்கிலச் சொற்களோடு இணைத்தும் மாணவர்கள் பேசி வருகின்றனர்.

கல்லூரி நிலையில் மாணவர்களும், ஆசிரியர்களும் சிந்தனை ஆற்றல் உள்ளவர்கள். இவர்கள் தாய்மொழியைப் பற்றியும், ஆங்கிலத்தைப் பற்றியும் சிந்தனை செலுத்திப் பிற மொழிக்கலப்பை நீக்குதலில் தனியார்வம் காட்டவேண்டும்.

ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டுத் தமிழர் பட்ட தொல்லைகளைவிட ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டுத் தமிழ் இளைஞர் படும் தொல்லைகள் மிகுதியாக உள்ளன.[7] இதற்குக் காரணம் ஆங்கிலேயர் அல்லர்; அறிவு மொழியாகிய ஆங்கிலமும் அன்று; தமிழ்ப்பற்று இல்லாத தமிழர்களுக்கு உள்ள ஆங்கில மோகமே ஆகும்.

கற்றவர்கள் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும்போது, அவர்கள் கூறும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அவர்கள் அறிந்திருக்கக்கூடும். இருப்பினும், வழக்கத்தில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணுவதில்லை.

ஐரோப்பிய மாணவர்களுக்குத் தம் தாய் மொழியைப் பற்றித் தாழ்வு மனப்பான்மை இல்லை. தன் குஞ்சு பொன் குஞ்சு என்னும் காக்கைகளாக உள்ளனர். தமிழர்களோ பொன் குஞ்சு பெற்றும் ஏங்கும் பேதை நெஞ்சம் உடையவர்களாக உள்ளனர். தமிழர்களில் பெரும்பாலோர்க்கு மொழிப்பற்று இல்லை. (வீட்டுப் பெயர்கள், கடைப் பெயர்கள், விற்பனைச் சீட்டுகள், கடிதத் தலைப்புகள், கடித முகவரிகள், அளவளாவும் பேச்சுகள் முதலியவற்றைக் காணில் இந்த உண்மை விளங்கும்) இந்திய நாட்டிலேயே மொழிப்பற்று உடைய படித்த தமிழருள் பலருக்குத் தம் தாய்மொழி எந்தக் கருத்தையும் உணர்த்தும் ஆற்றல் வாய்ந்த அருங்கலையாக விளங்க வல்லது என்ற நம்பிக்கை இல்லை.[8] ஆங்கிலச் சொற்கள் தமிழில் அதிகமாகக் கலந்தமைக்கு இச் செயற்பாடும் ஒரு காரணமாக உள்ளது. எடுத்துக்காட்டாக,

சினிமா	ஷாப்	தியேட்டர்
பர்ச்சேஸ்	மார்க்கெட்	அட்வான்ஸ்மெண்ட்
ரோட்	டாக்டர்	டிவி, சீரியல்,
பீஸ்	ட்ரெய்னேஜ்	டிராமா

போன்ற பல ஆங்கிலச் சொற்கள் பலராலும் பயன்படுத்தப்படுதலை நாம் காணலாம். இச்சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்கள் எளிதில் கிடைப்பன. வழக்கத்திலும் சில இருந்து வந்தன. இருப்பினும், அன்றாட வழக்கில் இவற்றைப் பயன்படுத்துவது கற்றவர் இயல்பாக இருந்து வருகிறது. இந்நிலை மாறிடின், ஆங்கிலச் சொற்கலப்பைக் குறைக்க முடியும்.

ஆ. அலுவலகங்களில்

அலுவலகங்களில் அன்றாட வழக்கில் ஆங்கிலச் சொற்கள் மிகப் பலவாக வழங்கப்படுகின்றன. அலுவலகப் பதிவு முறைகள், பதிவேடுகள், கோப்புகள் போன்றவை அரசின் ஆணைகளின்படித் தமிழில் பேணப் பட்டுவந்த போதிலும், பேச்சு வழக்கில் இன்னமும் ஆங்கிலம் இருந்து வருகிறது.

அட்டென்டன்ஸ்	சைன்	அர்ஜெண்ட்
லேட்	பர்மிஷன்	எஸ்.ஓ.
டெலிபோன்	மெமோ	அண்டர்செக்ரடரி
நோட்	பைல்	சீப்
பிரமோஷன்	இன்கிரிமெண்ட்	பப்ளிக்
பேப்பர்	ரிப்போர்ட்	ஆக்ஷன்
ஸ்டேட்மேண்ட்	பே (Pay)	சஸ்பென்ஸ்
அட்வான்ஸ்	லீவ்	டிஸ்மிஸ்
மெடிக்கல்லீவ்	சி.எல்	எக்ஸ்பிளனேஷன்
பண்டு	ஸ்கீம்	என்கொயரி
கேம்ப்	இன்ஸ்பெக்ஷன்	கமிஷன்
ஆபீஸ்	கான்பிரன்ஸ்	ரிபோர்ட்
மீட்டிங்		

எனப்பல ஆங்கிலச் சொற்களை அலுவலர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவை அனைத்திற்குமுரிய பதிவுகள் தமிழில் இருந்த போதிலும், பேச்சு வழக்கில் ஆங்கிலத்திலேயே புலப்படுத்தும் போக்குக் குறிப்பிடத்தக்கது. எனவே, அலுவலகங்களின் அன்றாட வழக்கிலும் ஆங்கிலம் தன் செல்வாக்கைச் செலுத்தி வருகிறது என்பதை அறியலாம். ‘அரசியலார் அலுவலகம், அறமன்றம் இங்கெல்லாம் அலுவல் பெற்றீர்! உரையனைத்தும் ஆங்கிலமோ[9]? எனப் புரட்சிக்கவிஞர் வினாத் தொடுத்தும், நிலைமை இன்னும் மாறவில்லை என எண்ணிட வேண்டியுள்ளது.

இ. பொழுது போக்கிடங்களில்

பள்ளி, கல்லூரி, அலுவலகங்கள் மட்டுமன்றிப் பொழுது போக்குமிடங்களிலும் ஆங்கிலச் சொற்கள் அன்றாட வழக்கில் மிகுந்திருத்தலை அறியலாம்.

வாக்கிங்	ஹலோ	ஜாக்கிங்
விஷ்	ஷாப்பிங்	ஸ்ட்ரெயின்
சைட்ஸீயிங்	ஹார்ட்அட்டாக்	டிரைவிங்
ஸ்விம்மிங்	ஹாக்கி	அப்பாயின்ட்மெண்ட்
டைவிங்	டென்னிஸ்	கிளப்
கிரவுண்டு	பார்ட்டி	பன்

மீட்டிங்ஹால்	ஸ்நேக்ஸ்	லெக்சர்
ப்ரெண்டு	ஸ்பீக்கர்	கம்ப்ளெய்ண்ட்
மேட்டர்	எய்ம்	ஸ்பீச்
ஸ்மால்	ரெக்ரியேஷன்	ஸ்விட்ச்
எபிளாய்மென்ட்	எய்ம்	லார்ஜ்

போன்ற ஆங்கிலச் சொற்கள் பொழுது போக்குமிடங்களில் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, மக்களால் ஆங்கிலச் சொற்கள் தடையின்றிப் பேசப்படுகின்றன. தமிழில் புரிந்த, தெரிந்த ஒரு பொருளைக் குறிப்பிடவும், விளக்கவும் ஆங்கிலமே பயன்படுத்தப்படுகிறது. இவ்விடங்களில் மொழியைப் பற்றிய சிந்தனைக்கு இடமில்லை என்றே கூறலாம். இதன் விளைவாகத் தாய்மொழியின் பயன்பாடு குறைந்து ஆங்கிலச் சொற்களின் வரவு அதிகமாகிறது.

ஈ. வீதிகளில் பேருந்துகளில்

தணிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை[10] எனக் கவலையுற்றார் புரட்சிக்கவிஞர். இன்றும் தமிழகத்தில் வீதிகளின் பெயர்கள் பலவும் பிறமொழிகளில் அமைந்துள்ளன.

லஸ்சர்ச் ரோடு	ஆர்மீனியன் ஸ்ட்ரீட்	பிளாட்
ஆண்டர்சன் ஸ்ட்ரீட்	அவென்யூ	பிளேட்
செக்டார்	அபார்ட்மென்ட்ஸ்	காலனி

என்பன வீதிகளையும், குடியிருப்புப் பகுதிகளையும் குறிப்பதற்காக வழங்கப்பட்டு வரும் ஆங்கிலச் சொற்கள். இவ்வாறு கூறும் வழக்கம் இன்னும் நீங்கவில்லை. வீதிகளில் உள்ள கடைகளில், நிறுவனங்களில் இன்னமும் ஆங்கிலப் பெயர்ப் பலகைகளே இருந்து வருகின்றன.

Readymade Shop-ஆயத்த ஆடையகம்
Jewellery-அணிமணிபொற்சாலை
Hardwares-இரும்புக்கடை
Hospital-மருத்துவமனை
Doctor-மருத்துவர்

Telephone Booth-தொலைப்பேசி இணைப்பகம்

Milk Booth-பாலகம்

இவை கடை வீதிகளில் வீற்றிருக்கும் ஆங்கிலப் பெயர்களுக்குச் சில சான்றுகள். இவ்வாங்கிலப் பெயர்களைத் தமிழ் எழுத்துகளில் எழுதி வைக்கும் முறை, மக்களின் தாய் மொழிப்பற்றின்மையையும், மொழியறிவின்மையையும் காட்டுவதாகவே உள்ளது. 'உணவு தரு விடுதிதனைக் கிளப்பென வேண்டும் போலும்! துணிக்கடைக்குச் சில்க்ஷாப் எனும் பலகை தொங்குவதால் சிறப்புப் போலும்![11] எனப் புரட்சிக்கவிஞர் எள்ளி நகையாடி எத்தனையோ ஆண்டுகள் கழிந்தன. இன்னமும் இனிய தமிழில் பெயர்ப்பலகைகள் வைக்கப்படாத நிலைதான் உள்ளது.

பேருந்துகளில் வழங்கப்படும் ஆங்கிலச் சொற்களைக் காண்போம்.

ஸ்டாப்பிங் பஸ்	செக்கிங் இன்ஸ்பெக்டர்	பிரேக்டவுன்
		டோக்கன்
புட்போர்டு	டிரைவர்	சேஞ்சு
கண்டக்டர்	ஓவர்டேக்	டெப்போ
டிக்கெட்	லெப்டு	டைம் கீப்பர்
ஸ்டேஜ்	ஜர்க்கிங்	ஹோல்டான்
ஸீட்	ஆக்ஸிடெண்ட்	பேட்டா
லேடீஸ்	விசில்	எக்ஸஸ் கலெக்ஷன்
அப்	பாஸ்	லாக்ஷீட்
டவுன்	பன்ச்	

பேருந்துத் தொடர்பாக மட்டுமே இத்தனை சொற்கள் இன்னமும் வழக்கில் உள்ளன. பேருந்தில் உள்ள டயர், கியர், ஸ்டியரிங், பிரேக், ஏர், டீசல் என்பன போன்ற பல சொற்கள் தொழில்நுட்பம் வாய்ந்தவையெனக் கருதப்பட்டு ஆங்கிலத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றன. பேருந்துத் தொடர்பான மேற்குறிப்பிட்ட பல சொற்களைத் தமிழில் தடையின்றிப் பேசமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஆங்கிலத்தை அகற்ற முயலா மக்கள் இத்தனை சொற்களை இன்னமும் வழங்கிவருகின்றனர்.

உ. இல்லங்களில்

இல்லங்களில் வழங்கிவரும் ஆங்கிலச் சொற்கள் அளவற்றன. காலை முதல் இரவுவரை மொழியோடு உறவாடும் மக்கள் தம் கருத்துகளைப் பிறர் புரிந்துகொண்டால் போதுமென்ற நிலையில் மொழிச் சிந்தனைக்கு உரிய இடமளிக்காது விடுகின்றனர். இதன் விளைவாக இல்லங்களிலும் அன்றாட வழக்கில் ஆங்கிலம் அரசோச்சுகின்றது. ஓர் இளைஞரின் ஒருநாள் வழக்கில் எத்தனை ஆங்கிலச் சொற்கள் இடம் பெறுகின்றன என்பதைச் சான்றாகக் காணலாம்.

ஈவினிங் வீட்டிற்கு வந்தேன். போர்டிகோவில் அமர்ந்தேன். அம்மா காபி கொடுத்தார்கள். பேஸ் வாஷ் பண்ணி, டிரஸ் சேஞ்ச் செய்தேன். என்னைப் பார்க்க என்னுடைய பிரண்ட்ஸ் வந்திருந்தனர். அவர்கள் சென்றபின் நோட்ஸ் எழுதினேன். பிறகு டிவி. பார்த்தேன். சாப்பிட்டேன். பெட்டுக்குப் போனேன், என நீக்கமற நிறைகிறது ஆங்கிலம். இல்லங்களில் பேச்சு வழக்கில் மட்டுமன்றிப் பயன்படுத்தும் பொருள்களில் எல்லாம் ஆங்கிலப் பெயர்களே அமர்ந்துள்ளன.

கரண்ட்	சேர்	பிரிட்ஜ்
பேன்	லைட்	கிரைண்டர்
பெல்ட்	ஸ்விட்ச்	நைப்
ஷர்ட்	லன்ச்	பைப்
வாட்ச்	டேபிள்	கனெக்ஷன்
ஜாக்கெட்	ஏ.சி.	ஒயர்
குக்கர்	கேஸ்	சிலிண்டர்

எனப் பயன்படு பொருள்கள் பலவும் ஆங்கிலச் சொற்களாலேயே இல்லங்களில் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் உணவு வகைகளில் எத்தனை ஆங்கிலச்சொற்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றெல்லாம் கணக்கிடலாம்.

அலாரம் அடித்தது; பெட்டைவிட்டு எழுந்தேன்; டாய்லெட் சென்று வந்தேன்; பல்துலக்கப் பிரஷ் எடுத்துப் பேஸ்ட் வைத்தேன்; பல் துலக்கினேன்; குளிக்கப்போனேன்; பாத்ரூமில் சோப் இருந்தது; டவல் இருந்தது; ஷவரில் குளித்தேன்; டிரஸ்செய்தேன்; சீப்பு எடுத்துத் தலை சீவினேன்; முகத்துக்குப் பவுடர் போட்டேன்; அம்மா டிபன் சாப்பிடக் கூப்பிட்டார்கள்; டைனிங் டேபிளில் அமர்ந்து

டிபன் சாப்பிட்டேன். இட்லி, சட்னி, பிளேட்டில் வைக்கப்பட்டிருந் தது. சாப்பிட்டேன், காலேஜுக்கு என்னுடைய ஸ்கூட்டரில் புறப் பட்டேன். குறுகிய காலத்தில் செய்யப்படும் இப்பணிகளில் இருபது ஆங்கிலச்சொற்கள் வழங்கப்பட்டுள்ளதை அறியலாம். பணிகளை முடித்து விட்டு வருகிறான். ஆங்கிலமும் தொடர்ந்து வருகிறது.

கார், வீடியோ, டேப்

என ஆங்கிலச் சொற்கள் வேறு வடிவெடுக்கின்றன. பாமர மக்களின் ஆங்கில மொழி அறிவின்மையும் ஆங்கில மொழிக் கலப்பிற்கு ஒரு காரணமாக உள்ளது.

பக்கெட்	பம்புசெட்
யூரியா	சர்வீஸ்

ஆகிய சொற்கள் போதிய மொழி அறிவின்மையாலும், கருத்தைப் புலப்படுத்தினால் போதும் என்ற நிலையிலும் பாமரர்களால் பயன் படுத்தப்படுபவை. மேலும் கொச்சை மொழிகள் 'வாயபயம்' 'போய்க் கினு வந்துக்கினு' 'குந்து' என்று திரித்து வழங்குவதும், ஜட்கா, ரஸ்தா, ரிக்ஷா போன்ற பிறமொழிச் சொற்களும் தங்கு தடையின்றி இடம் பெறுகின்றன.

ஆங்கிலச் சொற்களையும், பிறமொழிச் சொற்களையும் பயன் படுத்துவதில், கற்றார்க்கும், பாமரர்க்கும் வேறுபாடுண்டு. கற்றோர் பயன்படுத்தும்போது, தாய்மொழியில் அச்சொற்களுக்கு இணையான சொற்கள் இருப்பதை அறிந்தும், பிற மொழிச்சொற்களையே பயன் படுத்துவர். இவர்களுக்கு மொழி நம்பிக்கை குறைவு என்றே கருத லாம். 'பாலம்' என்று கூறுமிடத்து வேண்டுமென்றே **'Flyover'** எனக் கூறுவது இவர்களின் போக்கு.

ஆரஞ்சு	ஐஸ்கிரீம்	ஆப்பிள்
கேக்கு	சப்போட்டா	சாக்லெட்டு
பேரிக்காய்	பெப்பர்மெண்டு	ஒயின்
பிஸ்கட்	காப்பி	டோஸ்ட்
கொக்கோ	சோடா	சாலட் (சாலத்து)
ரைஸ்	ஸ்வீட்	

இவ்வாறு உண்ணும் பொருளில் மட்டுமன்றிப் பழக்க வழக்கங்களிலும் குடும்பப் பொருளாதார நிலைகளுக்கேற்ப ஆங்கிலச் சொற்கள் பழக்கத்தில் இருப்பதைக் காண முடிகிறது.

ஏ.சி. சேர்கார்	வீடியோ	கேஸட்
ஸ்கிரீன்	டின்னர்	தியேட்டர்

எனும் ஆங்கிலச் சொற்கள் நமது வாய்மொழியாக உலவுகின்றன. பாமரர் வாய் மொழியில் இவற்றில் சில 'பாலம்' என்ற சொல் போதிய முறையில் பிளை ஓவரை விளக்குமா என்பது இவர்களுக்குள்ள ஐயப்பாடு. ஆனால் பாமரர்கள் தாய்மொழியில் மிகுந்த அறிவுடையவர்கள் அல்லர். மொழியைப் பற்றியும், அதன் பயன்பாட்டைப் பற்றியும் போதிய தெளிவற்றவர்கள். ஒருவன் தப்பித்தான், ஓடிவிட்டான் என்பதை, 'ஜகா வாங்கினான்' என்று கூறினாலே போதுமென்று எண்ணுபவர்கள். இவர்கள் வாழ்வில் மொழிச்செம்மைக்கு இடமில்லை. இதனால் பிறமொழிச் சொற்கள் இவர்களிடம் பெருமளவில் புழங்கத் தலைப்பட்டன என்றால், நகர மக்களின் தவறான சொற்புணர்ப்புச் செயன்மைகளே காரணம்.

தமிழில் அன்றாட வழக்கில் கலக்கும் ஆங்கிலச் சொற்களில் தொழில் நுட்பச் சொற்களும், வாணிகச் சொற்களும் மிகுந்த அளவில் இடம்பெறுகின்றன. ஆங்கிலத் தொழில் நுட்பங்களின் வரவாலும், வாணிகப் பொருள்களின் வரவாலும் இந்நிலை தோன்றுகிறது. கம்ப்யூட்டர் என்னும் கணினி வரவாலும் இணைப்பாலும் குறைந்தது நூறு ஆங்கிலச் சொற்கள் நிலைபெறும். இக்காரணங்களையும் கடந்து தமிழ்ச்சொற்களை வாழ்விக்க வேண்டும். அதுவே மொழி உரிமை என்கிறார் மு.வ.[12] மென்மை குறைந்த ஆடையாக இருந்தா லும் நம் நாட்டு ஆடையை உடுத்துவதே நாட்டுப்பற்று என்று அன்று உணர்ந்தோம். அதுபோலவே ஆங்கிலம் போல் திறம்பட எழுத முடியாவிட்டாலும், தமிழில் நடத்துவதே உரிமையுணர்ச்சிக்கு அடையாளம் என்று உணர வேண்டும்.[13] எனக் குறிப்பிடுகின்றார்.

4. தமிழில் கலந்துள்ள ஆங்கிச் சொற்களின் பொதுப் பட்டியல்

தமிழில் பெருமளவில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களை வழக்கு நோக்கித் தொகுத்தறியலாம்[14]

அங்கிள்	அட்வெர்டைசர்	அட்டாக்
அடிஷனல்	அண்டர்கிரவுண்டு	அண்டர்வேர்
அப்ளாஸ்	அபார்ஷன்	அம்ப்பயர்
அயர்ன் பாக்ஸ்	அர்ஜென்டு	அரேஞ்ச்மென்ட்
அலர்ஜி	அவுட்சைட்	அசிஸ்டெண்ட்
ஆக்டர்	ஆக்ஷன்	ஆட்டம்பாம்
ஆட்டோகிராப்	ஆட்டோமொபைல்ஸ்	ஆஃப்
ஆப்பரேஷன்	ஆடியோசென்ட்டர்	ஆம்லெட்
ஆப்செட்பிரஸ்	ஆர்ட்பிரிண்டர்ஸ்	ஆல்ரைட்
ஆர்ட்ஸ் காலேஜ்	ஆஷ்டிரே	ஆன் பண்ணுதல்
இங்க்பாட்டில்	இன்சூரன்ஸ்	இன்ச்டேப்
இன்ஜெக்ஷன்	இன்ஜினியர்	இன்ஸ்டிடியூட்
ஈவினிங்	ஈஸி	உல்லன்
எக்கோ	எக்ஸ்கியூஸ்	எக்ஸ்பர்ட்
எஞ்சின்	எடிட்டர்	எம்.எல்.ஏ.
எம்பிராய்டரி	எம்ப்ளாய்மெண்ட்	எக்சேன்ஜ்
எம்போரியம்	எம்.பி.	எமெர்ஜென்சி
எலக்ட்ரானிக்ஸ்	எலக்ட்ரிக் ட்ரெயின்	எலாஸ்டிக்
எலெக்ஷன்	எவர்சில்வர்	என்.ஜி.ஓ.
என்.சி.சி	எனாமல்	எஸ்டிமேட்
எஸ்டேட்	ஏர்கண்டிஷண்டு	ஏர்லைன்
ஏரியா	ஏஜென்ட்	ஐ.ஏ.எஸ்.
ஐகோர்ட்	ஐட்டம்	ஐடியா
ஐரோடு	ஐ.ஜி	ஐஸ்
ஐஸ்கிரீம்	ஓய்ப்	ஓயர்
ஓரிஜினல்	ஓ.கே.	ஓல்டேஜ்
ஓவர் ஆயிலிங்	ஓவர்டேக்	ஓவர்லுக்
க்யூ	க்ராக்	க்ராப்
க்ராஸ்	க்ரீம்	கிரீஸ்
க்ரைண்டர்	க்லாஸ்	க்ளிப்
க்ளீன்	க்ளைமாக்ஸ்	கசின்
கட்டிங்பிளேயர்	கட்பீஸ்	கண்டிஷன்
கம் (பிசின்)	கம்ப்ளெய்ண்ட்	கம்பவுண்டர்
கம்யூனிஸ்ட்	கமெண்ட்டரி	கர்ச்சிப்

கரண்ட்	கலர்	கலெக்டர்
கவர்னர்	கண்ட்ரோல்	கன்ஸ்யூமர்
கஸ்டம்ஸ்	காட்டன்	காம்பவுண்டு
கார்	காலண்டர்	காலிஃப்ளவர்
கான்ட்ராக்டர்	கான்வென்ட்	காஸ்ட்லி
கிக்	கிரிக்கெட்	கிலோகிராம்
கிலோமீட்டர்	கீ	குருடாயில்
குவார்ட்டர்ஸ்	கூல்ட்ரிங்க்ஸ்	கூலிங்கிளாஸ்
கேக்	கேன்ட்டின்	கேமிரா
கேரம்போர்டு	கேஸ்	கைடு
கொக்கோ	சப்ளை	சம்திங்
சர்க்கஸ்	சர்ட்	சர்வேயர்
சலூன்	சவுண்டு	சாக்லேட்
சார்	சாலரி	சான்ஸ்
சிக்னல்	சிகரெட்	சிட்பண்ட்
சில்க்	சிலிண்டர்	சீசன்
சீல்	சீன்	சூட்கேஸ்
சூப்பர்மார்க்கெட்	செக்	செட்டில்மெண்டு
செயின்	செஸ்ட்	செஸ்
சைடு பிசினஸ்	சோபா	ட்யூப்லைட்
ட்ரம்	ட்ரா	ட்ராபிக்
ட்ராமா	ட்ரிம்	ட்ரை
டம்ளர்	டவல்	டாக்ஸி
டாப்	டாய்லெட்	டார்ச்
டயல்	டான்ஸ்	டிப்ஸ்
டிபன்பாக்ஸ்	டிமாண்ட்	டிலே
டெய்லர்	டெய்லி	டென்னிஸ்
டேபிள்	டொனேஷன்	டோக்கன்
டௌட்	திக்	நம்பர்
நர்ஸ்	நர்ஸரி	நர்ஸிங்ஹோம்
நார்மல்	நியூஸ்	நெக்லஸ்
நெய்ல்பாலீஷ்	ப்ரெசன்ட்	ப்ரஷர் குக்கர்
பிரெட்	ப்ரேயர்	ப்ரோக்கர்
ப்ளக்	ப்ளாட்	ப்ளாக்

ப்ளாஸ்டிக்	ப்ளேடு	கஃப்ராடு
பட்டன்	பர்ஸ்	பவுஃபுல்
பவுடர்	பாண்டு	பாத்ரூம்
பாய்லர்	பார்	பால்பென்
பாலிடெக்னிக்	பாலித்தீன்	பாலிஷ்
பிசி	பில்	பிஸ்கட்
பீட்ரூட்	பீன்ஸ்	பீஸ்
பெயிண்ட்	பென்ஷன்	பேஷண்ட்
பைப்	போட்டோ	போலீஸ்
போன்	மக்	மஃப்ளர்
மாடல்	மிக்சர்	மிக்ஸி
மிஸ்டர்	மூட்	மெடிக்கல் ஷாப்
மெயின்ரோடு	மெஸ்	மேடம்
மைக்	மொசேயிக்	யூ.கே.ஜி
யூஸ்லெஸ்	ரசீது	ரப்பர்
ரவுடி	ரவுண்டு	ரஷ்
ராஸ்கல்	ரிசப்ஷன்	ரிசர்வேஷன்
ரிப்பேர்	ரியல்எஸ்டேட்	ரிலீஸ்
ரூம்	ரெடி	ரெஸ்ட்
ரேட்	ரேஷன்	ரைட்
ரைஸ்மில்	ரோஸ்மில்க்	லக்
லாட்ஜ்	லாரி	லிட்டர்
லிப்ஸ்டிக்	லிஃப்ட்	லிஸ்ட்
லூப்	லூஸ்	லெட்டர்
லேட்	லைசென்ஸ்	லோன்
வயரிங்	வாட்ச்	வாலிபால்
விக்	விசா	விசில்
விட்டமின்	வில்லன்	வீக்
வெராந்தா	வெரிகுட்	வேன்
வேஸ்ட்	ஜாம்	ஜாலி
ஜீன்ஸ்	ஜஒஸ்	ஜெயில்
ஷட் அப்	ஷட்டர்	ஷாம்பு

ஷிப்ட்	ஷூ	ஷோரூம்
ஸ்கிரீன்	ஸ்டவ்	ஸ்டுடியோ
ஸ்டோர்	ஸ்பீக்கர்	ஸ்பீடு
ஸ்லிப்பர்ஸ்	ஸ்லோ	ஸ்வெட்டர்
ஸூப்பர்	ஹலோ	ஹால்டிக்கட்
ஜெயில்		

ஆங்கிலச் சொற்களின் பட்டியல், ஆங்கிலம் செல்வாக்கால் ஊடுருவிக் கொண்டிருப்பதை மெய்ப்பிக்கிறது எனினும், நமக்குரிய மொழிச் சிந்தனை சீரமைக்கப்பட வேண்டும் என்பதையும் உய்த் துணர வழிகாட்டுகிறது.

இன்றைய நிலையில், தமிழர் பிற மொழிகளைப் பழித்துப் பேசி யும் வெறுத்துப் பேசியும் ஆறுதல் அடைவதில் பயனில்லை. பிறரை வெறுப்பதில் உள்ள ஆர்வத்தில் ஒரு பாதியாவது நம்மவரை விரும் புவதில் உள்ளதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். பிறமொழி யைப் பழிப்பதில் உள்ள ஊக்கத்தில் கால்பங்காவது தம்மொழி யைப் போற்றுவதில் உள்ளதா என்று கவனித்துக்கொள்ள வேண்டும். கடைத்தெரு முதல் பல்கலைக்கழகம் வரையில் தமிழர்க்குத் தமிழ் மொழியில் பற்று உள்ளது என்பதற்குச் சான்றுகள் வேண்டும். நான்கு பேர் கூடினால் தமிழ் பேசக் கூசுவது, தமிழில் கடிதம் எழுத நாணு வது, தமிழைப் போதனை மொழியாகக் கொள்ளத் தயங்குவது ஆகிய இவற்றையே இன்று தமிழகம் காண்கிறது.[15] என மு.வ. மொழியும் கருத்துகளின் வழி நமது மொழிச் சிந்தனையைச் செம்மைப்படுத்த வேண்டிய காலகட்டத்தில் நாமிருக்கிறோம் என்பதை மறுக்க இய லாது; மறக்கவும் இயலாது. மொழிக்கலப்பு, மொழித்தூய்மை பற்றி நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் கூறியுள்ள கருத்துகளும் நமது மொழிச் சிந்தனைக்குப் புதிய வழித்தடம் அமைப்பனவாக உள்ளன. ‘வழுமலிந்து முடிவு ஒவ்வாக் கீழ்மக்கள் கொச்சைக் குழறலை மொழிநலம் விரும்புவோர் நல்ல தமிழெனக் கொள்ள இசையார். மாரிக்காலத்து நீரில் கத்தும் தவளை போலச் சந்தையில் தெருவில் மக்கள் பேசும் சழக்குரை எல்லாம் தமிழெனக் கொண்டால், அழகிய எழுத்தும், ஐந்து இலக்கணமும் நிரம்பிப் பழுத்த செந்தமிழ் பாழாய்ப்

போய்விடும். பல பத்திரிகை வித்தகர்கள், 'செலாவணி' செய்யும் புதிய மொழிநடை, கால்முடமும், உடல் நோயும் காட்டுகிறது. அது போதாமல் இலக்கணத்தை எரித்துவிட்டு ஊரார் பேசுகிறபடி எழுது வதே நல்ல தமிழ் என்று சிலர் கூசாமல் கூறவும் கேட்கிறோம். இவர் கள், 'யார் பேசுகிறபடி எழுதவேண்டும் என விளக்குகிறார்கள் இல்லை. ஊர்தோறும் பேச்சு வேறுபடுகிறதே. ஓர் ஊரிலும் வகுப்புவாரியாக, தொழில்வாரியாக, இனவாரியாக உருவழிந்து, பல்வகை மொழிகள் உலாவுகின்றனவே. ஒலி உருவும், வரி வடிவும் அற வேறுபட்ட எழுத்து களின் இயைபும், பயனும் அறியாமல் எல்லாம் குழம்பிக் கதம்ப நடை தொடுப்பதைக் காணுகிறோம். வல்லின 'ற' கரத்தையும் சிறப்பு 'ழ' கரத்தையும் நாடாமல் நாடு அகற்றி, 'ர' கர 'ள' கரங்கட்கே ஊராண்மை தருபவர் பலர் ஆவர். 'நாகரிக உலகில் எந்த மொழி யிலும் வழுமலியப் பேசும் வகுப்பார் உண்டு. ஆனால் அவர் பேச்சு எதுவும் எழுத்தாளர் கொள்ளமாட்டார். 'வலைச்சியர் புலை மொழி' (BILLINGS GATE) போன்ற கொச்சைமொழிகளை மேல்நாட்டார் இகழ்ந்து விலக்குவதை யாவரும் அறிவர். அம்மொழிமரபு அறிந்தோ அறியா மலோ கேட்போர் கேட்பதைக் கேட்டபடிக் கொள்வதே தமிழ் வளர்ப் பதாகும் எனத் துணியும் தமிழ்ப்புலமையை வியப்பதா நகைப்பதா என்பதைத் தமிழர்களே தேர்ந்து தெளியட்டும்'.

ஆங்கிலம் முதலிய கலைச்செல்வம் நிறைந்த புதிய உயர் மொழி யிலுள்ள வளங்களையும் எழில்களையும் தமிழ்மகள் அடைந்து, புதிய பெருவாழ்வு பெற்று முன்னிலும் சிறந்தோங்கச் செய்வது நம் கடன். எனினும் அவ்வளங்களும் எழில்களும் நிரம்பத் ததும்பும் ஆங்கிலத்தைக்கூடக் கட்டாயப் பாடமாக வைத்திருப்பது தவறு. எல்லாக் கலைகளையும் அறிவையும் தாய்மொழியில் மட்டுமே கற் பித்தல் வேண்டும் என்று வாய்ப்பறையறைந்த தலைமக்களே, திடீ ரென்று கலைநலமும் மொழிவளமும் எனைத்தளவுமில்லாத இந்தி, இந்தியருக்கும் பொதுமகளாதற்குரியள் என நம்மிளைஞர்க்குப் போதிப்பதுடன், நம்மவர் உதவியால் தாம் பெற்றுள்ள புதிய பதவி யையும் இந்திக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றார்கள். இது நன்றோ? இதைப் பார்த்திருத்தலும் நன்றோ? அளவற்ற பொறுமை ஆண் மைக்கு அழகு தராது.[16]

இவ்வியலில் அளிக்கப்பட்ட ஆங்கிலச்சொற்களின் பட்டியலி லிருந்து நாம் பின்வரும் கருத்துகளைப் பெறலாம்.

1. ஆங்கிலச் சொற்கள், கல்வி, வாணிகம், தொழில் நுட்பம் ஆகி யவற்றைக் கால்கோளாகக் கொண்டு தமிழில் கலக்கின்றன.
2. சில ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் இருந்தும், மக்கள் வழக்கில் ஆங்கிலச் சொற்களே நிலவி வரு கின்றன. (எ.டு.) கல்லூரி - காலேஜ், பேருந்து - பஸ், நிறுத்தம் - ஸ்டாப்.
3. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் உரு வாக்கப்படாமையால், அவ்வாங்கிலச் சொற்கள் வழக்கில் நீண்ட காலம் வழங்கப்பட்டு வருகின்றன. அம்பயர், எலாஸ்டிக், எனா மல், ஒயர்.
4. சில ஆங்கிலச் சொற்களுக்கு உருவாக்கப்படும் தமிழ்ச்சொற் கள் வழக்கில் வருவதற்குக் கடினமாக இருப்பதாலும், அவ்வாறு வழக்கில் வருவதற்கு நீண்ட காலமாவதாலும் ஆங்கிலச் சொற் களே நீடித்து வருகின்றன.

   (எ.டு.) இன்ச்டேப் - விரற்கிடைவார்
   ஏஜென்சி - முகவாண்மை
   ஐஸ் - பனிகம்
   ஐஸ்கிரீம் - பனிப்பாகு

இவ்வியலின் முடிப்பாகச் சில கருத்துகளைத் தெள்ளிதின் உணரலாம்.

1. ஆங்கில மொழிக்கலப்பு என்பது, ஆங்கில மொழியின் செல் வாக்கால் மட்டுமன்றித் தமிழ் மக்களின் ஆங்கில மோகத் தாலும் நிகழ்கிறது.
2. தமிழகக் கல்வி முறையில் ஆங்கிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பேரிடம், தமிழ்வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.
3. பிறமொழி எதிர்ப்பால் மட்டுமே தமிழின் வளர்ச்சி நிகழ்ந்து விடாது, பிறமொழியை எதிர்க்கும் நிலைகளிலும் களங்களிலும் தமிழை நிலைப்படுத்தி, வழக்கில் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

4. அறிவியல், தொழில் நுட்பங்கள் ஆங்கிலத்தின் வழியே நம் மொழிக்கு வரும்போது, அவற்றைத் தமிழ்ப்படுத்தி அறிமுகப் படுத்தவும், ஆளவும் முயல வேண்டும்.

5. புதிய கலைச் சொல்லாக்கங்களும், மக்கள் சுணக்கமின்றி ஏற்கத் தக்க மொழிபெயர்ப்புகளும் பிறமொழிக் கலப்பைத் தடுக்க உதவி செய்வன. இம்முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

6. மொழிக் கலப்பைத் தடுக்கத் தமிழில் தொன்மையில் வழங்கப் பட்டு, இன்று வழக்கிழந்து போயிருக்கும் அரிய சொற்களை மீண்டும் வழங்கத் தலைப்படல் வேண்டும்.

7. உலக அறிவியல், பொருளாதார, வாணிக முன்னேற்றத்தில் நாமும் கலந்து பயன்பெறத் தக்க வகையில் தனித் தன்மையை இழக்காத, பிறமொழியைப் பயன்கருதி மட்டும் ஏற்கும் நிலைக்கு நமது மொழிச் சிந்தனை செம்மைப் படுத்தப்படவேண்டும்.

குறிப்புகள்

1. நிர்மலா சுரேஷ், மொழியும் அதன் வாழ்வும், ப. 47
2. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழும் பிற பண்பாடும் ப. 79
3. ஆனந்த விகடன், வார இதழ், 1.12.91 - ப. 51
4. தினம் தினம் திகில், க்ரைம் நாவல், பிப்ரவரி 91. ப. 16
5. மு. வரதராசன், மொழிப்பற்று பக். 10 - 12.
6. மு. வரதராசன், மொழிப்பற்று ப. 20
7. மு. வரதராசன், மொழிப்பற்று ப. 22
8. மு. வரதராசன், மொழிப்பற்று ப. 38
9. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13
10. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13
11. பாரதிதாசன், தமிழியக்கம், ப. 13
12. R.P. Sethupillai, Words and thier significance & Tamil - Literary and Colloquial - (p.p) 38, 39, 40.
13. மு. வரதராசன், மொழிப்பற்று, ப. 45.
14. ப. அருளி அயற்சொல் அகராதியிலிருந்து தொகுக்கப் பெற்றவை.
15. மு. வரதராசன், மொழிப்பற்று, ப.19
16. ச. சோமசுந்தரபாரதியாரின் தமிழிலக்கியப்பணி, ப. 25

அன்றாட வழக்கில் வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது மொழிச்சொற்கள்

1. மொழிக் கலப்பும் அன்றாட வழக்கும்
2. வடமொழி வழக்குகள்
3. இந்தி
4. தெலுங்கு
5. மலையாளம்
6. கன்னடம்
7. உருது
8. அரபு
9. பாரசீகம்
10. மராத்தி
11. இந்துஸ்தானி
12. பிறமொழிகள்

1. மொழிக்கலப்பும் அன்றாட வழக்கும்

இரு மொழிகள் கலக்கும்போது, எது செல்வாக்கு உடையதாக இருக்கும் எனக் கூறுவது அரிது. இரண்டும் பேச்சு மொழியாக ஒத்த நிலையில் இருப்பின், நெடுங்காலம் வரையில் படிப்படியாகக் கலப்பு நிகழ்ந்தவாறே இருக்கும். எழுத்து வழக்கற்ற பேச்சு மொழியாக ஒன்றும். மற்றொன்று பேச்சு வழக்கற்ற எழுத்து மொழியாகவும் இருப்பின், முன்னது விரைவில் மாறும்; புதுமொழியாக உருப்பெறும் ஒன்று எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் உடைய மொழியாகவும், மற்றொன்று பேச்சு வழக்கு அற்ற மொழியாகவும் இருப்பின். முன்னது பல சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ளும்; பின்னது ஒரு சில சொற்களையே கடன் வாங்கும். வடமொழியில் தமிழ்ச் சொற்கள் ஒரு

8

சில மட்டும் இருத்தற்கும், தமிழில் வட சொற்கள் பல புகுந்தமைக்கும் காரணம் இதுவே.[1]

இவ்வாறு படிப்படியாக நிகழும் மொழிக்கலப்பு, எழுத்து மொழியில் இடம்பெற நீண்ட காலமாகும். பேச்சு மொழியிலோ விரை வில் இடம் பற்றி வழக்கில் இருக்கும். இவ்வாறு பேச்சுமொழி வழக்கில் இருக்கும்போதே, தாய்மொழியில் தோன்றிய சொல்லாக்கத்தின் எதிர்ப்பால் பிறமொழிகள் மறைந்தும் போகும்.

ஜனம்	-	மக்கள்
ராஜா	-	அரசன்
அபேட்சகர்	-	வேட்பாளர்
ஓட்டு	-	வாக்கு
ஓட்டர்	-	வாக்காளர்
விருக்ஷம்	-	மரம்
கேசம்	-	முடி, மயிர்
அசலம்	-	மலை

மேற்குறிப்பிட்ட சொற்களில் வடமொழிச் சொற்கள், பழைய தமிழ்ச் சொற்களை மீண்டும் பயன்படுத்தியதாலும், புதிய சொல்லாக்கங்களா லும் வழக்கொழிந்து விட்டதை அறியலாம். மொழிக்கலப்பு நிகழும் போது மக்களின் நம்பிக்கையின் வழியாகச் சென்று கலக்கும் பிற மொழிச் சொற்கள் நீண்ட காலம் உயிர்வாழ நேரிடுகிறது. இதே போன்று வாணிக வழியில், அறிவியல் வழியில் நுழையும் சொற்களையும் அகற் றுவது ஒரு மொழிக்குக் கடினமாகும். மொழிக் கலப்பு நிகழ்ந்த தமிழ் மொழியிலும் இவ்வாறே எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பிற மொழிச் சொற்கள் கலக்க நேர்ந்துள்ளது. இவை எழுத்து வழக்கில் குறைவாக இருப்பினும், பேச்சு வழக்கில் இன்றும் வழங்கப்பட்டு வரு கின்றன. இவ்வாறு வழங்கப்பட்டு வரும் பிறமொழிச் சொற்களை இவ்வியலில் ஆய்ந்தறியலாம்.

2. வடமொழி வழக்கு

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் செய்திகள் பலவற் றையும் தத்தம் தாய்மொழிகளில் எழுதிய சான்றோர்கள் ஒவ்வொரு துறையிலும் சிறப்பாகவும், விரிவாகவும் குறிப்பிட வேண்டிய செய்தி கள், இந்திய எல்லையில் அனைவருக்கும் பயன்படல் வேண்டு

மென்ற கருத்தால் அவற்றை வடமொழியில் வரைந்தனர். மேலும் வானியல், சிற்பம் போன்றவற்றின் கலைச்சொற்கள் பலவும் வட மொழியிலேயே கொள்ளப்பட்டுத் தத்தம் மொழிகளுக்கு ஏற்பச் சில திரிபுகளுடன் இந்திய நாட்டில் பன்மொழி பேசும் பல்வேறு பகுதியின ரின் தாய்மொழிகளிலும் ஏற்கப்பட்டன. இம்முறையில் வடமொழிச் சொற்கள் பல அப்படியேயும், சிறிது திரிந்தும், தமிழிலும் வழங்கப் பட்டன. இன்று வழங்கும் விண்மீன்களின் பெயர்களும், மாதங்களின் பெயர்களும், வடமொழியிலிருந்து தமிழொலிக்கேற்பச் சிறிது திரித் தும் திரிக்காமலும் கொள்ளப்பட்டன. இற்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகத் திகழும் தொல்காப்பியத்திலும், மாதப் பெயர்களும் விண்மீன்பெயர்களும் ஏற்கப்பட்டன என்று கருது வாரும் உளர். சொல்லமைப்பிலும், சொற்றொடர் அமைவிலும் வடமொழியைப் பின்பற்றிய முறைகளும் உண்டென்றும் சிலர் எழுதி னர். இவ்வாறு தொன்றுதொட்டே வடமொழி தமிழின் மீது வல்லாண்மை செலுத்திக் கலப்பு நிகழ்த்தும் மொழியாக இருந்து வந்துள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் தமிழை ஆட்சி மொழியாக ஏற்றிருந்த போதிலும், வடமொழியின் வரவுக்கு வழிவகுத்தனர். வட மொழியின் வழியாகப் புகுத்தப்பட்ட சமயம், சோதி டம் போன்ற நம்பிக்கைகள் மன்னர்களுக்கு மகிழ்வூட்டும் கலைகளாக இருந்தன. இத்துறைகளில் வல்ல பல வடமொழியாளர்களைத் தமிழ் மன்னர்கள் காத்து, அவர்கள் மொழி தமிழகத்தில் பரவிடவும் வழி வகுத்தனர். ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் நிகழ்ந்த தமிழ்க் காப்புப் போராட்டம் வடமொழிக்கலப்பைத் தடுக்க முயன்றது. இருப் பினும் மணிப்பிரவாள உருவில் வடமொழிக் கலப்பு நிகழ்ந்து கொண்டே இருந்தது. இந்நூற்றாண்டில் தோன்றிய திராவிட இயக்கம், தமிழ்மொழி, இனம், பண்பாடு, கலை ஆகியவை பிறமொழித் தாக் குரவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் எனப் பொங்கி எழுந்தது[2] இதன் விளைவாக மேலும் பிறமொழிக் கலப்பு நிலை தடுக்கப்பட்டது. இருப்பினும், அன்றாட வழக்கில் கலந்துவிட்ட வடமொழிச் சொற்கள் கடவுள் நம்பிக்கை வழிவந்தவையாகவும், சோதிடக் கலை வழி வந் தனவாகவும் இருந்தமையால், அவற்றை எளிதில் நீக்க இயலாத நிலை உள்ளது. இவற்றை நல்லன எனக்கருதி மக்கள் ஏற்றுக் கொண்டதும் ஒரு காரணமாக உள்ளது. மக்கள் ஏற்றுக் கொண்டமைக்கான கார ணத்தை இரா. இராகவையங்கார் 'தமிழ்மொழியுள் ஆரியச் சொற்கள்

நேரேயும் திரிந்தும் சிதைந்தும் மற்றைத் திசைச் சொற்களினும் மிகுதியாக வழங்கியதற்குக் காரணங்கள் அடுத்துப் பயின்ற திசைத் தொடர்பு மட்டுமல்லாது, அறிவு ஒற்றுமையும், மனக்கோட்பாட்டிற்குப் பெரிதும் ஏற்றபெற்றியும், எம்மொழியிலும் அதன் கண்ணுள்ள நல்லவெல்லாவற்றையும் கொள்ளும் சிறந்த பெருநோக்கமும் ஆகுமென்று துணிவது தகும்[3] எனக் குறிப்பிடுவதைக் கருத்தில் கொள்ளலாம்.

கடவுள், கோயில் தொடர்பாக இன்றும் தமிழகத்தில் வழங்கப்பட்டு வரும் வடமொழிச் சொற்களைக் காண்போம்

வடமொழி

பிரகாரம்	பார்வதி	பூஜை
தீபாராதனை	புனஸ்காரம்	அங்கப் பிரதட்சணம்
புஷ்பம்	எதேஷ்டம்	உற்சவம்
மூலவர்	பிரபை	ஞானம்
நைவேத்தியம்	பிரசாதம்	ஈசுவரன்
பிரதிஷ்டை	பிரம்மா	பஞ்சலோகம்
விஷ்ணு	விக்ரகம்	லஷ்மி
ஆத்மா	சரஸ்வதி	விபூதி
குங்குமம்	திதி	கலசம்
மகோத்ஸவம்	பஞ்சாமிர்தம்	கும்பாபிஷேகம்
ஸஷ்டி	சுபம்	விரதம்
கும்பம்	நவக்கிரகம்	பிரதிமை
சனீஸ்வரன்	சாஷ்டாங்கம்	தீர்த்தம்
நவலோகம்	ஜலம்	அலங்காரம்
அஷ்டம்	அர்த்தஜாம பூஜை	தூபம்
அந்திம பூஜை	தூப தீபம்	தீட்சிதர்
அர்ச்சகர்	பாகவதர்	அர்ச்சனை
தேவன்	அஷ்டமி	நவமி

என மிகப்பல வடமொழிச் சொற்கள் இன்றும் அன்றாட வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. இவை மக்களின் இறை நம்பிக்கையைக் கால்கோளாகக் கொண்டு புகுத்தப்பட்டமையால், இன்னும் நீங்கா நிலையில் உள்ளன.

சோதிடம் என்பது காலக்கணக்காகக் கருதப்பட்டாலும், இத னால் புகுத்தப்பட்ட வடமொழிச் சொற்கள் மிகப்பலவாகும்.

ஜோசியம்	கஷ்டகாலம்	ஜாதகம்
கிரகப்பிரவேசம்	நட்சத்திரம்	கிரகணம்
ராகு	திசை	கேது
புத்தி	லக்னம்	பலன்
ஓரை	நிமித்தம்	விவாஹம்
சகுனம்	திவசம்	ராசி
சுக்கிரன்	பாட்டிமை	கேட்டை
அமாவாசை	பஞ்சாங்கம்	அனுகூலம்
கிருத்திகை	போகம்	ஆயில்யம்
ஜென்மநட்சத்திரம்	மகம்	கடகம்
பூராடம்	தனுசு	உத்திராடம்
விருச்சிகம்	சித்தம்	மீனம்
யோகம்	துலாம்	துவாதசி
அபிஷேகம்	பஞ்சமிதிதி	

இவ்வாறு சோதிடத் துறையால் புகுத்தப்பட்ட வடமொழிச் சொற்கள் பலவாகும். இவையனைத்தும் மக்களின் சோதிட ஆர்வத்தைக் கால் கோளாகக் கொண்டு தமிழில் நுழைந்தவை.

திருமணத் தொடர்பாக வடசொற்கள் வருமாறு

கரணம்	ஜானவாசம்
சேவித்தல்	ஆசீர்வாதம்
கங்கணம்	மாங்கல்யம்
ஓமம்	சேஷை
அட்சதை	பிரகாரம்
அருந்ததி	விவாக சுபமுகூர்த்தம்

தமிழ் ஆண்டுகள் என்று பெருவழக்காகச் சொல்லப்படும் அறுபது ஆண்டுகளும், ஆண்டில் பன்னிரு மாதங்களும் வடமொழிச் சொற்களே. கிழமைகளாக வழங்கப்படுபவற்றுள்ளும் பெரும்பான் மையின வடமொழிச் சொற்களே, அன்றாட வாழ்வில் இவற்றை வழங் காமல் நீக்குவது எளிதானதல்ல. நம்பிக்கை வழியாக மட்டுமின்றி, வடமொழியாளர் தொடர்பால் புகுந்த் ஏராளமான சொற்கள் இன்றும்

வழக்கில் உள்ளன. நகர்ப்புறங்களில் ஆங்கிலக் கலப்பு இருந்து வருவதால், வடமொழிக் கலப்புக் குறைகிறது. ஆங்கிலத்தின் வரவால் வடமொழி மறைவதில் தமிழுக்குப் பயன் விளையாது. பிறமொழி கள் இரண்டும் கலப்பு நிகழ்த்தும் நிலையில்தான் தமிழின் அன்றாட வழக்கு இயங்கி வருகிறது என்பதைக் கருத வேண்டும்.

அக்ரகாரம்	அக்ரமம்	அக்கினி
அகடவிகடம்	அகதி	அக்கினிப் பிரவேசம்
அகந்தை	அகஸ்மாத்து	அகாலம்
அகிம்ஸை	அகிலம்	அகோரம்
அங்கஹீனம்	சேஷ்டை	வஸ்திரம்
அங்கீகாரம்	அசடு	சந்தர்ப்பம்
அசந்தர்ப்பம்	அனந்தகோடி	அசம்பாவிதம்
அசாதாரணம்	அசிங்கம்	அஜீரணம்
அசுரன்	அசுத்தம்	சௌக்கியம்
அசௌக்கியம்	நமஸ்காரம்	அட்சதை
அட்டகாசம்	அத்தாட்சி	அத்தியாயம்
அத்தியாவசியம்	தர்மம்	அதர்மம்
அதிசயம்	அதிபதி	சதிபதி
அதிபர்	அதிர்ஷ்டம்	அதிருப்தி
அதோகதி	அந்தரங்கம்	அந்தஸ்து
அந்திமம்	அந்நியன்	அநாதை
நாமம்	அநாமதேயன்	அபிஷ்டு
அநியாயம்	அநீதி	அப்பாவி
அப்பிராணி	அபகரித்தல்	அபசாரம்
அபத்தம்	அபயம்	அபராதம்
அபலை	அபாண்டம்	அபாயம்
அபிப்பிராயம்	அபிவிருத்தி	அபூர்வம்
அம்சம்	அம்பிகை	அம்புஜம்
அமங்கலம்	அமிர்தம்	அமோகம்
அயோக்கியன்	அர்த்தபுஷ்டி	அர்த்தம்
அரிதாரம்	அலங்காரம்	அலட்சியம்
அவகாசம்	அவசரம்	அவசியம்
அவதாரம்	அவதானம்	அவலட்சணம்
அவஸ்தை		

எனப்பல வடமொழிச் சொற்கள் அன்றாட வழக்கில் மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப வருதலை அறியலாம். எனவே, தமிழில் கலந்த பிறமொழிச் சொற்களில் வடமொழியே முதன்முதலில் மிகுதி யான சொற்களைக் கலந்தது.

வடமொழியோடு நெருங்கிய தொடர்புடையன பிராகிருத மொழி களாகும். தமிழும் பிராகிருதமும் என்ற கட்டுரையில் அக்கி, அத்தம், இசை, உவச்சன், ஊராண்மை, ஐயர், ஓமாலிகை, கப்பம், கண்ணன், கலுழன், காமம், கோட்டி, சதுக்கம், சிட்டன், சுண்ணம், தக்கினம், தம் பலம், தயிர், தலைவர், தானம், திட்டி, துவை, தூசு, தொடி, நேயம், படிமை, பள்ளி, பளிங்கு, பாயிரம், பிசை, மட்டம், மயானம், முத்து, மையம், வயிரம், விஞ்சை முதலிய சொற்களைப் பேராசிரியர் வையா புரியார் பிராகிருதம் எனப் பட்டியலிட்டுள்ளார். வைதிக சமயத்தால் வடசொற்களும், சமண சமயத்தால் பிராகிருதச் சொற்களும், பௌத்த சமயத்தால் பாலி மொழிச் சொற்களும் பல கலந்தன என்றும் கூறினார்.

3. இந்தி

இந்திய அரசில் அரசு மொழிகளாகப் பதினெட்டு மொழிகள் ஏற்கப்பட்டுள்ளன. இந்தி நடுவணரசை நடத்தும் மொழியாக விளங்கு கிறது. இந்தி ஒன்றே இந் நாட்டின் தேசிய மொழியாக இருக்க வேண்டுமென்னும் கருத்து அடிக்கடித் தோன்றுவதும், பிறமொழி பேசும் மாநிலங்களில் புகுத்தப் படுவதும், பிற மாநிலங்களில் இந்தி எதிர்ப்பு நிலைக்கேற்ப இக்கருத்துத் திரும்பப் பெறப்படுவதும் வழக் கமாக இருந்து வருகிறது. ஆட்சி மொழி எனும் உயர் நிலை பெற்ற இம்மொழி இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் பல்வேறு வகை களில் ஊடாட்டம் நிகழ்த்துகிறது. ஆட்சிமொழி என்பதால், நடுவண ரசின் மாநில அலுவலகங்கள் முதலாகத் தொலைக்காட்சி, வானொலி எனப் பல்வேறு வழிகளில் இந்தி மக்களிடையே பரவுகின்றது. தமிழ கத்தில் இந்திமொழி பேசும் மக்களும் வாழ்கின்றனர். இவர்கள் வழி யாகவும் இந்தி தமிழில் கலக்கிறது.[4]

ஆகாஷ்வாணி - வானொலி	தோத்தி - வேட்டி
தூர்தர்ஷன் - தொலைக்காட்சி	ஷர்வானி - ஒருவகை உடை
சமாச்சார் - சமாச்சாரம்	அதிகார் - அதிகாரி
உத்யோக் - உத்தியோகம்	முக்ய - முக்கிய

மண்டல் - மண்டலம்
நிரூப் - நிரூபணம்
படா - பெரிய
சோட்டா - சிறிய
சோர் - திருடன்
அச்சா - நன்று
பகுத் அச்சா - மிக நன்று
ஜாவ் - போ
ஜிந்தாபாத் - வாழ்க, வெல்க
ஜெய்ஹிந்த் - இந்தியா வெல்க
பாரத் - பாரதம்
தர்ணா - மறியல்
தர்ம் - தருமம்
உதார் - உதாரணம்
அபராத் - குற்றம்
மஸ்தூர் - தொழிலாளர்
கட்டுமஸ்து - கட்டுடல்
வஸ்து - பொருள்
நமஸ்தே - வணக்கம்
உத்தர் - வடக்கு
சொஜ்ஜி - சிற்றுண்டிவகை
சோக்ரா - ஏவல் செய்பவன்
தட்டுவாணி - நாட்டுக் குதிரை
தம்படி - காசு
தம்புரு - நரம்பு வாத்தியம்
துப்பட்டா - துணிவகை
தூட்டி - ஆடை
மிட்டாதார் - பணக்காரர்
பந்த் - கடையடைப்பு

மந்திரி - அமைச்சர்
தோசா - தோசை
சுந்தர் - அழகு
தோஸ்த் - நண்பன்
பச்சா - மகன்
மோடா - கூடை இருக்கை
நாம் - பெயர்
பகவான் - கடவுள்
சோடனை - ஒப்பனை
சோதா - சோம்பேறி
சோபதி - தோழன்
சௌக்கிதார் - சுற்றுக்காவலன்
சௌடோல்- யானை
டக்கர் - தக்கணம்
டப்பா - தகட்டுப்பெட்டி
டபாய் - ஏமாற்று
டீக்கு - சரி
டேரா - தங்குதல்
டோசர் - மோதுகை
சட்னி - உணவு வகை
டோபி - சலவையாள்
டோலி - தூக்குப்படுக்கை
முண்டாசு - தலைப்பாகை
மோட்டா - கடினமான
ரொட்டி - உணவு வகை
லேவாதேவி - கொடுக்கல் வாங்கல்
ஜகா - பின்வாங்குதல்
ஜதை - இரண்டு

இவ்வாறு அன்றாட வழக்கில் மக்கள் பயன்படுத்தும் இந்திச் சொற்கள் பல உள்ளன. நடுவணரசில் ஒப்புதல் பெற்ற பள்ளிகளில் இந்தி ஒரு மொழிப்பாடமாகவே கற்பிக்கப்படுகிறது. தமிழகத்தில் தமிழ்த் திரைப்

படங்களுக்கு இணையான அளவில் இந்தித்திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. ஆட்சிமொழி எனும் செல்வாக்கும், மக்கள் தொடர்புக் கருவிகளில் வழங்கப்படும் மொழியாக உள்ள வாய்ப்பும் இந்தி தமிழில் கலக்கக் காரணங்களாக அமைகின்றன. நடுவணரசு இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதாலும், நம் பள்ளிச் சிறுவர்கள் தொடக்க வகுப்புகளிலே இதனைக் கற்றுக் கொள்ளத் தொடங்கி விடுவதாலும் காலப்போக்கில் மேலும் இந்திச் சொற்கள் தமிழில் வந்து சேரலாம் எனக் கருதுகின்றார் தெ.பொ.மீ.[5] இந்தி மொழியினாலேயும் தமிழ்மொழி உரம் மிகுந்து வளரும் என்பதுதான் உண்மையெனத் தோன்றுகிறது[6] என்பது இந்தி மொழிக்கலப்பைப் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கொண்டிருந்த கருத்தாகும்.

4. தெலுங்கு

தமிழ் தெலுங்குத் தொடர்பு, சங்க காலத்திலிருந்தே பழைமையானது. சங்க இலக்கியங்களில் திருப்பதிக் குன்றுகளை ஆண்ட சிற்றரசர்கள் தொடர்பான குறிப்புகள் வருகின்றன. பிற்காலச் சோழப் பேரரசர்கள் வெளியுறவுக் கொள்கையின் நிமித்தமாகத் தெலுங்கு மொழி பேசும் வேங்கியர்களுடன் திருமண உறவு கொண்டனர். தெலுங்குக் காப்பியப் புலவர்களில் முதல்வரான நன்னயப்பட்டரை ஆதரித்த இராச - ராசேந்திரன் முதலாம் இராசேந்திரனின் மருமகனாவான். பின்னர் இவன் குடும்பத்தில் தோன்றிய முதலாம் குலோத்துங்கன் பதினோராம் நூற்றாண்டில் சோழப் பேரரசனாகின்றான். இம்மன்னர்கள் அளித்த வாய்ப்பும் தெலுங்குச் சொற்கள் தமிழிற் கலக்கக் காரணமாயிற்று. 'அக்கடா' முதலிய தெலுங்குச் சொற்கள் கம்பராமாணத்தில் வருவதாகக் கூறுவர். தெலுங்கு மொழியில் வழங்கிய ஆபரணங்கள், உணவுப் பொருள்கள், ஆடைகள், வேலைக்குப் பயன்படும் கருவிகள், சாதிப்பெயர்கள் ஆகியவை தொடர்பான சொற்கள் இவற்றின் தொடர்பால் தமிழில் கலக்கத் தொடங்கின. இரளி, உப்புசம், சளிப்பு, கலிங்கம், கண்டி, கத்திரி, கடப்பாரை, ராயசம், தரகரி, சேந்திரவர், கம்பத்துக்காரர், குப்பம், ரெட்டியார், பத்தர், கோமட்டி, ராஜா, கரிசை (அளவு) முதலிய சொற்கள் தெலுங்கிலிருந்து வந்தவை. அந்தரங்க வைபவம், அட்டி, அண்ணு, டாப்பு (அட்டவணை), இண்டிமாமா, ரவிக்கை, ராவடம், ரேக்கு, லஞ்சம், லாகிரி, உத்தி, உப்பசம், உம்மச்சு, ஒட்டாரம், கட்டடம், கந்தை, கண்ணாவி, கபோதி,

கம்பத்தம், கம்பல், கலப்படம், கவுனி, காட்டம், குப்பு, கெடுவு, கொப்பி (கும்பி), கொலுசு, சந்தடி, சலவை, ஜயிப்பு, சிட்டிகை, சிமிளி, உருண்டை, சுங்கு, தெண்மை, சதை, சொக்கா, சொட்டு, சவுத்தி, த்ராபை, தடவை, திப்பி, திமிசு, தும்பு, தெப்பல் (அடி), தெலுங்கு, தெட்ட, தேவாத்தி (வேட்டி), நீச்சு (மீன்நாற்றம்), பட்டறை, பண்டைப்பேச்சு, பலப்பம், பவிசு, வாணலி, பால்மாறுதல், பிருடை, பூஞ்சைக்காளம், போல் **(Hollow)** ஜப்பை, ஜாஸ்தி, சந்து, சுளுவு முதலிய சொற்களும் தெலுங்கில் இருந்து வந்தனவென்று கூறுகிறார் தெ.பொ.மீ.[7] தெலுங்கு அதிகாரிகள் தம் ஆட்சியின் போது, அங்கெல்லாம் தெலுங்கு மட்டுமே விளங்குமாறு செய்தனர். அவர்கள் தாய்மொழிப் பற்று மிகுந்தவர்கள். தமிழர்கள் கடமையுணர்ச்சி குறைந்தவர்கள். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அதனால் தமிழ்நாட்டின் எல்லை சுருங்கிற்று, சித்தூர் மாவட்டத்தில் பெருந்தொகையான மக்கள் தமிழ் பேசுவோராக இருந்தபோதே, மாவட்ட அரசியல் மொழி தெலுங்கு ஆயிற்று என மு.வ. குறிப்பிடுவதை இங்கு எண்ணிப் பார்க்கலாம். தெலுங்கின் வரவால் தமிழகத்தின் ஊர்ப்பெயர்களிலும் தெலுங்குச் சொற்கள் இடம்பற்றின. பச்சூர், பழையனூர், புதூர், கட்காவூர், பழைய பேட்டை, கோமுட்டியூர், வாலாரிப்பட்டி - என வழங்கப்பட்ட பழைய தமிழ்ப் பெயர்கள் மாற்றம் பெற்றுப் பந்தார பள்ளி, அதனகவுனி, பல்லி கொண்ட, சிந்தன பல்லி, கொத்தூர், ஜயந்திபுரம், பய்யப்ப நாயணுபேட்டெ, நல்ல கதிரணபல்லி எனத் தெலுங்கு மொழியிலே ஊர்ப் பெயர்கள் மாற்றம் பெற்றுத் தமிழர்களால் பொருள் விளங்கிக் கொள்ளாமலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டன.[8] தமிழில் கலந்துள்ள தெலுங்குச் சொற்களைக் காண்போம்.[9]

தெலுங்கு

உப்பரம் (வயிற்றுப் பொருமல்)	கட்டாரி
காண்டு	கோசரம்
கோந்தி	சந்தடி
சலவை	சிக்கு
சிமிலி	சீண்டரம்
தொந்தரவு	சுங்கு - குதுஞ்சம்
சுன்னிதம் - நுண்மை	செங்கல்வராயன் - முருகன்

செகண்டி - கோன்மணி
சேட்டை
சேனை
சோலி - கருமம்
சொரு - உவர்ப்பு
டக்கு (வார்) - பதிப்படை
டமாரம் - முரசு
டேவணி - முன்பணம்
தக்கழ - பொய்
ததி - தகுந்த நேரம்
தம்பி - தாமரை
தரகரி - தரகன்
(தறி)படுகு - நெட்டிழை
துண்டரிக்கம் - முகக்களை
துண்டை - துடுக்கன்
துருசு - விரைவு
துலாபி - பகட்டுச் செலாவணி
தேலிக்கை - மென்மை
தொம்பரம் - பலருக்குச் சமைத்த ஊன்
நவாது - வெண் சர்க்கரை
பவனி - உலாவரல்
பிகுவு - இருக்கம் வலிவு
பேட்டு - பட்டைக்கரை, சூடு
மைதா - கள்மயக்கம்
ரெப்பை - இரப்பை
லத்தி - சாணம், வெட்டை
லாகிரி - மதுக்களிப்பு
ஜட்டி - மல்லர் அணியும் கவ்வுரி வகையுள் ஒன்று

சேகரம் - கூட்டம்
சேதாரம்
சோம்பு - பெருஞ்சீரகம்
சௌக்கம் - பண்டமலிவு
டக்கு - விகு, பிகு
டப்பை - மூங்கிற் பிளாச்சி
டாப்பு - பட்டி
டொங்கு - பொந்து
தத்தினம் - நீர்ப்பிண்டப் படையல்
தபலை - மாழைக்குடம்
தனை - ஆசை
தருசு - நெருங்கிய இழை
திப்பை - மேடு
துண்டன் - கொலைஞன்
துத்து - பொய்
துருதை - தினவு
துப்பிரதண்டி - சொற்படிகேளாள்
தொடக்கம் - மிதித்துத் துவைக்கை
தோசிளி - இருவகைத்தவசம்
பங்காரு - பொன்
மலுவு - எடைக்கனம்
பிசினாறி - கருமி, கஞ்சன்
பொக்கிஷம் - பொருளறை
ரம்பம் - அரிவாள்
லச்சி - குப்பைக்காரி
லம்பாடி - இலம்பாடியினம் திரிநன்
வெரித்தி - ஒல்லி
ஜண்டை - இணை ஜோடி

ஜல்லடை - சலிதட்டு	ஜலுப்பு - நீர்க்கோவை
ஜாஸ்தி - மிகுதி	ஜிந்தன் - மறையுந்
ஜோடுதாலை - நீர்முகவை	திறைவினையன்

5. மலையாளம்

தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர்புடையன. ஒரு தாய்க்குப் பிறந்த உடன்பிறப்பாளர் என்பர் மொழியியலாளர் மலையாள மொழியில் தொடக்க நிலையில் கருத்தறியாத் தமிழ்ச்சொற்கள் பலவும், உருத்திரிந்தன சிலவும் வழங்கி வந்தன. இன்றும் மலையாள மொழி தமிழர்க்கும், தமிழ்மொழி மலையாளிகட்கும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியனவாகவே உள்ளன என்பார் அறிஞர். வையாபுரிப் பிள்ளை. நாஞ்சில் நாடு (கன்னியாகுமரி மாவட்டம்) திருவாங்கூர் அரசின் கீழ் நீண்டகாலம் இருந்தமையும் இதற்குக் காரணம் எனலாம். தமிழில் கலந்த மலையாளச் சொற்கள் தமிழாகவே மாறிவிட்டவை என்பதால், அவற்றை வேறுபடுத்தி அறிவது சிக்கலானதாகும் என்றும், சக்கை, சாயா, கஞ்சி, வஞ்சி, வெள்ளம், அவியல், கச்சவடம், காலன், கொச்சி, சொக்கன் (குரங்கு) தளவாய், தேநீர், நெரியல் போன்றவை மலையாளச் சொற்களே என்றும் தெ.பொ.மீ. கருதுகின்றார். திராவிட மொழிகளுள் இடம் பற்றியும் இயல்பு பற்றியும் தமிழுக்கு மிக நெருக்கமாவது மலையாளமாகும். அதில் வடசொற்கள் அளவிறந்து கலந்துள்ளன என்று கால்டுவெல் கூறியுள்ள கருத்து, அதன் நூல்வழக்கைச் சார்ந்ததேயன்றி, உலக வழக்கைச் சார்ந்ததன்று. இன்றும் மலையாளப் பேச்சு வழக்கை நோக்கின், அது பெரிதும் வடசொற் கலப்பற்றதென்பது புலனாம். இற்றைத் தமிழில் வழங்கும் சிலவடசொற்கும் ஆங்கிலச்சொற்களுக்கும் நேர் மலையாள மொழியில்தான் வழங்குகின்றன. எடுத்துக்காட்டாகச் சில சொற்களைக் காண்போம்.

வடசொல்	தென்சொல்
மைத்துனன்	அணியன்
மத்தியானம், மதியம்	உச்சி
வருஷம்	ஆண்டு, கொல்லம் (ஏகர்)
ஆரம்பம்	தொடக்கம்
உபாத்தியாயர், வாத்தியார்	எழுத்தச்சன்

அமாவாசை	(காருவா)
பூரணை, பவுர்மணி	வெளுத்தாவு
கறுத்தாவு	(வெள்ளுவா)

சோழ, பாண்டி நாடுகளில் வழக்கற்றுப் போன ஒரு சில சொல் வினைகள், சேர நாடாகிய மலையாள நாட்டிலேயே இன்று வழங்கி வருகின்றன. எடுத்துக் காட்டு:

மலையாளம் (ஒருசொல்வினை)	இற்றைத்தமிழ் (இருசொல்வினை)
கட்குன்னு - கக்குன்னு	களவு செய்கிறான்
குலெக்குன்னு	குலை தள்ளுகிறது
முருடுன்னு	முருடாகின்றது
குழிக்குன்னு	குழிதோண்டுகின்றான்

சேரநாட்டுத் தமிழின் சிறந்த சொல்வளம், மலையாளம் மொழியின் வாயிலாகவே இன்று அறியக்கிடக்கின்றது.

எடுத்துக்காட்டு,

ஆழ்ச்ச - கிழமை; ஆழ்ச்சவட்டம் - வாரம்
பகர்க்குக - படியெடுக்க
பையாணி - தசையைக் கொத்திப் பிடுங்கும் ஒருவகைப்பாம்பு
நொண்ணு - உள்வாய்
முத்தாழம் (முற்றாலம்) - காலையுண்டி
அத்தாழம் (அற்றாலம்) - இராவுண்டி

ஆங்கிலச் சொல்	தமிழ்ச்சொல் (சேரநாடு)
பென்	தூவல்
பாத்ரூம்	குளமுறி
டிராயர் (மேசை)	வலிப்பு
காம்பவுண்டு	பரம்பு
வேக்கச்சி	ஒழிவு
நோட்டு	குப்பாயம்
வெராந்தா	கோலாயி

'உச்சி' 'ஆண்டு' 'தொடக்கம்' முதலிய தென்சொற்கள் தமிழ்நாட்டு வழக்கிலும், மலையாள நாட்டிற்போல அத்துணைப் பெருவழக்காக

வும் நாடு முழுமையும் வழங்குகின்றன. இற்றைத் தமிழ்நாட்டில் வழங்கும் சில தென்சொற்கட்டு எதிர்பாற்சொற்கள் இன்று மலையாள நாட்டு வழக்கிலேயே உள்ளன. எடுத்துக்காட்டு.

அச்சி (தாய் தமக்கை)	அச்சன் (தந்தை)
சிறுக்கி	செறுக்கன் (சிறுக்கன்)
தம்பிரான்	தம்பிராட்டி

அயக்கூற, அகோலி, ஏட்ட, குளவன் நோங்ஙல் (கல்) மாலா முதலியன, தொன்றுதொட்டுச் சேரநாட்டில் வழங்கி வரும் மீன் பெயர்கள், திசைச்சொல் முறையில் மலையாளத்தில் வழங்கும் தென் சொற்கள் மாபெருந் தொகையின,

எடுத்துக்காட்டு

கயறு - ஏறு (ஏவல் வினை)
கரிச்சல் - குடலை
குறுக்கன் - நரி (குள்ளநரி)
கோளாம்பி - படிக்கம்
பகரம் - பதில், பதிலாக
மேடி - வாங்கு
வெடிப்பாக்கு - துப்புரவாக்கு
வெளுத்தோடன் - அலக்குரான் - வண்ணான்
குட்ட - தீவட்டி

மலையாளத்தில் வழங்கும் திசைச்சொற்களும் பெரும்பாலன சற்றே பொருள் திரிந்த தமிழ்ச்சொற்களே.

எடுத்துக்காட்டு

அதே - ஆம்
அடுக்கல் - பக்கம், கிட்ட, இடம்
என்ற அடுக்கல் - என்னிடம்
ஒடுக்கம் - முடிவு, முடிவில்
களி - விளையாட்டு (களித்தாடு)
குட்டி - பிள்ளை
தெற்று - தப்பு, பிழை

நேராக்க - செப்பனிடுக
செருமன் - கள்மன், களத்தடிமை,
செறு - வயல்
வலிய - பெரிய, வளரே - மிக
விடக்கு - கெட்ட
விடக்குகுட்டி - கெட்டபிள்ளை
கழியும் - முடியும்
செய்வான் கழியும் - செய்ய முடியும்
கள (களை) - விடு, வன்னுகள - வந்துவிடு
மதிபோதும் (போதிய அளவு)

சில தென்சொற்கள் பழம் பொருளிலேயே இன்றும் மலையாள நாட்டில் வழங்கி வருகின்றன.

எ.டு. கோயிலகம் - அரண்மனை
அம்பலம் - கோயில்

பொன்னம்பலம், வெள்ளியம்பலம், சிற்றம்பலம், பேரம்பலம் என்னும் வழக்குகளை நோக்குக.

'வெயில் என் கிளவி மழையியல் நிலையும்' என்னும் தொல்காப்பிய நூற்பாப்படி, வெயில் என்னும் நிலைமொழி அத்துச் சாரியை பெற்றுப் புணரும் புணர்ச்சியை, இன்று வெயிலத்துச் சென்று, வெயிலகத்து, போகருது' என மலையாள நாட்டு வழக்கில் தான் காண்கின்றோம்.

'பதிற்றுப்பத்து' என்னும் புணர்மொழி பெயரோடொத்த 'முப்பத்திற்றுப்பத்து' 'அம்பதிற்று நாலு' முதலிய இற்றுச்சாரியைப் புணர்ச்சித் தொடர்மொழிகளும் இன்று மலையாள நாட்டில்தான் வழங்குகின்றன.

இவ்வாறு தமிழின் வேர்ச் சொற்களையும், வழக்குச் சொற்களையும் கொண்ட மொழியாக மலையாளம் விளங்குகின்றது. இதன் விளைவாக மலையாள வழக்குச் சொற்கள் தமிழில் கலக்கும் காலத்தில் அவை தமிழெனவெ கருதும் நிலை ஏற்பட்டு, அச்சொற்கள் தமிழினின்றும் பிரித்தறிய முடியாதனவாகியுள்ளன.[12]

5. கன்னடம்

சங்க இலக்கியங்களில் வரும் வடுகர் என்னும் சொல் கன்னடர் களைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது.[13] யாப்பருங்கலக் காரிகை உரை, 'குணகாங்கேயம்' என்கிற கன்னட யாப்பு நூலைக் குறிப்பிடு கிறது. அட்டிகை, இதா, எகத்தாளம் எட்டன், சமாளித்தல், சாடுமாலி, ஒரு சிறை, அரிசி, சொத்து, பட்டாக்கத்தி, பம்பு, மூங்கில், பீக்கலட்டம் முதலிய சொற்கள் கன்னடத்திருந்து வந்தவையே.[14] டாசு மாலீ (வீடு பெருக்கி), தண்டால், தப்பிலி, தவுக்கை (மாழைத்தட்டு), திகளர் (தமிழர்) ரகளை, ஜவுளி ஆகிய சொற்களும் தமிழில் கலந்துள்ள கன்னடச் சொற்களே.[15]

தமிழில் இன்றும் வழக்கில் உள்ள 'கருமாறி' கருமாறிப் பாய்ச்சல் ஆகிய சொற்கள் பழங்கன்னடத்திலிருந்து தமிழுக்கு வந்த வரலாறு சுவையும் பயனும் அளிப்பதோடு, கன்னடம் தமிழில் கலந்த முறை யையும் தெளிவாக்குகிறது. செந்தமிழ்ச் செல்வியில் கூறப்பட்ட அவ்வரலாறு[16]

இந்தச் சான்றுகளினாலே கருமாடம் என்னும் சொல் உண்டென் பதும், அதன் பொருள் மாடிவீடு என்பதும் நன்கு தெரிகின்றன. எனவே, நக்கீரர் தம்முடைய நெடுநல்வாடையில், 'கருவொடு பெய ரிய இல்' என்னும் தொடருக்கு அவர் கருதிய சொல் கருமாடம் அல்லது கருமாடி என்பது ஐயமறத் தெரிவாகத் தெரிகிறது. கருமாடம் என்னும் சொல் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் வழக்கொழிந்து விட்டபடியால், மிகப் பிற்காலத்தவரான நச்சினார்கினியர், இச்சொல்லுக்குக் கர்ப்பக் கிரகம் என்ற தவறான பொருத்தமற்ற உரையை எழுதி விட்டார் என் பது நன்கு தெரிகிறது.

பழந்தமிழகத்தில் வழங்கி வந்த கருமாடம் அல்லது கருமாடி என்னும் சொல் பிற்காலத்தில் மறைந்து விட்டாலும், திராவிட இன மொழியாகிய கன்னடத்தில் இச்சொல் இலக்கிய நூல்களில் இன்றும் நின்று நிலவுகின்றது.

கருமாடி என்னும் சொல் தமிழ்நாட்டில் இலக்கிய வழக்கில் மறைந்து போனாலும், இச்சொல் பேச்சு வழக்கில் நெடுங்காலம் வழங்கி வந்திருக்கின்றது. பேச்சு வழக்கில் மட்டும் இருந்தபடியால், இச்சொல் சிதைந்து வழங்கிற்று. கருமாடி என்பது பேச்சுவழக்கில் கருமாறி என்று திரிந்து விட்டது. சில ஊர்களில் கருமாறியம்மன் என்

னும் பெயருள்ள காளி (கொற்றவை) கோயில்கள் உள்ளன. கருமாடி யம்மன் என்பதே கருமாறியம்மன் என்று திரிந்து வழங்குகிறது என்பது தெளிவு, பெரிய மாடமாக அதாவது பெரிய கோயிலாக அமைந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அம்மன் என்பது இதன் கருத்து அல்லது கருமாடமாகிய அரண்மனையில் அமைந்த அம்மன் கோயில் என்பது இதன் கருத்தாகும். கருமாடி என்னும் சொல் கரு மாறி என்று பிற்காலத்தில் திரிந்து விட்டது என்பதை அறிகிறோம்.

காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயில் குளக்கரையின் மேல் ஒரு கருமாடி உண்டு, அது, மூன்று நிலையுள்ள மாடக்கோயில். அக் கருமாடியில் இப்போது நின்றான், இருந்தான். கிடந்தான் என்னும் பெயருள்ள மூன்று திருமால் திருவுருவங்கள் எழுந்தருளியுள்ளன. முற்காலத்தில் இந்தக் கருமாடியில் மூன்று புத்த உருவங்கள் (நின் றான் இருந்தான் கிடந்தான் என்னும் அமைப்பில்) இருந்தன என் பதைப் புராணங்களால் அறிகிறோம். இந்தக் கருமாடி பிற்காலத்தில் உருமாறி என்று திரித்து வழங்கப்பட்டது. இடைக்காலத்தில், உற்சவக் காலத்தில் இந்தக் கருமாடியின் மேல் தளத்திலிருந்து குளத்தில் குதிப் பது ஒரு காட்சியாக நடைபெற்றது. அக்காட்சியை மக்கள் திரண்டு வந்து கண்டனர். அதற்குக் கருமாறிப் பாய்ச்சல் என்பது பெயர். கருமாடிப் பாய்ச்சல் என்பதுதான் கருமாறிப் பாய்ச்சல் என்று தவறாக வழங்கப்பட்டது.

பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்தவ ரான காளமேகப்புலவர் கருமாறிப் பாய்ச்சலைக் கூறுகிறார் அவர் காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்த ஆறு சிறப்புச் செய்திகளை அவர் கூறுகிறார். அவர் கூறிய செய்யுள் இது.

அப்பா குமரகோட்டக் கீரை, செவிலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர் – செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியில் தவம்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கும் இனிது – (தனிப்பாடல்)

காளமேகப் புலவர் காலத்தில் காஞ்சிபுரக் குமரகோட்டத்துக் கொல் லையில் விளைந்த கீரையும், செவிலிமேட்டுக் கொல்லையில் விளைந்த பாகற்காயும் சுவையாக இருந்தனவாம். இப்போதும் மண் வளம் குன்றாமல் அவை சுவையாக இருக்கின்றனவா என்பது தெரிய

வில்லை. பருத்திக்குளம் இப்போது பாழடைந்துள்ளது. ஆகையால், அதன் நீர் இனிமையாக இருக்கமுடியாது. செப்புவாசல் என்பது செப்பினால் செய்யப்பட்ட கோபுரவாயில், அங்குச் சென்று தங்கினால் காற்று இனிமையாக வீசுமாம். அந்தச் செப்புவாசல் இப்போது இல்லை. கம்பத்தடியில் தவம் என்பது திருவேகம்பத்தில் உமையம்மையார் தவம் செய்தார் என்பது புராணக்கதை. இந்தக் காட்சியை இன்றும் ஏகாம்பர ஈசுவரர் கோயிலில் காணலாம். கருமாறிப் பாய்ச்சல் என்பது, காமாட்சியம்மன் குளக்கரைமேல் உள்ள கருமாடி என்னும் மாடக் கோயிலின் உச்சியிலிருந்து குளத்தில் குதித்துப் பாய்வது, கருமாடிப் பாய்ச்சல் என்பது காளமேகப்புலவர் காலத்தில் கருமாறிப் பாய்ச்சல் என்று வழங்கப்பட்டது.

கருமாடிப் பாய்ச்சலைக் கருமாறிப் பாய்ச்சல் என்று நாலாயிரத் திவ்யப்பிரபந்த வியாக்கியானமும் கூறுகிறது. கருமாடி என்னும் சொல்வழக்கு கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் மாறுபட்டுக் கரு மாறி என்று வழங்கியதை இதனால் அறிகிறோம்.

இவ்வாறு கன்னட மொழியும் தமிழில் கலப்பு நிகழ்த்திய மொழியே என்பதை அறியலாம்.

7. உருது

தென்னிந்தியாவில் இசுலாமியர் ஆண்டபோது, தெக்காணி உரு அவர்களால் ஓங்கியது. இதன் விளைவாக உருதுச் சொற்கள் மிகப்பலவாகத் தமிழில் கலந்தன[17]. இன்றும் தமிழில் வழக்கிலுள்ள உருதுச் சொற்கள் மிகப் பலவாகும் அயற்சொல் அகராதி தரும் சொற்கள் வருமாறு.[18]

உருது	அலமாரி	அலக்கல்க்காய்
அலங்கல்	அவுல்தார்	ஆசாமி
ஆஜர்	இனாம்	இஸ்திரி
இனாம்தார்	உக்கா	உடான்
உஷார்	கச்சா	கச்சேரி
கசகசா	கசர் (கொசுறு)	கசாப்பு
கஞ்சா	கஞ்சிரா	கதர்

கந்திரி (இரவலன்)	கப்சா	கம்மி
கமான்	கர்லா	கராம்பு
கரார்	கலாட்டா	கலாயி
கலால்	காடி	காதி
காபந்து	காபரா	காய்லா
காராபூந்தி	காலி	காவாலி
காஜா	கிசுமிசு	கித்தான்
கிராக்கி	கிராம்பு	கிருதா
கீல்	குசால்	குந்தா (துமுக்கியடி)
குமாஸ்தா	குல்லா	குரிசி (நாற்காலி)
குலாபு (நீர்மலர்)	குலாம் (அடிமை)	குருமா
குஷால்	குஸ்தி	குஜிலி (அந்திக்கடை)
குஷி	கைதி	கைலாகு
கைலி	கொப்பரை	கோட்டா
கோந்தி	கோரி	கோல்மால்
கோஷா	கௌரி	சக்ரத்து (இலவசம்)
சக்கிமுக்கி	சஞ்சல்லி	சராய்
சந்தா	சந்தாதார்	சப்பரம்
சப்பாத்தி	சபாஷ்	சம்சா
சமேதார்	சர்தார்	சர்பத்து
சராசரி	சராப்புக்கடை	சராய்
சரிகை	சரூர்	சல்லீசு
சலாம்	சவ்வரிசி	சவ்வாது
சவடால்	சவாப்பு	சவாரி
சவால்	சவால் ஜவாப்பு	சவான்
சவுக்கார்	சவுக்கு	சாக்கணா
சாத்தான்	சாத்துக்குடி	சாதா
சால்வை	சால்ஜாப்பு	சாலேசரம்
சாவாது	சிகாரி	சிட்டி
சித்தார்	சிப்பந்தி	சிபார்சு
சிமிக்கி	சிமிட்டா	சிரஸ்தார்

சிராய் சிலுப்பா சிறாயத்து (குச்சி)
சீசா சீட்டு சீல்
சீனி சுவாரி செலான்
சுப்பிராசி - (வேலையாள்) சுபேதார் - (படையதிமான்)
சுனாவணி. - (வேண்டுகோள் படிக்கை)
சூத்தி - (செருப்பு) சூர்மா - (கண்மை)
செரு - (துண்டுநிலம்) செண்டா - (கொடி)
செலாவணி - (பொருண்மாற்று) சேடை - (நீர்க்கட்டு)
சேந்தி - (கள்) சேம்பா - (சளிநோய்)
சேர்பந்து - (சாட்டை) சோக்கு - (பகட்டாரம்)
சோகாரிகன் -(வேட்டைக்காரன்) சோட்டா - (தடிக்கம்பு)
சோராவரி - (கொள்ளை) சோல்னா - (தொங்குபை)
சௌடால் டக்கர் - (குழப்பம்)
டப்பாசு டபேதார்
டாணா - (காவலிடம்) டாபர் - (கூட்டுவன்)
தகலுப்பு - (ஏமாற்றுகை) தண்டா - (சண்டை)
தண்டை - (சொந்தரை) தண்டோரா (பறையறிவிப்பு)
(தப்புத்) தண்டா - (குற்றம்) தபால் - (அஞ்சல்)
தமாம் - (முழுவதும்) தமாஷ் - (வேடிக்கை)
தமுக்கு (வார்ப்பறை) தயார் - (அணியம்)
தர்கா -(பள்ளிவாயில்) தர்ணா - (மறியற்போராட்டம்)
தர்பீத்து - (பயிற்சி) தர்மா - (அறமன்றம்)
தர்மா - (ஊதியம்) தர்ஜமை (மொழிபெயர்ப்பு)
தர்முஸ்தாஜர் - (உட்குத்தகைக் காரன்)
தரத்தூது - (முயற்சி) தரப்தார் -(கீழ்ப்பணிஞன்)
தரப்பு - (பக்கம்) தரா - (வகை)
தராசு - (துலாக் கோல்) தரி - (நன்செய்நிலம்)
தரீப்பு - (தீர்மானம்) தரோகா -(பொய்)
தரோபஸ்து - (முழுவதும்) தலப்பு - (ஊதியம்)
தலாக் - (மனைவிக்கு) தலாயத்து - (ஏவலன்)

தலால் - (தரகன்) தலாலி - (தரகு)
தாலஷி - (உசாவல்) தவுடு - (படையெடுப்பு)
தவுஜி - (ஓய்வூதியம்) தனியா - (அரைக்கச்சை)
தஜ்வீஸ் - (தீர்ப்பு) தஸ்கத் - (கையெழுத்து)
தஸ்தா - (24 தாள்கள் கொண்ட தொகுதி)
தஸ்தாவேஜு - (உரிமைச் சான்றாவணம்)
தஸ்து - (தாண்டிய இருப்புத் தொகை)
தாக்கலா - (கணக்கிற்பதிகை) தஸ்தூர் - (வழக்கம்)
தாக்கல் - (குறிப்பீடு, அறிக்கை, கோப்பு)
தாக்கீது - (உத்தரவு) தாசில் - (வட்டாட்சி)
தாசில்தார் - (வட்டாட்சியர்) தாத்து - (முறையீடு)
தாதி - (முறையீட்டாளன்) தாதுபிராது - (அறிகுறி)
தாபிதா - பட்டாடை தாபே - (பின்பற்றி)
தபேதார் - (சாரியன், பின்னடையன்) தஹசீல் - (நிலவரித்தண்டல்)
தாம் - (விலை)
தமாஷ் - (நேர்ப்பகிர்வு) தாமேஷா - (ஈவு)
தாயத்து - (சுருள்தகடு) தாயி - (முறையீட்டாளன்)
தாரிப்பு - (மதிப்பு) தாரீக் - (நாள்)
தாரோகா - (ஏவல் தலைவன்) தாலாப்பு - (குளம்)
தாலுக்கா - (வட்டம்) தாவா - (வேண்டுகை)
தாளா - (ஒப்பு) தாஜா - (புதியது)
திக்குறு - (புனமுருங்கை) திகர் - (வேறு)
திண்டேல் - (கப்பல் கண்காணி) திம்மாக்கு - (வீண்பெருமை)
தில்பசந்து - (உயரொட்டுமா) திவால் - (பணகொடி)
திவான் - (அரசிறையதிகாரி) தினிசு - (பொருள்வகை)
தீன் - (மதம்) தீன்தார் - (அழிவு)
துனியா - (நாடு) துபாரா - (இருமுறை)
துபாஷ் - (இருமொழிவல்லான்; மொழியெர்ப்பாளன்)
தும்பால் - (கொடை) துராய் - (முத்துத் தலையணி)
துரஸ்து - (தூய்மை) தேக்சா - (குடுவி, குடக்கலம்)

தேரீஜ் - (சுருக்க வரைவு)
தேனா - (கடன்கொடுக்கை)
தைலா - (மரப்பெட்டி)
தைனாத்து - (ஏவலன்)
தொக்கம் - (வழக்கு)
தொகம் - (மதிப்பு)
தொப்பி - (களிப்பு)
தோக்கு - (துமுக்கி)
தோட்டா - (வெடிச்சுரை)
தோடி - (வளரிப்பாலை)
தோப்பா - (கப்பம்)
தோலா - (உருவெடை)
நகாசு - (பொற்கோறல்)
நபர் - (தனியர், ஆள், ஒற்றையர்)
நபர்ஜாமின் - (உருது+அரபி) (ஆட்பிணை)
நமாஸ் - (பள்ளிவாயில் தொழுகை)
நமோது - (விளக்கக்குறிப்பு)
நாசூக்கு - (அழகு, நயத்திறம்)
நவாப் - (அரசப் பொறுப்பாண்மையன்)
நாமந்தா - (ஆண்மையிலி, பயனிலி)
நிஜார் - (காற்சட்டை)
பக்கா - (உயரிய)
பகோடா - (முறுவடம், முறுவு)
பங்களா - (வளமனை)
பங்கா - (படவிசிறி)
பங்கி - (சடைக்குல்லை)
பஞ்சாயத்து - (ஐம்பேராயம்)
பட்டா - (உரிமையாவணம்)
பட்டாசு - (வெடிப்பம்)
பட்டுவாடா - கணக்குத்தீர்ப்பு
படவா - (கூட்டுவன்)
படா - (பெரிய, மிக)
படுதா - (திரைச்சீலை)
பதில் - (மாறு, விடை)
பதிலி - (மாற்று)
பந்தோபஸ்து - (காப்புப்படுத்தும் காவல்)
பயில்வான் - (மல்லன், பொருநன்)
பர்த்தி - (இணை, ஒப்பு)
பர்பி - (தெங்கினிமை)
பரவா(யில்லை) - (தாழ்வில்லை)
பராரி - (நொடித்துப்போனவன்)
பலே - (நன்று)
பறங்கிக்காய்
பஜாரி - (பரத்தை)
பாக்கு - (வினையுள் மதிப்பு)
பாச்சா - (வல்லமை அரசன்)
பாணா - (சிலம்பக்கழி)
பாதுஷா - (இனிகம், அரசன்)
பாயா - (சுடுசாறு)
பாரா - (காவல்)
பிச்சுவா - (கையீட்டி)
பிசாத்து - (நொய்து, நொய்யம்)
பிர்க்கா - வட்டாரம்
பில்லாக்கு - மூக்கணி

பிராது - (முறையீடு)	பீடி - (இலைச்சுருட்டு)
புகார் - (பெருங்கூச்சல், முறையீடு)	பில்லை - (தலைவல்லை)
புதினா - (ஈயெச்சக்கீரை)	பூந்தி - (பொடிக்கோளி)
பூரி - (மரப்பூதி, பூதி)	பேக்கு - (மடையன்)
பேசரி - (மூக்கொட்டி)	பேட்டா - (படிப்பயணம்)
பேட்டி - (நேருரை)	பேடி - (விலங்கு)
பேமானி - (மானமிலி)	பேஜார் - (சோர்வு)
பேஷ் - (மிகநன்று)	பைசல் - (தீர்வு)
பைசா - (காசு)	போணி - (முதன்மாறு)
போதை - (வெறிமயக்கம்)	மகால் - (அரண்மனை)
மசூதி - (பள்ளிவாயில்)	மண்டி - (பெருவிற்பகம்)
மசோதா - (சட்டமுதல் முந்தாவணம்)	
மத்தாப்பு - (தீப்பூ)	மல் - (பெல்லி)
மாகாணம் - (மாநிலம்)	மாஞ்சா - (ஆடிப்பொடிப்பயன்)
மார்வாரி - (வட்டியீட்டு)	மாஜி - (முந்தின)
மிராசுதார் - (முகமையன்)	முண்டா - (தோள்)
மைசூர்ப்பாகு - (கண்டப்பாகு)	மைதா - (மைதாமா)
மைனா - (நாகண வாய்ப்புள்)	மோஸ்தர் - (எழிற்பாங்கு)
மௌசு - (கவர்ச்சி)	ரகம் - (வகை)
ரப்பு - (இழையோட்டுகை)	ராட்டை - (இராட்டினம்)
ராத்தல் - (நாற்பது துலையம்)	ருசு, ருஜு - (மெய்ப்பிப்பு)
ரேக்கு - (ஒள்ளிதழ், பூவிதழ்)	ரேக்ளா - (ஓரியனூர்தி)
லத்தி - (குறுந்தடி)	லாகு - (தாங்குதல்)
லாடம் - (குளம்பணி)	லோட்டா - (நீர்ச்செப்பு)
லோலாக்கு - (தொங்கணி)	வகையறா - (முதலியன, பிற)
வசூல் - (தொகுத்தல், தண்டல்)	வாபஸ் - (திரும்பப்பெறல்)
வாய்தா - (தவணை)	வாரிசு - (மரபுரிமையன்)
விலாவரி - (முழுவிளக்கம்)	ஜமீன்தார் - (நிலக்கிழார்)
ஜரூர் - (விரைவு, கடிது)	ஜல்தி - (விரைவு)
ஜிம்கானா - (பொதுவிளையாட்டிடம்)	
ஜிகினா - (ஒண்தகடு)	ஜூரா - (தீங்கூழ்)

8. அரபு

அரபுமொழி முகம்மதியர்களின் சமய மொழியாகும். திருக்குரான் இம்மொழியில் உள்ளது. எனவே, தமிழகத்தில் இம்மொழி பரவத் தமிழக இசுலாமியர் துணை நின்றனர். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இசுலாமியப் பெருமக்கள் தமிழில் செய்யுளிலும் உரை நடையிலும் நூல்கள் எழுதிவருகின்றனர். பல அரேபியப் பெயர்களும் சொற்களும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. தமிழில் உள்ள அரபுச் சொற்கள் சிலவற்றின் பட்டியல் வருமாறு

அல்வா	
இலாக்கா	(துறை)
சுபேதார்	
புகார்	(பெருங்கூச்சல், முறையீடு)
சுல்தான்	(வல்லரசன்)
சுல்மானா	(தண்டம்)
சுன்னத்து	
சேப்பு	(சட்டைப்பை)
சைத்தான்	(பேய்)
தக்சீர்	(குற்றம்)
தகத்து	(சிறப்பிடம்)
தகரார்	(மறுப்பீடு)
தகவல்	(செய்தி)
தகாதா	(குற்றம்)
தாக்கீது	(தெளிவான)
தசரிப்பு	(பரிசு)
தணிக்கை	(கண்காணிப்பு)
தத்தாரி	(தற்போக்குத் திரிநன்)
தப்சீல்	(விளக்கம்)
தப்தீல்	(மாறுகை)
தபளா	(ஒரு கண் மாக்கிணை)
தபா	(தடவை)

தவாவத்து	(ஏமாற்றுகை)
தமகு	(கட்டாவணம்)
தவில்	(பதலை)
தாவாதார்	(வழக்கிடுநர்)
தினார்	(பொலம்பணம்)
துனியா	(உலகம்)
தைக்கா	(புதைமேடை)
நக்தி	(கருவூலம்)
நகத்	(தொகை)
நிக்கா	(திருமணம்)
நகல்	(படி. இணைப்படி)
பக்கிரி	(இரவலன், ஏழை)
பலானவன்	(இன்னான், இப்படிப்பட்டவன்)
பாக்கி	(நிலுவை)
மக்கர்	(இடக்கு)
மகசூல்	(விளைச்சல்)
மராமத்து	(திருத்தப்பணி)
மவுஸ்	(கவர்ச்சி)
மிட்டாய்	(தீங்கட்டி)
முகாம்	(தங்கம்)
முரப்பா	(முருப்பாகு)
முலாம்	(மேற்பூச்சு)
முனிசீப்பு	(நயனாளர்)
முன்ஷி	(மொழியாசிரியன்)
முஸ்திப்பு	(அணியப்பாடு)
மொபஸில்	(நாட்டுப்புறம்)
ரத்து	(நீக்கம், விலக்கம்)
லங்காடி	(தகுதி)
லாயம்	(பரித்தொழுவம்)
வக்கீல்	(வழக்கறிஞர்)

வஜா	(நிலவரித் தள்ளுபடி)
ஜப்தி	(கைப்பற்றல்)
ஜபாந்தஸ்து	(வல்லந்தம்)
ஜமாய்த்தல்	(திறம்பட முடித்தல்)
ஜவாப்	(விடை மறுமொழி)
ஜப்பா	(குப்பாயம்)
ஜல்லா	(மாவட்டம்)
ஜேப்படி	(பைப்பறி)
ஜேப்பி	(சட்டைப்பை)

9. பாரசீகம்

பாரசீக, இந்திச் சொற்கள் உருதுமொழி வழியே தமிழில் புகுந்திருக்கவேண்டும் எனக் கருதுகிறார் தெ.பொ.மீ. மாலிக்காபூரின் படையெடுப்புகளுக்குப்பின் மதுரையில் 40 ஆண்டுகள் சுல்தானியர் ஆட்சி நடைபெற்றதும் பாரசீகச் சொற்கள் தமிழில் கலந்தமைக்குக் காரணமாகும். தமிழில் கலந்துள்ள பாரசீகச் சொற்களைப் பற்றி மூதறிஞர் இராசாசி நிகழ்த்திய ஆய்வு இங்கு எண்ணத்தக்கது. "ஒரு பாஷையில் அந்நிய மொழிகள் வந்து சேருவதற்குப் பல காரணங்கள் உண்டு. அது ஒரு தாழ்வு ஆகாது. மேன்மையுமன்று. ஹிந்துஸ்தானி, குஜராத்தி, மராத்தி முதலிய பாஷைகளில் அரபி, பார்ஸி மொழிகள் ஏராளமாகக் கலந்திருப்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆனால், தமிழிலுங்கூட அரபு, பார்ஸி மொழிகள் இல்லாமலில்லை.

மிராசுதார் உலகத்தில் அடிபடும் மொழிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. "கிஸ்தி, மகசூல், வசூல்" "ஜப்தி, ஜாரி" "அசல், பாக்கி" "ஜாமீன், ரசீது" "வக்கீல், தாவா" "தாக்கல் ஜமீன்" 'மிராசு' 'பசலி' 'மாமுல்' இவை எல்லாம் அராபி அல்லது பார்ஸி. அராபியே அதிகம்.

வசந்தன் ஆபிஸிலிருந்து வந்தான். வந்ததும் தலையிலிருந்து சரிகை உருமாலையை எடுத்து, மெதுவாக மேஜைமேல் வைத்துவிட்டுச் சோம்பேறி நாற்காலியில் கால் நீட்டி உட்கார்ந்து மனைவியைக் கூப்பிட்டு, 'காமு! நல்ல காபி போடுவாயா? முதல்தரமாக இருக்க வேண்டும். எவ்வளவு ஜல்தியில் முடியுமோ அவ்வளவுக்கு நல்லது' என்றான்.

இந்தியாவுக்குக் 'காப்பி' அராபிய நாட்டிலிருந்து வந்தது. கூடவே அதன் அராபியப் பெயரும் வந்தது. இது இயற்கை. ஆனால், 'ஜல்தி' என்ற அராபிய மொழி எதற்கு? இதைப்பேச்சில் கலப்பதில் தமிழருக்கு ஒரு தனி மகிழ்ச்சி, "சரிகை" பார்ஸி மொழி, "சுரி" என்பது தமிழில் 'சரிகையாயிற்று; 'உருமலை' என்பது பார்ஸி; 'மாலை'க்கும் 'உருமாலை'க்கும் சம்பந்தமில்லை. 'ருமால்' என்ற பார்ஸி மொழியின் திரிபு அது. வடநாட்டில் ருமால் என்றால், கைக் குட்டை அதாவது முகம் துடைக்கும் துணி என்று பொருள், தமிழ், தெலுங்கு கன்னட நாடுகளில் கைத்துண்டைத் தலையில் கட்டிய காரணத்தால், 'உருமால்' என்பது தலைப்பாகையாயிற்று.

'டோபி' என்றால் ஹிந்துஸ்தானி என்றும், 'குல்லாய்' என்பது நல்ல தமிழ் என்றும் சிலர் எண்ணலாம். ஆனால் 'குல்லா'யும் பார்ஸியே. 'மேஜை' என்பது பார்ஸி. 'முதல்தரமான காப்பி' என்பதில் 'தரம்' என்பது உண்மையில் தமிழன்று. 'நீங்கள் இப்படி அவசரப் படுத்துவீர்கள் என்று எனக்குத் தெரியும். காப்பி தயாராக வைத் திருக்கிறேன்.' 'பேஷ்! அப்படியல்லவோ இருக்கவேண்டும் வாழ்க் கைத் துணைவி!'

'பேஷ், சபாஷ், வகையறா போன்ற மகிழ்ச்சிக் குறிப்புகள் பார்ஸியிலிருந்து தமிழருக்குக் கிடைக்காமலிருந்திருந்தால், பாட்டுக் 'கச்சேரிகள்' தமிழ் நாட்டில் எவ்வாறு நடந்திருக்கும்? 'வகையறா' என்றேன். 'வகையறா என்பதற்கும், வகை' என்ற தமிழ்ச் சொல்லுக் கும் ஒரு சம்பந்தமுமில்லை. 'வகையறா' என்பது சுத்த பார்ஸி மொழி. அதிலுள்ள ககரம் நெஞ்சிலிருந்து வரவேண்டும். 'கச்சேரியைப்' பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை.

'தயார்' என்பது சுத்த அராபிமொழி. 'சாப்பாடு தயார்' 'கலியாணத்திற்கு எல்லாச் சாமான்களும் தயாராகிவிட்டனவா? அவன் எதற் கும் தயார்' என்றெல்லாம் தமிழர் வீடுகளில் பேச்சு நடக்கும்போது, அராபி மொழி ஒன்றைக் கொண்டு வந்து உள்ளே விட்டதாக யார் எண்ணுவார்கள்.

வசந்தன் நிமிர்ந்து உட்கார்ந்து, பேனாவை நாசுக்காக வாயில் வைத்து, மனைவியைப் பார்த்த வாக்காகக் காப்பியை உறிஞ்சினான்.

'சுமாராக இருக்கிறதா?' என்றாள் மனைவி. 'கொஞ்சம் சர்க்கரை ஜாஸ்தி' என்றான் வசந்தன். 'நேற்று இவ்வளவேதான் போட்டேன்; கம்மி என்றீர்களே?' 'நேற்று காப்பிப் பொடி ஜாஸ்தியாக இருந்திருக்கலாம். அதனால் சர்க்கரையை எடுத்துக்காட்டவில்லை. 'சரி இனி எல்லாம் தராசில் நிறுத்துத்தான் நான் சமையல் வேலை செய்ய வேண்டும்.' 'குஸ்திக்கு வரவேண்டாம், அம்மே! கேட்டதற்குப் பதில் சொன்னேன்.'

'குஸ்தி' பார்ஸி என்பது வெளிப்படை. 'போலோவும்' பார்ஸி.

ஜாஸ்தி, கம்மி, தராசு, நாசூக் எல்லாம் பார்ஸி. 'ஜாஸ்தி' என்பது மொகலாய மராட்டிய ஆட்சியில் நிலத்தீர்வை, ஜமாபந்தி மொழிகளுடன் வந்திருக்கவேண்டும்.

'ஜ்யாமிதி' என்பது பார்ஸி மொழியின் சுருங்கிய உருவம். 'சுமார்' என்ற சாதாரண மொழியும் ஒரு சுத்த பார்ஸி மொழி. 'பதில்' என்பதும் நல்ல அரபி மொழி - தமிழன்று. தோற்றத்திலும் உபயோகத்திலும் 'சுமார்' என்பது 'ஏறக்குறைய' என்பதைத் தோற்கடிக்கும்; 'பதில்' என்பதும் அவ்வாறே 'விடை' என்பதைத் தோற்கடிக்கும்.

'கதர்க்கடையில் புதுத் தினுசு நிறைய வந்திருக்கிறதாம்' போய்ப் பார்க்கலாம், நீங்களும் வாருங்கள். அப்படியே கலாய்க்காரனிடம் கொடுத்திருக்கும் பாத்திரச் சாமான்களையும் வாங்கி வரலாம்'

'ஒரு மாதத்தில் எத்தனை தபா கலாய் பூசுவது; மண் பாத்திரமே உபயோகித்தால் என்ன? உடம்புக்கும் கூட அது நல்லது என்கிறார்கள்'

'அப்படியே செய்யலாம், நீங்களும் ஆபீசில் காகிதத்திற்குப் பதில் பனை ஓலையையே உபயோகித்து வரலாம்' 'ரகம்' என்பது அரபி மொழி; 'மோஸ்தர்' என்பதும் அவ்வாறே அன்னியமொழி.

ஆனால், "தினுசு" என்பது தமிழ் என்று சிலர் எண்ணலாம். இது தவறு. "ஜினுசு" என்றால் ஓர் அராபி வியாபார மொழியின் தமிழ்த் திரிபு; ஜனுசு' என்றால் வியாபாரச் சரக்குகள். 'பட்டுஜினுசு' கம்பளி ஜினுசுகள்' 'தானிய ஜினுசுகள்' என்றும், உயர்ந்ததும், தாழ்ந்ததுமாகப் பண்டங்களை வகை வகையாகப் பிரித்து வைத்திருக்கும் முறையில் இம்மொழியின் உபயோகம். அதுவே 'தினுசு' என்றாயிற்று. அதி

லிருந்து அவன் பேச்சு ஒரு அலாதி 'தினுசு' 'இது புதுத் தினுசு மீசை' என்றெல்லாம் விற்பனைக்கு அமைக்கப்படா விஷயங்களைப் பற்றியும் இம்மொழியின் பிரயோகம் நடைபெற்று வருகிறது.

'கலாயம்' என்பது அராபி மொழி. தங்கம், வெள்ளி முதலிய நாகரிகப் பூச்சுக்கு 'முலாம்' என்பதும், அராபி மொழியே. 'சாமான்' என்பது பார்ஸி. மகர ஒற்றும் னகர ஒற்றும் மொழியின் ஈற்றில் வந்து, தமிழ் வடிவமாகப் பொய்த்தோற்றம் காட்டுகிறது. 'காகிதம்' என்பது பார்ஸி. 'இந்துஸ்தானியில் காகஸ் என்பார்கள்.

"கடுதாசி" என்றாலும் அந்நிய பாஷையிலிருந்து தப்பமாட்டோம். அது அராபி "கிட்தாஸ்" என்பதன் திரிபு.

மலையாளத்தில் அராபிச் சேர்க்கை அதிகமானபடியால், 'கலதாஸி என்று அந்தத் தேசத்தில் அதிகமாக வழங்கும்.

'எங்கள் அம்மா கல்சட்டியில் குழம்பு செய்வாள்; அதன் ருசியே அலாதி.'

'அம்மா எது செய்தாலும் உங்களுக்கு நன்றாகவிருக்கும். நான் கல்சட்டியன்று, பொன்சட்டியில் செய்தாலும்கூட உங்களுக்குப் பிடிக்காது.'

'மன்னிக்க வேண்டும். நான் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.'

'வாபஸ்' என்பது பார்ஸி. 'அலாதி' என்பது ஓர் அராபிப்பதம். இது எவ்வாறு தமிழில் வந்து சேர்ந்தது என்று அராபி வித்துவான் ஒருவர் மிகவும் வியந்தார். 'அண்ணன் பங்கும் என் பங்கும் அலாதி' என்றெல்லாம் பேச்சில் சாதாரணமாக வருகிறது.

'ஆசாமி பரவாயில்லை; கெட்டிக்காரர்'

'இனாமாகக் கொடுத்தாலும் வேண்டாம்.'

'நீ என்ன அவனுக்குச் சிபாரிசு பேசுகிறாய்'

'கடன் வாங்கின ஆசாமிகளில் பாதிப்பேர் பராரி'

'இரண்டு மாதத்திற்குள் பைசல்'

'இந்தச் செருப்புக்கு யாரும் வாரிசு இல்லை போலிருக்கிறது' இத்தகைய செந்தமிழ்ப் பேச்சில், 'ஆசாமி' 'பரவா' 'இனாம்' 'சிபாரிசு' 'பராரி' 'பைசல்' 'வாரிசு' எல்லாம் அராபி அல்லது பார்ஸி.

'அராபி மொழியை ஏன் உபயோகிக்கக் கூடாது? சமஸ்கிருதம் மாத்திரம் ஒசத்தியோ?'

அப்படி யாரும் சொல்லவில்லை. எந்த மொழியானாலும் சரிதான்; வழக்கத்தில் வந்து, தமிழ் வடிவம் பெற்று அனைவரும் பொருள் அறிந்த வார்த்தையாயிருந்தால். அதைப் பொருந்திய இடத்தில் உபயோகிப்பதில் யாதொரு பிசகும் இல்லை. வைதிகர்கள் கூட ஆட்சேபிக்க மாட்டார்கள்! இதற்குச் சாஸ்திரிகளே, வீண் தகராறு பேசிக் கொண்டிருக்க வேண்டாம். பூஜை சாமான்கள் தயார் செய் யுங்கள் என்பதைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை'

தமிழிற் கலந்த பாரசீகச் சொற்கள்

காக்கி	கிஸ்தி
சுவான்தார்	(உரிமையன்)
செஞ்சி	(போர், போரகம்)
சொளதாகிரி	(குதிரை வாணிகன்)
டகர்பாச்சி	(ஏமாற்று)
டப்தர்	(ஆவணக்கட்டு)
டவாலி	(தோட்கச்சை)
டாகு	(புள்ளி)
தக்கியா	(இரவலர் இல்லம்)
தகா	ஏமாற்று
தீவாணம்	அரசாட்சி
தீவானம்	பித்து
துகான்	படை
துருஸ்து	பழுதுபார்க்கை
நமூனா	சான்றாவணம்
நாஸ்தா	சிற்றுண்டி
பஜார்	கடைத்தெரு

பிஸ்தா	பசத்தம்
மஜா	சுவை, கறிப்பு
மைதானம்	வெளித்திடல்
மைதுனம்	புணர்ச்சி, கலவி
மோர்சிங்கு	நெருட்டியம்
ரசீது	பேற்றோலை
ரஸ்தா	தெரு
ல்கான்	கடிவாளவார்
லங்கடா	நொண்டி
லுங்கி	மூட்டி
வஸ்தாது	உடல்வலியன்
ஜமீன்	நிலபுலம்
ஜரிசை	பொற்கரை
ஜோர்	பகட்டாரம்
ஷாமியானா	துணிப்பந்தலகம்
ஷால்	போர்வை

10. மராத்தி

இன்றும் தமிழில் கலந்த பல மராத்தியச் சொற்கள் வழக்கில் உள்ளன. சான்றுக்குச் சில.

அட்டவணை

அபாண்டம்	கச்சாயம்
காகிதம்	காசாண்டி
காமாண்டி	கில்லாடி
குண்டான்	கெண்டி
கேசரி	கோகம்பரி

11. இந்துஸ்தானி

பஜ்ஜி	மிட்டாதார்
முண்டாசு	மோட்டா
ரொட்டி	லங்கோடு

லூட்டி	லேவாதேவி
ஜாக	ஜதை
ஜால்ரா	ஜிமிக்கி
ஜிலேபி	ஜோடி
ஜோடு	கோவா
சவுக்கார்	சாம்பார்
சாவடி	சீட்டி
சேமியா	தண்டல் (படகுத்தலைவன்)
தண்டி (எட்டடிப்பா)	பட்டாணி
பேட்டை	லாவணி
தரவாங்கி	வில்லங்கம்
சொஜ்ஜி	ஜம்பம்

துருக்கியச் சொல்லான துப்பாக்கி, இன்றும் தமிழ் வழக்கில் இருப்பதை அறியலாம்.

தில்லி சுல்தான்களும் முகலாயர்களும் இந்தியாவை ஏறத்தாழ ஆண்டுக்காலம் ஆண்டனர். பாண்டிய நாடு ஏறத்தாழ 67 ஆண்டுக் காலம் முகம்மதியர் ஆட்சியர் இருந்தது. இக்கால நிலையில் உருது மொழிதான் "இசுலாமிய அரசுகளின் ஆட்சிமொழியாகத் தென்னிந் தியாவில் வழங்கியது. வெறும் பேச்சு மொழியாக முதலில் அறிமுக மான உருதுமொழி இலக்கிய மொழியாகத் தென்னாட்டில் வளம் பெற் றது. இறைவழிபாட்டிற்குத் தமிழைப் பயன்படுத்துவதில் தடையிருந் தது போலவே முசுலீம்களின் இறைவழிபாட்டிலும் தாய்மொழி வேறாகவும் தொழுகைக்கு அரபு மொழியும் இருந்தது.

இச்சூழலில் தமிழ்மொழியில் உருது, பாரசீகம், அரபி, இந்துஸ் தானிச் சொற்கள் புகுந்தன. ஆட்சித்துறையில் குறிப்பாக வருவாய், காவல், படை, வாணிகம், நிதி, வேளாண்மை முதலிய துறைகளில் எண்ணற்ற உருதுச் சொற்களும், அரபுச் சொற்களும், பாரசீகச் சொற் களும் புகுந்தன. இச்சொற்களில் பல இன்றும் வழக்கில் உள்ளன.

தமிழிலுள்ள எ, ஏ, ஒ, ஓ, ந, ச, ட, ண, ழ, ள, ற ஆகிய எழுத்துகள் அரபு நெடுங்கணக்கில் இல்லை. எனவே இவ்வெழுத்து

கள் சிலவற்றைக் குறியீடுகளுடன் அரபு மொழியில் சேர்த்துக் கொண் டனர். இவற்றைக்கொண்டு அரபுச் சொற்களை அரபு ஒலிகளோடு தமிழில் எழுதினர். இதுவே 'அரபுத் தமிழ்' எனப்பட்டது. அரபு நாடுகளிலிருந்து இசுலாமிய சமயம் பரப்பத் தமிழகம் வந்த அரபு கள், இசுலாமிய சமய நெறிமுறைகளைத் தமிழ் முசுலீம்களுக்குப் பரப்புவதற்கு அரபுத் தமிழ் தேவையாயிற்று. "அரபுத் தமிழ் இலங் கையிலும், தமிழகத்திலும் 8 ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற் றாண்டு வரையில் முசுலீம் மக்களிடையே செல்வாக்கோடு திகழ்ந் தது. அரபுத் தமிழின் நடை, தமிழ்ப்பேச்சு வழக்கில் கொச்சை நடை யாக அமைந்திருந்ததால், தமிழகத்தில் அந்நடை எழுத்தாளர்களால் புறக்கணிக்கப்பட்டது.

பாரசீக மொழி

தில்லி சுல்தான்கள் காலம் முதல், முகலாயர்கள் காலம் வரை நாடெங்கும் பாரசீக மொழியே ஆட்சி மொழியாக இருந்தது. நீதி நிருவாகத்திலும், ஆட்சியிலும் பாரசீக மொழியே இருந்தது. அரசுப் பணியில் இருந்த இந்துக்கள், இந்தி மொழியைப் பயன்படுத்தினர். அக்பரிடம் நிதி அமைச்சராக இருந்த தொடர்பால் இந்த இந்திய அரசுகள் அனைத்தும் பாரசீக மொழியிலேயே கணக்குகளை எழுத வேண்டும் என ஆணையிட்டார்.

ஆங்கிலம் அமரும்வரை தொடர்ந்திருந்தது. இதனால் பாரசீக மொழிச் சொற்கள் பல, நிருவாகத்தில் இடம் பெற்றன.

அந்நாளிலிருந்து ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட அரபு, பார சீக, உருது, இந்துஸ்தானி மொழிச் சொற்கள் பட்டியலில் பல சொற் களைக் காணலாம்.

தமிழ் பெற்ற அரபுச் சொற்கள்

அசல் - மூலம், முதல்
அத்து - எல்லை
அமுல் - செயற்படுத்துதல்
அமானத்து - ஒப்படைத்த பொருள், வைப்புத் தொகை
அயன் - அரசு நிலம்
ஆசான் - ஆசிரியன்

10

ஆப்காரி	-	மதுப்பொருள் உற்பத்தி, விற்பனை மீதான வரி
இனாம்	-	நல்கை, பரிசு
இருசால்	-	செலுத்துகை
ஹீசூர்	-	மாவட்டம்
ஐவேசு	-	உடைமை, சொத்து
கஜானா	-	கருவூலம்
கிஸ்தி	-	ஆண்டு நிலத் தீர்வைத் தவணை
கைது	-	சிதை செய்
சரகம்	-	வட்டாரம்
சரத்து	-	நிபந்தனை
தணிக்கை	-	கணக்குச் சரிபார்த்தல்
தாக்கீது	-	குறிப்பாணை
தாக்கல்	-	அளித்தல், அனுப்புதல்
தாசில்	-	வட்டம்
பசலி	-	வருவாய்த்துறை ஆண்டு, வேளாண்மை ஆண்டு
பாக்கி	-	நிலுவை
மராமத்து	-	பழுது பார்த்தல்
மாசூல்	-	நிலத்தில் விளைச்சல்
மிராசு	-	நிலக்கிழார்
முகாம் முச்சலிக்கா (துருக்கி)	-	உடன் படிக்கை, எழுதப்பட்ட ஆவணம்
ரயத்து	-	குடியானவன்
ரயத்துவாரி	-	குடியானவனுக்கு விதிக்கப்படும் நிலத் தீர்வை
அமீனா	-	உரிமையியல் நடுவர் மன்ற அலுவலக உதவியாளர்
கைதி	-	குற்றம் சுமத்தப்பட்டவன்
தகராறு	-	சண்டை, சச்சரவு
தரப்பு	-	சார்வு
தாவா	-	குற்றச்சாட்டு, மனு, தடை
பைசல்	-	தீர்வு

நாசர்	-	குற்றவியல் நடுவர் மன்றத் தீர்ப்புகளை வழங்கும் அலுவலர்
முனிசீப்பு	-	உரிமையியல் நடுவர், கிராம அலுவலர்
ரத்து	-	நீக்கம்
ருசு	-	மெய்ப்பித்தல்
ரூக்கா	-	குறிப்பாணை
வக்காலத்து	-	வழக்குரை அதிகாரம்
வக்கீல்	-	வழக்குரைஞர்
இலாக்கா	-	துறை
கஸ்பா	-	தலைமையிடம்
சன்னத்து	-	உரிமை ஆவணம், நல்கை
தாக்கீது	-	குறிப்பாணை
தாலுக்கா	-	வட்டம்
பிர்க்கா	-	குறுவட்டம், உள்வட்டம்
மசோகா	-	சட்ட முன்வடிவு
மாகாணம்	-	மாநிலம்
மகஜர்	-	விண்ணப்பம்
மாப்பு	-	மன்னித்தல்
மாஜி	-	முன்னால்
ஜில்லா	-	மாவட்டம்
ரஜா	-	விடுப்பு
மாலுமி	-	கப்பலோட்டி
யூனானி	-	இசுலாமிய மருத்துவ முறை
அலாதி	-	தனியான
கடுதாசி	-	தாள்
கலாட்டா	-	குழப்பம்
கரார்	-	கண்டிப்பான
காலி	-	ஒழிவு
சக்காத்து	-	இலவசமாக
சல்லிசு	-	மலிவாக
சலாம்	-	வணக்கம்
சவால்	-	அறைகூவல்
சால்சாப்பு	-	போலிக் காரணங்கள்
தகவல்	-	செய்தி

தமாஷ்	-	கோரிக்கை
நபர்	-	ஆள்
பதில்	-	மறுமொழி
மைதானம்	-	நிலத்தளம்
முஸ்தீபு	-	ஆயத்தம்
லாயக்கு	-	பொருத்தமாக
வவகையறா	-	முதலியன
ஜரூர்	-	காலந்தவறாமை விரைவாக
ஜவாப்	-	மறுமொழி

பாரசீச் சொற்கள்

அஜ்மாஷ்	-	ஆய்வு செய்தல், பயிரடைப்பு
கம்மி	-	குறைவு
குமாஸ்தா	-	எழுத்தர்
கொத்தவால்	-	காவல்முறை அலுவலர் ஆணையாளர்
சராசரி	-	நிரல்
சிரஸ்தார்	-	அலுவலக மேலாளர்
தர்காஸ்து	-	தரிசு நிலம்
பந்தோபஸ்து	-	காப்புச் செய்தல்
பினாமி	-	இரவல் பெயர்
ரசீது	-	பற்றுச்சீட்டு
வாபஸ்	-	மீளாப்பெறல்
ஜமீன்	-	நிலம்
டபேதார்	-	அலுவலக உதவியாளர்
டவாலி	-	கச்சை
தஸ்தாவேஜி	-	ஆவணம்
பிராது	-	குற்ற முறையீடு, குறையீடு
காபந்து	-	அக்கறையுடன் கூடிய பாதுகாப்பு
சர்க்கார்	-	அரசு
சிப்பந்தி	-	பணியாளர்
யாதஸ்து	-	எழுத்தாலான குறிப்பாணை
ரோந்து	-	சுற்றிவரல்
காகிதம்	-	தாள்
சிப்பாய்	-	படைவீரன்
பஜார்	-	கடைத்தெரு

துப்பாக்கி	-	சுடும் கருவி
பாரா	-	காவல்
சந்தா	-	தவணைப்பணம்
நங்கூரம்	-	ஆதாரம், நிலைக்கச் செய்
அந்தஸ்து	-	நிலை
சாமான்	-	பொருள்
சிபாரிசு	-	பரிந்துரை
சுமார்	-	பரவாயில்லை
தயார்	-	ஆயத்தம்
தராசு	-	துலாக்கோல்
ஜல்தி	-	விரைவு
சடுதி	-	விரைவு
செலான்	-	செலுத்துச்சீட்டு
பட்டா	-	நில உரிமை ஆவணம்
மிட்டா	-	நிலக்கிழார்
தண்டோரா	-	ஒலி எழுப்பி அறிவித்தல்
தமுக்கு	-	ஒலி எழுப்பி அறிவித்தல்
திவால்	-	முறிவு
பஞ்சாயத்து	-	ஊராட்சி
புகார்	-	முறையீடு
பட்டுவாடா	-	வழங்கல், ஊதியம் வழங்கல்
பேட்டி	-	நேர்காணல்
உண்டியல்	-	சிறுபணப்பெட்டி
கோந்து	-	பசை
வரா	-	குறிவு
லத்தி	-	தடி
வசூல்	-	தண்டல்
இஸ்திரி	-	பெட்டி போடல்
செலாவணி	-	நாணயம்
பட்டியல்	-	அட்டவணை
பாலம்	-	இணைப்பு மேடை
ஜோடனை	-	அலங்கரித்தல்
வாரித	-	மரபுரிமை
வாய்தா	-	தள்ளிப்போய்

ஒப்தி	-	கைப்பற்றல்
ஒவாமு	-	மறுமொழி
ஜமாபந்தி	-	வருவாய்த் தீர்வாயம்
ஜாமீன்	-	பிணையம்
ஜாஸ்தி	-	அதிகம்
ஷவி	-	குறிப்பு

பாரசீக மொழி, உருதுமொழி இவற்றிலிருந்து411 சொற்களும், போர்த்துக்கீசிய மொழியிலிருந்து 6 சொற்களும், தெலுங்கிலிருந்து 34 சொற்களும், ஆங்கிலத்திலிருந்து 486க்கு மேற்பட்ட சொற்களும் புகுந்திருப்பதாகக் கணக்கிட்டோரும் உண்டு.

மகஜர்	-	மனு, விண்ணப்பம்
அசல்	-	முதல்
அத்து	-	எல்லை
அமுல்	-	நடைமுறைப்படுத்தல்
அநாமத்து	-	ஒப்படைத்த பொருள்
அயன்	-	அதைரியம்
ஆசான்	-	ஆசிரியன்
ஆப்காரி	-	மது உற்பத்தி விற்பனை வரி
ஆஜர்பட்டி	-	வருகைப்பட்டி
ஆபத்து	-	இடர், பேரிடர்
இலைம்	-	நல்கை
இனாம்தார்	-	மானிய நிலத்துக்குரியவர்
இருகால்	-	செலுத்துகை
உசூர்	-	மாவட்டம்
கலால்	-	சாராயம்
கஜானா	-	கருவூலம்
காயம்	-	நிலையான
காஜி	-	நீதிபதி
கிஸ்தி	-	தீர்வை
குலாம்	-	அடிமை
கைது	-	சிறையீடு
சரகம்	-	வட்டாரம்
சரத்து	-	நிபந்தனை

சராப்பு - காசுக்கடைக் கருவூல உதவியாளர், பணம் அளிப்பவர்
ஜாப்தா - பட்டியல்
ஜாரி - சேர்ப்பித்தல்
ஜில்லா - மாவட்டம்
தனக்கை - கணக்குச் சரிபார்த்தல்,
தர்ஜமா - மொழி பெயர்த்தல்
தாக்கீது - குறிப்பாணை
தபா - காலம்
திவான் - பிரதம அமைச்சர்
தோபா - கப்பம்
நமூனா - படிவம்
நகல் - படி
பசலி - வருவாய்த்துறை ஆண்டு வேளாண்மை ஆண்டு
மராமத்து - பழுதுபார்த்தல்
மஹால் - மாளிகை
ருஜி - மெய்ப்பித்தல்
மராத - நிலக்கிழார்
மகசூல் - விளைச்சல்
முகலம் - தந்தல்
முச்சலிகா - உடன்படிக்கை
ரயத்து - குடியானவன்
ரயத்துவாரி - நிலத்தீர்வை
ரொக்கம் - பணம்
லாயக்கு - தகுதி

பாரசீக மொழி சொற்கள்

அம்பாரம் - குவியல்
அலாதி - தனி
ஆப்காரி - மதுவரி
கரம் - சூடு, காரம்
சாவி - பதர்
சிப்பந்தி - பணியாள்
ஜமீன்தார் - நிலக்கிழார்

பிராது	-	குறையீடு
பூரா	-	முழுவதும்
மனு	-	விண்ணப்பம்
மனுதாரர்	-	விண்ணப்பதாரர்
ரகம்	-	வகை
ரஸ்தா	-	சாலை
ராஜனாமா	-	பணிவிலகல்
சிபாரிசு	-	பரிந்துரை

இந்துஸ்தானிச் சொற்கள்

ஆஸாமி	-	ஆள்
கித்தான்	-	சாக்கு
சாபா	-	முத்திரை
சாயா	-	தேநீர்
சீல்	-	முத்திரை
ஜதை	-	இணை
ஜாகீர்	-	மானியம்
ஜாகீர்தார்	-	ஊழிய மானியம் பெற்றவர்
ஜிம்கானா	-	விளையாட்டிடம்
ஜோடி	-	இணை
டப்பா, டப்பி	-	கொள்கலன்
டாணா	-	காவல் நிலையம்
டேரா	-	கூடாரம்
டோபிகானா	-	வெளுப்பகம்
தம்	-	மூச்சு
தம்பிடி	-	பைசா
நாசூக்	-	நாகரிகமாக
நாடா	-	பட்டை
பக்கா	-	முற்றிலுமாக
பரவாநகி(யில்லை)	-	சுமார், பரவாயில்லை
பாஷா	-	மொழி
பாத்	-	சோறு
பைஸா	-	காசு
முஸாபரி பங்களா	-	பயணர் விடுதி
மேஸ்திரி	-	மேற்பார்வையாளர்

யதாஸ்து	-	எழுத்தாலான குறிப்பாணை
ரசீது	-	பற்றுச்சீட்டு
ரொக்கம்	-	மொத்தப்பணம்
லஸ்கர்	-	உழையர், சிற்றேவலர்
லேவாதேவி	-	கடன் வரவு செலவு

தில்லியைத் தலைநகராகக் கொண்டு இந்தியாவை ஆண்ட சுல்தான்களும், முகலாயர்களும் தங்களது ஆட்சியின்போது பயன்படுத்திய ஆட்சிச் சொற்களும் நூற்றுக்கணக்கில் அடங்காதன. சான்றாக,

ஹாஜர்	-	வருகை
ஹாஜர்பட்டி	-	வருகைப் பதிவேடு
இன்குலாப்	-	புரட்சி
கமால்	-	ஊர்ப்பணியாளர்
ராஜிநாமா	-	பதவி விலகல், எழுத்தாலான ஒத்திசைவு
இலாகா	-	துறை
இஜாஸ்து	-	அனுமதி, விடைபெறல்
இஸ்தியார்	-	அறிக்கை, அரசுப்பொது அறிவிப்பு விளம்பரம்
ஹீக்கும்	-	அனுமதி ஆணை
கச்சேரி	-	அரசு அலுவலகம் (வருவாய்த்துறை, நீதித்துறை அலுவலகம்)
கபூலி	-	ஏற்பு, இசைவு, ஒப்புதல் வாக்குமூலம்
கபூலியாட்டு	-	எதிர்த்தரப்பு ஒப்பந்தம்
காய்டா	-	ஆணை விதி
காயம்	-	நிலையான, நிரந்தரம்
கார்வார்	-	மேலாண்மை
காலி	-	ஒழிவு, வெறுமை
காணூன்	-	சட்டம் விதி
சாப்பா	-	முத்திரை
சம்சாயி	-	கடன்
சர்க்கார்	-	அரசு
ஷரா	-	குறிப்பு, நிபந்தனை, குறிப்புரை
ஜரூர்	-	காலந்தவறாமை, அனுப்புகை

சவாட்டு	-	படி
ஜவாப்	-	மறுமொழி, விடை
ஜாபிதா	-	பட்டியல்
சன்னாத்து	-	நல்கை, உரிமை ஆவணம்
சாய்நகல்	-	உண்மைப்படி, செவ்வைப்படி, நேர்படி
சாவடி	-	அலுவலகம், குடில்
சிபாரிசு	-	பரிந்துரை
சுபா	-	மாவட்டம் அல்லது மாநிலம்
தகையார்	-	பணியறவு, பணிநீக்கம்
பதிலி	-	மாற்றாள்
தார்சீமா	-	மொழிபெயர்ப்பு
தணிக்கி	-	தணிக்கை
தஸ்கத்	-	ஒப்பம்
தார்ப்பு	-	மதிப்பீடு
நக்தி	-	கருவூலம்
நாபா	-	ஆதாயம்
நக்திசிட்டா	-	கருவூலக்கணக்கேடு
பகாய்பாக்கி	-	பழைய நிலுவை
பட்டுவாடா	-	வழங்கல், ஊதியம் வழங்கல்
பேட்டா	-	தினப்படி, நாள்படி
பக்ஷீஸ்	-	பரிசு, நன்கொடை, இனாம், அன்பளிப்பு
காபாக்கி	-	நிலுவை, மீதி
மகஜர் நாமா	-	மனு
மராமத்து	-	பழுது பார்த்தல்
மஜ்ல்	-	மக்களவை, கூட்டம்
மாகாணம்	-	மாநிலம்
மாமூல்	-	கையூட்டு
மிசல்	-	நுழைவு, தேர்வு, நியமனம்
மிட்டா	-	மாவட்டத்தில் ஒரு பகுதி, கோட்டம்
முகமை	-	தலைமை, உயர்நிலை, மேன்மை
முச்சலிக்கா	-	உடன்படிக்கை, எழுத்தால் எழுதப்பட்ட ஆவணம்
முலாகாத்	-	நேர்காணல், பேட்டி, கூட்டம்
யாதாஸ்து	-	எழுத்தால் எழுதப்பட்ட குறிப்பாணை

ரஜா - விடுப்பு
ரத்து - நீக்கம்
ருக்கா - குறிப்பாணை
ரோஜ்கார் - பணி, வேலை வாய்ப்பு
வாபஸ் - திரும்பப் பெறல்
சாப்பு - படி, பார்த்து எழுது
ஹத்து பந்தி - நான்கெல்லை குறித்தல்

பதவிப் பெயர்கள்

அஞ்சனதார்,
தொகாக்காரன் - மதிப்பீட்டாளர்
அமல்தார் - வருவாய் அலுவலர்
அமீனர் - உரிமையியல்
நடுவர் மன்றக் கீழ் நிலைப் பணியாளர்
அமீர் - படைத்தலைவன்
அர்க்கார் - கண்காணிப்பாளர்
அசமகர்ணம் - கிராம கர்ணம்
கஜான்ஜி - கருவூல அலுவலர்
காலிபா - அரசன், சுல்தான்
கார்கூன் - இயக்குநர், மேலாளர்,
வருவாய் ஆய்வாளர்
கார்வாரி - மேலாளர், முகவரி, கண்காணிப்பாளர்
கணக்க - கிராம அல்லது மாவட்ட அலுவலர்
குமாஸ்தா - எழுத்தர்
குல்லா சேவகன் - காவலர்
குலாப்,தலையாட்டு
டரப்தாரி - அலுவலக உதவியாளர்
கொத்தவால் - காவல்துறை ஆணையாளர்
சமாத்தூர் - கோட்ட வருவாய் அலுவலர்
சர்தார் - உயர் அதிகாரி
ஷராப்பு - கருவூல உதவியாளர்,
பணம் அளிப்பவர், காசுக்கடை
ஜலான் - காவலர்

சவுக்கிதார்	-	சுங்கத்துறை அலுவலர்
சிப்பந்திபாகந்தாஸ்	-	ஆயுதப்படைக் காவலர்
சிப்பாய்	-	படைவீரர்
சிரஸ்ததார்	-	அலுவலக மேலாளர், நடுவர் மன்ற மேலாளர்
சுபேதார்-	-	ஆளுநர்
சொக்கன்	-	உடனாள்
கோக்கீரா	-	பணிப்பையன்
டபேதார்,தரோகா டப்தார், பந்து,	-	தலைமை அலுவலக உதவியாளர்
தஸ்தார்தர்	-	பதிவறை எழுத்தர், ஆவண எழுத்தர்
தபால்காரன்	-	அஞ்சல் ஆண்
தாசில்தார்	-	வட்ட ஆட்சியர்
திவான்	-	பிரதம அமைச்சர், மாநிலத்தின் முதன்மை அலுவலர்
துபாசி	-	விளக்கிப் பொருள் கூறுவோர், மொழி பெயர்ப்பாளர்
நவசினதா	-	கணக்கர்
நவாப்	-	முகலவாள ஆளுநர்
நிஜாம்	-	அரசன்

12. பிற மொழிகள்

இலங்கையும் தமிழகமும் கொண்டிருந்த தொடக்கக் கால உறவால் சிங்களச் சொற்கள் தமிழில் இடம் பெற்றுள்ளன. முருங்கை, ஈழம் என்ற இலங்கைச் சொற்கள் பழைய உரையாசிரியர்களால் குறிக்கப்பட்டுள்ளன.[24]

தக்கோலி, அருமணவன், கிடாரவன் முதலிய தாய்லாந்துத் தொடர்புடைய சொற்கள் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.[25]

கிடங்கு, கிட்டங்கி என இன்றும் தமிழில் வழங்கப்படும் சொற்கள் மலாய்ச் சொல்லான 'கடாங்' என்பதிலிருந்து உருப்பெற்றுத் தமிழில் கலந்தவை.[26]

'சொங்கு' எனத் தமிழில் வழங்கப்படும் சொல் ஜவானியச் சொல் லிலிருந்து வந்ததாகும்.[27]

படகு வகையைச் சேர்ந்த ‘சம்பான்’ என்ற சொல்லும் பெரிய மண்கலத்தைக் குறிக்கும் காங்கு என்ற சொல்லும், பீங்கான் என்ற சொல்லும் சீன மொழியிலிருந்து வந்தவையாகும்.[28]

‘ரோஜா’ என்னும் மலர்ச்சொல் இலத்தீன் மொழிக்குரியது எனக் கூறுகிறது அயற்சொல் அகராதி.

மலாய் மொழியிலிருந்து வந்த சாம்பிராணி என்னும் சொல் தமிழில் வழங்கப்படுகிறது.

தமிழில் வழங்கும் ‘கொய்யா’ என்னும் சொல் பிரேசிலின் நாட்டுக்குரியது.

கக்கூஸ், துட்டு என்னும் சொற்கள் டச்சு மொழியில் இருந்து வந்து தமிழிற் கலந்தவை.

போர்த்துகீசியச் சொற்கள் சிலவும் இன்றும் தமிழில் வழங்கப் பட்டு வருகின்றன. கடுதாசி, கிராதி, கொரடா, கோப்பை, சங்கடம், சப்பாத்து (மூய்ச் செருப்பு) சாவி, திராவி, துவாலை, பாதிரி, மேசை, சன்னல் என்பவை போர்த்துகீசியச் சொற்களாகும்.

‘மிச்சம்’ எனத் தமிழில் வழங்கப்படும் சொல் பாலி மொழியைச் சார்ந்தது.

பிரெஞ்சு மொழிக்குரிய கபே, ரோந்து, லாந்தர் என்னும் சொற்கள் இன்றும் தமிழ் வழக்கில் உள்ளன.

‘ரிக்ஷ’ என்னும் சொல் சப்பான் மொழிக்குரியது.

மேற்குறிப்பிட்ட பிறமொழிக் கலப்புகளிலிருந்து பெறப்படும் முடிவுகளாவன:

1. ஆட்சிக் செல்வாக்கும், வாணிகத் தொடர்பும் மிகுதியாகப் பெற்றிருந்த வடமொழி, இந்தி, உருது போன்ற மொழிகள் தமிழில் மிகுதியாகக் கலந்துள்ளன. 2. மொழிக் கலப்பால் தமிழில் கலந்த பிறமொழிச்சொற்கள் மக்களின் கல்வி, நாகரிகம், இவற்றிற்கேற்ப வும், நகரம் கிராமம் என்ற பாகுபாட்டிற்கேற்பவும் வழக்கில் உள்ளவை களாக மாற்றம் பெற்றுள்ளன. 3. ஆட்சிச் செல்வாக்கு, வாணிகத் தொடர்பு, மக்களின் நம்பிக்கைகள் இவற்றைக் கால்கோள்களாகக் கொண்டு தமிழில் புகுந்த பிறமொழிச் சொற்கள் நீண்டகாலம் அன்றாட

வழக்கில் இருந்து வருகின்றன. 4. நாளடைவில் கலப்பால் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் இன்று வழக்கிழந்து மறைந்துள்ளன. எடுத்துக்காட்டு: - தும்மா (பிரெஞ்சு) - பாடை, திவரம் (மராத்தி) - நாடு. 5. தமிழில் உருவாகும் புதிய சொல்லாக்கங்களைப் பிறமொழிக் கலப்பால் வந்து வழங்கப்படும் சொற்களின் வழக்கை நீக்குகிறது.

குறிப்புகள்

1. மு.வ. மொழி வரலாறு, பக். 116-117.
2. பொற்கோ, தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆட்சி பக். 21.
4. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
5. தெ.பொ.மீ., தமிழ் மொழி வரலாறு பக். 258,260
6. எஸ். வையாபுரிப்பிள்ளை தமிழின் மறுமலர்ச்சி, பக். 228
7. தெ.பொ.மீ. தமிழும் பிற பண்பாடும், பக். 85,86
8. மு. வரதராசன், மொழிப்பற்று, பக். 78
9. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
10. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி, பக். 266,267
11. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு. பக். 261
12. செந்தமிழ்ச் செல்வி, மே 1972, பக். 106-112
13. தெ.பொ.மீ., தமிழும் பிற பண்பாடும். பக். 85
14. தெ.பொ.மீ., தமிழ்மொழி வரலாறு, பக். 260
15. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
16. செந்தமிழ்ச் செல்வி, மே 1972 பக். 523-525
17. தெ.பொ.மீ. தமிழும் பிற பண்பாடும், பக். 82
18. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
19. தெ.பொ.மீ தமிழ் மொழி வரலாறு, பக். 255
20. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
21. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 257.
22. இராசாசி கட்டுரைகள் பக். 12-17
23. ப. அருளி, அயற்சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டவை
24 தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 253
25. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 253
26. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 254
27. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 254
28. தெ.பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 254

முடிவுரை

எந்தையும் புதுவதாக அறிந்து ஒழுக நினைக்கும் வேட்கை மக்களினத்திற்குப் பொதுவாய் அமையும் மனவுணர்ச்சியாகும் அரசியல், வாணிகம், கலை, இலக்கியம், பண்பாடு, இணைந்து நாம் நடத்தும் வாழ்க்கையில் பெருகிவரும் உறவுகளின் பயனாகக் கொண்டும் கொடுத்தும் மக்கள் தங்கள் மொழிகளை வளர்க்கின்றனர். அறிவியல் துறைகளைப் பற்றிய விவரங்களும் செய்திகளும் பொதுமக்கட்குச் சென்று சேரவேண்டும் என்னும் கருத்து உலகமெல்லாம் வரவேற்கப் படுகின்றது. காலை முதல் மாலை வரை நம் வாழ்வில் அயல் நாட்டுப் பொருள்கள், சொற்கள், சிந்தனைகள் எவ்வாறேனும் கலந்து விடுகின்றன. இந்நிலையில் கற்றார்க்கு மட்டுமே ஒரு மொழி உரியதாக நிற்பதில்லை. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் வகையில் எல்லார்க்கும் இசைவதாய்க் கூட்டு முயற்சியிலேயே மொழி ஊட்டம் பெறுகிறது. தமிழ்மொழியில் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட வழக்காறுகள் பிற்றை நாளில் மாறின. தொல்காப்பியர் காலத்தே ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் கூறப்பட்ட ஆண்பால் பெண்பால் இளமைப் பெயர்கள் இன்றைய வாழ்வில் நாம் காணுமாறு வழக்கில் பல இல்லை. ஏறு, ஒற்றை, ஒருத்தல், மோத்தை, தகர், கண்டி, மூடு, நாகு, அளகு, பிறவு போன்ற சொற்கள் இக்காலத்தில் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு மரபுகள் தாமாகவே விலகும் போலும். புது மரபுகளை ஏற்றுக்கொள்ளவே வழுவமைதிகளும். மரூஉக்களும் ஒரு மொழியின்கண் அமைந்தன எனக் கூறுவாரும் உளர். இவ்வாறு காலந்தோறும் கடியப்படாத வகையில் பல்வேறு சொற்கள் மொழியில் கலந்து இடம் பெறும் சொற்குவியலைத் தொகுத்துக் கூறும் முன்னிலை ஆய்வாக எனது முயற்சியைக் கருத வேண்டுகின்றேன்

வாணிகத்தின் பொருட்டும், அரசியல் உறவு காரணமாகவும், தொழில் நுணுக்கத் தொடர்பாலும் மக்கள் பலரோடு இணைந்து வாழ்ந்தனர்.

கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்[1]

என்று சிலப்பதிகாரத்திலும்,

மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடிக்
கொண்டினிது இயற்றிய கண்கவர் செய்வினை[2]

என்று மணிமேகலையிலும் நாம்காணும் போது, மாற்றங்கள் பலவற்றைக் காணும் இன்றைய நிலையை நாம் என்னென்று கூறுவது.

மொழிக்கலப்பு என்பது தமிழில் மட்டுமே நிகழ்ந்ததன்று. உலகின் செல்வாக்குள்ள மொழியாக அமைந்த ஆங்கிலம் பெருங் கலப்புக்கு உள்ளான மொழியே. இந்திய மொழிகளின் சொற்கள் பலவும் ஐரோப்பிய மத்திய ஆசிய மொழிகளின் வழியாக ஆங்கிலத்தில் பரவிக் கலந்தன என்று ஆப்சன் ஜாப்சன் தம்முடைய சொல்லகராதியின் முன்னுரையில் கூறியிருப்பது கருதத்தக்கது. வானத்தின் கீழே உலகத்தில் ஒவ்வொரு பகுதியினின்றும் பாயும் ஆறுகளனைத்தும் இணைந்து கலக்கும் கடலாகத் திகழும் ஆங்கிலமென்னும் நாகரிக மொழிக்கு நான் நன்றி பாராட்டும் அவாவினன் என்று எமர்சன் தமது தாய் மொழியைப் போற்றினார்.

மொழியைப் பற்றிய சிந்தனைகளையும் இனம், கலை, பண்பாடு, நாகரிகம் பற்றிய தனிக்கருத்துகளையும் தெளிவாக அறியும் முயற்சிகள் மொழி வழி மாநிலப் பிரிவுகளுக்குப் பிறகு இந்திய நாட்டில் முன்னேற்றம் பெற்றன. மொழிக்கலப்பின் தேவையைத் தவிர்க்கவியலாது என ஒரு சாராரும், மொழிக்கலப்பால், மொழி கெடும் – தடுக்கப்பட வேண்டியது எனப் பிறிதொரு சாராரும் தத்தம் கருத்துகளை வலியுறுத்துகின்றனர். மொழியியல் நோக்கில் மொழிக்கலப்பிற்கான காரணங்களை அறிஞர் மு.வ. பின்வருமாறு குறித்தார்.

எபர்ஸன் கருத்துப்படிச் சொற்களைக் கடன் வாங்குவதற்குரிய காரணங்கள் மூன்றாகும். முதலாவது: தம்மிடம் இல்லாத புதிய

பொருள்களைப் பயன்படுத்தும்போது, அவற்றின் பிறமொழிப் பெயர் களைக் கடன் வாங்குதல். இரண்டாவது ஒரு மொழியாரிடமிருந்து செல்வாக்கோ உயர்வோ பெற்றுள்ள ஒரு துறையைக் கற்கும்போது, அதற்கு உரிய அம்மொழிச் சொற்களையும் கற்றுக் கையாளுதல். மூன்றாவது: மொழி பெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாகத் தம் மொழிச் சொற்களைத் தேடிக் காணாமல் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு வந்து கலந்து சேர்த்தல்.[3]

இவ்வாறு ஒரு மொழி கடன் வாங்கியதைப் பற்றி ஆராயும் போது, இன்ன அளவிற்குத் கடன் வாங்கியது என்றும் ஆராய்தல் வேண்டும். பெரும்பாலும் கடன்வாங்கப்படுபவை பொருள்களின் பெயர்களும் பண்பும் ஆகும். வினைச்சொற்கள் மிகக்குறைந்த அள விலே கடன் வாங்கப்படுகின்றன. இடைச்சொற்கள் கடன் வாங்கப் படுதல் அரிது. துணைவினை முதலியவற்றைக் கடன் வாங்கல் இல்லை. வேற்றுமையுருபுகள், வினை விகுதிகள் முதலியவற்றைக் கடனாகப் பெறுதல் சிறிதும் இல்லை எனலாம். ஒரோவழி எண்ணுப் பெயர்களில் ஒரு சில கடன் வாங்கப்படுதல் உண்டு.

மொழியில் இயற்கை நிகழ்வாக இக்கலப்பு நேர்ந்து கொண் டிருக்க மொழித்தூய்மைக்கு அரணாக நின்றோர் பிறமொழிச் சொற் களைச் சுட்டிக் காட்டியும் மொழித் தூய்மையை வலியுறுத்தினர். வந்தவர் மொழியா. செந்தமிழ்ச் செல்வமா என்று வினவினார் பாவேந்தர் பாரதிதாசன். வடவர் ஆதிக்க எதிர்ப்பு, ஆரிய வெறுப்பு, இந்தி மறுப்பு என்ற எண்ணங்களிலிருந்து விடுபடாமலேயே இந்திய நாட்டு ஒற்றுமைக்கு இசைவாகப் பல்வேறு மாநில மொழிச் சொற்கள் விரவுவதை மறுக்க இயலாதவராக, 'பிரிந்த பகுதி பிணைந்தது பாரடி பிரிய நினைத்தவர் பிழையுணர்கின்றார். பெருநிலத்தில் ஒரே கொடி பறந்தது! நாவலந்தீவிலோ எல்லாரும் நல்லவர் எல்லாரும் வீரர் எல்லாரும் கவிஞர் இமயச் சாரலில் ஒருவன் இருமினான் என்றால், குமரி வாழ்வான் மருந்து கொண்டோடினான். ஒருவர்க்கு வந்தது அனைவர்க்குமென்ற மனப்பாங்கு வளர்ந்தது. வேண்டிய மட்டும் இமயம் மீட்கப்பட்டது ஈதோ பார் சீனன் செந்நீர் கண்ணீராக எங்கோ ஓட்டம் எடுக்கின்றானடி' என்றும் பாடினார்.

வடசொற்கள் எனக் கருத்தப்பட்டவை தமிழ்ச் சொற்களே என வாதிட்டுப் பல சொற்களைப் பலர் பட்டியலிட்டனர். சான்றாக

கனம், தானம், இலக்கணம், நேயம், ஆசை, நாடகம், பூசை, தெய்வம், காவியம்,காப்பியம், இமயம், வேதம், மானம், ஆதி பகவன், கங்கை, சலம், உவமை, அமிழ்து, ஆலயம், நாகரிகம், திராவிடம், முட்டி, ஆசாரம், அதி, ஆசிரியர், அடம், அரங்கு, முரலை, முரலி, மா, கண்ணியம், காயம், ஓம், சங்கம், பதி, பிலம், குலம், மனம், கன்னி, காலம், உலகம், ஆகுலம், சிவம், சட்ட, செட்டி, முகம், காரணம், காரியம், கடிகை, கடிகாரம், கற்பனை, வடிவு, படிவு, தாரம், ஓரை, பரதர், பாரதம், பரதன், தாசர், வித்தகம், மளிகை, பூ (பூமி), குடம், வினயம், கவி, புருவம், வாரி, வாரிதி, தாமரை, பஞ்சம், பனாதி, வேந்தன், ஆய்தம், சங்கம், வரம், பகுதி, பிச்சை, தச்சன், பாக்கியம், கோட்டி, கருப்பம், கூகை, பேறு, தனை, மனிதர், விருத்தம், தூது , சுவர்க்கம், தேவர், அவி, நாகம், பலி, துளசி, வாலி, தாமரை, இலட்சம், கோடி, மலம், ஆயுள், பசு, பதம், கவசம், குண்டம், சூது, விஞ்சை, சடை, மேதை, கம்பளம், அவிசு, அவை, சபை, மேழம், சாரீரம், வீணை, தூரம், கூட்டம், கோட்டம், கூகம், கவழன், இராகு, அகளம், அங்கம், தங்கி, அங்குடம், அங்குரம், அசடு, அடவி, அம்பரம், அம்பா, அமர், ஆகுலம், மங்கலம், மங்களம், ஒட்டகம், தூலம், இயேசு, பலபம், சுலபம், தாளம், மேளம் அருச்சனை, புதன், வியாழன், இலம்பாடி, இரகு, கோளம், காவிரி, ஏளனம், ஆலாபனம், சேது, மூலம், வண்ணம், அலாதி, முந்திரி, தை, மது, சாரம், சுரம், பாலன், பாலியன், நீதி, சேட்டு, திருமதி, விகுதி, அச்சாரம், பெட்டி, காந்தி, ஒருவந்தம், புத்தகம், வேகம், திசை, திக்கு, சொத்து, வேகம், வேதனை, சொந்தம், படி, அனுப்பு, அனுபோகம், உத்தரவு, உத்தாரம், உச்சரி, கண்ணியம், கவனம், கண்டம், கொஞ்சம், பாடம், படம், இயேசு, கண்ணி, குமரி, கொட்டாரம், பந்து, சிப்பம், கன்னம், சக்கரம், அகராதி, தன்மை, கிண்கிணி, நுகர், தானம், சிரத்தை, கவனம், செந்திரை, தரை, மானம் என்ற பட்டியலைக் காணலாம்.

பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து நீக்க வேண்டுமென்ற வேகம் ஒரு புறத்திலும், இவற்றை நீக்க வேண்டியதில்லை என்று

கருத்து மறு புறத்திலுமாகத் தமிழின் மொழிக்கொள்கை இருவேறு இயல்பாக உருப்பெற்றது.

இந்நிலையில் ஒரு சாரார் புதிய அறிவுத்துறைப் பொருளைக் குறிப்பதற்குப் பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதலில் எவ்வகை யான தடையும் இருக்கக் கூடாது என்றனர். வேறொரு சாரார் தமிழ்ச் சொற்களைத்தான் எங்கும் நாம் வழங்குதல் வேண்டும் என்றனர். இப்போக்கினைப் பற்றி, "இது முடிந்து விடவில்லை. இந்நிலை என் றேனும் முடிந்துவிடப் போவதும் இல்லை, இது புதிதாக உண்டான ஒரு விவாதமும் அன்று. தமிழ் மொழியில் தொடக்க நிலையிலிருந்தே எப்பொழுதும் இது உள்ளது தான். ஆனால் முன் பெல்லாம் கட்சிப் பிரதிகட்சிகள் இல்லை. வாதப் பிரதிவாதங்களும் இல்லை. பிறமொழிக் கலப்பினால் நமது மொழி பாழாய்விடும் அதைப் பாதுகாத்தற்குத் தமிழ்ப் பாதுகாப்புப் படை ஒன்றுவேண்டும் என்று படை திரட்டியதும் இல்லை. எனினும், உள்ளூர, அடிப்படையில் இந்த விவாதம் அமைதி யாய் நடந்து கொண்டுதான் இருந்தது. நமது தாய் மொழிக்கு மட்டும் இவ்விவாதம் தனி உரிமையுமில்லை; வழக்கிலுள்ள எல்லா மொழி களிலும் இது காணப்படுவதே" என்றார் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

ஒருவர் வாணிகத் துறையில் பணிபுரிகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவரிடம் விடுமுதல் அதிகமாயில்லை. தம்மிடமுள்ள கைப்பொருளுக்கு ஏற்றபடிச் சுருங்கிய அளவில் வணிகம் தொடங்கு கிறார். இவரிடத்தில் ஐம்பது சரக்குகள்தாம் உள்ளன. இவரைச் சுற்றி வாழும் மக்களுக்குத் தேவையோ இருநூறு சரக்குகள். அச்சரக்கு அவரிடம் இல்லை. அதைக் காட்டிலும் தம்மிடமுள்ள வேறொரு சரக்கு அதிகம் பயனுடையது என்று சொல்லி இச்சரக்கை இவர் கொடுத்து வருகிறார். மக்கள் திருப்தி அடையவில்லை. இதைக் கண் டதும் அவர்கள் கேட்கும் சரக்கு இதுதான் என்று தம் கடையிலுள்ள பிறிதொரு சரக்கைக் கொடுத்து வருகிறார். மக்கள் திருப்தியடையாத தோடு, வாணிகர் மீது மிகுந்த வெறுப்புக் கொள்ளுகிறார்கள். இவர் கடையில் வாடிக்கை வைத்துக் கொள்ளாது வேறுகடைக்கு மக்கள் செல்கிறார்கள். வாணிகர் மற்ற கடைகளோடு சமமாகப் போட்டி போட்டு,

மக்கள் வேண்டும் சரக்குகளையும் வாங்கிவைத்து அவர்களையும் திருப்தி பண்ணித் தருகிறார். இவ்வியாபார நிகழ்ச்சி போன்றதே மொழி வரலாறும். சொற்களே சரக்குகள்: மக்கள் தேவைதான் புதிய அறிவுத் துறைகள்.

ஆனால் வருங்காலத் தமிழைப் பற்றி ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியாது. வாணிகர் தனது சரக்குகளைச் செய்தது போலத் தமிழ்மொழியும் உயிர் என்ற சொல்லை எவ்வளவு பயன்படுத்தக் கூடுமோ அவ்வளவும் செய்து விட்டது. ஆனால் நாழி முகவாது நானாழி. புதுச் சரக்குகளை வாங்கத்தான் செய்தார் வாணிகர். அது போல ஆன்மா என ஒன்று உண்டு என்று சொன்னாலும் சரி, சொல் லாவிட்டாலும் சரி, சொல்லளவிலாவது அதனைக் கடன் வாங்க வேண்டியதுதான். கடன் வாங்கிய அச்சொல்லைத் தள்ளிவிட முடி யாது. என்றும் அவர் குறிப்பதும் சிந்தனைக்குரியது.[5]

பிறமொழிச் சொற்களை முழுவதும் ஏற்பது, அறவே தள்ளி விடுவது என்ற நிலைகளை விடுத்து, இயன்றவரையில் தமிழாக்கம் செய்தும் தனித்தமிழில் எழுதியும் வரும் நிலை கடந்த முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. பேரறிஞர் அண்ணா இம்முயற் சியில் தாம் எவ்வளவு வெற்றி பெற்றோம் என்பதைக் குறிப்பிடும் போது, "தம்பி! பலவற்றை நான் எழுதிய பிறகு அவற்றில் பிறமொழிச் சொற்களின் கலப்பையெண்ணி வருந்தியுள்ளேன். என்னால் இயன் றது அவ்வளவுதான். நீயாவது பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி எழுதவும் பேசவும் பழகு.[6]" எனக் கூறுவது இங்குக் கருதத்தக்கது.

உலக அறிவியல் வளர்ச்சியோடு ஒப்புநோக்கி அறிஞர் வா. செ. குழந்தைசாமி குறிப்பிடும் கருத்துகள் ஆழ்ந்த சிந்தனை யைத் தூண்டி, மொழிக் கோட்பாட்டில் ஒரு புதிய அணுகுமுறையை நமக்கு அறி விப்பதாக அமைந்திருக்கிறது.

தூய்மை, தனித்தன்மை என்பது உயர்ந்த கூறுபாடுகளைக் குறிப்பிடும் சொற்கள். ஆனால், மொழித்துறையில் எது தூய்மை, எது தனித்தன்மை என்பதிலும், அது எங்கு, எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் நமக்குத் தெளிவு வேண்டும். கன்னித் தன்மை

தான் தூய்மையுடையது என்பதில்லை. தாய்மையும் தூய்மையானதே. தன்மை வேறு; தனித் தன்மை வேறு. பலருடன் சேர்ந்து செயற்படும் பொழுதுதான், ஒருவரது தனித்தன்மை தெரிகிறது.

தமிழ் விண்ணிலிருந்து பிறந்தது அன்று; விண்ணவர் தந்ததும் அன்று; மனித சமுதாயம் படைத்த மொழி; மனித சமுதாயம் வளர்த்த மொழி; மனிதன் படைத்த எதுவும் குறையுடையது; வளர்ச்சிக்கு வழி யுடையது; வளர வேண்டிய தேவையுடையது. எல்லாக் காலத்திற்கும் எல்லாச் சூழ்நிலைக்கும் தேவையான எல்லாவற்றையும், நம் மூதா தையர்கள், மொழியைப் பொறுத்தவரை, முடித்துவிட்டுப் போயிருக் கிறார்கள் என்று நாம் எண்ணவோ, நம்பவோ இடமில்லை.

தமிழும் உலகிலுள்ள மற்றைய மொழிகளைப் போன்றதே. ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்புகள் இருக்கலாம். தமிழுக்குச் சில சிறப்புகள் கூடுதலாகவே இருக்கலாம். இருப்பினும், வளர்ந்த நாட் டினர் தம் மொழி வளர்ச்சி, அதில் அவர்கள் கடைப்பிடித்த முறை, அவர்கள் கண்ட அனுபவம் ஆகியன சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ நமக்கும் பயன்படும்; பயன் தரும். நமது மொழி மற்ற மொழிகள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட இயல்பும், சிறப்பும் உடை யது என்பது போன்ற பார்வையோடும், மற்ற மொழியினர் அனுபவம் நமக்குத் தேவையில்லை, அல்லது பயன்படாது என்னும் மனநிலை யோடும், காதும், கருத்தும் மூடிய நிலையில் இருந்து கொண்டு எழுது வதும், பேசுவதும் தக்க பாதையாகாது. முன்னேறியுள்ள நாடுகளின் கடந்த கால அனுபவங்களை ஆய்ந்து, அவற்றை இயன்ற வழியில், தேவையான மாற்றங்களோடு பயன்படுத்தி, அதன் வழி நாம் பயன் பெறவேண்டும் என்ற நோக்கம் நமக்கு வேண்டும்.[7]

அருந்தமிழில் அயற் சொற்களை ஆய்வு செய்த வகையில், எதிர் கால நலன் கருதி நாம் ஏற்கத் தக்கதாக அறிஞர் வா. செ. குழந்தை சாமி கருத்து அமைகிறது. எனினும், அயல் மொழிச் சொற்கள் வழக் கில் வந்தமை கருதிப் பொதுமக்களுக்கு என்று எழுதும் நூலில் பல வாகப் பிறமொழிச் சொற்கள் அமையுமானால், அவர்களுக்கு என்ன விளங்கும்? கல்லூரியில் பாடநூல்கள் வேறு; பொதுமக்கள் படிக்கும் நூல்கள் வேறு; பொதுமக்களுக்கு அவர்கள் அறிந்த சொற்களைக்

கொண்டே தெளிவாக எழுதி நாம் விளக்க வேண்டும். இங்கே மணிப் பிரவாள நடை பயன்படாது . இதனாலேயே இந்த நாட்டுப் பழைய மணிப்பிரவாள நடை வேர் கொள்ளாது மறைந்து விட்டது. உலகம் போகின்ற போக்கில், பொதுமக்கள் மக்களாட்சியில் சிறந்த இடம் பெற வேண்டுமானால், உலக அறிவை எல்லாம் ஒரு வகையாக அவர்கள் எளிமையாகப் பெற்றே தீரவேண்டும். கலைச் சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்களாக அவர்கள் வாயிலும் காதிலும் இனிக்கின்ற காலம் அமையவேண்டும். முற்காலத்தில் மணிப்பிரவாள நடையில் எழுதி னாலன்றிச் சில கருத்துகளை விளக்கவே முடியாதென்று அறிஞர்கள் சிலர் கருதினார்கள். ஆனால் நாளடைவில் அந்த அறிவையெல்லாம் எளிய தமிழில் எழுதிக் காட்டக்கூடும் என்ற நிலை ஏற்பட்டபோது, மணிப்பிரவாள நடை தானாவே மறைந்து போனது. இலத்தீனில்தான் கருத்துகளைத் தெரிவிக்க முடியுமென்று நியூட்டன் எழுதினார். இப் போதோ அந்த நிலைமாறி ஆங்கிலத்தில் எழுதும் காலம் அமைந்து விட்டது. அந்த நிலை தமிழில் ஓராண்டில் ஈராண்டில் வாராது. எனி னும், கற்றவர்கள் பொதுமக்களுக்காக எழுதும்போது இந்த நிலை படிப்படியாக வளரும். அதுவரையிலும் ஆங்கிலத்தமிழ் மணிப்பிர வாள நடை வழக்கத்தில் இருந்து கொண்டுதான் வரும்.[8] பாவேந்தர் பாரதிதாசன் பல புதிய சொல்லாக்கங்களை நமக்கு வழங்கிய போதி லும் அவரும், மியூசியம், தியேட்டர், இண்டியன், ரெயில், இந்தியன் பார்லிமெண்டரி, கவர்னர் ஜெனரல், கோர்ட், எலக்சன், கொம்முயூன், எலச்சியம், அத்மினிஸ்ராத்தேர், பிரெஞ்சு, சர்க்கார், போஸ்த், பிரிட்டிஸ், ஹைதராபாத், பிர்க்கா, தாலூக்கா, ஸ்தலஅதிகாரி, காண்டிராக்ட், பம் பாய், கிராணிக்கல், பிரிபிரஸ் ஜர்னல், நேஷனல் ஸ்டாண்டர்ட், ரிமாண்டு, கமிஷன், கார்ப்பரேஷன், மோட்டார், சோஷலிஸ்டுகள் போன்ற ஆங்கிலச் சொற்களைத் தம்முடைய படைப்புகளில் கலக்க நேர்ந்ததை எண்ணிப் பார்க்கலாம்.[9]

ஆங்கிலம் என்பது ஆங்கிலேயர் மொழி என்னும் பொரு ளுடையதன்று. ஆங்கில மொழி இன்றைய நிலைக்கு உலக வளர்ச்சியில் புதுமையின் வடிவமாக, புதுமையின் வாய்க் காலாக அமைகிறது. அதனைத் தமிழ்நிலத்தில் பாய்ச்சிக்

கொள்வதில் கேடொன்று மில்லை. பழையன இங்கு நிறைய
உண்டு. எல்லாம் செழிப்பாக வளர்வதில் என்ன ஐயம்?

எனப் பேராசிரியர் தெ. பொ. மீ. வினவுவது, வருங்காலம் நோக்கித் தமிழில் ஆங்கிலக் கலப்பு நிகழ்வதைத் தவிர்க்க இயலாது என்பதைத் தெளிவாக்குகிறது.[10] இதுகாறும் தமிழில் அயல்மொழிச் சொற்கள் புகுந்ததை ஆராய்ந்த நிலையில், கலப்பு நேர்வது இயல்பு என்றும், கலப்பாக வருவது வந்த மொழிக்கு வளர்ச்சியாகவும், சொந்த மொழிக் குத் தளர்ச்சியாகவும் அமையக் கூடாது என்ற கருத்து நாட்டவரால் உணரப்படுகிறது. ‘டிக்கெட்’ என்று பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஆங்கிலச்சொல், ஐம்பதாண்டுகட்குப் பின்னர்ச் சில மாவட்டங்களில் ‘சீட்டு’ என்று கூறப்படுகிறது. ‘சீட்டு’ என்பதும் தமிழ்ச் சொல்லன்று, எனினும், ‘டிக்கெட்’ என்ற சொல் வழக்கொழிந்தது. ஞாயிறு, திங்கள் முதலியவை கிழமைகளாகக் கருதப்படும்போது நிலைபேறு பெற்றன. இச்சொற்களே சூரியன், சந்திரன் என்னும் விண்கோள்களைக் குறிப் பிடுகையில் வழக்கிற்கு வருவதில்லை. அயலவர் ஆட்சிக்கு ஆட் பட்டதால், ஆங்கிலச் சொற்களின் வரவு நேர்ந்தது. சீனம், ஜப்பான் முதலிய நாடுகள் அயலவர்க்காட்படாதிருந்ததால், எதனையும் தத்தம் மொழியிலேயே வழங்க வேண்டுமென்ற நிலை உண்டாயிற்று. தமிழ் நாட்டிலும் ஆங்கிலச் சொற்கள் பாமரர் வழக்கில் இடம் பெறும்போது, அதனை அயல்மொழி என்று நாம் எவ்வாறு கருத முடியும் என்று வினவும் பேராசிரியர் தெ. பொ. மீ., ஆங்கிலத்தில் எல்லாக் கலை களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஆங்கிலம் வாழ்கிறது என்கி றோம், எல்லாக் கலைகளும் அம்மொழியில் திளைத்துச் செருக்கிக் கூத்தாடுகின்றன. அம்மொழி கற்றார் அதன் வழியே எல்லாம் அறிதல் கூடும், இக்கலைகள் தோன்றிய நாள் முதல் ஆங்கில மொழி அவற் றைப் பேசி வருவதால், இங்கு ஒரு புதுமையும் இல்லை. ஆனால், தமிழோ? தமிழனைப் பாருங்கள். மிகமிகப் பின்தங்கி விட்டான்; அவற்றைக் கற்ற தமிழரும் அவற்றை ஆங்கிலத்திலேயே கற்றனர். தமிழில் பேசச் சொல்லின்றித் தடுமாறுகின்றார். இது, கற்றோர்கள் நிலையே அன்றி மற்றோர்கள் நிலை அன்று. பணியாட்கள் தமிழில் அன்றி வேறு எதனில் பேச முடியும்? ஆங்கிலப் பெயர்களை அப்ப

டியே தங்களால் முடிந்த அளவு ஒலித்த தமிழிலேயே பேசுகிறார்கள். இதனைப் பார்த்து மகிழப் பலருக்குக் கண் இல்லை; கேட்டுக் களிக்கக்காது இல்லை; இது தமிழ் இல்லை என்கின்றனர் தமிழ் அறிஞர். அவர்கள் விரும்பும் தமிழ் அன்று என்பது உண்மையாகலாம். இருந்தாலும் தமிழே, தமிழே, தமிழேயாம். என்று குறிப்பிடுவது ஆழ்ந்த மொழியியல் முடிவாகும்.

தொடக்க நிலை ஆய்வாக அமையும் இம்முயற்சி விரிவான ஆய்வுக்கு வழிகாட்டுவதாகும். அயல்மொழிச் சொற்கள் தமிழில் கலந்துள்ள நிலைகளை,

1. தமிழ், தமிழரைப் பற்றிய பிறநாட்டறிஞர்கள் கூறும் கருத்துகளின் அடிப்படையிலான பிறமொழிக் கலப்பாய்வு.
2. இலக்கியங்களில் காணும் பிறமொழிச் சொற்கள்.
3. அரசின் முற்கால ஆணைகளில், கோப்புகளில் காணப்படும் பிறமொழிச் சொற்கள்.
4. கல்வெட்டுகளில் காணப்படும் பிறமொழிச் சொற்கள்.
5. தமிழ் இதழ்கள், நாளேடுகளில் வழங்கப்படும் பிறமொழிச் சொற்கள்.
6. பழந்தமிழ் அகராதிகளில் அயல்மொழிச் சொற்கள்.
7. தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் அயல்மொழிச் சொற்கள்
8. மக்களிடமிருந்து நேரில் கண்டறியும் பிறமொழிச் சொற்கள். எனப் பலவகைகளில் எதிர்காலத்தில் ஆராய நம்மைத் தூண்டும். இவை மட்டுமன்றி, அன்றாட வழக்கில் வழங்கப்படும் பிறமொழிச் சொற்களை மக்கள் ஈடுபடும் துறைகள் ஒவ்வொன்றிலும் தனித் தனியே கண்டறியவும், எந்தெந்த நிலைகளில் விரவுகின்றன என்றும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள இடமுண்டு.

விவிலிய ஈபுரு மொழியில் 8000 சொற்களே இருந்தன. ஆனால் இன்றைய ஈபுருவில் பல இட்சக்கணக்கான சொற்களைக் கொண்டே 17 தொகுதிகள் கொண்ட பேரகராதி வெளியிடப்பட்டதை

அறிஞர் மலையமான் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தப் பெருமிதமும் ஊக்கமும் தமிழ் மக்களிடம் மலர வேண்டும்.

ஒரு நாட்டின் மொழிக் கொள்கையைச் சார்ந்தே அந்நாட்டு மொழி வளர்ச்சி அமையும். ஆட்சி, கல்வி, செய்தித் தொடர்பு, அறிவியல் தொழில் நுணுக்கம் முதலிய துறைகளில் ஒரு மொழியைப் பயன்படுத்தும் முறையில் நாடு முழுவதற்கும் ஒருமைப்பாடு வேண்டும் என்று கருதினால் பன்மொழி வழங்கும் நாட்டில் மாநில மொழிகள் சில மாற்றங்களைப் பெறும். அவற்றின் வளர்ச்சி கூடத் தடைப்படலாம். ஒரு மொழியைத் திணித்தல் சிறுபான்மை மொழிகளைப் புறக்கணித்தல் போன்ற மொழிக் கொள்கைகள் மொழிகளின் உறவைச் சீர்குலைப்பதோடு, சமுதாய வளர்ச்சியையும் பின்னடையச் செய்யும் என்றும் மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில், அறிஞர் தெ.பொ.மீ. குறிப்பிடுவதும் சிந்தனைக்குரியது. “தமிழன் சில நூற்றாண்டுகள் தூங்கிக் கிடந்தான். ஆங்கிலேயன் இவனைத் தூங்கவும் வைத்தான். இப்போதுதான் தமிழன் விழித்தெழுகின்றான். ‘ஆமையும் முயலும்’ ஓடிய கதையாய்த் தோன்றுகின்றது. ஆங்கிலேயன் அனைவரையும் தள்ளி முன்னேறி ஓடியுள்ளான். அவன் ஓடிய வழியில் அவன் அடிச்சுவட்டினைப் பின்பற்றித் தானே நாம் ஓட வேண்டும்? விரைவாக ஓடி வெற்றிபெறவும் வேண்டும். ஆங்கிலத்தில் இருப்பதுபோலத் தமிழிலும் எல்லாக் கருத்துகளும் அழகு அழகாக, இனிமை இனிமையாக எல்லோருக்கும் எளிதில் எட்டும்படிக் குவித்துக்குவித்து வைக்க வேண்டும். அதுவரையில் ஆங்கிலத்தையோ பிறமொழிகளையோ நாம் புறக்கணித்துப் பயனில்லை. தமிழ்மொழி பேராற்றல் படைத்தது. கும்பகருணன் பேராற்றல் படைத்தவன். ஆனால், தூங்கித் தூங்கி ஒன்றுக்கும் உதவாமற் போனான். நாமும் தூங்கக்கூடாது. எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்; விழித்தெழுந்து விரைவாக ஓடித் தொடர வேண்டும். தூங்கினால் ஆமை; விழித்தோடினால் முயல். இல்லை, தூங்கினால் பிணம்; ஓடினால் பணம். பணம் எங்கும் பாயும். தமிழ் இப்போது விரைந்தோடுகிறது. அதற்கென்ன ஒட்டம்? செலாவணி? தமிழ்மொழி, உண்மையில் முதல் மொழியாக அமையவேண்டும். அப்போது

எல்லாம் தமிழாகிவிடும்; எங்கும் தமிழாகிவிடும்." வளர்ச்சியும் விரைவும் இருதடங்களாகக் கொண்டு அயல்மொழிகளையும் அரவணைத்துத் தமிழது செம்மையைக் காப்பது அரிய பணியாகும்.

மொழி என்பது இனத்தையும் பண்பாட்டையும் குறிப்பதாகக் கருதப்படுவதும், நமது நாட்டில் மொழிவழி மாநிலப் பிரிவுகள் அமைந்திருப்பதால் தேசியம், சார் தேசியம், மாநிலப் பற்று முதலிய கோட்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. மொழி வளர்ச்சி ஒரு நாட்டின் ஒருமையையும், பொதுக் கொள்கையையும் சார்ந்தே அமையும் என்று எதிர் நாளியல் அறிஞர்கள் கருதுகின்றனர். நிறைவாக மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் குறிப்பிட்ட நிலையே தமிழ் மக்களின் உயிர்ப் பண்பாகும்.

கருத்தைப் புலப்படுத்தும் ஒரு கருவியே மொழி என்பது தொடக்கக் கருத்து. இறைவன் நீங்கலாக உலகத்து எப்பொருளும் கருவிகளே. இறைவனைக் கூட நிமித்த காரணன் என்ப. உடம்பும் ஐம்பொறிகளும், ஊர்திகளும் தகவலியங்களும் கருவிகள்தாம். இவற்றின் தூய்மைக்கும் செம்மைக்கும் ஒழுங்குக்கும் எவ்வளவு ஆய்வு நடத்துகின்றோம். உடல் நலத்துக்கென உலகம் எவ்வளவு கோடிகள் செலவழிக்கின்றது. உடல் மாயும் கருவிதானே என்று பேசுவது அறியாமையன்றோ? மொழி என்பது மனிதவுடைமை. பண்டு இன்று நாளை என எக்காலத்துக்கும் இயங்குடைமை, அதனாற்றான் 'வாழிய செந்தமிழ்' என்றார் பாரதியார். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றார் பாரதிதாசனார்.

இணைப்பு

அயல்மொழிச் சொற்கள் பட்டியல்

அணிகலன்

அட்டிகை	:	கன்னடம்
கொலுசு	:	தெலுங்கு
ஜிமிக்கி	:	இந்தி
தோடு	:	இந்தி
நத்து	:	இந்தி
பேசரி	:	இந்தி
ராக்கடி	:	இந்தி
லோலாக்கு	:	இந்தி
தாயத்து	:	அரபு
நகாசு	:	அரபு
பாட்லா	:	மராட்டியம்
பாசிபந்து	:	பாரசீகம்
புல்லாக்கு	:	துருக்கி
மெடல்	:	ஆங்கிலம்

ஆடை உடை

உருமால்	:	பராசீகம்
குடித்துணி	:	பாரசீகம்
குல்லாய்	:	பாரசீகம்
சரிகை	:	பாரசீகம்
சகலாத்து	:	பாரசீகம்
சால்வை	:	பாரசீகம்
தாவணசி	:	பாரசீகம்
மல்	:	பாரசீகம்
லுங்கி	:	பாரசீகம்

கதர்	:	இந்தி
டோரியா	:	இந்தி
துப்பட்டி	:	இந்தி
தோத்தி	:	இந்தி
தொப்பி	:	இந்தி
பாகை	:	இந்தி
புட்டா	:	இந்தி
நாடா	:	இந்தி
முண்டாசு	:	இந்தி
லங்கோடு	:	இந்தி
ஜோடு	:	இந்தி
கமிசு	:	அரபு
சிராய்	:	அரபு
நிசார்	:	அரபு
மகமல்	:	அரபு
ஜிப்பா	:	அரபு
பனியன்	:	அரபு
சொக்காய்	:	தெலுங்கு
ஜாக்கட்டு	:	ஆங்கிலம்
டிராயர்	:	ஆங்கிலம்
பாடி	:	ஆங்கிலம்
சூட்டு	:	ஆங்கிலம்
ஷர்ட்	:	ஆங்கிலம்
கோர்ட்டு	:	ஆங்கிலம்
காலர்	:	ஆங்கிலம்
டை	:	ஆங்கிலம்
பாக்கெட்	:	ஆங்கிலம்
பித்தான்	:	ஆங்கிலம்
பிளானல்	:	ஆங்கிலம்
பெல்டு	:	ஆங்கிலம்
பூட்சு	:	ஆங்கிலம்
சப்பாத்து	:	போர்த்து
துவாலை	:	போர்த்து
சாரி	:	சமஸ்கிருதம்
நோரியல்	:	மலையாளம்

உண் பொருள்

அல்வா	:	அரபு
ஜிலேபி	:	அரபு
மசாலா	:	அரபு
முரப்பா	:	அரபு
மைசூர்பாகு	:	அரபு
கிச்சடி	:	இந்தி
கீர்	:	இந்தி
கேசரி	:	இந்தி
கோவா	:	இந்தி
கொத்சு	:	இந்தி
லட்டு	:	இந்தி
பக்கோடா	:	இந்தி
பஜ்ஜி	:	இந்தி
பூரி	:	இந்தி
பேணி	:	இந்தி
பேடா	:	இந்தி
மிட்டாய்	:	இந்தி
ரவை	:	இந்தி
ரொட்டி	:	இந்தி
சப்பாத்தி	:	பாரசீகம்
பர்பி	:	பாரசீகம்
பாதாம்	:	பாரசீகம்
பூந்தி	:	பாரசீகம்
புலாவ்	:	பாரசீகம்
மைதா	:	பாரசீகம்
சாம்பார்	:	மராட்டியம்
சேமியா	:	மராட்டியம்
கோசுமரி	:	மராட்டியம்
டாங்கர்	:	மராட்டியம்
பட்டாணி	:	மராட்டியம்
பாத்து	:	மராட்டியம்
தோசை	:	போர்த்து
கருவாடு	:	போர்த்து
ஐஸ்கிரீம்	:	ஆங்கிலம்
கேக்கு	:	ஆங்கிலம்

சாக்லட்டு	:	ஆங்கிலம்
பப்பிரமெண்டு	:	ஆங்கிலம்
பிஸ்கொத்து	:	ஆங்கிலம்
டோஸ்ட்டு	:	ஆங்கிலம்
அன்னாசி	:	போர்த்து
பரங்கி (ப்பழம்)	:	போர்த்து
பப்பளிமாசு	:	மலேயம்
மங்குஸ்தான்	:	மலேயம்
ஆரஞ்சு	:	ஆங்கிலம்
ஆப்பிள்	:	ஆங்கிலம்
சப்போட்டா	:	ஆங்கிலம்
தம்பட்டம்	:	ஆங்கிலம்
பேரிக்காய்	:	ஆங்கிலம்
ஒயின்	:	ஆங்கிலம்
ஓவல்	:	ஆங்கிலம்
கலர்	:	ஆங்கிலம்
காபி	:	ஆங்கிலம்
கொக்கோ	:	ஆங்கிலம்
சாலட்	:	ஆங்கிலம்
சோடா	:	ஆங்கிலம்
பிராந்தி	:	ஆங்கிலம்
லெமனேட்டு	:	ஆங்கிலம்
ஆல்பக்கடா	:	பாரசீகம்
எலுமிச்சை	:	அரபு
சர்பத்து	:	அரபு
கொய்யா	:	பிரேசில்
சாயா	:	சீனம்

கட்டடப் பொருள்

ஆர்ச்சு	:	ஆங்கிலம்
கர்டர்	:	ஆங்கிலம்
காம்பரா	:	ஆங்கிலம்
காம்பவுண்டு	:	ஆங்கிலம்
கேட்டு	:	ஆங்கிலம்
செட்டு	:	ஆங்கிலம்
பங்களா	:	ஆங்கிலம்

தார்சா	:	ஆங்கிலம்
கோரி	:	பாரசீகம்
ஜன்னல்	:	போர்த்து
வராந்தா	:	போர்த்து
குசினி	:	போர்த்து
கிராதி	:	போர்த்து
கக்கூசு	:	டச்சு
காடிகானா	:	இந்தி
பாலம்	:	இந்தி
மால்	:	அரபு

அறையுறை

அலமாரி	:	போர்த்து
மேசை	:	போர்த்து
ஈசிசேர்	:	ஆங்கிலம்
சோபா	:	ஆங்கிலம்
டீப்பாய்	:	ஆங்கிலம்
பீரோ	:	ஆங்கிலம்
பெஞ்சு	:	ஆங்கிலம்
குரிச்சி	:	அரபு
பங்கா	:	இந்தி

பயன்பொருள்

குண்டாக்	:	மராட்டியம்
கெண்டி	:	மராட்டியம்
கூஜா	:	அரபு
கோப்பை	:	ஆங்கிலம்
தம்ளர்	:	ஆங்கிலம்
கெட்டில்	:	ஆங்கிலம்
பீங்கான்	:	சீனம்
லோட்டா	:	சீனம்
அண்டா	:	இந்தி
வாளி	:	இந்தி
தேக்சா	:	இந்தி

கூலங்கள்

அரிக்கன்	:	ஆங்கிலம்
ஆரொட்டி	:	ஆங்கிலம்

ஆக்கர்	:	ஆங்கிலம்
இசுக்போல்	:	ஆங்கிலம்
இஞ்சின்	:	ஆங்கிலம்
ஊக்கு	:	ஆங்கிலம்
சிமிட்டி	:	ஆங்கிலம்
சிலேட்டு	:	ஆங்கிலம்
பம்பு	:	ஆங்கிலம்
பாட்டில்	:	ஆங்கிலம்
பல்பு	:	ஆங்கிலம்
பிக்காசு	:	ஆங்கிலம்
புனல்	:	ஆங்கிலம்
மிஷின்	:	ஆங்கிலம்
மில்	:	ஆங்கிலம்
மீட்டர்	:	ஆங்கிலம்
நட்டு	:	ஆங்கிலம்
லஸ்தர்	:	ஆங்கிலம்
லாந்தர்	:	ஆங்கிலம்
ராட்டு	:	ஆங்கிலம்
வாட்சு	:	ஆங்கிலம்
ஜாக்கி	:	ஆங்கிலம்
கப்பி	:	அரபு
கித்தான்	:	அரபு
கீல் (கீர்)	:	அரபு
கோலி	:	பாரசீகம்
படுதா	:	பாரசீகம்
குப்பி	:	இந்தி
கொப்பரை	:	இந்தி
ஜமுக்காளம்	:	இந்தி
டப்பா	:	இந்தி
டப்பி	:	இந்தி
சாக்கு	:	டச்சு
சாவி	:	போர்த்துக்கீசியம்
சாடி	:	போர்த்துக்கீசியம்
பீப்பாய்	:	போர்த்துக்கீசியம்

கவின் பொருள்

அம்பர்	:	அரபு
அத்தர்	:	அரபு

உக்கா	:	அரபு
ஊதுபத்தி	:	அரபு
சவ்வாது	:	அரபு
சாலாமிசிரி	:	அரபு
அபின்	:	பாரசீகம்
கசகசா	:	பாரசீகம்
ரவேஸ்	:	பாரசீகம்
ரெக்கு	:	பாரசீகம்
கஞ்சா	:	இந்தி
சோப்பு	:	ஆங்கிலம்
சிகரட்டு	:	ஆங்கிலம்
சாம்பிராணி	:	மலேயம்

போக்குவரவு

ஏரோப்ளேன்	:	ஆங்கிலம்
கார்	:	ஆங்கிலம்
கோச்சு	:	ஆங்கிலம்
சாரட்டு	:	ஆங்கிலம்
சைக்கிள்	:	ஆங்கிலம்
டக்கு	:	ஆங்கிலம்
டிராம்	:	ஆங்கிலம்
மோட்டார்	:	ஆங்கிலம்
பஸ்	:	ஆங்கிலம்
பீட்டன்	:	ஆங்கிலம்
லாரி	:	ஆங்கிலம்
ரயில்	:	ஆங்கிலம்

தகவல் தொடர்பு

இன்சூர்	:	ஆங்கிலம்
கவர்	:	ஆங்கிலம்
கார்டு	:	ஆங்கிலம்
போஸ்டாபீசு	:	ஆங்கிலம்
மணியார்டர்	:	ஆங்கிலம்
ரிஜிஸ்தர்	:	ஆங்கிலம்
லேபில்	:	ஆங்கிலம்
லெட்டர்	:	ஆங்கிலம்
ஜட்கா	:	இந்தி

சப்பரம்	:	இந்தி
டோலி	:	இந்தி
ரேக்ளா	:	இந்தி
தபால்	:	இந்தி
லக்கோடா	:	இந்தி
மேனா	:	பாரசீகம்
கடுதாசி	:	அரபு
ரிக்ஷா	:	ஜப்பான்

வாணிகம்

அட்வான்சு	:	ஆங்கிலம்
ஆண்டிமாண்டு	:	ஆங்கிலம்
காண்டிராக்டு	:	ஆங்கிலம்
டெண்டர்	:	ஆங்கிலம்
டிப்பாசிட்டு	:	ஆங்கிலம்
பண்டு	:	ஆங்கிலம்
மார்க்கட்டு	:	ஆங்கிலம்
வங்கி	:	ஆங்கிலம்
அட்டவணை	:	மராட்டியம்
உண்டியல்	:	இந்தி
சவுக்கார்	:	இந்தி
செலாவணி	:	இந்தி
சிட்டை	:	இந்தி
துபாஷ்	:	இந்தி
பட்டியல்	:	இந்தி
வட்டம்	:	இந்தி
லாலா	:	இந்தி
லேவாதேவி	:	இந்தி
கசர்	:	அரபு
கசாப்பு	:	அரபு
கரார்	:	அரபு
குசில்	:	அரபு
சிராப்பு	:	அரபு
தினுசு	:	அரபு
தினுசுவாரி	:	அரபு, பாரசீகம்
மகமை	:	அரபு
மௌசு	:	அரபு

ரகம்	:	அரபு
கிட்டங்கி	:	மலேயம்
சந்தா	:	பாரசீகம்
தராசு	:	பாரசீகம்
பசார்	:	பாரசீகம்
மேஸ்திரி	:	போர்த்து
நிரக்கு	:	போர்த்து

எடை அளவு

அந்தர்	:	ஆங்கிலம்
டன்	:	ஆங்கிலம்
அஞ்சு	:	ஆங்கிலம்
பர்லாங்கு	:	ஆங்கிலம்
மைல்	:	ஆங்கிலம்
ஏக்கர்	:	ஆங்கிலம்
செண்டு	:	ஆங்கிலம்
டசன்	:	ஆங்கிலம்
கொயர்	:	ஆங்கிலம்
ரீம்	:	ஆங்கிலம்
கண்டி	:	மாராட்டியம்
ராத்தல்	:	அரபு
தோலா	:	இந்தி
கஜம்	:	பராசீகம்
தஸ்தா	:	பாரசீகம்

ஆட்சியியல்

அசல்	:	அரபு
அத்து	:	அரபு
அமுல்	:	அரபு
அகோர்	:	அரபு
அனாமத்து	:	அரபு
அயன்	:	அரபு
ஆசாமி	:	அரபு
ஆசில்	:	அரபு
இனாம்	:	அரபு
இருசால்	:	அரபு
உசூர்	:	அரபு

ஐவேசு	:	அரபு
கஜானா	:	அரபு
கவுல்	:	அரபு
காயம்	:	அரபு
சிபாயத்து	:	அரபு
கிஸ்து	:	அரபு
கைது	:	அரபு
ஷரத்து	:	அரபு
தணிக்கை	:	அரபு
தபசில்	:	அரபு
தஸ்தி	:	அரபு
தாக்கீது	:	அரபு
தாக்கல்	:	அரபு
தாசில்	:	அரபு
பசலி	:	அரபு
பாக்கி	:	அரபு
நகது	:	அரபு
மசரா	:	அரபு
மராமத்து	:	அரபு
மாசூல்	:	அரபு
மாமூல்	:	அரபு
மிராசு	:	அரபு
முகாம்	:	அரபு
ரயத்து	:	அரபு
ரொக்கம்	:	அரபு
வசூல்	:	அரபு
வஜா	:	அரபு
வாரிசு	:	அரபு
வாய்தா	:	அரபு
ஜப்தி	:	அரபு
ஜமாபந்தி	:	அரபு
பராசீகம்	:	அரபு
ஜாரி	:	அரபு
ஜாமீன்	:	அரபு
ஜாஸ்தி	:	அரபு
ஷரா	:	அரபு

அமீனா	:	அரபு
ஆஜர்	:	அரபு
இஸ்தியார்	:	அரபு
கைதி	:	அரபு
தகராறு	:	அரபு
தகதா	:	அரபு
தரப்பு	:	அரபு
தாணா	:	அரபு
பைசல்	:	அரபு
நாசர்	:	அரபு
முனிசிப்பு	:	அரபு
ரத்து	:	அரபு
ராசி	:	அரபு
ருஜூ	:	அரபு
ரோக்கா	:	அரபு
வக்காலத்து	:	அரபு
வக்கீல்	:	அரபு
இலாக்கா	:	அரபு
கஸ்பா	:	அரபு
சன்னது	:	அரபு
தாக்கீது	:	அரபு
தாலுக்கா	:	அரபு
பிதிஷி	:	அரபு
பிர்க்கா	:	அரபு
மசோதா	:	அரபு
மாகாணம்	:	அரபு
மாசர்	:	அரபு
மாப்பு	:	அரபு
மாஜி	:	அரபு
ரஜா	:	அரபு
அம்பாரி	:	அரபு
லாயம்	:	அரபு
கசரத்து	:	அரபு
அம்பாரம்	:	பாரசீகம்
அர்ஜி	:	பாரசீகம்
ஆப்காரி	:	பாரசீகம்

ஜமாசு	:	பாரசீகம்
கம்மி	:	பாரசீகம்
கார்வார்	:	பாரசீகம்
கானுகோ	:	பாரசீகம்
குமாஸ்தா	:	பாரசீகம்
கொத்துவால்	:	பாரசீகம்
கோஸ்பாரா	:	பாரசீகம்
சரகம்	:	பாரசீகம்
சராசரி	:	பாரசீகம்
சிரஸ்தார்	:	பாரசீகம்
தர்க்காஸ்து	:	பாரசீகம்
பந்தோபஸ்து	:	பாரசீகம்
பாவத்து	:	பாரசீகம்
பினாமி	:	பாரசீகம்
நவுக்கர்	:	பாரசீகம்
ரசீது	:	பாரசீகம்
வாபீசு	:	பாரசீகம்
ஜமீன்	:	பாரசீகம்
டபேதார்	:	பாரசீகம்
டவாலி	:	பாரசீகம்
தஸ்தாவேஜு	:	பாரசீகம்
பிராது	:	பாரசீகம்
சர்க்கார்	:	பாரசீகம்
சிப்பந்தி	:	பாரசீகம்
தர்பார்	:	பாரசீகம்
திவான்	:	பாரசீகம்
மொகர்	:	பாரசீகம்
யதாஸ்து	:	பாரசீகம்
ரோந்து,லோந்து	:	பாரசீகம்
சிப்பாய்	:	பாரசீகம்
துப்பாக்கி	:	பாரசீகம்
பாரா	:	பாரசீகம்
பீரங்கி	:	பாரசீகம்
சர்தார்	:	பாரசீகம்
சவாரி	:	பாரசீகம்
சவுக்கு	:	பாரசீகம்
சுபேதார்	:	பாரசீகம்

சேணம்	:	பாரசீகம்
லகான்	:	பாரசீகம்
பட்டா	:	இந்தி
மிட்டா	:	இந்தி
கேது	:	இந்தி
சுருதி	:	இந்தி
கலான்	:	இந்தி
டேரா	:	இந்தி
கொட்டடி	:	இந்தி
டலாய்த்து	:	இந்தி
கச்சேரி	:	இந்தி
தண்டோரா	:	இந்தி
தமுக்கு	:	இந்தி
பிசானம்	:	தெலுங்கு
சம்பிரதி	:	தெலுங்கு
கலெக்டர்	:	ஆங்கிலம்
செட்டில்மெண்டு	:	ஆங்கிலம்
டே	:	ஆங்கிலம்
வாரண்டு	:	ஆங்கிலம்
ஜவாப்	:	ஆங்கிலம்
அசெசர்	:	ஆங்கிலம்
அபிடவிட்டு	:	ஆங்கிலம்
அப்பீல்	:	ஆங்கிலம்
இன்லெண்டு	:	ஆங்கிலம்
ஈரங்கி	:	ஆங்கிலம்
உயில்	:	ஆங்கிலம்
கிரிமினல்	:	ஆங்கிலம்
கேசு	:	ஆங்கிலம்
கோர்ட்டு	:	ஆங்கிலம்
சம்மன்	:	ஆங்கிலம்
சிவில்	:	ஆங்கிலம்
டிக்கிரி	:	ஆங்கிலம்
புரோநோட்டு	:	ஆங்கிலம்
பீசு	:	ஆங்கிலம்
பெட்டிஷன்	:	ஆங்கிலம்
பென்ஷன்	:	ஆங்கிலம்
நோட்டீசு	:	ஆங்கிலம்

மவுண்டு	:	ஆங்கிலம்
மேயர்	:	ஆங்கிலம்
மேடோவர்	:	ஆங்கிலம்
மைனர்	:	ஆங்கிலம்
ரிக்கார்டு	:	ஆங்கிலம்
ரூல்	:	ஆங்கிலம்
லாயர்	:	ஆங்கிலம்
ஜட்ஜ்	:	ஆங்கிலம்
ஜெயில்	:	ஆங்கிலம்
ஆபீசு	:	ஆங்கிலம்
எலெக்ஷன்	:	ஆங்கிலம்
எஸ்டேட்	:	ஆங்கிலம்
ஏஜண்டு	:	ஆங்கிலம்
ஓட்டு	:	ஆங்கிலம்
கவர்னர்	:	ஆங்கிலம்
சர்க்கிள்	:	ஆங்கிலம்
சப்போர்ட்	:	ஆங்கிலம்
சீல்	:	ஆங்கிலம்
சூப்பிரண்டு	:	ஆங்கிலம்
பவுண்டு	:	ஆங்கிலம்
பியூன்	:	ஆங்கிலம்
போலீசு	:	ஆங்கிலம்
மேஜிஸ்டிரேட்	:	ஆங்கிலம்
கிளிப்பு	:	ஆங்கிலம்
கம்	:	ஆங்கிலம்
பென்சில்	:	ஆங்கிலம்
பேப்பர்	:	ஆங்கிலம்
பேனா	:	ஆங்கிலம்
பின்	:	ஆங்கிலம்
பிளாட்டிங்கு	:	ஆங்கிலம்
நிப்பு	:	ஆங்கிலம்
ஸ்டீல்	:	ஆங்கிலம்
துருப்பு	:	ஆங்கிலம்
ஏட்டு	:	ஆங்கிலம்
ரிவால்வர்	:	ஆங்கிலம்
படாலியன்	:	ஆங்கிலம்

துணை நூல்கள்

1. அருளி ப. 1991. அயற்சொல் அகராதி, தனித்தமிழ் மனை, தமிழூர், புதுச்சேரி -9.
2. இராகவையங்கார். ரா. 1979. தமிழ் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. இராசாசி. 1955. இராசாசி கட்டுரைகள், (பெ.சு. மணியன் பதிப்பு).
4. இராமச்சந்திரன் கோ. 1966. பிறமொழிகளில் தமிழ்ச் சொல் லாட்சி, வளவன் வெளியீடு, சென்னை 30.
5. இளங்கோவடிகள் 1985. சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
6. உமறுப் புலவர். 1976. சீறாப் புராணம், உமறுப் புலவர் பேரவை, சென்னை.
7. கலியாண சுந்தரனார் திரு. வி. தமிழ்த்தென்றல் அல்லது தலை மைப் பொழிவு, புனித நிலையம், சென்னை 6.
8. கிருஷ்ணசாமி பாரதியார் எல். 1985. நமது அரசியல் அமைப்புச் சட்டமும் மொழிகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
9. குமரகுருபரர் பிரபந்தங்கள் 1952. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10. குழந்தைசாமி வா. செ. 1985 அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை 17.
11. கோபாலையர் தி. வே. 1971. இலக்கண விளக்கம், (சொல்லதி காரம்), தஞ்சை சரசுவ'தி மகால், தஞ்சாவூர்.
12. சரவணத்தமிழன் த. 1972 தமிழ் நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர்.

13. சாம்பசிவனார். ச. 1985 நாவலர் சோமசுந்தர பாரதியாரின் தமிழ் இலக்கியப் பணி, வளவன் வெளியீடு, மதுரை -1.

14. சாரதா நம்பியாரூரன் 1990. நீலாம்பிகை அம்மையாரின் படைப்பு களில் சமூகச் சிக்கல்கள், கழக வெளியீடு, சென்னை - 18.

15. சிவஞானம் ம. பொ. 1960. தமிழும் கலப்படமும், இன்ப நிலை யம், சென்னை 4.

16. சீத்தலைச்சாத்தனார். 1985. மணிமேகலை, சை.சி. நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை 108..

17. நமச்சிவாய முதலியார் கா. நுண்பொருள் மலர்,

18. நிர்மலா சுரேஷ்1981. மொழியும் அதன் வாழ்வும், பிரயத்னா, சென்னை - 41.

19. நீலாம்பிகை அம்மையார். 1952. தனித்தமிழ்க் கட்டுரைகள், டி. எம். அச்சுக்கூடம், பல்லாவரம்

20. தமிழ்க்குடிமகன் மு. பாவாணரும் தனித்தமிழும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 113.

21. தேவநேயன். ஞா. 1956 சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், கழக வெளியீடு, சென்னை - 1.

22. தொல்காப்பியர். 1974. சொல்லதிகாரம், சை. சி. நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை -1.

23. பவணந்தியார், 1953. நன்னூல், காண்டிகையுரை, ஜி. சுப்பிர மணியம் பதிப்பு, சென்னை.

24. பாரதியார், 1940. பாரதியார் கட்டுரைகள், (பெ. சு. மணியன் பதிப்பு)

25. பொற்கோ, 1986. தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி, தமிழ் நூலகம், சென்னை - 18.

26. மதிவாணன் இரா. 1978. தமிழ் வளர்ச்சி, தாய்நாடு பதிப்பகம், சென்னை - 49.

72. மதிவாணன், இரா. 1982. 'சொல்லாய்வுக் கட்டுரைகள்' சேகர் பதிப்பகம், சென்னை -8.

27. மறை திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, சை. சி. நூற்பதிப்புக் கழக வெளி யீடு, சென்னை.

28. மாணிக்கம் வ. சுப. 1975 சிந்தனைக் களங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

29. மாணிக்கம் வ. சுப. 1984. தொல்காப்பியத்திறன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

30. மாணிக்கம் வ. சுப. 1987. காப்பியப் பார்வை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

31. மீனாட்சிசுந்தரனார். தெ. பொ. தமிழ் மணம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை -1.

32. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. தமிழ் மொழி வரலாறு 1977. சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

33. மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. 1984. தமிழும் பிற பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை 98.

34. வரதராசன் மு. 1954. மொழி வரலாறு, சை. சி. நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை-1.

35. வரதாராசன். மு. 1962 மொழிப்பற்று, பாரி நிலையம், சென்னை - 1.

36. வையாபுரிப்பிள்ளை. எஸ். 1956. சொற்கலை விருந்து. பாரி நிலையம், சென்னை -1.

37. வையாபுரிப்பிள்ளை. எஸ். 1989. தமிழின் மறுமலர்ச்சி, வையா புரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

38. ஜெயதேவன் வ. 1985. தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை -5.

39. 1978. இந்திப் போர் முரசு, விடுதலை வெளியீடு, சென்னை - 7.

40. 1971. முருகன் புகழ்நூற்கோவை, கழக வெளியீடு, சென்னை -1.

41. இதழ்கள்
ஆனந்த விகடன். 1.12.91.
பிப்ரவரி 91.
மே 1972.
திசம்பர் 1991.
செந்தமிழ்ச் செல்வி மடலங்கள்

45. அப்பாத்துரை. கா 1956. ‘வாழ்க’, அலமேலு நிலையம் சென்னை - 5.

46. அறவாணன். க. ப. 1987 ‘தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்’, தமிழ்க்கோட்டம், சென்னை - 29.

47. இராகவையங்கார். மு. 1984. ‘ஆராய்ச்சித் தொகுதி’ தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

48. இளங்குமரன். இரா. 1986. மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113.

49. இளங்குமரன். இரா. 1985. ‘தேவநேயப் பாவாணரின் சொல லாய்வுகள்’ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113.

50. சிவஞான சுவாமிகள். 1971. ‘நன்னூல் விருத்தியுரை’ பாரி நிலை யம், 59, பிராட்வே, சென்னை -1.

51. சிவஞானம் . ம. பொ. 1960. ‘தமிழும் கலப்படமும்’ இன்ப நிலை யம், மயிலாப்பூர் -சென்னை -4.

52. சிவலிங்கனார், ஆ. 1988. ‘தொல்காப்பியம் உரைவளம் - சொல லதிகாரம் எச்சவியல்’ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113.

53. சீனிவாசன். ரா. 1960. ‘மொழியியல்’ பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை -1.

54. சுந்தரமூர்த்தி. கு. 1981. ‘தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனா வரையம்” அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

55. திருநாவுக்கரவு சுவாமிகள் 'தேவாரம்' (4, 5, 6, திருமுறைகள் திருவாவடுதுறை ஆதீனம்.

56. திருமலை, மா. சு. கருணாகரன், கு. 'மொழி இயல்' பாரி நிலைகள் 59, பிராட்வே, சென்னை -1.

57. தேவநேயன், ஞா. 1979. 'தமிழிலக்கிய வரலாறு' நேசமணி பதிப்பகம், 38, இரண்டாம் மேற்குக் குறுக்குச் சாலை, காட்டுப்பாடி விரிவு, வடார்க்காடு மாவட்டம்.

58. தேவநேயன், ஞா. 1968 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்'

59. தேவநேயன், ஞா. 1990. 'தமிழ் வரலாறு' திருநெல்வேலி, தென் னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18.

60. பரந்தாமனார், அ.கி. 1978. 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை -1.

61. பரமசிவானந்தம். அ.மு. 1991. 'கல்வி எனும் கண்' தமிழ்க் கலைப் பதிப்பகம், தமிழ்க்கலை இல்லம், சென்னை - 30.

62. பாலசுந்தரம், ச. 1988. 'தொல்காப்பியம் ஆராய்ச்சி காண்டிகை யுரை -சொல்லதிகாரம்'தாமரை வெளியீட்டகம், 367, மேலவீதி, தஞ்சாவூர்.

63. சுப்பிரமணிய பிள்ளை. கா. 1985. மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்' தமிழ்ப் பல்கலைக்கழகம்' தஞ்சாவூர்.

64. செந்தூர்ப் பாண்டியன். செ. 1975. 'மணிமேகலை' அம்மையப் பன் வெளியீட்டகம், தலைவன் கோட்டை, நெல்லை மாவட்டம்.

65. சேதுப்பிள்ளை. ரா. பி. 1974 'தமிழ் விருந்து' பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14.

66. சோமசுந்தரம் பிள்ளை, சே. 1956 'சொல் ஆக்கம்' பொதிகைப் பதிப்பகம், 2, சீதாராம நகர், கடலூர்.

67. சௌரிராசன், பொன். 1990. மு. வ. புதினங்களில் தமிழ் - தமிழி னம்' உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை -113.

68. ஜகந்நாதன் கி.வா. 1950. 'வாழும் தமிழ்' கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

69. மலையமான் முனைவர். 2000. மொழியும் இனமும், அன்புப் பதிப்பகம், சென்னை 600 018.

70. தமிழ் மல்லன், க. 1977 'பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு' ஸ்ரீராமன் பிரிண்டர்ஸ், புதுச்சேரி -605001.

71. பொன்னையா. மோசசு, 1972 'தமிழ்மொழி வரலாறு' (பொதுவியல்) சீயோன் பதிப்பகம், பங்கசம் காலனி, மதுரை -9.

73. மாணிக்கம், வ. சுப. 1987 'தொல்காப்பியக் கடல்' மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

74. முத்துப்பிள்ளை, கோ. 1983. 'அன்னை மொழியும் ஆட்சித் துறையும்' முத்தமிழ் நிலையம், 24, ஆறாவது குறுக்குச் சாலை, மாக்கவி பாரதி நகர், சென்னை - 39.

75. முருகரத்தினம். தி. 1986. 'தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி' தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613001.

76. ரங்கநாதன். தி. ஜ. 1957. 'மொழி வளர்ச்சி' இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை - 4.

77. வரதராசன், மு. 1954. மொழியியற் கட்டுரைகள்' முதற் பகுதி பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை -1.

78. வளவன், சா. 1984. 'பொது மொழியியல்' 60., சீனுவாசாச்சாரி தெரு, சென்னை - 11.

79. வெள்ளைவாரணர் க. தொல்காப்பியம் நன்னூல் சொல்லதிகாரம் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

80. வேங்கடாசலம்பிள்ளை. ரா. 1957. 'செந்தமிழ்க் கட்டுரைகள்' பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை -5.

81. வேலாயுதம் பிள்ளை, ம. க. 1953. 'மணிமேகலை' அருளகம், தெற்குத் தேர்த் தெரு, திருநெல்வேலி.

82. டேவிட் பிரபாகர். ப. 1993. 'தமிழர் எதிர்காலவியல்' பாரதி மன்றம், சென்னை - 59.

83. இளமுருகனார். சோ 1963, ‘செந்தமிழ் வழக்கு’ (முதலாம் பாகம்) தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், யாழ்ப்பாணம்.

84. முத்துசாமிப் பிள்ளை கோ.மு. 1988, ‘தமிழ் உரை வரலாறும் நெறி முறைகளும்’ யு. சுப்பிரமணியம் அறக்கட்டளை, தஞ்சை - 7.

85. அன்பழகன். க 1975 ‘தமிழ்க்கடல் அலைஓசை’ கழக வெளியீடு.

86. மதிவாணன். இரா. 1978, ‘தமிழ் வளர்ச்சி’ தாய்நாடு பதிப்பகம், வில்லிவாக்கம், சென்னை - 49.

87. Granas ovriank., Msc.(Lond). An Introducation to Tamil Culture Institute of Tamil Renaissance, London, September 1979.

88. Pope., G.U., DR. Tamil Heroic Poems. The South India Saiva Siddhantha works publishing Society, Madras -1. August 1973.

89. Prema Nandakumar ‘The Glory and the Good - Essays on Literature’ Asia publishing House, Bombay 1965.

90. Somalay ‘European Impact on modern Tamil writing and Literature Dravidian Linguistic Association’, University of Kerala, Trivandrum, August 1976.

91. Subramaniam S.V. and Arulappan KM (Ed) ‘Heritage of The Tamils’ - Language and Grammer International Institute of Tamil Studies Madras - 113, July 1980.

92. Vaidyanathan.S., M.A.,Ph.D. ‘Indo Aryan Loan words in old Tamil’ Rajan Publishers, Madras - 21, 1971.

93. Kamil Zvelbil DR. ‘Dialects of Tamil’

94. Wallanchinsky David Etal The Book of Lists - Bautan Books, New York, February 1978.

குயில்ஊதும் குழல்போலச் சிரிப்பான்; வானின்
குருத்துநிலா ஒளிபோன்ற அழகன்; அந்த
மயில்தோகைக் கூந்தல்போல் அடர்ந்த கேசம்;
மாளிகையில் விலைபோகும் மனிதன் இல்லை;
வெயில்மீது நடந்தாலும் கறுக்க மாட்டான்;
விண்மீனைக் கூறுகட்டி நிலவு செய்வான்
அயல்மொழியில் தமிழ்ச்சொல்லை ஆய்ந்தான்;
எங்கள் அவ்வைத்தாய் பெற்றெடுத்த ஆத்தி சூடி:

மருக்கொழுந்து வாசம்தான் பேச்சு; சென்னை
மாநிலத்துப் பல்கலையில் தமிழைக் கற்றான்;
கறிக்குழம்பு உண்ணாத சைவப் பிள்ளை;
கவிதைக்கும் உரைநடைக்கும் பிறந்த பிள்ளை;
வரிப்புலிதான் வரிக்குதிரை அல்ல; முப்பால்
வளர்ப்புமகன்; முதறிஞர் பேரன்; உப்புக்
கரிக்காத தமிழ்உணவு; கம்பன் செய்யுள்;
கணுவில்லாக் கரும்பிற்குக் கபிலன் வாழ்த்து.

கவிஞர் கபிலன்
கல்லூரி நிழலில்